Q23.38-2113-T
N52
76883

உ

சிவமயம்

தாந்தோன்றி யீசர் துணை

# திருவெள்ளூர்ப் புராணம்

இஃது

திரிசிரபுரம்

திரு. அ. சிவானந்த சாகரயோகீசுவரர்

மருகரும் மாணவருமாகிய

வரகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரால்

பரிசோதிக்கப் பெற்று

சேலம்

திருவெள்ளூரைச் சேர்ந்த குரிச்சி

ஸ்ரீமான் சிதம்பர உடையா ரவர்களால்,

சென்னை

திருவல்லிக்கேணி

“ரோபில்” அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

துன்மதி ௵.

விலை ரு. 1—8—0.] 1922 [தபாற்செலவு வேறு.

Copyright Registered.

C

A

Accn. No 76888

192p

51

13 OCT 192

B
13 OCT 1922
294.535
657
Q23:38.2118.T
N22
76888

சிவமயம்.

# முகவுரை.

திருவெள்ளூர் என்கிற திவ்யஸ்தலம் கொங்குநாட்டிலுள்ளது. தமிழ் நாட்டில் தேவாரப்பதிகங்களுடைய தலங்கள் இருநூற்று எழுபத்துநான்கு என்றும் அவற்றில் ஏழுதலங்கள் கொங்குநாட்டிலிருக்கின்றன என்றும் பெரியோர் கணக்கிட்டிருக்கின்றனர். திருவெள்ளூர் என்னும் இது அவ்வேழினுள் ஒன்றல்லவெனினும் அவற்றுள் எதனையேனும் ஒன்றைச் சார்ந்ததாகும். பாடல் பெற்ற தலங்களுக்கு அருகே பஞ்சக்குரோச தூரத்திலுள்ள எந்தத்தலமும் அந்தத் தலத்தைச் சார்ந்ததாகும் என்றும் அதற்குள்ள மகிமை இதற்குமுண்டு என்றும் பெரியோர் கூறுகின்றனராதலால், இஃதும் அத்தன்மைத் தென்பதிலையமின்றும்.

இந்தத்தலம் வெள்ளாறென்கிற ஓர் ஆற்றங்கரையின்மீது வெகு அழகாய் விளங்குகிறது. ஆகையினால் இதற்குத் திருவெள்ளூர் என்கிறபெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது பேளூர் என்கிற பேர் இதற்கு வழங்குகிறது.

இந்தத் தலபுராணம் ஸம்ஸ்கிருபாஷையிலுள்ள பிர்ம்மாண்டபுராணத்திலுள்ளது. இதனை அஷ்டாவதானம் சொக்கலிங்கக் கவிராயர் என்பவர் செந்தமிழ் நூலாகச் செய்தனர். இது பழைய ஏட்டுப் பிரதியிலிருந்தமையினால் இதனை எல்லோரும் படித்து அத்தல வைபவங் கண்டுணர்தற்கில்லாமலிருந்தது. இக்குறையை நீக்கப் பலர் முயற்சிசெய்தனர் எனக்கேள்வி.

இவ்வாறிருந்த இப்புராணத்தைத் திருவெள்ளூர்க் கருகேயுள்ள குரிச்சியென்னும் ஓர் ஊரில் வசிக்கும் ஸ்ரீமான் சிதம்பர உடையாரென்கிற ஒரு சிவநேயச் செல்வர் அச்சிட்டு உலகுக்கு உபகரிக்கத் திருவுளங்கொண்டு தம்கருத்தை அவர்தம் நண்பரும்

சேலம் வாசியுமாகிய முத்துச்சாமிகவுண்டர் என்கிற ஓர் ஆயுர்வேத வைத்தியரிடம் வெளியிட அவர் சேலம் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரஹ்மஸ்ரீ டி. எஸ். நடராஜய்யர் அவர்களிடம் உடையாருடன் சென்று செய்தி கூறினர். அவர் தமக்குள்ள வேலைத் தொந்தரவைக் கூறி மறுத்தற் கியலாது, எம்பால் தமது திருமுகக் குறிப்புடன் அனுப்பினர்.

பண்டிதர் நடராஜய்யரவர்கள் எம்மிடம் உழுவலன்புடையவராதலால் அவர் கட்டளையைத் தில்லைநடராஜப் பெருமானுடைய கட்டளையாகவேகொண்டு புராணத்தைப் பரிசோதித் தச்சிட்டுத்தர ஒப்புக்கொண்டனம். ஒப்பியபடி. சிவபெருமானுடைய திருவருள் துணையினால் எமது கருத்துக்கெட்டிய வரையில் ஒருவாறு புராணத்தைப் பரிசோதித்துதவினோம்.

உடையாரவர்கள் சிவபெருமானிடம் கொண்ட அன்பின் துணையால் புராணம் அவர்கள் விரும்பியபடி சென்ற சிவராத்திரிக்குள் அச்சிட்டு முடிவுபெற்றது. இந்தப் புராணத்தைச் சிதம்பர வுடையாரும் வெள்ளூர்த் தலவாசியாகிய ஸ்ரீமான் பெத்துசாமி செட்டியாரும் இன்னும் சில சிவபக்த சிரோமணிகளும் சிவராத்திரியன்று தாந்தோன்றியீசருடைய ஸந்நிதியில் அரங்கேற்ற வேண்டுமென்று விரும்பினர்.

அவர்களுடைய விருப்பத்திற் கிணங்கி, யாமும் பிர்ஹ்மஸ்ரீ நடராஜய்யர் அவர்களும் அத்தலத்திற்குச் சென்று பலபெரியோர்களுக்கும் பக்தகோடிகளுக்கும் முன்னிலையில் புராண வரலாற்றையும், அதன் பெருமையையும், பாடல்களின் சிறப்பையும், இன்னும் பல விசேஷங்களையும் படித்துக்காட்டி இறைவனருளால் அரங்கேற்றி முடித்தோம்.

சிவராத்திரியன்று தாந்தோன்றி யீசர் உற்சவம் அங்குக்கண்கொளாக் காட்சியாக நடந்தது. பதிபுண்யமாகிய இதில் ஈடுபட்டுழைத்த ஸ்ரீமான் சிதம்பர உடையாரவர்கட்கு எல்லாம் வல்ல இறைவனாகிய தாந்தோன்றி யீசர், மக்கட்பேறு முதலிய சகல



பேறுகளையும் அளித்து நல்வாழ்வில் வைத்து என்றும் தம்மிடத் தன்பு குன்றாவழி காத்து முடிவில் அடியார் பெறும் பேறு அளித்தருள்வாராக! சிவபக்தியிலீடுபட்டுப் போவாவுடன் இதனை அச்சிடவேண்டிய முயற்சிசெய்த கவுண்டரவர்கள், புராணம் அச்சிட்டு முடித்துப்பார்ப்பதற்கின்றித் தேகவியோகமடைந்து விட்டதைப் பற்றி விசனிக்கிறோம்.

இந்தப் புராணத்தின் ஏட்டுப்பிரதி ஒன்றே எமக்குக் கிடைத்தது. அதுகொண்டே பரிசோதிக்க வேண்டியதாயிருந்தபடியால், சில இடங்களில் உரைக்கும் பாட்டிற்கும்பொருத்தமாகயாமேசொற்களைச் சேர்க்கவேண்டியதாயிருந்தது. ஏட்டில் சில பாட்டுகளில் சில சொற்கள் செல்லுக்கிரையாயிருந்தமையின் இங்கும் திருத்த வேண்டியதாயிருந்தது. வேறு யாரிடமேனும் ஏட்டுப்பிரதியிருந்து அதில் எங்கேனும் பேதங் காணப்படின் அதனை மறுபதிப்பில் திருத்திக்கொள்ளுமாறு எமக்கேனும் அல்லது ஸ்ரீமான் உடையார் அவர்களுக்கேனும் தெரிவிக்க வேண்டுகிறோம். புராணம் பல அவசரங்கட் கிடையே அச்சிடப்பட்டமையால் ஏதேனும் பிழைகளிருக்கலாம். அவற்றைப் பெரியோர்கள் பாராட்டாமல் பொருளையே கொள்ளும்படி அவர்களை வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சென்னை. இங்ஙனம்

திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

குறிப்பு.—இப்புராணத்தை விற்பதினால் கிடைக்கும்பொருளை ஸ்ரீமான் உடையார் அவர்கள், தாந்தோன்றி யீசர்க்கே அர்ப்பணஞ் செய்வதாக வாக்களித் திருக்கின்றமையால் அன்பர்கள் எல்லோரும் அவருடைய நல்லெண்ணம் நிறைவேறுமாறு உதவி புரிவார்களாக!

## சிறப்புப் பாயிரம்

சேலம் - கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
பிரஹ்மஸ்ரீ நடராஜய்யர் அவர்கள் இயற்றிய

அறுசீர் விருத்தம்

இருக்கொரு நான்கும் தம்மு ளில்லமறை காய்போற் கொண்ட
திருக்கறு பொருளை யெல்லாந் தெண்புவி தெரிந்துய் வண்ணம்
பெருக்கமார் தரவெ டுத்துப் பேசுவ புராண மென்ப
உருக்கமார் முனிவர் சொல்லவ் வுறுதியே யுறுதி யாமால். (1)

அத்தகைச் சிறப்பின் மூர்த்தி யரும்புனற் றலமி வற்றின்
சத்துறும் வெள்ளூர்க் கான்றோர் சாற்றிய புராணந் தன்னை
ஒத்தல குணர்ந்து வாழ்வா னயர்சைவ நெறிவ ழாத
பத்திமை யுடையான் அன்பர் பகருநற் குணங்கள் வாய்ந்தோன்

சிதம்பர வுடையா னென்னுந் திருப்பெயர் பூண்ட செல்வன்
சதம்பெற வாங்கு வாழுந் தாந்தோன்றி யீச னோடு
நிதம்பரிந் திடப்பான் மேய நீளறம் வளர்த்த தாயாம்
பதந்தருந் தரும சம்வர்த் தனியெனும் பாரப ரைக்கண் (3)

மாரதி பெருகித் தூய வாகவி சுப்ர மண்ய
பாரதி யென்னும் வேத பாரகக் கலைவல் லோனால்
சீரது பெறத்தி ருத்தித் திகழச்சச் சிவிகை சேர்த்துப்
பாரது புகழ வந்தப் பாக்கியன் றன்னைக் கொண்டே (4)

துன்மதி மாசி வெள்ளிச் சுபதின மாம்பன் மூன்றில்
நன்மதி யளிக்க வல்ல நற்சிவ சாத்தி ரிக்கண்
பொன்மதி படைத்த மேலோர் பொருந்தியே யிற்றி ருக்கக்
கன்மதி யினரு முள்ளங் கசிந்துகேட் டுவக்கு மாறு (5)

சேலமா நகா வெள்ளூர்த் திருத்தலந் தன்னி லேயே
கோலமா யலங்க ரித்த குலச்ரபா மண்ட பத்தின்
பாலரங் கேற்றி மெச்சும் பரிசவற் களித்தான் பாரீர்
ஞாலமீ தவனம் மீசன் னலந்தழீஇ வாழ்க மாதோ. (5)

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெள்ளூர்ப் புராணம்.

பாயிரம்

## விநாயகர் வணக்கம்.

திருவளர் வெள்ளூர் தன்னிற் றேவர்தாந் தோன்றி நாதர்
அருள்பொழி காவி யத்தை யவனியில் விரித் துரைக்கச்
சூர்முனி வசிட்ட ராதி தோத்திரஞ் செய்து போற்றும்
கரிமுக னிருதா ளென்றுங் கருத்தினி லிருத்து வோமே. (1)

வேத மோது வியாத னருட்பெறும்
சூத னோது கதையையான் சொல்லிடத்
தீது போக்கிடர் தீர விபமுக
மாதி ரந்தனை வாழ்த்தி வணங்குவாம். (2)

## தாந்தோன்றி நாதர்.

கார்கொண்ட நிறவல்லி யிடமெலாம் படர்ந்ததெனக் கலை வெண்டிங்கு, ளேர்கொண்ட நெடுவேணிக் காடுமுடி மிசைகொண்டு நிமலமாகி, வர்கொண்ட வொருவனாவெண் கங்கைசூழ் வெள்ளூரி லிருக்கு ஞானச், சீர்கொண்ட தாந்தோன்றி நாதனைப்பல் கால் வணங்கிச் சிந்தை செய்வாம்.

(இ - ள்.) மேகம்போன்ற நிறத்தையுடைய வல்லிக்கொடி இடங்கள் தோறும் படர்ந்தாற்போல் உமாதேவி யிருக்கின்ற வாமபாகத்தோடும் ஒளிருகின்ற கலைகளையுடைய வெண்பிறையும் கங்கையுந்தாங்கி நீண்ட சடாடவியை முடிமேற் சுமந்து பரிசுத்தமாகி அழகுசெய்கின்ற ஒப்பற்ற மலைபோல்பவராகிய கடவுளை வெள்ளாறு புடைசூழ்ந்த நகரத்தில் ஞான வடிவாகிய சுயோற்பத்திஸ்தல நாதரைப் பலதரமும் தொழுது தியானிப்போம்—என்றவாறு. (3)

## வேதபுரீசர்.

பூமேவு திசைமுகனும் நெடியவனும் மகபதியும் போற்றி செய்யக், காமேவு துறக்கமுற்ற விமையவர்க ளறவோர்கண் களிகூர்ந்தன்பாய், மாமேவு மைம்புலனு மொருவழிசெய் தானந்த மலா நின்ற, தேமேவுந் தண்டலைசூ வேதபுரி யிறைவனடி சென்னி சேர்ப்போம்.

(இ - ள்.) கற்பகச்சோலை சூழ்ந்த பொன்னூட்டிலுள்ள தேவர்களும் முனிவர்களும் கண்களிகூர்ந்து அன்புற்றவராய்ப் பெருமை பொருந்திய பஞ்ச விஷயங்களிலும் பாயாநின்ற உள்ளத்தை ஒரு வழிப்படுத்தி மெய்ஞ் ஞானச் சுகமடைந்து பெருந்தவம் புரிகின்ற தேன் பொருந்திய தோப்புகள் சூழ்ந்த வெள்ளூரினிடத்துத் தாமரை மேல் விளங்கிய பிரமனும் விஷ்ணுவும் தேவேந்திரனும் வணங்கும்படி வீற்றிருந்த கடவுளது பாதங்களை யெமது சிரசின்மேற் சூட்டிக் கொள்வோம்---என்றவாறு. (4)

## அறம்வளர்த்தநாயகி.

முதல்வரையிற் பிறந்துமுக்கண் முதல்வரையே மணந்துவரு மூடிகத்து, மதவரையைப் பன்னிருகைப் பிள்ளையையீன் றறம் வளர்த்த மாதாசெய்ய, பதுமமலர்ப் பதத்துணை நினைந்துருகிச் சென்னியுறப் பணிந்து நாவாற், றுதிகள் செய்வா மெய்ஞ்ஞானச் சுடர்தோன்றிப் பாவவிருண் மாய்ந்தறவே.

(இ - ள்.) உயர்ந்த இமயகிரியிற் பிறந்து மூன்று கண்களையுடைய, முதற்கடவுளை மணந்து பெரிய பெருச்சாளி வாகனத்தை யுடைய விநாயகனையும், முருகக் கடவுளையும் பெற்றவளாயும், தருமங்களை வளர்த்தவளாயும், உலகமாதாவாயும் விளங்கிய உமாதேவியினது தேன் பொருந்திய தாமரை மலர்போன்ற பாதங்களை உள்ளத்தாலுள்ளிக் கரைந்து தலையாற் பொருந்த வணங்கி நாவால் தோத்திரம் செய்வாம் மெய்ஞ்ஞான தீப முதித்து நமது பாவவிருள் நீங்கும் பொருட்டு—என்றவாறு. (5)

## இதுவுமது.

பூங்கமலப் பதத்தாளை பொருந்துகிளிக் கரத்தாளைப் புவனமேழும், பாங்குடனீன் றளித்தாளை மலையரையன் றவத்தாளைப் பரமர்க்கன்பாய், வீங்குகன தனத்தாளையுருவமா கதத்தாளை விமல ஞானந், தேங்கியசு வேதபுரி விளங்கவறம் வளர்த்தாளைச் சிந்தை செய்வாம்.



(இ - ள்.) அழகிய தாமரை மலரைப்போன்ற பாதமுள்ளவளும், கிளி பொருந்திய கையுள்ளவளும், ஏழுலகமும் நன்மையுடனே பெற்றவளும், பருவத ராஜனது தவமானவளும், கைலாச நாதருக்குப் பிரியவளும், பருத்துக் கனத்த முலைகளுள்ளவளும், மாகதமணி யொத்த நிறமுள்ளவளும், களங்கமற்ற ஞானமே நிறைந்துள்ள வேள்விமாநகரம் விர்த்தியடையும்படி தருமங்களை வளர்த்தவளுமாகிய உமாதேவியைத் தியானிப்போம்—என்றவாறு. (6)

## பரமசிவம்.

முக்குணத்தாற் படைத்தளித்தே யழித்துமுக் குணங்கடந்தோர் முதலா நின்ற, வக்கரத்த லத்தமர்ந்து நாமமள விறந்தோ னனேகனேகன், மிக்கபரா பரனுருவ னருவனரு வுருவனருள் விமல மாகித்; திக்குமேல் கீழனைத்தும் வடிவான முதற்பொருளைச் சிந்தை செய்வாம்.

(இ - ள்.) இராஜஸம், தாமஸம், சாத்விகம் என்கிற முக்குணங்களினாலே படைத்துக் காத்து, அழிக்கும் பிரமன், விஷ்ணு, உருத்திரர்களாகி அந்த மூன்று குணங்களையுங் கடந்து பிரணவ முதலாய் வேதத்திலே யமர்ந்து அளவிறந்த பெயருடையவனாகவும் அநேகனாகவும் ஏகனாகவும் எல்லோருக்கும் மேலானவனாகவும் உருவனாகவும் அருவனாகவும் உருவருவனாகவும் அருள்வடிவனாகவும் பரிசுத்தனாகவும் எட்டுத்திக்கும் ஆகாயம் பாதளம் ஆகிய பத்துத் திக்குகளும் தனக்குரிய வடிவமாகவும் நிறைந்தவனாகவும் விளங்கும் ஆதிவஸ்துவைத் தியானஞ் செய்வோம்—என்றவாறு.

உருவசொரூபம்- பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன்.

அருவசொரூபம். பிந்து, நாதம், சக்தி, சிவம்.

உருவாருவசொரூபம்- சதாசிவம்- இவை பரசிவத்துக்குரிய ஒன்பது சொருபமாம். (7)

நீட்டிநெடும் புழக்கையொரு மும்மதமாய் வருஞான நீரிலாடிக், காட்டினிரு ளஞ்ஞானத் தருக்களைவே ருடன்பிடுங்கிக் கருணை லீலை, வேட்டுமறு பிறவியலை மேடிட்டு வளரும்வினை வெற்பை வீட்டும், கோட்டுமலைப் பிடிபயந்த தும்பியிரு தாடலைமேற் கொள்வாம் யாமே.

துளைகளை யுடைய நீண்ட தும்பிக் கையை நீட்டி, ஒப்பற்ற மும்மதமென்று சொரிகின்ற ஞான நீரிற் குளித்து, மாயையென்னும் காடாந்தகாரத்தில் அஞ்ஞானமென்னும் மரங்களை மூலத்தோடு பிடுங்கி, கிருபாவிநோதத்தை விரும்பிக் கொம்பினால் அன்பரது பிறவியாகிய பெரியமேடு வளர்தற்குக் காரணமாகிய இருவினைகளென்னும் மலையைத் தகர்க்கின்ற சிகரத்தையொத்த முலைகளையுடைய உமாதேவியின்ற யானையினது இரண்டு பாதங்களையும் நாம் சிரசில் சூட்டிக்கொள்வாம்—என்றவாறு. (8)

## முருகன்

ஓராறு முகத்தானை யொருமூன்றன் கருண்மலர்க்க ணுடையான்றன்னை, யீராறு கரத்தானை யடியாருக் கெளியானை யிமையோர்வாழ்த்தப், போராரு மசுரர்பட வயிலெடுத்த முருகனைநம் புராரி யீன்ற, பேராறு போன்மதத்தான் பின்னானை வணங்கியன்பு பெருகச் செய்வாம்.

(இ-ள்.) ஒப்பற்ற ஆறுமுக முள்ளவனும் கிருபை பொழிகின்ற மலர்போலும் பன்னிரு விழிகளுள்ளவனும் பன்னிரண்டு கைகளுள்ளவனும் அடியவர்க் கெளியவனும் தேவர்கள் துதிக்க, யுத்தம் செய்கின்ற அரக்கர்கள் மாளும்படி வேல் கைக்கொண்ட முருகக்கடவுளும் மகாதேவர் பெற்ற பெரிய ஆறுபோன்ற மதங்களை யுடையவன் தம்பியுமாகிய கடவுளைப் பணிந்து மிகவும் அன்புறவாம்—என்றவாறு. (9)

## வீரபத்திரர்.

மித்திரனைப் பல்லுதிர்த்து வெண்ணிலவை யுடறேய்த்து விளங்கும் பீத, வத்திரனை மிகப்பொருது சார்ங்ககால் சிரந்தடிந்து வனசநாதன், புத்திரனைத் தலைதுமித்துக் கொழுந்தழகத் தழல்சிதைத்த பொருவில்வீர, பத்திரனை யருள்வீர பத்திரனை யடிவணங்கிப் பரவுவாமே.

(இ-ள்.) சூரியனது பற்களை உதிர்த்து வெள்ளிய சந்திரன துடலைத் தேய்த்து பிரகாசிக்கின்ற பீதாம்பரனை திருமாலோடு மிகவும் யுத்தம் செய்து தேவர்களது கை, கால், தலைகளைத் தறித்துப் பிரமாவின் புத்திரனை தக்கனுடைய தலையை யறுத்துச் சுவாலையுடைய யாகாக்கினியை அழித்த ஒப்பற்ற வீரமுள்ள வாளாயுதத்தை யுடைய கிருபைபொருந்திய வீரபத்திர சுவாமியினது பாதங்களைத் தொழுது துதிப்பாம்—என்றவாறு.



## திருநந்தி தேவர்.

கண்ணுதலுந் திங்களிளம் பிறையுமெறி திரைசுருட்டுங் கங்கையாறு, முண்ணிலவ முடித்தசெழுஞ் சடைமுடியு மழுமானு மொன்னார்ச்செற்ற, வண்ணவிறற் சுரிகையுமே வினைதுரக்கும் பொற்பிரம்பு மலர்க்கை கொண்ட, வண்ணலாந் திருநந்தி தேவர்மென்பூஞ் சேவடிக்கே யடிமை செய்வாம்.

(இ-ள்.) விழியுள்ள நெற்றியும், இளந் திங்கட்பிறையும் எற்றுகின்ற அலைதவழாநின்ற கங்காநதியும் உள்ளே தங்கமுடித்த செழித்த சடாமுடியும் மழுவுமானும் சத்துருக்களை ஜெயித்தஅழகும் வெற்றியும் பொருந்திய வாளாயுதமும் நமது வினைகளை யோட்டுகின்ற பொற்பிரம்பு மலர் போன்ற கைகளிலே தாங்கிய கடவுளாகிய திருநந்தி தேவரது மிருதுவும் அழகும் செம்மையும் பொருந்திய பாதங்களுக்குத் தொண்டு செய்வாம்—என்றவாறு. (11)

## நாமகள்.

வரியளிகள் கான்மிதிப்ப வகைநெகிழ்ந்து முகமலர்ந்து மதுவூற் றாறும், விரைகமழும் வெண்கமலப் பொகுட்டரசு வீற்றிருக்கும் விரிஞ்சன் வாழ்வைத், திருமுறைவெண் பளிங்குவட மபயவரதமுமாகச் சிந்தித் தன்னா, ளிருவனச மருமலர்ப்பூம் சேவடிகள் சென்னியின் வைத் தேத்துவாமே.

(இ-ள்.) புள்ளிகளை யுடைய வண்டுகள் காலாலூன்ற இதழ் விரித்து மலர்ந்து தேனூற்றூறி வாசனை பரிமளிக்கின்ற வெண்டாமரைப் பொகுட்டி லரசு வீற்றிருக்கின்ற பிரமனது வாழ்வாகிய சரஸ்வதியைத், திருமுறையும் பளிங்குவடமும் நமது பயந்தீர்ப்பதும் காப்பதுமாகக் கருதி, அவளது வாசனை பொருந்திய தாமரை மலரையொத்த அழகும் செம்மையும் தங்கிய இரண்டு பாதங்களைச் சிரசின் மேல் வைத்துக் கொள்வோம்—என்றவாறு. (12)

## சம்பந்தர்

அழுமலக்கண் [illegible] யருஞ்ச வினைநீங்க வருள்சுரக்க வருகப்புத்த, முழுமலைப்ப யருகர்கெடச் சைவநிலை யிடவம்மை முலைப்பா லுண்ணு, வழுமலத்து வழிதரள நிலவெறிப்பக் குமுதமல ரோடைச் சூழும், கழுமலத்து வந்துதித்த சுந்தரைச்சம் பந்தரையெங் கருத்துள் வைப்பாம்.

(இ - ள்.) அழும்படியான துன்பமும் நோயும் வஞ்சக வினைகளும் அன்பரை விட்டு நீங்கவும் அவர்களுக்குக் கிருபை புரியவும் சாக்கிய புத்த சமயங்களும், முழுதுமலின பாத்திரமான சமணர்களும் கெடவும், சைவ சமயநிலையாகவும், உமாதேவியினது ஸ்தனாமிர்தம் புசிக்கவும் கலப்பை யுழுத வழிகளில் முத்துகள் பிரபை வீச ஆம்பல் பூக்கள் மலர்கின்ற நீரோடை சூழ்ந்த சீர்காழியில்வந்து அவதரித்த முருகமூர்த்தியாகிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரை யெமது கருத்திலிருத்துவாம் —எ - று. (13)

## திருநாவுக்கரசர்.

ஒரு மாயைப் பௌத்தருட னிணங்கியவர்ப் புறக்கணித்தோர்
பொருளைத்தேடி, வருமாக மங்கடெரிந் தருகிநெக்கிட் டசும்பூறிமலிக் கூட்டுங், கருமாசு பவக்கடலைக் கரையேற்ற வந்தபிரான் கமழும்
பாடற், றிருமேவும் மாமூரிற் றிருநாவுக் கரசனடி சென்னி சேர்ப்பாம்.

(இ - ள்.) ஒப்பற்றமாயை செய்கின்ற புத்தரோடு கூடி, அவரை யறியாமல் வேறொரு நற்பொருளைத் தேடி வருகின்ற சைவாகமங்களைத் தெரிந்து நெக்குருகி மலினமேயூறி நிறைந்து சேர்க்கின்ற கருப்ப மென்னும் குற்றந்தங்கிய பிறவிச்சாகரத்தின் கரையிற் சேர்க்க அழகு பொருந்திய ஆமூரில் அவதரித்த பிரானாகிய பாடல் பரிமளிக்கின்ற திருநாவுக்கரசரது பாதங்களைச் சிரசில் வைத்துக் கொள்வாம் —என்றவாறு. (14)

## ஆலாலசுந்தரன்.

அமையாத தனிவிளைக்கும் பரவையார் மனைக்கேக வன்று தூதுங்
கெமையாளு மாரூரர் திருப்பாத மலர்சேப்ப விரவி னாடு
தமிழ்பாடி நடத்துவிக்குஞ் சைவசிகா மணியென்று தாலம்போற்றக்
[illegible]க்கில்வரு மாலால சுந்தரனைக் கருத்துள் வைப்பாம்.

(இ-ள்.) தாங்குதற் [illegible] காமதுன்பத்தை யுண்டாக்குகின்ற பரவை நாச்சியார் வீட்டுக்குத் தூது போம்படி அன்று [illegible] வங்களை இரக்ஷிக்கின்ற திருவாரூர் புற்றிடங்கொண்ட கடவுளை திருவடிக்கமலம் சிவப்பேற [illegible] திரி காலத்தில் தமிழ்ப் பாடி நடத்துவிக்கின்ற சிவசமய சிரோரத்தினமென் றுலகம் பணியக் கமலாலயத்தில் வந்த ஆலால சுந்தரப் பெருமானாரது பாதங்களை யுன்னத்தி லமைப்பாம்—என்றவாறு. (15)



## மாணிக்கவாசகர்.

மருவாச மதுநிறைந்த மலரிதழித் தொடைவாச மௌலியி யான்மு
னொருவாச கம்வினவ வுரைவாச கத்தினறிவுண்மை நோக்கிக்
கருவாச கஞ்சிதைத்தக் குருவாசகத் தொகுதி கனிந்த தேறற்
றிருவாச கந்தெரித்த திருவாதவூர ரடி சென்னி சேர்ப்பாம்.

(இ-ள்.) வாசனை பொருந்திய தேனிறைந்த கொன்றைப் பூமாலை தங்கிய முடியுடைய குருராயரிடத்தில் ஒரு வார்த்தை வினவ அவ்வார்த்தையின் உண்மையறிவைப் பார்த்து இனிக் கருவாகிப் பிறக்கின்ற குற்றமான அகங்காரத்தைக் கெடுத்து அனுக்கிரகித்த குருவாக்கியக் கூட்டங்கள் பழுத்த தேன்போன்ற திருவாசகத் தமிழைத் தெரிவித்த மாணிக்கவாசக சுவாமிகளது பாதங்களைச் சிரசில் வைத்துக் கொள்வாம்—என்றவாறு. (16)

ஒரு வாசகம் வினவல், சிவமாவதேது, ஞானமாவதேது,
போதமாவதேது—என்று வினவியதாம்.

## அறுபத்துமூவர்.

வேறு.

இதயத்தி லூடுருகி யருணத்தி வாகரன்மு னிருளொக்கு மாறு
பவநோய், சிதையப்பொ யாதவருள் பெருகப்பல் காற்றொழுது திட
பத்தி யாக நினைவாம், நதிமத்த மேவியொளிர் சடிலத்தர் தீபரவு நகை
நித்தர் சேவை மறவா, வதிகச்சை வாகமமெய் நிலைபெற்ற நாதரெனு
மறுபத்து மூவர் பதமே.

(இ - ள்.) கங்கையும் ஊமத்தை மாலையும் பொருந்திப் பிரகாசிக்கின்ற சடையையுடைய அக்கினி விரியச் சிரித்த நித்தியனான மகா தேவரைச் சேவித்தலை மறவாத மேலான சைவாகம வுண்மை நிச்சயத்தை யடைந்த தலைவராகிய அறுபத்து மூவரது பாதங்களை மனத்தினிடத்தில் நினைத்து உருகிச் சிவந்த சூரியன் முன் இருட்டைப் போக்கும்படிப் பிறவி நோய் கெடப் பொய் யில்லாத அன்புபெருக வணங்கித் திடமான பத்தியோடும் கருதுவோம்.—என்றவாறு. (17)

## குரு.

வேறு.

சதுர்மறையின் கடற்றோன்றும் சைவமென்னு மமுதண்ணச்
சரோசத்தண்பூம், பதமலரை முடிசூட்ட வெண்ணீற்றுக் களபத்

ளைப் பலகாற்பூச, மதுரவிருந் திட்டெமையாட் கொண்டகுரு ராயர்
முப்பை வள்ளன் ஞானக், கதியுதவு மழகியசிற் றம்பலவ னடியவர்
தாள் கருத்துள் வைப்பாம்.

(இ-ள்.) நால்வேதமென்னும் சமுத்திரத்திற் பிறந்த சைவமென்னும் அமிர்தத்தை நாம் புசிக்கவும் தாமரை மலர்போன்ற தனது அழகிய பாதங்களைச் சிரசில் வைக்கவும் வெள்ளிய விபூதி தூளனத்தைப் பலதரம் பூசிக்கொள்ளவும் இனிய விருந்து செய்வித்து எங்களை யடிமை கொண்ட ஆசாரிய சிரேஷ்டராகிய முப்பை வள்ளலாரென்னும் ஞான மோட்சம் தருகின்ற அழகிய சிற்றம்பலவனது தொண்டர்களின் பாதங்களை உள்ளத்திலிருத்துவாம்.—என்றவாறு. (18)

## நால்வரலாறு.

வெள்ளாறு தீர்த்தவரை மேவவினை தீர்த்தவரா விரும்பிச்
சிந்தை, யுள்ளாதார்க் குபதேச மொழியாதுற் பவதேச மொழியா
தேத்தார்க், கள்ளாரு மிதழியரைக் கனியாரு மிதழியர்க்கண் டார்வ
மாரு, தள்ளார்வை யுட்பூதி தரியார்வை யுட்பூதி தழையத்தானே.

(இ-ள்.) வெள்ளாற்றிலும் தீர்த்தமலையிலும் பொருந்த வினைகளைத் தீர்ப்பவரை அன்புற்று மனதினினையாதவர்க்கு உபதேசம் சொல்லுதல் கிடைக்காது; பிறவியாகிய நாடுவிட்டுப் போகாது; தேனிறைந்த கொன்றைமாலை புனைந்த கடவுளைப் புகழார்; கனியை யொத்த அதரத்தை யுடைய மகளிரைக் கண்டு மயங்குவார்; துன்பமான கொடுமை செய்தலை விடார்; கொஞ்சமாயினும் விபூதியைச் செழிக்கப் புனையார்.—என்றவாறு. (19)

இறைவர்சடைக் கங்கைநீர் விடுதலால் வெள்ளாறென் றிசைத்
தார் யாற்றை, யிறைவரருள் சுரந்துதாந் தோன்றுலிங்க மாதலா
லிலிங்கந் தானும், மறைபுகழ்தாந் தோன்றுலிங்க மானார்வெள்
ளாற்றின்பான் மருவலாலூ, ருமும்வெள்ளூ ரென்றுரைத்தார் முனி
வேள்வி யால்வேள்வி யூரா மென்றார்.

(இ-ள்.) மகாதேவர் தமது சடையிற்றங்கிய கங்கோதகத்தை விட்டபடியால் அவ்வாற்றை வெள்ளாறென்றுரைத்தார். கடவுள் கருணை பெருகித் தாமே வுதித்து லிங்க வடிவானதால் அவ்விலிங்கமும் வேதங்கள் துதிக்கின்ற சுயோற்பத்தி லிங்கமாயினர். வெள்ளாற்றின் பக்கத்திருத்தலால் அவ்வூரை வெள்ளூரென்றுஞ் சொன்னர். முனிவனது யாகத்தினல் வேள்வியூரென்றுரைத்தார்.—என்றவாறு. (20)



வெள்ளாற்றோர் திவலைபட்டார் வெம்பகடூர் திவலைபடார் வேத
வேள்வி, வெள்ளூரை முன்னினைந்தார் விதிவினைமுன் னினைபாரவ்
விமல கங்கை, வெள்ளாற்றைத் துதிப்பவர்கள் வீட்டுநிலத் துதிப்
பவர்கள் விரிந்த கீர்த்தி, வெள்ளூரி லிருந்தவர்கள் மெய்ஞ்ஞானத்
திருந்தவர்காண் மெய்மை மெய்மை.

(இ-ள்.) வெள்ளாற்றிலொருதுளி படப் பெற்றவர்கள், வெவ்விய கடா வாகனத்தை யுடைய யமனது பாசவலையிலகப்படார். சுருதிப்படி யாகஞ் செய்கின்ற சுவேதமா நகரத்தை முன்னதாய் நினைத்தவர்களே விதியாற் கூட்டப்படும் வினைகளை நினைந்து வருந்தார். பரிசுத்த பாகீரதியான வெள்ளாற்றைத் துதி செய்பவர்களே மோக்ஷ பூமியிற் பிறப்பவராவார். புகழ்ச்சி பரவிய வெள்ளூரில் வசித்தவர்களே உண்மையான ஞானச் செல்வத்தையுடைய முனிவராவார். இது சத்தியம். சத்தியம்.—என்றவாறு.

கங்கைபோ னதியுமில்லை தாந்தோன்றி லிங்கமாங் கடவுள்
போலு, மிங்குலகிற் றெய்வமும் வெள்ளாற்றின் றீரத்தி லிருக்கும்
செந்தேன், பொங்கர்செறி வெள்ளூர்போற் சிவதலமு மில்லையுண்மை
புந்தி தேர்ந்து, கங்கைதாந் தோன்றுலிங்கர் வெள்ளூரென் பார்
போலும் கற்றோ ரன்றே.

(இ-ள்.) சுவேதபாகீரதி போல் தீர்த்தமும் இறைவராகிய சுயோற்பத்திலிங்கமாகிய மூர்த்தி போல் இந்தப் பூவுலகத்தில் மூர்த்தியும் அந்தச் சுவேத பாகீரதிக் கரையிலிருக்கின்ற சிவந்த தேன் சொரிகின்ற சோலைகள் நெருங்கிய சுவேதபுரி போன்ற சிவஸ்தலமும் இல்லையாகும். இவ்வுண்மையைப் புத்தியிற்றெரிந்து, வெண்கங்கை தாந்தொன்றி லிங்கர் வெள்ளூரென்னும் தீர்த்தமூர்த்தி ஸ்தலங்களைச் சொல்லுவார் போலும் கற்றவர்கள்.—என்றவாறு. (22)

## வேறு.

நீறுமணக்குந் திருமேனி
நாறுமணக்கும் விரதியர்க ளுளமுங்க மணிபதமு
லாறுமணக்கும் சிவகாதை யனந்தமணக்கு மடியவர்தொழி
கூறுமணக்குந் திருநயனக் கோதைபாக ரருண்மணக்கும்.

(இ - ள்.) விபூதி கமழாநின்ற திருமேனியில் ஆயிரம் உருத்திராக்ஷ மணிகளை நிறையப் பூண்ட விரதியர்களது தவம் பரிமளிக்கும். வேதியர்களது அறுதொழிலும் பரிமளிக்கும். அளவற்ற சிவகதைகள் பரிமளிக்கும்; சகல அண்டங்களின் கூறும் பொருந்தி யிருக்கும்; அழகிய க்ஷேத்திரத்தை யுடைய உமாதேவிபாகராகிய கடவுளின் கிருபையே பரிமளியாநிற்கும் அந்த வெள்ளூர் ஸ்தலத்தில்—என்றவாறு. (23)

## வேறு.

இக்குணத்தால் வெள்ளூரோர் இளமுறைந்தார் சிவனுலக தின மாவாரோர், புக்கமுறைந் தாரிறைவன் பக்கமிருப் பாரிதையம் பரிவு கூர்ந்து, மிக்கதிங்க ளொவ்விருப்பார் வெண்டிங்க ளொன்றுவர்கள் விரும்பிப் போற்றித், தக்கபல காலத்தி லுபவாச மிருப்பவர்கள் முத்திவசஞ் சார்வா ரன்றே.

(இ - ள்.) இத்தன்மை யாதலால் அவ்வெள்ளூரி லொருநாளிருந்தவர்கள் சிவலோகத்தில் கணமாவார். ஒரு பதினைந்து நாளிருந்தவர்கள் சிவனது சமீபத்தி லிருப்பார். உள்ள மிகவும் அன்புற்று ஒருமாத மிருந்தவர்கள் வெள்ளிய சந்திரனைச் சூடிக்கொள்வர். விருப்பமுற்று வணங்கிப் பலகாலமு முபவாச மிருப்பவர்கள் மோக்ஷ வீட்டை யடைவார்கள் என்றவாறு. (24)

## வேறு.

அந்த வேத நதிப்புரிக் காவதையோ
டந்த வேதமொன் பாரதி வோர்களை
நொந்த கூரவெள் ளூர்நினைந் தேத்திடிற்
பஞ்ச பாதகம் பஞ்சிநிந் தீயரோ.

(இ - ள்.) அழகிய வெண்ணதி சூழ்ந்த வெள்ளூர்க் கதையுடனே வேதங்களைத்தென்று அறிவன்னோர் சொல்வார். அவ்வெள்ளூரை நெஞ்சகனிந்து நினைந்து புகழ்ந்தார் பஞ்ச பாதகமும் நெருப்பி[illegible]ட பஞ்சுபோல் போகும்—என்றவாறு. (25)

[illegible]அகன கம்பொனி
[illegible]த் தனைந்துறை சூழ்கிலூர்
பவள வேணி படர்ந்த பாம்பிடை
தவள மேனி தரிப்பார் சாதமே.



(இ - ள்.) நீலோற்பலமும் செவ்வாம்பலும் தாமரையும் விளங்கிய வெள்ளாற்றின் துறையில் குளித்தவர்கள் பவளத்தை யொத்த சடையை யுடைய கடவுளிருக்கின்ற இடமாகிய சிவலோகத்தி லிருப்பது சத்தியம்—என்றவாறு. (26)

தாம நாகமா தங்கமு டித்தவர்
தாம நாகமா தங்கமு டித்தவர்
தாம நாகமா தங்கமு டித்தவர்
தாம நாகமா தங்க முடித்தவர்.

(இ - ள்.) கொன்றை மலரையும் புன்னை மலரையும் பெண்ணையும் அழகிய சிரசிற்றரித்தவரும் பெரிய மலை போன்ற யானையை யுரித்துக் கொன்றவரும் புகழப்படுகின்ற மலைமகளைப் பாதியுடம்பில் வைத்தவரும் மாலைபோலச் சர்ப்பத்தை பெருமைதங்க முடித்தவருமாகிய—என்றவாறு. (27)

## வேறு.

பழமறைகட் கரியதாந் தோன்றினலா யவர்கோயிற் பக்கஞ் சூழ்ந்த, செழுநன்னீர் வெள்ளாற்றை வெள்ளாற்றின் மிசைத்தைத், திருவெள் ளூரைத், தொழும்வெள்ளூ ருள்ளாரை யுள்ளவர்தா ளிற்றுகளைத் துகளிற் றுவி, எழுபாம வனுவையவ் வனுவோடு வருமாரு தத்தினையா மிறைஞ்சு வோமே.

(இ - ள்.) பழைய வேதங்களும் அறியக் கூடாத சுயோற்பத்தி நாதரையும் அவரது கோயிலின் அருகே சூழ்ந்த செழித்த சுத்தோதகத்தை உடைய சுவேத நதியையும் அந்த நதியின் கரையையும் அக்கரையி லிருக்[illegible]
அந்தப் பாதத்துகளையும் அத்துகளில் எழுகின்ற பரமாணுவையும் அவ்வணு[illegible]வாம்—என்றவாறு. (28)

பொருவின்மறை முனிகூத னுக்குரைத்த மூவாறு புராணந் தன்னில், அரியபிர மாண்டமதில் வருமாறு முப்பதா மத்தியாயம், தெரிவாவே சொல்லிடுஞ்சு வேதபுரிக் காதையவர் செப்ப வல்லா, ருரியவட மொழிக்கடலி னுறமுகந்து தென்மொழியா லுரைக்க லுற்றேன்.

(இ - ள்.) ஒப்பற்ற வேதவியாசர் சூதபுராணிகருக்குச் சொன்ன பதினென் புராணத்தில் அருமையான பிரமாண்ட புராணத்தில் வருகின்ற நூற்று முப்பதாவது அத்தியாயத்தில் தெரியும்படி சொல்லுகின்ற வெள்ளூர்க் கதையைச் சொல்ல வல்லவர் யாவர்? உரிமையான வடமொழி என்னும் சமுத்திரத்தில் கொஞ்சமெண்டு தமிழினாற் சொல்லப் பொருந்தினேன்—என்றவாறு. (29)

## அவையடக்கம்.

முள்ளுறுதா ளின்மலர்ந்த தென்றூது தாமரையின் பொய்க்குந்
தும்பி, யெள்ளுறுசிற் றுணர்வென்புன் சொற்பாவென் றிகழாம
லிதையங் கூர்ந்து, வள்ளலார் வெள்ளூர்வாழ் தாந்தோன்று நாதர்
புகழ்மகிழ்ந்தா ராய்ந்து,கொள்ளுவர்நல் லோர்மற்றோ ரிகழிலொரு
குறையின்றாற் கூறு கின்றேன்.

(இ - ள்.) முட்பொருந்திய தண்டிற் பூத்ததென்று இகழாமல் தாமரை மலரில் வண்டுகள் மொய்ப்பதுபோல், இகழத்தக்க அற்பவறிவை யுடையேனது புன்மொழிப் பாட்டென்று அவமதியாமல் உன்ன மிரங்கி வள்ளலாராகிய சுவேதபுரியி லெழுந்தருளிய சுயோற்பத்தி நாதரது கீர்த்திக்கு மகிழ்வுற்று ஆராய்ந்து நல்லதென்றே நல்லோர் கொள்ளுவார்; மற்றவர்கள் இகழ்வதினால் ஒன்றுங் குறைவில்லை; ஆதலாற் சொல்லுகிறேன்—என்றவாறு. (30)

## வேறு.

மெய்யெழுத் தொருநகர வொற்றினுன் நகரவரி யிணைனினும்
மேவும் விதிபோற், றப்பபல வண்மைச்சு வேதபுரி யீசர்தாந் தோன்
றினர் காதை யுறலா, னெய்யமென் சிற்றறிவி னேனுயன் கொக்
கவிதை நால்வழு வாய தேனும், மெய்த்துயய னின்றெனினு மெள்
ளாது கொள்ளுவ [illegible]

(இ - ள்.) மெய்யெழுத்துகளில் ஒருநகர ஒற்றெழுத்தின் பொருட்டு அந்த நகரவரி யெழுத்துகள் பிரயோசனமில்லையாயினும் பொருந்தியிருக்கின்றமையால் நுண்ணிய வெனது அற்பவறிவினாற் சொல்லிய புன்மொழிப்பா இயற்றமிழ் நூற்கு வழுவாயினும் பெறுகின்ற பிரயோசனமில்லையாயினும் இலக்கண விதியறிந்த மேலோர் இகழாம லெடுத்துக் கொள்ளுவார்—என்றவாறு. (31)



## வேறு.

நைமிசா ரணிய வீறும் நாரதன் வந்த வாறும்
மைம்மலி திரைவெள் ளாற்றின் காதையு முனிவர் சீரு
மெய்ம்மையாம் வேள்விக் கூறும் துந்துமி செயலு மீவான்
செம்மலிந் திரன்சி றப்புந் திருச்சுசீ லன்றன் வாழ்வும்.

(இ - ள்.) நைமிசாரணியத்தின் பெருமையும் நாரதமுனிவர் வந்த வரலாறும் அணியணியாக அலைகள் மிகுந்த சுவேத நதியின் கீர்த்தியும் முனிவர்களிருந்த சிறப்பும் உண்மையான யாகத்தின் சரிதமும் துந்துமியினது செய்கையும் மேலுலகத்திலுள்ள தேவேந்திரனதுசீரும் அழகிய சுசீலனது வாழ்க்கையும்—என்றவாறு. (32)

துறவறக் கபில னன்பும் சுநந்தனன் பதமும் நான்கு
மறைதெரி சம்பு கன்றன் வண்மையுங் குணவ னப்பும்
நெறிகொள்சோ மாவ திப்பெ ணீர்மையும் சருக்க மாகக்
குறைவறப் பனிரண் டாகக் குறித்தியான் கூற லுற்றேன்.

(இ - ள்.) துறவறத்தை யுடைய கபிலனது பத்தியும் சுநந்தன் பெற்ற பதவியும் நால்வேதமும் தெரிந்த சம்புகனது வளமையும், குணமும் அழகும் சன்மார்க்கமும் பொருந்திய சோமாவதிப் பெண்ணின் நன்மையுங் குறைவின்றிப் பன்னிரண்டு சருக்கமாக நியமித்து நான் சொல்லப் பொருந்தினேன்—என்றவாறு. (33)

தருக்குற்ற திருவெள் ளூரிற் சயம்புநா தர்க்குத் தொண்டு
கருத்துறச் செய்யுஞ் சைவக் கனிச்சுவை கண்ண கந்த
புரத்தில்வாழ் பிரம னென்போன் பொருவில்வெள் ளூர்ப்புராணம்
விரித்திட வேண்டு மென்னத் தமிழினால் விளம்ப லுற்றேன்.

(இ - ள்.) களிப்புற்ற திருவெள்ளூரில் சுயோற்பத்தி நாதருக்கு மனம் பொருந்த அடிமை செய்கின்ற சைவமென்னும் பழத்தின் ரசமான கண்ணகந்தப்புரியில் வாழாநின்ற பிரமராயனென்று சொல்லப் படுவோன் ஒப்பற்ற வெள்ளூர்ப் புராணம் பாட வேண்டுமென் றுரைக்கத் தமிழினால் சொல்லத் தொடங்கினேன்—என்றவாறு. (34)

## சிறப்புப்பாயிரம்.

கூடல்கிழார் கோத்திரத்திற் றோன்றுடை நாடன், குன்றத்தூர்
சக்கரைக்குக் குமர னானோன், ஆடல்புனை கங்கைகுலன் சொக்கநாத
னஷ்டாவ தானன்மனத் தன்பினாலே, யேடலர்தார்க் கொன்றை
முடித் தாங்கேதான்று லிங்கர்மகிழ், புரியற்புரா ணஞ்செய்ய வேண்டு
மென்ன, வெஞ்சியான் னிருவருமே பாடினானே. 35

ஆகத் திருவிருத்தம் 35.

## நைமி சாரணியச் சருக்கம்.

### வேறு.

உன்னுசினை வெகுளியழுக் கறஞான நீராடி யுரவோ ரென்ன,
மன்னுசவு னகர்முதலாம் பற்பலமா தவர்செறிந்து மல்கி யோங்கு,
மின்னவள நைமிசா ரணியத்தி லோர்காலை யெல்லாஞ் சொல்லும்,
பன்னுமறை முடிவறிந்த பரமமா தவர்கூடிப் பலர்வந் தாரால்.

(இ - ள்.) நினைக்கின்ற கோபக் குரோதமென்னு மலினம் போக ஞானநீரிற் குளித்து அறிஞரென்றுள்ள சவுனகாதி மாகா முனிவர் பலர் கூடி வசிக்கின்ற இப்படிப்பட்ட வளமை மிகுந்த நைமிசாரணியத்தில் ஒரு காலத்தில் சகலமும் சொல்லுகின்ற பல வேதங்களின் முடிவைத் தெரிந்த மேலான முனிவர்கள் பல பேர் சேர்ந்து வந்தார்கள்—என்றவாறு. (1)

சங்கிருதி யாக்கிய வர்க்கி பாராசரர்மற் றபர சத்தி
மங்குமெகள தமருத்தா லகிவியாக்ர பாதர்மறை வாமதேவ
ரங்கிராக் கவுண்டினியர் பிருகு குச்ச ராசுவலா யனர்வ சிட்டர்
சங்கனர்கண் ணுவர்மாகா ருட்டினர் வியாசர்பைதர் சங்கரோடு.

(இ - ள்.) சங்கிருதி யாக்கிருதி யாக்கியவர்க்கர் பாராசரர் அபரசத்தி ஐம்புலன்கள் மழுங்கிய கவுதமர் உத்தாலகி வியாக்கிரபாதர் வாமதேவர் அங்கிரா கௌவண்டினியர் பிருகுகுச்சரர் ஆசுவாலயனர் வசிட்டர் சங்கணர் கண்ணுவர் மாகாருஷ்ணர் வியாசர் பைதர் சங்கருடனே—என்றவாறு. (2)

மாமதிப்பாய மனமதிப்பாய செயமுனிகௌ சிகர்பரத்து வாசர்
சங்கு, ரோமசரத் திரியாணி மாண்டவியர் கபிலர் முதலுளார்வின் மிக்
கோர், தாமனைத் முனிவோர்க டிருக்கூடித் துடன்வலவந்தெய்
வத்தான் வந்து, தோமறுசத் திரயாகஞ் செயநினைந்து விதிமுறை
யாற் றுடங்கும் வேலை.



(இ - ள்.) மிகுந்த விவேகமுள்ள பைடனசீ முனிவர் செயமுனி கௌசிகர் பாத்துவாசர் சங்குமுனிவர் உரோமசர் அத்திரி முனிவர் ஆணி மாண்டவியர் கபிலர் முதலிய அறிவு மிகுந்தோராகிய அநேக ரிஷிகள் அந்த நைமிசாரணியம் செய்த தவத்தினால் தங்கள் திருக்கூட்டத்துடனே வந்து குற்றமற்ற சத்திரயாகம் செய்யக் கருதி வேதத்தில் விதித்த முறைமைப்படி ஆரம்பிக்கும் பொழுது—என்றவாறு. (3)

### வேறு.

மறைமுனி யிருபொற் பாதஞ் சென்னியு மனமுங் கொண்டு
நிறைதிருப் புண்ட ரத்தி னீற்றொளி நிலவு கால
முறையொரு கையி னொன்றிற் பவுத்திர முடித்த தர்ப்பை
இறைதிரு வக்க மாலை யுறுப்புக ளிசையத் தாங்கி.

(இ - ள்.) வேதவியாசரது இரண்டு பொன்னடிகளைச் சிரசிலும் மனத்திலும் தியானித்துத் திரிபுண்டரமாக நிறையத்தரித்த விபூதியினொளி கிரணங்களைக் கக்க ஒருகையில் திருமுறையும் ஒரு கையில் முடிந்த பவுத்திரமும் தருப்பையையுங் கொண்டு அழகிய உருத்திராக்ஷ மாலிகைகள் அங்கங்களி லிசையும்படி யணிந்து—என்றவாறு. (4)

மாசறு வெள்ளைத் தூசு மருங்குறத் தொருதண் டேந்திப்
பாசநோய் தீர்க்கு மீரொன் பதுபுரா ணங்கள் ஞானம்
பேசறு சூதன் வந்தான் பிரமமா தவரைக் கண்டு
வாசமென் கமலம் போல மலர்ந்திட வதனப் போது.

(இ - ள்.) அழுக்கில்லாத வெள்ளை வஸ்திரம் இடுப்பிலுடுத்து ஒரு தண்டுகைகொண்டு பந்த வியாதியைக் கெடுக்கின்ற அஷ்டாதசபுராணங்களும் ஞானங்களும் சொல்லுகின்ற சூதமுனிவர் வந்தார். பிரமத்தை யுணர்ந்த அந்த முனிவர்களைக் கண்டு வாசமுற்ற மெல்லிய தாமரை மலர்போல முகாரவிந்த மலர—என்றவாறு. (5)

காமலர் குவியச் சென்னி கண்களி கூர நோக்கிப்
பெருகுமார் வத்தி னின்பப் பெருங்கடல் வெள்ள மூழ்கித்
தரையின்மேல் வீழ்ந்து பல்காற் றாழ்ந்துதாழ்ந் தெழுந்து போற்றி
யுருகிய மனத்த னாகி யுறுவர்த மெதிரே நின்றான்.

(இ - ள்.) சிரசின்மேற் கையைக் கூப்பிக் கொண்டு கண்களிக் கூரப் பார்த்து உவட்டெடுக்கின்ற ஆசையினால் சுகமதாவாரிதிப் பிரவாகத்திற் குளித்துப் பூமிமீது பலதரம் வீழ்ந்து பணிந்து பணிந்தெழுந்து உள்ளங் கரைந்தவராகி அம்முனிவரெதிரே நின்றார்—என்றவாறு. (6)

நின்றவோதார் சூதன் ஞான நெறிமதி வதன நோக்கி
நன்றுகொல் வருக வென்று நகைமுக மெதிர்ம லர்ந்து
வென்றுபொய்ப் புலப்பற் றந்தி வேரற வினையாந் தெவ்வைக்
கொன்றுமெய்ஞ் ஞானச் சூறை கொண்டிடுங் கொள்கை வல்லோர்.

(இ - ள்,) இவ்வண்ணமாக நின்ற சூத முனிவரது ஞான மார்க்கத்திற் செல்லுகின்ற சந்திரனை யொத்த முகத்தைப் பார்த்து நல்லது வாருமென்று ஒளி பொருந்திய முகங்கள் விகசித்து அசத்தான விஷய சேனைகளைச் செயித்து இருவினையென்னும் சத்துருவை வேரோடுங் கெடுத்து சத்தான ஞானமென்னும் திரவியத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையில் வல்ல முனிவர்கள்—என்றவாறு. (7)

பரமனார் கதைவி ருந்து பவிக்கவின் றெமக்குச் செய்யும்
வரவதாய் வந்தி ரென்று மலர்க்கரஞ் சிரம சைத்துத்
திருவுள முவகை பொங்கத் தெர்ப்பையா சனமொன் றீந்தங்
கிருமென விருந்த சூத ரிருடிக டம்மை நோக்கி

(இ - ள்.) பரமசிவத்தின் சரித்திரமாகிய விருந்து பிரயோசனப் பட இன்றைக்கு எங்களுக்குச் செய்கின்ற விருந்தாக வந்தீரென்று மலரை யொத்தகையும் சிரசுமசைத்துத் திருவுள்ளத்திற் பிரிய முற்று ஒரு தர்ப்பை யாசனங்கொடுத்து அவ்விடத்தி லிருப்பீரென்று சொல்ல உட்கார்ந்து சூத வர் அம்முனிவர்களைப் பார்த்து—என்றவாறு. (8)

நந்தவப் பயனோ வன்றி நயனஞ் செய் தவமோ முன்னோர்
தந்தவப் பயனோ வின்று தழைத்ததென் றவமெய்ஞ் ஞானம்
வந்துமை திருதாள் போற்றி வணங்கயா னெளிதிற் பெற்றேன்
பந்தவல் வினைப்பா சத்துப் பற்றறுங் குணக்குன் றன்னீர்.

(இ - ள்.) நம்முடைய தவப் பயனோ அல்லது கண்கள் செய்ததவமோ என். முன்னோர்செய்த தவப்பயனோ இன்றல்லவா எனது தவமும் மெய்ஞ்ஞா னமும் செழித்தன. இவ்விடத்திற்கு வந்து உங்களுடைய பாதங்களைத்



துதித்துப் பணிய ...னெளிதிற் பெற்றேன். பந்தப் படுத்துகின்ற வலிய வினையாகிய சமு...த்தில் ஆசையற்ற குணமலை போல்வீர்—என்றவாறு. (9)

இன்ற... களிப்ப டைந்தா ரெங்குரு வுமைக்கண் டேத்து
மின்... லா மகிழ்ச்சி யானு ரெங்கு... தன்பு லத்தா
ரின் ...லா வெமது தெய்வ மெதிர் ...ாட்சி யான
...ன்றிடு சூதர் தம்மை யிருடிக ... கிச் சொல்வார்.

(... - ள்) இன்றல்லவா யெமது ஆ... ர் களிப்புற்றார். உங்களைக் கள் நான் துதிக்கின்ற இன்றல்லவா ... தாஷமாயினர் எமது குலத் பிதிர்க்கள். இன்றல்லவா எமது கடவு... திரே வரக் கண்டாற் போலா ற்றென்று சொல்லிய சூதரை முனிவ... ள் பார்த்துச் சொல்வார்கள்—என்றவாறு. (10

பல்வகை யண்ட கோடிப் பரப்பெலா படைக்குஞ் சத்தி
யல்லியங் கமல வாச னவைக்கொரு காலஞ் சென்றே
நல்வழி பாடி யற்றி நல்குமா தனத்தி ருந்தேந்
தொல்லறக் கதையின் மிக்காங் கதையென வருள்சு ரந்து.

(இ - ள்.) பலவிதமான அண்ட கோடி விஸ்தாரங்களைச் சிருஷ்டிக் கின்ற வல்லபமுள்ள இதழ்களையுடைய தாமரை மலரில் வசிக்கின்ற பிரம தேவரது சபைக்கு ஒரு காலத்திற் போயினோம். நல்ல உபசாரம் பண்ணிக் கொடுத்த ஆசனத்திலிருந்தோம். பழைய தர்ம கதைகளில் மேலான சரித்தி மென்று தயவு மிகுந்து—என்றவாறு. (11)

குண்டுநீ ரெறித ரங்கக் குரைகட லாடை கொண்ட
...ண்டலந் தனில நேக மானமா நதித லங்க
...டுவல் வினைக ணீக்க வொருதல முயர்வு வெள்ளூர்
...ண்டைநான் மறைக்கு மெட்டாப் பரமர்தாந் தோன்றி நாதர்

ஆழமுற்ற சலமிகுந்து அடிக்கின்ற அலைகளின் சத்த ...க்தை யுடுத்த பூமியின்கண் அனந்த மகா தீர்த்தங்களும் ...மிருக்கின்றன. அவற்றுள் வல்வினைகளை நீக்குகின்ற ... வெள்ளூர் என்பதாம். பழைய சதுர் வேதங்களுக்கு ...ாற்பத்தி யீசுவரர்—என்றவாறு. (12)

...வத நதியெனு நாம மாமென்
...நக்க மாகவம் புகின்மை சொன்னு.

னின்றுமெம் முள்ளக் காதலீர்த்தலால் விரித்துரைக்க
வுன்னுதல் வேண்டு மென்றா ருயர்முனி யனைவரல் லோரும்.

(இ - ள்.) அந்த நன்மையான நகரம் வெள்ளூர்; நலமயான தீர்த்தமானது வெள்ளாறு என்னும் பெயருள்ள தாகுமென்று அன்னவாகனத்தை யுடைய பிரமன் சங்கிரகமாக அந்த மகிமையைச் சொன்னார். இன்னமும் எங்கள் மனத்திலாசை இருக்கின்றமையால் விரித்துச் சொல்லும்படிக்கு நினைக்க வேண்டுமென்றுரைத்தார் மேம்பாட்டினை யுடைய முனிவர்கள் சகலரும்.—என்றவாறு. (13)

ஆங்கது கேட்ட சூத னகமலர்ந் துவகை பூத்துத்
தேங்குநீர் மருத வேலித் திருநகர்த் தெய்வக் காதை
யீங்கெவர் தெரிக்க வல்லா ரெம்மறை முனிவ னோதும்
பாங்குறு புராண மீரோன் பதிற்பிர மாண்ட மொன்று.

(இ - ள்.) அவ்விடத்தில் அதனைக் கேள்வியுற்ற சூதமுனிவன் உள்ள மலர்ந்து பிரிய முண்டாகி நிறைந்த நீரையுடைய வயல் சூழ்ந்த அத்திரு வெள்ளூரின் தெய்வீகமான சரித்திரத்தை இவ்விடத்தில் யாவர் தெரிவிக்க வல்லவர். எமது வேதவியாசர் சொல்லிய நன்மார்க்கமுள்ள புராணங்கள் பதினெட்டில் பிரமாண்ட புராணமொன்று.—என்றவாறு. (14)

அப்புரா ணத்தி னூற்று முப்பதா மத்தி யாயம்
செப்பிய மகிமை முற்றுந் தெரிதர முடியா தேனு
மொப்பறு கதையான் கேட்ட வளவையி னுரைக்க லுற்றேன்
றப்பிலே சிவன்ம கிழ்ந்த தானமத் தலத்தி னெல்லே.

(இ - ள்.) அந்தப் புராணத்தி னூற்றமுப்பதா மத்தியாயத்திற் சொல்லிய மகிமை முழுவதும் தெரியக் கூடாதாயினும் ஒப்பற்ற அச்சரித்திரத்தை யான் கேள்வியுற்ற மாத்திரம் சொல்லுகிறேன். குற்றமில்லாத பரமசிவம் பிரிய முற்றிராநின்ற ஸ்தானம். அந்தஸ்தானத்தினிடத்தில்.—என்றவாறு. (15)

முன்னநா ரதனும் நான்கு முகத்தனு மன்பு கூர்ந்து
பன்னிய காதை யீது பவப்பிணி மருந்து மிக்காய்த்
துன்னுசஞ் சிதநீ றாகச் சுடுதழல் கேட்ப வர்க்கே
யின்னமு தாகுங் கேண்மி னென்னவே மொழிய லுற்றான் ...மா
...மைந்தரா
... பாதங்களைத்



(இ - ள்.) முன்பு நாரதமுனியும் பிரமதேவனும் அன்புற்றுச் சொல்லிய கதையீதுவாகும். பிறவிநோய்க்கு ஔஷதமும் மிகவும் நெருங்கிய சஞ்சிதத்தைச் சாம்பராகச் சுடுகின்ற நெருப்பும் கேட்பவருக்கு இனிய வமுதமும் போன்றது. கேட்பீராக வென்று சொல்ல யத்தனித்தார்.—என்றவாறு.(16)

நைமிசாரணியச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் இரண்டுக்கும் கூடிய திருவிருத்தம் 51

## மூன்றாவது நாரதச் சருக்கம்.

சத்திய லோகம் விட்டுச் சாகர முடுத்த நீண்ட
மத்திய லோகந் தன்னின் மகதியாழ் முனிவன் வந்து
மெய்த்தவத் தலந்தீர்த் தங்கள் வெற்பொடு சோலை நோக்கிச்
சித்தமே மகிழ்ந்து பூமி வலங்கொடு திரியும் போது.

(இ - ள்.) சத்தியலோகத்தினின்று நீங்கி சமுத்திரத்தை யுடுத்திய நெடிய உலகமான பூமிக்குத் தந்தி கட்டிய வீணையை யுடைய நாரதர் வந்து உண்மையான தவம் செய்கின்ற புண்ணிய ஸ்தலங்களும் நதிகளும் மலைகளும் தோப்புகளும் பார்த்து உள்ள மகிழ்ந்து இப்பூமியை வலமாக வரும் போது—என்றவாறு. (1)

### வேறு.

கோசல மங்கம் துளுவங் கவுடம் குருதே சத்தொடுகாம்
போச மோடும ராடம் வங்கம் புகழ்சேர் பாஞ்சாலத்
தேச முயர்ந்த கலிங்கம் கோள தேசஞ் சௌராட்டம்
பேசிய யவனங் கருணா டந்திறை பெற்றக டாரமொடே.

(இ - ள்.) கோசலம் அங்கம் துளுவம் குரு காம்போசம் மாராடம் வங்கம் கீர்த்தி பொருந்திய பாஞ்சாலம் மேன்மையான கலிங்கம் கோளம் சவுராட்டம் சொல்லுகின்ற யவனம் கன்னடம் கப்பங்கள் பெற்ற கடாரமென்கின்ற தேசங்களுடனே—என்றவாறு. (2)

மற்பல தேசம் பலவன மோடு பலகிரி வாவிகளும்
ஒண்பல நதியொடு சிவதல மாகிய பலபுண் ணியதலமும்
தொல்பல வகையுங் கண்டயல் செல்லப் பழமறை மாதவர்கள்
டிற்றிரு வாசம் கொண்டருள் கொங்கிற் பரிவொடு சென்றணுல்.
என்றவாறு.

(இ - ள்.) பல பல தேசங்களும் பல வனங்களும் பல மலைகளும் பல தடாகங்களும் பல பல தீர்த்தங்களும் சிவஸ்தலமாகிய பல புண்ணிய க்ஷேத்திரங்களும் பல பல விதங்களும் பார்த்து ஒரு மார்க்கத்திலே சென்று பழைய வேதங்களை யுணர்ந்த முனிவர்கள் பல பேர் வசிக்கின்ற கொங்கு நாட்டுக்கு அன்புற்றுப் போயினர்—என்றவாறு. (3)

த்ராதகி தாலஞ் சண்பக நாவல் சந்தன மகிழ்கவினீள்
[illegible] பாதிரி கொன்றை பலாவொடு புண்ணிய வகுளியமேற்
சூத மசோகம் புன்னை [illegible] மருதிலவுசு கந்தமும்
கேதகை மருவிக் குரவு கடம்பொடு முருகக மாச்சாலே.

(இ - ள்.) ஆத்தி பனை சாதி நாவல் சந்தனம் மகிழ் வேங்கை நீண்ட மலர் விரிந்த பாதிரி கொன்றை பலா நல்ல வகுளியம், மேலான மாமரங்கள் அசோகம் புன்னை விளா மருது இலவு வாசனை பொருந்திய தாழை, விரிஞ்சி குரவு கடம்பு முருக்கு பெரிய சாலவிருக்ஷங்களும்—என்றவாறு. (4)

வாழை குறிஞ்சிக ணிம்ப மனிச்சம் வகையோ டுயர்கோங்கு,
ஞாழல் செருந்தி குருந்துக ளாவழை நாரத் தைகசெல்லி, நீழன்
மராமர மாதுளை யத்தி நெடும்புளி வகுளியொடு, மாழை யிலங்கு
துருக்கஞ் சாதிகண் மல்லிகை யெட்டி யொடே.

(இ - ள்.) வாழை குறிஞ்சி எலுமிச்சை அனிச்சம் வாகை உயர்ந்த கொங்கு குங்குமம் செருந்தி குருந்தம் களா வழை நாரத்தை செல்லி நிழலைச் செய்கின்ற மராமரம் மாதுளை அத்தி நெடிய புளியமரம் இலந்தை புளிமா தளிர்த்த பெருங் குங்குமம் சிறுசண்பக மரங்களும் மல்லிகை எட்டிகளுடனே—என்றவாறு. (5)

புங்கொடு தாழை பிரம்பு தணக்குப் பூக மெலுமிச்சக்
கொங்குயர் காயா மஞ்சடி குல்லைகள் கூவிளை பேரித்து
தொங்கிய கனிமது நறைபா யருவி சொரிந்திடு மலர்வண்டு
தங்கிய ராக மிசைக்கும் பலபல சயிலோ தகநிரையே.

(இ - ள்.) புங்கு தெங்கு பிரம்பு தணக்கு கமுகு கொடியெலுமிச்சை தாதுக்களையுதிர்கின்ற காயா மஞ்சடி துளசி வில்வம் பேரீஞ்ச முதலிய மரங்களில் தொங்குகின்ற பழங்களிலும் தேன்பாய்ந்து துளிர்த்துப் பெ[illegible]கின்ற மலர்களிலும் வண்டுகளிருந்து இசைபாடுகின்ற பல பல மலைகளும் மடுவரிசைகளும்.—என்றவாறு.



பாமக ளெனமட வன்ன மிருக்கும் பைந்தா ளுறுவெள்ளைத்
தாமரை நீலங் குமுதம் வள்ளை தண்ணிய நறையூறும்
தேமரு வுறுமக ரந்த நிறைந்திடு செங்கழு நீர்மலர்கள்
காம ருருக்கொடு நரைதிரை மாறிய கற்பச் சித்தருடன்.

(இ - ள்.) சரஸ்வதியைப் போல மடமையுற்று அன்னங்க ளிருக்கின்ற பசியதாளை யுடைய வெண்டாமரை மலர்களும் நீலோற்பலம் ஆம்பல் வள்ளை குளிர்ந்த தேனூறுகின்ற வாசனை பொருந்திய தாதுக்கள் நிறைந்த செங்கழு நீர் மலர்கள் அழகிய உருக்கொண்டு நரைதிரையற்றக் கற்பசித்தர்களுடனே.—என்றவாறு. (7)

## வேறு.

கந்திருவர் கிம்புருடர் கலைமுனிவர் யோகர்
சந்ததநி றைந்தகுகை தனிலினிய தவமாய்
சிந்தையுரு கப்பலதி யானமுட னேயு
நந்தருவி பாவிவரு நன்னதிகள் வாவி.

(இ - ள்.) வித்தியாதரரும் கிம்புருஷரும் மெய்ந் நூலுணர்ந்த முனிவர்களும் யோகிகளும் எப்போதும் நிறைந் திருக்கின்ற குகைகளில் நன்மையான தவமாக மனங்கரைய பலதியானத்துடனே கதித்த அருவிகள் பாவிவருகின்ற நல்ல தீர்த்தங்களும் தடாகங்களும்.—என்றவாறு. (8)

## வேறு.

வாலை யடித்ததிர் வெம்புலி வானிடி யொத்ததிர் குஞ்சர
மேலிடை முட்பொலி பன்றிகள் மேவிய புற்றிடை யெண்குக
டோல முடுக்கு மடங்கல்கள் சூழ்கலை பின்றொடர் வெம்பிணை
பாலையொழுக்கி வனந்திரி பாயெருமைக்குல மெங்கணுமே.

(இ - ள்.) வாலையடித்து அதம்புகின்ற வெவ்விய புலிகளும் ஆகாயத்தினிடியை யொத்து முழக்குகின்ற யானைகளும் உடம்பினிடத்து முட்கள் மிகுந்த பன்றிகளும் பொருந்திய புற்றிடத்திற் கரடிகளும் தோற்கும்படி ஒன்றையொன்று துரத்துகின்ற சிங்கங்களும் நிறைந்த பெண்மான் பிறகே தொடருகின்ற ஆண்மான்களும் முலைவழியாய்ப் பாலைச் சொரிந்து காட்டிற்றிரிகின்ற பாய்கின்ற எருமைக் கூட்டங்களும் எவ்விடத்திலுமுள்ளன—என்றவாறு. (9)

காவக மொய்த்திடு கொம்பிலே காரொடு குக்கில் கரும்புறு
மாவின்வரிக்குயில் வண்டொடே வாழ்பசு மைக்கிளி யன்றிலே
யிவ் தருக்கள் விளங்க விலாகு குதித்தெழு மந்தியே
தூவி விரித்திடு சிம்புளே தோகை நடிக்குமி டங்களே.

(இ - ள்,) சோலையிடத்து நெருங்கிய கிளைகளில் மேகங்களுடனே செம்போத்துகளும் கரும்புறாக்களு முள்ளன. மாமரங்களிற் புள்ளிகளை யுடைய குயில்கள் வண்டுகளுடனே பச்சைக் கிளிகளும் அன்றில்களுங் கூடியிருப்பன. உயர்ந்த மரங்களினிடத்து மிகவுங் குதித்தாடுகின்ற குரங்குகளுள்ளன. உட்சிறகுகள் விரிக்கின்ற [illegible]ணைப் பட்சிகளும் மயில்களாடுவதும் எவ்விடங்களிலும்.—என்றவாறு. (10)

## வேறு.

இவ்வகை கண்ட கண்ணு மிதயமுங் களிகூர்ந் தன்பாய்த்
தெய்வவா னுலகும் போற்றுஞ் சிவதலம் பலவு மெய்தி
மெய்வழி பாடி யற்றி மகிழ்ந்தயல் விரும்பிச் செல்ல
மைவளர் சிகரத் தீர்த்த வரையெதிர் கண்டு போற்றி.

(இ - ள்.) இந்த விதமாகப் பார்த்த கண்களும் மனமும் களிப்புற்று அன்புடனே மேலான வானுலகமும் தொழுகின்ற சிவஸ்தலங்கள் பலவற்றிலுஞ் சென்று மெய்மையான வழிபாடு செய்து சந்தோஷித்து ஒரு பக்கத்தில் ஆசையுற்று நடக்க மேகங்கள்தவழா நின்ற கொடு முடியை யுடைய தீர்த்த மலையை யெதிரே பார்த்து வணங்கி.—என்றவாறு. (11)

அலைகட னஞ்ச முண்ட வையன்வாழ் கயிலை வெற்போ
நிலமகள் முன்னாட் செய்த நெடுந்தவப் பயனோ வன்றி
யலகிலா முனிவர் வேள்வி யாகுதிச் செந்தீ வாழப்
பொலநில வமரர் செய்த புண்ணியப் பேறோவென்று.

(இ - ள்.) அலையை யுடைய பாற்கடலைக் கடைந்த நாளி லெழுந்த விடத்தைப் புசித்த மகாதேவர் வசிக்கின்ற கயிலையங்கிரியோ பூமி தேவியானவள் முன்னாளிற் செய்த நெடிய தவப்பயனோ அல்லது அளவில்லாத முனிவர்களது யாகத்தின் அவிர்ப்பாகந் தருகின்ற சிவந்த அக்கினி வாழும்படிக்குப் பொன்னுலகத்துள்ள தேவர்கள் செய்த புண்ணியப் பிரயோசனமோ வென்று சொல்லி.—என்றவாறு. (12)



கைத்தல மஞ்ச லிப்பக் கண்கணீர் வார வின்றென்
மெய்த்தவப் பயனோ வீண்டி வெற்பருள் காட்சி யென்று
பத்திவெள் ளாற்றின் மூழ்கிப் பன்முறை வணங்கி முக்க
ணத்தனார் வரையாய் வந்த வற்புத மிதுவே யென்று.

(இ - ள்.) கைகளைக் குவித்துக் கண்கள் நீர்சொரிய இன்றைக்குளனது மெய்யான தவப்பயனோ இவ்விடத்தில் இந்த மலைதந்த காட்சி யென்று பத்திப் பிரவாகத்திற் படிந்து பலதரந் தொழுது மூன்று கண்களை யுடைய சிவனே மலைவடிவா யெழுந்தருளிய அதிசயமிதுவேயாமென்று.—என்றவாறு. (13)

வரையடிச் சார னண்ணி மண்மரஞ் சிலைகள் மற்றும்
விரிசிறைப் புட்கள் செல்லும் விலங்குகள் கிருமி மாந்த
ருரைபெறு மனைத்தும் லிங்க வடிவென வுண்மை கண்டு
பெருகிய வுவகை பொங்க வதிசயம் பெரிது மெய்தி.

(இ - ள்.) அம்மலையடிச் சாரலில் சேர்ந்து மண்ணும் மரங்களும் கற்களும் விரிந்த இறகுகளை யுடைய பறவைகளும் நடக்கின்ற மிருகங்களும் புழுக்களும் மனிதர்களும் என்று சொல்லப்பட்ட சகலமும் லிங்க வடிவமென்று மெய்யாகத் தெரிந்து மிகுந்த சந்தோஷந் ததும்ப மிகவும் அதிசயித்து.—என்றவாறு. (14)

வாருதி யாடை கொண்ட மாநில மங்கை மீது
சீரணி போல்வி ளங்குஞ் சிவதல மனேகம் வேத
னாரணன் போற்றுந் தீர்த்த வரையணி நாய கந்தா
னேரிலா திதுவென் றெண்ணித் திருவரு ணினைத்து நின்று.

(இ - ள்.) சமுத்திரத்தை உடையாக வுடுத்திய பெருமை பொருந்திய பூமிதேவியின் மேல் சிறந்த ஆபரணம் போல் விளங்குகின்ற சிவஸ்தலங்கள் அனந்தம். பிரமனும் திருமாலுந் தொழுகின்ற தீர்த்த கிரியானது கிரீடமாம். இது ஒப்பற்றதென்று கடவுளின் திருக்கருணையை நினைத்து நின்று—என்றவாறு (15)

இருகரை திரைக்க ரத்தா லெற்றிவெண் முத்தம் வீசித்
தருவினைப் பிடுங்கி யார்த்துத் தந்தியின் குழா மலைத்து
வரைமுடி வரும்வெள் ளாற்றின் வண்மையை யுவந்து நோக்கிக்
கரியுரி போர்த்தோன் வேணி கானுமக் கங்கை யென்றே.

(இ - ள்.) இரண்டு கரைகளையும் அலையாகிய கையினாலடித்து முத்துக்களை யெறிந்து மரக்கூட்டங்களைப் பிடுங்கிச் சந்தித்து யானைத்திரள்களைப் புரட்டி அம்மலைத் தலையினின்று வரும் சுவேதநதியினது வளமையை மகிழ்வுற்றுப் பார்த்து யானைத் தோலைப் போர்த்த கடவுளினது சடையினின்று சொரிகின்ற அந்த கங்காநதியே யென்று—என்றவாறு. (16)

அன்னதித் தீர நீங்கா தணுகியே யிப்பாற் செல்லப்
பொன்னகர் துறந்து தேவர் யாவரும் புரிந்து வாச
மின்னகர் கொண்டா ரென்ன விருக்கும்வெள் ளூரி லீசர்
சன்னிதி யயலில் வந்து சார்ந்து மெய்யன்பு கூர்ந்தே.

(இ - ள்.) அந்த நதிக்கரையை விடாமற் சேர்ந்து இப்புறம் நடக்கப் பொன்னுலகத்தை விட்டுத் தேவர்களெல்லாரும் வாசஞ் செய்ய இந்நகரமிடமாகக் கொண் டாரென்னும்படி விளங்கிய சுவேதபுரியிற் றூர்தேன்றிநாதர் சந்நிதிப் பிற்பக்கத்தில் வந்தடைந்து மெய்யன்பு மிகுந்து—என்றவாறு.

## வேறு.

அந்நதி யாமைவள ளைண்டு மணன்மேடு மருஞ்நழி சகோ
ரம் வளைமே, யந்துதிரை வாழ்துகிர் நெருங்குநுரை மீன்முளரி
யொன்றுபடர் பாசியுறலாற், சங்கிரு தாள்முழந் தாள்கள் விரி
வாகிய நிதம்பமிகு நாபிகுப மேல், கந்தர நிலாநகை விளங்கதா ரூர
லொளிர் கண்கண்முக மோதியிலவமே.

(இ - ள்.) அவ்வாற்றில் ஆமையும் நண்டும் மணற்றிட்டும் அரியநீர்ச் சுழியும் சகோர பட்சியும் சங்கும் மேலே தள்ளுகின்ற அலை சுற்றும் வளர்கின்ற பவளமும் நெருங்கிய நுரையும் மச்சமும் தாமரையும் பொருந்தி விரிந்த சைவலமும் பொருந்தி யிருத்தலால் கங்கையென்னு மொரு பெண்ணினது அழகிய இரண்டு பாதங்களும் பரந்த முழந்தாள்களும் பரவிய அல்குலும் கொப்புளும் தனங்களும் நெடிய கழுத்தும் இணங்கலையுடைய நகை விளங்குகின்ற விதழ்களும் பற்களும் பிரகாசிக்கின்ற கண்களும் முகமும் கூந்தலும்—என்றவாறு. (18)

என்றுமிகு தேனொழுகி நின்றவனை நாடிமுகி லெங்குநிறை
மாமலர்நறு, மன்றல்கமழ் சோலையின்மு ரன்றளிகள் பாடவன
மங்கைநட மோடுமயலே, தென்றல்வர வேகுயி லிரங்கவள நீடியது



சிந்தைமகிழ் வாகியவனே, நன்றிபுரி மாதவ ... ளான்றியத ஞனு
நிகர் நம்பிகயி லாயகிரியா.

(இ - ள்.) என்று ... தது நல்லதேனொழுக எதிரே நின்ற மலையைப் பார்த்து ... களு நிறைந்து மேலான புஷ்பங்கள் வாசனை வீச ... தோப்புகளில் வண்டுகள் இராகம்பாட வனமாது நடித்தல் போலப் பக்கங்களிலே தென்றல் வீச, குயில்களிரக்கமுற வளப்ப மிகுந்து அவ்விடங்களிலே நன்மை செய்யாநின்ற முனிவர்களும் பொருந்தி யிருத்தலால் இதற்கு நிகரானது சிவனது கயிலையங்கிரியே யென்று நினைத்து மகிழ்ச்சியடைந்து—என்றவாறு. (19)

முன்செய்பல வேள்வியில்வி ளைந்ததிரு நீறுபுரி யுங்கனலின்
மூவகையொடே, பின்செய்மக வேதிகைக ளன்றிருவர் தேடரிய
பிஞ்சுமதி வேணியானு, ரன்பினடி யார்தமது சஞ்சிதமெ லாமகல
வம்பலமுள்ள வேதபுரியே, நன்றுவகை வானவர்க டுந்துமியி னோசை
மிகு நந்திபுறை கோயிலிடமே.

(இ - ள்) முன் செய்த பல யாகத்தில் விளைந்த திருவெண்ணீறும் செய்கின்ற மூவகை யாகாக்கினியோடு இனிச் செய்யும் யாகத்திற்கமைந்த திட்டுகளும் அந்நாளில் மாலு மயனு தேடிக் காணுதற்கரிதாகிய சந்திரப் பிறையைத் தரித்த சடையையுடைய சிவனுக்கு அன்புள்ளோர் திருவெள்ளூரில் ... தமல முழுதும் நீங்கும்படி அவ்விடத்திற் கிருந்த வாத்திய கோஷ மிகுந்து ரும் நல்ல சந்தோஷமுற்ற தேவர்களு மென்றவாறு. (20)

நந்திதேவர் வசிக்கின்ற கோவிலும் ... ருஞ்சிகர கோபுர மயங்கனக மாமதில்
... ண்டப வி... ... ரமுனி வோர்தொழுதி றைந்தமறை யோலிடு
கள்வா, ன ... வார்கவரியே, கொண்டுலவி யீசநற் றொண்டர்சிவ
வணங் ... வார்கவரியே, ... சபுரி குன்றுநிக ரானமடமே, கண்டுசிவ லோகமிது வென்று
நதி மூழ்கியிருள் கண்டார்மதில் வாயிலருகே.

(இ - ள்.) மண்டப விரிவும் உயர்ந்த கலசமமைந்த கோபுரமும் பொன்மயமான பெரிய மதில்களும் வானுலகத்துள்ள தேவரும் முனிவரும் வணங்க நிறைந்த வேதஞ்சத்திக்க, தெய்வப்பெண்கள் சாமரங்கள்கொண்டு எடுத்திரட்ட நன்மையுற்ற பத்தர்கள் சிவாராதனை செய்கின்ற மலையையொத்த கோவிலும், பார்த்து இது சிவலோகமாமென்று சுவேதகங்கை

யிற்குளித்து இரு ொத்த கண்டத்தையுடைய தாந்தோன்றி நாதரது பிரகார வாசலின் சமீபத்தில்—ன்றவாறு. (21)

## வேறு.

நிலமீது தண்டுபோல் வீழ்ந்துபல காலேத்தி நின்றே வெள்ளி
மலேமீதும் பழவடியா ருளமீது மாருத வடிவாய் வெள்ளூர்த்
தலமீது வீற்றிருக்கு மானந்தச் செந்தேனே சம்புவேமங்
கலமேவு மொருபச்சைக் கொடிபடருங் கற்பகமே கனியே பாலே

(இ - ள்.) பூமியின்மேல் தண்டைப்போல் விழுந்து பலதரம் வணங்கித் துதித்து நின்று இரசிதப் பொருப்பிலும் பழமையார் தொண்டருள்ளத்திலும் நீங்காத சொருபமாய் இந்தச்சுவேதபுரி யென்னும் தலத்திற் கொலுவீற்றிருக்கின்ற சிவானந்தத்தேனே, சம்புவே, கல்யாணகரமான மங்களமென்னும் ஒப்பற்ற பசிய வல்லிக்கொடி படருகின்ற கற்பகமே, கனியே பாலே—என்றவாறு. (22)

மலேவளைத்த கரத்தானே இமையமகளி வரையின்ற மாது கும்ப
முலேவளைக்கு முரத்தானே பிறைமுடித்த சிரத்தானே முக்கட்
டேவே, கொலேவளைத்த மழுப்படையாய் விடைக்கொடியா யுலகி
பதத்தானே யெல்லாம், நிலேவளைத்த பதத்தானே முத்தியெனும்
வாழ்வே.

(இ - ள்.) மகா
இமையபருவதம் பெற்ற ம வளைத்த கையினையுடையவனே, அழகிய தப்பெற்ற மார்புள்ளவனே, மதிப்பிறை து குடம்போன்ற ஸ்தனங்களமுத்த சொழுள்ளவனே, மூன்று கண்களையுடைய தெய்வமே, கொலேசெய்கின்ற யுத முள்ளவனே, இடபக் கொடியுடையவனே, உலகங்களில் அண்டக் கூட் யாவற்றிற்கும் இடமுண்டாக்கி யமைத்தவனே, மோக்ஷமென்கின்ற பதவியுள்ளவனே, பரிசுத்தமான செல்வமே—என்றவாறு. (௨௩)

நின்றவுல காயுயிரா யுணர்வாகி வேறுகி நின்ருய் போற்றி,
யென்றுதுதித் திருந்துசின்னுட் பூமிவலம் வந்தபலன் பெற்றேன்
யானே, கொன்றையந்தார்க் குழகன்மகிழ் துறைதான மிஃதல்
லாற் குமிக்கி லுண்டோ, நன்றுபெற்றேன் நன்றுபெற்றே னென
வுவந்தே யயனுலகி னண்ணி னுல்.



(இ - ள்.) நிலேபெற்ற வுலகமாயும் உயிர்களாகியும் அறிவாகியு மிவற்றிற்கன்னியமாகியு மிருப்பவனே, வந்தனமென்று தோத்திரம் பண்ணிச் சிலநாளங்கிருந்து பூமிப்பிரதக்ஷணம்வந்த பிரயோசனத்தை நான் பெற்றேன் கொன்றைமாலே யணிந்த கடவுள் பிரியமுற்று வசிக்கின்ற ஸ்தான மிவ் வெள்ளூரையன்றி யோசிக்கு மிடத்தில் வேறு ஸ்தல மிருக்கின்றனவோ? நன்மை யடைந்தேன் நன்மை யடைந்தேனென்று சந்தோஷமுற்று பிரமலோகத்திற் சேர்ந்தார்—என்றவாறு. (24)

## வேறு.

மாடகத் திவவி நல்யாழ் மகதிமா முனிவே தாவி, னேடலர் கம
லப் பாத மிறைஞ்சவே யிருக்கை யீந்து, நீடிய பன்னுட் காணு
நிலேமையின் விருப்பங் கூர்ந்து, நாடிநா ரதனே நோக்கி நான்முக
னுரைக்க லுற்றுன்.

(இ - ள்.) முறுக்காணிகளுந் தந்திகளுமுள்ள வீணையில்வல்ல நாரத முனிவர் பிரமாவினது இதழ் விரிந்த தாமரை மலரை யொத்த பாதங்களைத் தொழவும் ஆசனங்கொடுத்து நீடித்த பலதினங்காணுத தன்மையால் பிரியமிகுந்து நாரத முனிவரை உற்றுநோக்கிப் பிரமதேவர் சொல்ல வாரம்பித்தார்—என்றவாறு. (25)

## வேறு.

இத்தனைநாட் சஞ்சார மெவ்விடத்தில் நன்ருக விருந்தா யோ
வென், றந்தமுறை வேதனவன் வினவுங்கான் முனியவர்பொன்
னடிகள் போற்றிச், சத்தியலோ கம்புரியும் மறையீன்ற திருவாயா
தரணி சுற்றி, முத்திதரு தலங்கள்பல கண்டுவந்தே னென்றுமுனி
மொழிய வேதன்.

(இ - ள்.) இவ்வுலகத்தில் எவ்விடத்தில் சஞ்சரித்தாய், நீ நன்மையுற்றிருக்கின்ருயோ என்று பிரமதேவர் வினவ, நாரத முனி, பிரமாது பாதங்களைத் தொழுது சத்திய லோகத்தை விரும்பியிருக்கின்ற வேதத்தை யுண்டாக்கிய திருவாயினையுடைய பிரமதேவரே, பூவலம்வந்து மோக்ஷந் தருகின்ற தீர்த்தங்களும் தலங்களும் பார்த்து வந்தேனென்று நாரதர் சொல்ல பிரமர் சொல்வார்—என்றவாறு. (25)

பன்னிருவ ரெண்மர்பதி ஞெருவர்மருத் துவர்திக்கு பாலர்
தேக், இன்னரர்கிம் புருடரொடு கருடர்காந் தருவர்முடிக்

கிரண மேவி, மன்னியபே ரவையினிடை செவிவிருந்தா யானந்த மல்க நன்று, மின்னதென வவ்வுலக மகிமையினம் பெருமுனிவ னியம்ப லுற்றான்.

(இ - ள்.) துவாதசாதித்தரும் அஷ்டவசுக்களும் ஏகாதசருத்திரரும் மருத்துவருர் திக்குப் பாலரும் இராகம் பாடுகின்ற கின்னரரும் கிம்புருஷரும் கருடருங் கந்தருவரும் கிரீடங்களின் கிரணங்கள்விரியச் சேர்ந்திருக்கின்ற பெரிய இச்சபையினிடத்துக் காதுக்கு விருந்தாக வானந்த நிறையும்படி இத்தன்மையதென்று அப்பூவுலக மகிமையைச் சொல்வா யென்றுரைக்க நாரதர் சொல்லுவார்—என்றவாறு. (27)

உரகமணிச் சுடிகையுச்சி யிடந்தநெடும் புவிமகிமை யுரைப்பார் யாரே, தரையிலுள்ளோ ரெவ்வுலகு மெய்தலாம் வினைகள்செய் யுந் தன்மை யாலே, பரிவினங்குத் தருமமிண்டம் பிதிர்க்களுக்கீண் டுவகை தரும் பான்மை யாலே, பெருமைதரு தாரணியைப் போல் வதுமற் றெவ்வுலகு பேசுங் காலே.

(இ - ள்.) ஆதிசேடனது இரத்தினங்களுடைய சிரசி லிருக்கின்ற நெடியபூமியின் பெருமையைச் சொல்லுவர்யாவர்? பூவுலகிலிருப்பவர் எந்த வுலகத்திலும் சேரும்படியான கருமங்களைச் செய்கின்ற அப்பூவுலகத்தை யொப்பது சொல்லுமிடத்தில் மற்றெந்த வுலகுதானுகும்—என்றவாறு. (28)

அவ்வுலகி லியற்றியநல் வினையுய்க்க வந்தின்ப மனுபவிக்கும் தெய்வவுல கத்தவரும் வினைபுலரி லிழிதரு ரின்னமெனு, நைவ ரும் வேளாண்மை செய்துவிளை பலம்பின்பு நுகருவர் பாரேபோ, லெவ்வுலகில் வதிந்தாலு மவ்வுலகை வினைப்பயனுண் டிருப்ப தாமால்.

(இ - ள்.) அப்பூவுலகத்திலே செய்த நல்வினையானது தம்மைச் செலுத்தவந்து சுகந்துய்க்கின்ற, சுவர்க்கத்தி லிருப்பவரும் அந்நல்வினைப் பயன், முடிவுற்றாலந்தச் சுவர்க்க லின்பமழிவது நிச்சயமென்றுள்ளங் கவலா நிற்பர். வேளாண்மை செய்து விளைந்தபலனைப் பின்பு நன்மையுற்று அனுப விப்பவரைப்போல எந்த லோகத்தி லிருந்தாலும் அந்த பூலோகத்தில் விளைந்த வினைப்பயனை அனுபவித்திருப்பதேயாம்—என்றவாறு. (29)

வேறு.

மலர்தலை யுலகி னூடு வந்துதம் வினைகட் கேற்பப்
பலபல யோனி தோறும் பிறந்திடும் பரிசின் மேலாய்



நிலவிடு மக்கள் யாக்கை நேர்வதே யரிது நேரி
னுலைவிலா ஞானத் தோற்ற மெய்திடி னுவமை யுண்டோ.

(இ - ள்.) விரிந்த இடத்தையுடைய பூமியின்கண்வந்து தமது வினைகளுக் கேற்ற பலபல யோனி பேதங்களிற் சனியாநின்ற தன்மையால் மேம்பாடாகப் பொருந்திய மானிட தேகமுண்டாவது துர்லபம். உண்டாயினும் கெடாத ஞானப்பிரகாசமிருக்குமாயி னதற்குச் சமானமுண்டோ—என்றவாறு. (30)

ஆதலால் விரிநீர் வேலை யாடைமா னிலத்தில் நான்கு
வேதமு முறைவ ழாது வேதியர் தொழில்வி ளங்க
மாதவர் மகத்தின் முத்தீ வளர்ந்தன கோட லின்று
நீதிதே ரிரவி திங்கட் குலத்துறை நிருபர் செங்கோல்.

(இ - ள்.) ஆதலால் விரிந்த நீரையுடைய சமுத்திரத்தை ஆடையாக வுடைய பெரிய பூமியின்கண் நாலு வேதங்களின் முறைமை வழுவாமல் பிராமணர்களது சற்கிருத்தியங்கள் விருத்தியடைய மகாவிரதங்களும் யாகத் தினது திரிவிதாக் கினிகளும் வளர்வுற்றன. நியாயமுணர்ந்த சூரிய சந்திர வம்ச வழியில் வந்த அரசரது செங்கோல் கெடாதிருக்கின்றது—என்றவாறு.

தனக்குவை நிறுத்து ளைத்துந் தந்தொழில் வாணி கத்தின்
மனக்களித் தறம்வ ழாது வாழ்ந்தனர் வணிகர் மற்றோர்
கனக்குழாம் பெய்ய மேழி பிடித்தன ருலகங் காக்க
நினைத்தன யாவும் நல்க விளைந்தன நிலங்க ளெல்லாம்.

(இ - ள்.) பொற்குவைகளை நிறுத்து முறைத்துத் தமது வியாபாரச் செய்கைகளிலுள்ளந் தருக்குற்றுத் தருமந்தவறாமல் வணிகர் வாழ்வுற்றிருக் கின்றார். மற்ற நான்காம் வருணத்தார் மேகக்கூட்டங்கள் மழை பெய்யக் கலப்பை பிடித்துழுகின்றார். உலகத்தைக் காக்கவும் இரப்போர் நினைத்த யாவும் கொடுக்கும்படியாயும் நிலங்களெல்லாம் விளைகின்றன—என்றவாறு.

வாளன வுண்கண் மாதர் கற்பியல் வழாது நின்றார்
காளமுண் டிருண்ட கண்டக் கண்ணுதற் சைவ நீறு
நீளணி யக்க மாலை நிகரிலைந் தக்க ரங்கள்
கோளற விளங்கா நின்ற கொள்கையிற் சிறந்த தம்மா.

(இ - ள்.) வாளையொத்த மையிடப்பெற்ற விழிகளையுடைய மடவார் பதிவிரதத்தினியல் பிழையாம லிருக்கின்றார். விடத்தைப் பக்ஷித் திருளை

யொத்த கண்டமும் நெற்றிக் கண்ணுமுடைய கடவுளது மைசவச்வரூபமும் திருநீறும் கிணணியாகிய உருத்திராக்க மாலையும் ஒப்பற்ற பஞ்சாக்ஷரமும் குற்றமின்றிப் பிரகாசியா நின்ற தன்மையால் பூவலயம் சிறப்புற்றிருக்கின்றது—என்றவாறு. (33)

நல்லற நீதிக் கொவ்வா நடக்கையோர் வால்கொம் பில்லா
வல்விலங் கினையொப் பாகி மலக்குழி நரகில் வீழ்ந்தே
யல்லலுற் றாழி கால முழப்பரென் றறிந்து நூல்கள்
சொல்லிய முறையா லின்புந் தோன்றவே நிகழ்ந்த தாங்கு.

(இ-ள்.) நல்ல தருமநீதி நூலுக்கியலாத ஒழுக்கமுள்ளவர், வாலுங் கொம்பு மில்லாத வலியமிருகத்தை யொப்பாகி மலநிறைந் தாழ்ந்த நரகத்தில் வீழ்ந்து துன்பத்தைக் கற்பகால மநுபவிப்பா ரென்றறிந்து நூல்களுரைத்த முறைமைப்படி இன்பம்பிறக்க ஒழுக்கந் தங்கியிருக்கின்றன அப்பூமியில்—என்றவாறு. (34)

வளங்கெழு காசிக் கேகி மாநதிக் கங்கை தோய்ந்து
வளங்கனி யனைய கண்டர் கருணையாற் பூவ லங்கொண்
டுளங்களி கூரத் தீர்த்த முயர்தலம் பலவும் நோக்கி
விளங்கிய கொங்கு நாடு சேர்ந்தனன் வியப்பு கூர.

(இ-ள்.) வளப்பந்தங்கிய காசிக்குப்போய்ப் பெருமை பொருந்திய கங்கையாற்றிற் குளித்து களாப்பழத்தை யொத்த மிடற்றினையுடைய சிவனது திருவருளினாலே பூமியை வலங்கொண்டு மனக்களிப்பு மிகுதியாக பல நதிகளும் மேலான ஸ்தலங்களும் பார்த்துப் புகழ்ச்சியுற்ற கொங்கு நாட்டிற்குப் போயினேன் அதிசய முண்டாம்படிக்கு—என்றவாறு. (35)

## வேறு.

கொங்கு நாட்டி லதிசயங் கூறிடிற்
றிங்கண் மூன்று மழைக டிருந்தின
மங்குல் கண்டு மயில்க ணடித்தன
வெங்கும் வீதிக ளெங்குந் திருவிழா

(இ-ள்.) அந்தக்கொங்கு நாட்டின் அற்புதத்தைச் சொல்லுமிடத்து மாதமும்மாரி பெய்து நன்மையுற்றன. மேகங்களைக் கண்டு மயில்கணடனம் செய்வன. வேறு இடங்களிலும் தெருக்களிலுமெந்நாளும் உற்சவங்கள்—என்றவாறு. (36)



அடுக்கக் கட்டி யடிப்பன சாலிகள்
பிடித்து வெட்டுவ வைக்கற் பெருஞ்சுமை
யடித்துக் கூவுவ சூட்டெழில் வாரணம்
முடிக்குவ நாட்டுங் கொடிகளே.

(இ-ள்.) அடுக்குவ நாட்டுங் கொடிகளே. நெல்லுகள். பிடித்து வெட்டுவன பெரிய வைக்கோற்கட்டிடிக்கப்படுவன ... டையுடைய அழகிய கோழிகள். நடுக்க மடைவது நட்டிருக்கின்ற துவசங்களே—என்றவாறு (37)

பாளை மட்டவிழ் பாசக் கமுகய
லாலை கொக் குலைக்கனி நாடியே
வாளை தாக்கி யுடைக்க வரும்புன
ரூள்கி ளைத்தெழு சாலிக்குப் பாயுமே.

(இ-ள்.) பாளைகள் விரிந்த கமுகமரங்களின் பக்கத்தி லிருக்கின்ற தென்னங்குலைகளின் பழங்களைப்பார்த்து வாளைமீன்கள் பாய்ந்துடைக்க அதினின்றும் வருகின்ற தண்ணீரானது தாள் முளைத்தெழாநின்ற நெற்பயிர்க்குப் பாயும்—என்றவாறு. (38)

வளையின் முத்தம் வரம்பி னொதுக்குவார்
களைக டாமரை நீலங் களைவர்பாய்
நளிபு னற்றரு நன்கனித் தேறலால்
விளைவு முத்தமு நெல்லும் விளைந்திடும்.

(இ-ள்.) சங்கமீன்ற முத்துக்களை வரப்பிற்றள்ளுவார்கள். தாமரை நீலோற்பலங்களைக் களைவார்கள். பாயாநின்ற நன்னீர் மரங்களிலுள்ளபழங்களின் தேனாற்விளைவது முத்துக்களும் நெல்லுகளும்—என்றவாறு. (39)

இன்ன தன்மை யிசையுமந் நாட்டிடை
நன்னர் தங்கு நதியொடு மாறிலா
வின்ன றீர்க்கும் சிவதல மெண்ணில
துன்னு சித்தர்கள் சூழ்வரை பற்பல.

(இ-ள்.) இத்தன்மையாயிருக்கின்ற அக்கொங்குநாட்டின்கண் நன்மை தங்கிய தீர்த்தங்களும் தீராத்துன்பமுந் தீர்க்கின்ற சிவதலங்களும் அளவில்லன. நெருங்கிய சித்தர்குழாங்களிருக்கின்ற மலைகளும் பற்பலவாம்—என்றவாறு. (40)

மூப்பி றப்புப் பிணிகண் முறுக்கிய
வாய்ப்ப தான சஞ்சீவி மரங்களிற்
காய்ப்ப தான கருநெல்லி யேமுத
லீப்பி லாது விளங்க நிறைந்த

(இ - ள்.) அவைகளில் [illegible] ஜாதலையும் வியாதிகளையுங் கெடுக்க[illegible] மூப்புடைய மரங்களைப்போல் காய்த்திருப்பன வாகிய கருநெல்லி முதலிய மரங்களொழிவின்றி யெவ்விடங்களிலு நிறைந் திருப்பன—என்றவாறு. (41)

நின்று போற்றி நெடுமலர்க் காவரை
யொன்று கண்டன னவ்வரை யுண்மையா
தென்ற றிந்தில னெங்குஞ் சிவமய
மன்ற லாரு நதியுமவ் வண்ணமே.

(இ - ள்.) மலர்ந்த நெடிய சோலைகள் சூழ்ந்த ஒருமலையை நின்று வணங்கிப் பார்த்தேன். அந்த மலையினிலைமை எது என்று தெரிகிலேன். எவ்விடங்களிலும் சிவவடிவாம். அதினின்று வருகின்ற வாசனை பொருந்திய தீர்த்த மத்தன்மையது—என்றவாறு. (42)

மாந திப்புன றீர்த்து வாழ்பதி
தானு மவ்வண்ண மாகித் தழைந்தது
தேன றைக்கு வரிகொள் சிலீமுகம்
பானற் பாயப் பதிவளங் கூறிடின்.

(இ - ள்) அந்த மகா தீர்த்தத்தின் கரையில் விளங்கிய ஸ்தலமு மத் தன்மைத்தாகிச் செழித்திருப்பது. தேன்வாசனைக்குப் புள்ளிகளையுடைய வண்டுகள் வயலில் மொய்க்கின்ற அந்த நகரத்தின் வளப்பம் சொல்லு மிடத்தில்—என்றவாறு. (43)

சோலை யூடு தவழப் பயோதரம்
வேலை நீருந் திவளப் பயோதரம்
காலை மன்னும் கரும்பிர சங்களே
மாலை மன்னும் கரும்பிர சங்களே.

(இ - ள்) தோப்புகளிற்றவழாநின்ற மேகங்கள் சமுத்திரத்து நீரைக் கவரப்படிந்து அந்நீரும் வாசனையுடையதாயிருக்கும். வாய்க்கால்களிற் பாய்ந் தோடா நிற்குங் கருப்பஞ்சாறுகள். பூமாலைகளில் மிகவும் தேன் பொருந்தி யிருக்கும்—என்றவாறு. (44)



தத்தை யோதிச் சடையா லடியெனத்
தத்தை யோதிப் புலவித ணிந்தபின்
முத்தந் தோல்புன் முறுவல்கண் டாடவர்
முத்த மிட்டித ழுண்டு முயங்குவார்.

(இ - ள்) கிளிபோன்ற மொழிகளைப் போதிப்பவளே, உனது சடையினாலென்னை அடித்துக் கோபந்தீரக் கடவையென்று பரிகாசம் பேசிப் பிணக்குத் தீர்ந்த பின்பு முத்துக்களைத் தாழ்வுசெய்கின்றப் புன்சிரிப்பைப் பார்த்து இதழமுதைப்பருகி முத்தமிட்டுச் சந்தோஷித்துத் தழுவிக்கொள் வார் ஆடவர்கள்—என்றவாறு. (45)

அள்ள னீரி லலர விந்தமேற்
பிள்ளை யன்னம் பெரிது துயின்றிடக்
கள்ளுண் வண்டிசை கான்றிடல் போரு
ளுள்ள தாலெடுத் தோதுதன் மானுமே.

(இ - ள்) சேற்றுநீரிற் பூத்த தாமரையிசை அன்புள்ள அன்னப் பார்ப்புகள் மிகவும் நித்திரைசெய்யத் தேனையுண்கின்ற வண்டுகள் ராகம் பாடுதல் மிகவும் கிருபையுள்ள தாலாட்டுப் பாடுதலையொக்கும்—என்றவாறு.

வாவி நீரலர் கஞ்ச மலரணைத்
தூவி வெண்ணிற வன்னத் தொகுதிக
ளாவி யன்னதம் பேடையோ டாடியே
மேவி யானந்த வெள்ளத்து மூழ்குமால்

(இ - ள்) தடாகத்து நீரிற்பூத்த தாமரைப்பூ மெத்தையின்மேல் தூவிகளையுடைய வெண்ணிறமான அன்னக் கூட்டங்கள் தம்முயிரை யொத்த பெட்டையன்னங்களோடு விளையாடிப் பொருந்திய வின்ப வெள் ளத்தி லழுந்தும்—என்றவாறு. (47)

ஆறுகாற் புண்ட ரீகத்துக் கானமே
யாறு காற்புண்ட ரீகத்துக் கானமே
நாறு கந்த வயற்றண் டலைகளே
நாறு கந்த வயற்றண் டலைகளே

(இ - ள்) வழிகளிற் சூளையுடைய தாமரைக்காடுகளும் ஆறு காலை யுடைய வண்டுகளினிராகங்களும் வாசனை கமழா நின்ற மருத நிலங்களும்

பூர்தோட்டங்களும் செல் நாற்றுகள் செழித்த வயல்களும் குளிர்ந்த விடங்களும்—என்றவாறு. (48)

## வேறு.

பஞ்சரத்தி னூடுவளர் பைங்கிளியி னோடு
வஞ்சியர்செவ் வாயினிதழ் வைத்துமுத்த மிட்டுக்
கொஞ்சவித ழைக்கனியி தென்றுகிளி கொத்த
நெஞ்சுருகி நாணினொடு நின்றுசுழல் வார்கள்

(இ - ள்) கூண்டில் வளர்கின்ற கிளிகளுடனே பெண்கள் சிவந்த இதழிலிதழ்வைத்து முத்தங்கொடுத்துக் கொஞ்சும்போது அப்பெண்களிதழை யிதுபழமென்று கிளிகள் கொத்தவுமுருகி வெட்கத்தோடு நின்று வருந்துவார்கள்—என்றவாறு. (49)

ஆடக மிழைத்தமணி யாடரங்கின் மாதர்
நாடக நடிப்பவொரு தோகையெதிர் நாடி
வாடியுள நாணொடு மணிச்சிறை விரித்தே
யாடியன மாமெனவு மன்றெனவு மெண்ணும்

(இ - ள்) பொன்னா லிழைக்கப்பெற்ற ரத்தினங்களுடைய நடன சாலையில் பெண்கள் நடனஞ்செய்வதை ஒரு மயிலானது நோக்கப் பார்த்து மனவாட்டமுற்று வெட்கத்தோடு தன்னழகிய கலாபங்களை விரித்தாடும் அன்னதிற்குச் சமானமாகுமென்றும் ஒருபோதும் சமானமகா தென்றும் நினைக்கும்—என்றவாறு (50)

மாமணியின் மேடைமிசை மாதரள கத்தைக்
காமர்புய லென்றுமயில் கண்டுகளி கூரும்
பூமுகைகொ ளாம்பலவர் பொற்புறு முகத்தைச்
சோமனென வேநறை சொரிந்திடும் விருந்தே.

(இ - ள்.) பெரிய ரத்தின மாடங்களின் மேலிருக்கின்ற பெண்களின் கூந்தலை அழகிய மேகமென்று மயில்கள் பார்த்துக் களிப்பு மிகும். அப்பெண்களது முகத்தைச் சந்திரனென்று முகிழாயிருக்கின்ற ஆம்பல் களலர்ந்து தேனைப் பொழியும்—என்றவாறு. (51)

அந்தர மடுத்தமணி மேடையமு தன்னார்
தந்திரி யிசைச்சுருதி தப்பிலது பாடக்



கந்தருவ மாதர்சிர கம்பித வீதத்தாற்
சிந்துமலர் பூமழை தினம்பொழிதல் போலும்.

(இ - ள்.) ஆகாயத்தை யளாவிய மணிமேடைகளில் அமுதத்தை யொத்த பெண்கள் சுருதிதப்பாமல் வீணைமீட்டி இராகம் பாடுவதைக்கேட்டு கந்தருவப் பெண்கள் வியந்து தலையசைக்கின்ற தன்மையாற் சிந்துகின்ற புட்பங்கள் நித்தியம் பூமாரி சொரிவதை யொக்கும்—என்றவாறு. (52)

வீசுகதிர் நீலமணி மேடைமிசை மின்னார்
வாசவரு விப்புனல் வரைக்கண்மயில் போல்வார்
மாசின்மறை வேதியர் மகப்புகையின் மாதர்
கேசவகி லிற்புகை கிளர்ந்துமுகில் போலும்.

(இ - ள்.) கிரணங்களை விரிக்கின்ற மரகதமணி யிழைத்த மாடங்களின் மேலிருக்கின்ற பெண்கள், வாசனையுள்ள அருவி நீர்சொரிகின்ற மலையினிடத்திருக்கின்ற மயிலை யொப்பார். குற்றமற்ற வேதத்தை யுணர்ந்த அந்தணர் செய்கின்ற யாகத் தூமத்தில் மடவார் கூந்தலுக் கூட்டுகின்ற வகிற்புகையுங் கலந்தெழுந்து அம்மலையிற்றவழாநின்ற மேகத்தை யொக்கும்—என்றவாறு. (53)

## வேறு.

மலைபடு திரவியங்கள் வளநகர்த் திரவியங்க
ணலவனத் திரவியங்க ணாட்டிடைத் திரவியங்க
ளலைகடற் றிரவியங்க ளைவகை களுமே கூடித்
தலமிசை நிரம்பித் தோன்றும் தன்மையா லியாது சொல்வேன்.

(இ - ள்.) மலைபடு திரவியங்களும் வளம்பொருந்திய நகர்படு திரவியங்களும் நன்மையுற்ற காடுபடு திரவியங்களும் நாட்டுத் திரவியங்களும் அலையுடைய கடல்படு திரவியங்களுமாகிய ஐந்துவிதத் திரவியங்களுங் கடைவீதியினிடத்தில் நிறைந்திருக்கிற படியினாலே அக்கடைவீதி வளப்பத்தை யென்னவென்று சொல்லுவேன்—என்றவாறு. (54)

கண்ணுத லப்பு லிங்கர் காவிரிக் கேவ டக்கு
நண்ணிய பிணுகி யென்னு நதிதனக் கோது தெற்கு
விண்ணுரு லிங்க ருக்கு மேற்றிசை யழலி லிங்கர்க்
கெண்ணுறு தென்மேற் காக வியைந்திடு நிருதி மூலை.

(இ - ள்.) நுதனேத்திரத்தையுடைய அப்புலிங்கரது திருவானைக்காவுக்கும் அதன் சமீபத்தில் விளங்கிய காவேரிக்கும் வடக்கிலும்பொருந்திய

பினாகியென்று சொல்லப்படுகின்ற ஆற்றிற்குச் சொல்லப்பட்ட தெற்கிலும் ஆகாசலிங்காது சிதம்பரத்துக்கு மேற்குத் திசையிலும் அக்கினி லிங்காது திருவண்ணாமலைக்கு நினைக்கப்பட்டத் தென்மேற்காகப் பொருந்திய நைருதி மூலையிலும்—என்றவாறு. (55)

காவிரி பவானி கூடுங் கடிநகர் நண்ணா வுக்கும்
ஓவிலீ சானம் பஞ்ச யோசனை தூர மாகும்
மூவரி லொருவ னான முண்டகா சனத்து மூர்த்தி
பாவமே நீக்கு மந்தப் பதியுண்மை விளம்பு கென்றான்.

(இ - ள்.) காவேரியும் பவானியுங் கூடும் தீரத்திலிருக்கின்ற காவலை யுடைய பவானி நகரத்திற்குக் கெடாதவீசானத் திசையிலும் ஐந்து யோசனை தூரத்திலிருக்கின்றதாகும் திரிமூர்த்திகளி லொருவராகிய தாமரையாசனத்தை யுடைய ஸ்வாமி, பாவங்களையும் போக்காநின்ற அந்த ஸ்தலத்தி னுண்மையைச் சொல்லவேண்டுமென்றார்—என்றவாறு. (56)

நாரதன் முகத்தை நோக்கி நாட்டமோ ரெட்டுக் கொண்டான்
சீருறு மத்த லத்தின் திறமெவர் தெரிக்க வல்லா
ரோரிலா யிரமு கத்தா னுரைப்பரி ததனை முற்றுஞ்
சாருமென் முகங்க ணான்கிற் றக்கன சிறிது சொல்வேன்.

(இ - ள்.) அப்படி வினவிய நாரதரது முகத்தை நோக்கி எட்டுக் கண்களையுடைய பிரமர் சொல்லுவார். சிறப்புற்ற அந்த ஸ்தலத்தின் தன்மையை யாவர் சொல்லுவர். தெரியு மிடத்து ஆயிர முகத்தானும் அதன் மகிமை முழுதுஞ் சொல்லற்கரிது. பொருந்திய எனது நான்கு முகங்களானுங் கூடுமான மாத்திரம் கொஞ்சம் சொல்லுகிறேன்—என்றவாறு. (57)

## வேறு.

முக்கணிறை பேரருளின் முற்றுதிரு நீறும்
தக்கபல வேதியர் தவத்தொழிலி னீறுங்
கைக்கொடு தரித்திட நினைந்திடு கணத்தே
புக்கமல வல்வினைகள் வெந்துபொடி நீறும்.

(இ - ள்) மூன்று கண்களையுடைய பரமேசுவரது மிகுந்த கிருபையினாலே பழமையான விபூதியும் நற்குணமுடைய பல அந்தணரது விரதத் தொழிலினாலாகிய விபூதியும் கையிலெடுத்துத் தரித்துக்கொள்ள நினைத்த



அந்தக்ஷணமே தம்மைச் சூழ்ந்த பலவகைப்பட்ட வலிய வினைகளெல்லாம் வெந்து பொடிசாம்பராய் விடும்—என்றவாறு. (58)

அத்தல முறைந்தபுழு வாயினு மனேகம்
சித்திபெறு மாலஃது தெய்வவுரு வாகும்
முத்திபெற வோர்தவ முயன்று முடி யாதோர்
பத்திதரு மிப்பதியி லெய்துவர் பலன்கள்

(இ - ள்) அந்தஸ்தலத்தில் வசித்த கிருமியாயினும் அளவற்ற சித்தி பெறும். அக்கிருமி தேவவுருவமாகும். மோக்ஷமடைய விரும்பினோர் தவத்தில்முயற்சித்து முடிவு பெறாமற் போயினவர்கள் அன்பைத்தருகின்ற இந்த ஸ்தலத்தில் வந்து தாம் விரும்பிய பலனைப்பெறுவார்கள்—என்றவாறு. (59)

அவ்வரையி னாமமது தீர்த்தவரை யாகும்
தெய்வவரை தென்கயிலை தேவர்க ளிருப்பும்
பொய்வினைகள் வஞ்சவுடல் புண்ணியமி லாதா
ரெவ்வெவரு மெய்தரிய தெய்தரிய தென்று

(இ - ள்) அந்தமலையின் பெயர் தீர்த்தகிரியாம். தெய்வீகமானமலை. தென்கயிலாயம். தேவர்களிருப்பிடம். பொய்யரும் தீவினையாளரும் வஞ்சகரும் புண்ணியமில்லாத உடம்பினையுடையோரும் எந்த நாளிலும் சேரக்கூடாதது சேரக்கூடாதது—என்றவாறு. (60)

திருவரை யிடத்திழி திக்கிடு வெள் ளாறு
பரவியுடன் சூழ்கவெளி தோபடி சறுக்கும்
மருவிநதி மூழ்கியந் நகரினுறை வார்தா
முரியபல மாதவ முயற்றியருண் மிக்கோர்

(இ - ள்) அவ்வழகிய தீர்த்த மலையின் கண்ணே பிறந்து வருகின்ற வெள்ளாற்றிற் படிந்து மனிதர் முழுகுதற்கெளிதன்று. வஞ்சகத்தைக்கெடுக்கின்ற குற்றமமற்ற அந்நதியிற் குளித்து அந்தச் சுவேத மாநகரத்தில் வசிப்பவர்கள் தமக்குரிய பெரிதான பலதவங்களைச்செய்து கிருபை மிகுந்தவர் என்றவாறு. (61)

இப்பதிவெள் ளூரைநிக ரெப்பதியு மில்லை
யொப்பது சுவேதநதி யொத்தநதி யில்லை

மைப்பரவு தீர்த்தவரை போலுவ்வரை யில்லை
செப்புதிரு துண்மைமொழி சிந்தையிலி ருந்தாய்

(இ - ள்) இவ்வெள்ளூராகிய ஸ்தலத்துக்கு ஒப்பாக எத்தலங்களு மில்லை. சமானமற்ற வெள்ளாற்றையொத்த தீர்த்தங்களுமில்லை. மேகங்கள் தவழாநின்ற தீர்த்தமலையையொத்த மலைகளுமில்லை. சொன்னவிவைகள் மெய்யான வாசகமென்று நின்னுள்ளத்தில் வைக்கக்கடவை என்றவாறு. (62)

என்றுமலர் நான்முக னிசைக்க முனிநாத
னன்றென மகிழ்ந்துள நயந்தன னினைத்தும்
வென்றமுனி வோர்சுரர் வியப்பினை யடைந்தே
குன்றநெடு வில்லியருள் போற்றினர் குறித்து

(இ - ள்.) இப்படியென்று தாமரை யாசனத்தையுடைய பிரமர் சொல்ல, நாரத முனிவர் நல்லதென் றுள்ளங்களித்துச் சந்தோஷ மடைந்தார். புலப்பகை முழுதும் செயித்த விருடிகளும் தேவர்களும் துதிசெய்ய நெடிய மேருவில்லையுடைய சிவனது கிருபையைக் குறித்துப் புகழ்ந்தார். (63)

நாரதச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் மூன்றுக்குத் திருவிருத்தம் (111)

## நான்காவது திருநதிச் சருக்கம்.

அருமறையோன் மகதிமுனிக் குரைத்தகதை நைமிசா ரணியந்
தன்னில், வருமுனிவ ரினங்கேட்பச் சூதனுஞ்சு வேதபுரி மகிமை
யானை, யிருவருக்கு மரும்பொருளை யடியவருக் கெளியானைச் சொல்
லானை, யொருவனையே வணங்கியவ னருளினாற் றெளிதரவே
யுரைக்க லுற்றான்.

(இ - ள்.) பிரமதேவர் நாரதருக்குச் சொல்லிய கதையை நைமிசாரணியத்தில்வந்த முனிவர்கூட்டங்கள் கேட்கச் சூதமுனிவர் புவனமூ ரெழுந்தருளிய மகத்துவ முள்ளவனை விஷ்ணுவுக்கும் பிரமனுக்கு மரிதாகிய பொருளை அன்பருக் கெளிதானவனை முடிவில்லாதவனை ஒப்பற்றவனைப் பணிந்து அவனதுகிருபையினாற் றெரியும்படிக்குச் சொல்ல வாரம்பித்தார்.

திருமருவு குருகுலத்துத் திருதராட் டிரன்றம்பி செங்கோற்
பாண்டுக், குரியமனை வியர்குந்தி மாத்திரியென் றேரிருவ ருயர்



குந்திக்குத், தருமனொடு வீமனருச் சுனனென்று மூவரிவர் தனை
யர் பின்னு, மருநகுலன் சகாதேவனெனு மிருவரொடு மைவ
ரானார்.

(இ - ள்.) செல்வம் பொருந்திய குருகுலத்தில் வந்த திருதராட்டிரன் தம்பியாகிய செங்கோலையுடைய பாண்டுவுக்குரித்தாகிய பத்தினிகள் குந்திதேவி மாத்தாரதேவி யென்றிருவர். மூத்தவளாகிய குந்திதேவிக்குத் தருமன் வீமன் அர்ச்சுனனென்றிம்மூவர் புத்திரர். இளையவளாகிய மாத்திராதேவி பெற்ற நகுலன் சகாதேவனென்னும் மிவ்விரு வருடனே ஐந்துபேர் சகோதரராயினர்—என்றவாறு. (2)

ஐவர்துரோ பதையைமணஞ் செய்திருக்கும் போதவர்கட்
கறிய வந்து, துய்யதொரு மகதிமுனி திலோத்தமையாற் சுந்தனுப
சுந்தன் மாய்ந்தார், மெய்யிதுவிங் கொருத்தியா லைவர்க்கும் வெம்
பகைகள் விளையா வண்ணம், செய்கைநன் றிவ் வொவ்வொருவர்க்
கோராண்டு வாழ்க்கையெனச் செப்பி மேலும்.

(இ - ள்.) இவ்வைந்துபேரும் துரோபதையை விவாகம்பண்ணிக் கொண்டிருக்கிற நாளில் அவர்களுக்குத் தெரியும்படி பரிசுத்தமான ஒப்பற்ற நாரத முனிவர் வந்து திலோத்தமையினாலே சுந்தன் உபசுந்தனென்னு மிருவரு மடிந்தார். இதுசத்தியம். இவ்விடத்திலும் இவ்வொருத்தியினாலே உங்களைந்து பேருக்கும் வெவ்விய விரோதம் வாதபடிக்குச் செய்கிறது உத்தமமாகலால் நீங்களொவ் வொருவருமொவ்வொரு வருஷமிவளோடு வாழ்வதென்று சொல்லித் திரும்பவும் சொல்லுவார்—என்றவாறு. (3)

அப்படியே வாழ்ந்திருமி னவ்வாழ்க்கை யொருவர்கண்டா
லாங்குண் டாகும், தப்பதுதா னீராடித் தலங்கள்கண்டாற் றீரு
மெனச் சாற்றிப் போனான், செப்பியது தவறாம லப்படியே மகிழ்ந்
திருக்குந் தினத்தி லோர்நாள், விப்பிரன்றன் பசுநிரையைக் கள்கவர்
கொண்ட முறைகேட்டு விசைய னங்கே.

(இ - ள்.) அவ்வண்ணமாக வாழ்ந்திருங்கள். அந்த வாழ்வைமற்றொருவர் கண்டால் அதனால் வந்தபிழை தீர்த்தங்களாடித் தலங்களைத் தரிசித்தால் நிவிர்த்தியாமென்றுரைத்துப் போயினார். அந்தப்பிரகாரமே நாரதர் சொன்னது தவறாமல் வாழ்ந்து சந்தோஷித்திருக்கின்ற நாளில். ஒருநாள் ஒரு

பிராமணனது பசுக்கூட்டங்களைக் கள்ளர் கொண்டு போனது அருச்சனன் கேட்டு அவ்விடத்தில்—என்றவாறு (4)

அந்தணனை யஞ்சாய்நீ நின்பசுவெல் லாந்தருவே னையா
வென்று, சுந்தரவத் திரச்சாலை புகும்போது தருமருந்துரோ பதையு
மேவு, சந்தியிரு வரைநோக்கிச் சிவசிவா வென்றுமனந் தளர்ச்சி
யாகி, யிந்தவினை தொலைவதெப்போ தெனக்கணைவில் லெடுத்து
விரைந் தேக லானான்.

(இ - ள்.) அந்தப்பிராமணனை நீபயப்படாதே உனது பசுக்களெல்லா மீட்டுத் தருகிறேனையா வென்று சொல்லி அழகியதான சாக்கூடத்தில் புகும்போது தருமனுந் துரோபதையுங் கூடுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்விரு வரையும் பார்த்துச் சிவசிவாவென்று மனது விசாரமுற்று இந்தத் தீவினை நீங்குவதென்றைக்கென்று அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு சீக்கிரமாகப் போனான் அர்ச்சுனன்—என்றவாறு. (5)

தொடர்ந்துபசு வவர்க்கீய்ந்து மீண்டுவந்து தருமனடி தொழுது
வேண்டிக், கொடுந்தனுவை யெடுத்தந்தப் புரநீங்கி மேவுகுரு குலத்
தர்தேசம், கடந்துபல நதியாடி மிகுதலங்கள் கண்டிறைஞ்சிக் கருத்
தொன்றாகி, நடந்துதே டுஞ்சேதுக் கண்டுள்ள மன்பூறி நயந்து
மூழ்கி.

(இ - ள்.) தொடர்ந்துபோம் அந்தப் பசுக்களை மீட்டு அந்தப் பிராமண னுக்குக்கொடுத்துத் திரும்பவும் வந்து தருமபுத்திரரை வணங்கி வேண்டி விடைபெற்றுக் கொடிதான வில்லை எடுத்துக்கொண் டவ்வூரை விட்டுக் குருகுலத்தாருக்குச் சேர்ந்த நாட்டைக் கடந்து பல தீர்த்தங்களி லாடி மேலான ஸ்தலங்களைத் தரிசித்து வணங்கி மனமொருமைப்பட்டு நடந்து தேடிச் சேதுவைத் தரிசித்து உள்ள மகிழ்ந்து அன்பூறிப் பிரிய முற்றுக் குளித்து—என்றவாறு. (6)

தென்னிலங்கை யரக்கர்கோன் முடியுருளக் கொன்றுவருஞ்
சிலைக்கை வள்ளன், முன்னவனு ராதனைசெய் திறைஞ்சுமோ ரிராம
லிங்க முக்கட் டேவை, பன்னியே பணிந்துதுதித் திதையத்தி
லானந்தப் பாவம் பொங்க, மன்னியே யருள்கருத வருச்ச னணிப்
பாற்பாண்டி வையை நாட்டில்.



(இ - ள்.) தெ...லங்கையில் இராவணனது தலைகளுரும்படி கொன்றுவிட்டு வந்த வீரக்கையையு...ய இராமமுதற் கடவுள் ஆராதனை செய்து வணங்கிய ஒப்பற்ற மூன்று கண்க...டைய இராமலிங்கக் கடவுளைச் சேர்த்து வணங்கித் தோத்திரம்பண்ணி உள்ளத்...ந்த சாகரந் ததும்பப் பெற்றுக்கிருபையைத்தியானித்துஇப்பால் பாண்டியனது ... நதி சூழ்ந்த மதுரைக்கு வந்தான்—என்றவாறு. (7)

மதுரையிர சிதச்சபையின் முனிவரிமை யவர்பரவ மாறி
யாடும், பதவுபய மலர்மலர்கொண் டிறைஞ்சிவந்து பொன்னிநதி
படிந்து மூழ்கிச், சததளக்கண் வளருமொரு பொன்னரங்கத் தடிக
ளிரு சரணம் போற்றி, விதிநெறியிற் சுபத்திரையை மணம் வேட்டு
நடந்துலவை வெயிலா னொந்தே.

(இ - ள்.) அம்மதுரையில் வெள்ளியம்பலத்தில் முனிவர்களும் தேவர்களுந் துதிக்கக் கான்மாறி நடித்த இரண்டு பாதமலர்களையும் புட்பங் களைக் கொண்டர்ச்சித்து வணங்கி இப்பால் வந்து காவேரியாற்றிற் படிந்து முழுகி நூற்றிதழ்க் கமலம் போன்ற கண்கள் முகிழ்த்து அறிதுயில் செய் கின்ற ஒப்பற்ற திருவரங்கக் கடவுளினது தூயபாதங்களையும் வணங்கி விதிப் பிரகாரம் சுபத்திரையை விவாகம் பண்ணிக்கொள்ள விருப்பமுற்று நடந்து காற்று வெயிலினால் வருந்தி—என்றவாறு. (8)

வேறு.

மாமர நெடும்பலவு முதலிய மரங்கண் மலரொடு தழைத்திரதம்
வளர்கனி யுடைந்தே, பூமலி குறிஞ்சியரு விகளொடு கலந்தே பொலி
தரு சிலம்பினிடை யளியிசை முரன்று, தேமருவு மங்குல்படி பொழி
லிடை யிருந்தே சிலவதி சயந்தெரிச னையினிது ணர்ந்தே, வேமதிக
நண்பக லிரும்பசி யெழும்ப விடிவள விருந்துசெல மனமது துணிந்தே

(இ - ள்.) மாமரங்கள் பலாமரங்கள் முதலான மரங்கள் புட்பங்க ளொடு தழைத்துத் தேன்மிகுந்த பழங்களுடைந்து வருகின்ற அந்தத்தேன், புட்பங்கள் மிகுந்த குறிஞ்சிநிலத்து அருவியாற்றுடன் கூடி யோடுகின்ற மலைச் சார்பினிடத்தில் வண்டுகளிராகம் பாடுகின்ற வாசனை பொருந்திய மேகந் தவழாநின்ற தோப்பினிடத்திலிருந்து சிலவற்புதங்களைப் பார்த்தறி ஞலறிவிலாலோசித்து மிகவும் எரிக்கின்ற நடுப்பகலில் பொருந்திய பசியுண் டாக, இன்றிரவு முழுதுமிருந்து விடிந்தபின் செல்வதற்கு மனத்தினிச்ச யித்து—என்றவாறு. (9)

அதிகமறை யாகம முரைக்கின்ற நெறியே யறிவுள்ள வர்க்கு நெறி யாதலினென் ஞளும், நதியி[illegible] முழுகினன்றி யுண்டவுண வெல்லா நரகமொரு [illegible] பூசையது செய்யார், மதிபருதி யுள்ள ளவு நரகு[illegible] மரன்றே வளர்சிவனை யர்ச்சனை புரிந்திட நினைந்தே, [illegible]மாடுதகந்தேடி யரிகரியெனும்போ திதையத் துதித்தன னருட் கொடு முகுந்தன்

(இ - ள்.) மேலான வேதாகமங்கள் சொல்லுகின்ற மார்க்கமே அறிவுடையோருக்கும் மார்க்கமாகலின் எந்நாளிலும்தீர்த்தத்தில் முழுகுதலின்றிப் புசித்த புசிப்பெல்லாம் நரகமென்றும் ஒப்பற்ற நன்மையான சிவாராதனை செய்யாதவர்கள் சந்திர சூரியரிருக்குமளவும் நரகத்தில் வருந்துவார்கள் என்றும் மேலான பரமனை யர்ச்சனை செய்யும்படி நினைத்து நன்மையோடுந் தண்ணீர் தேடி யகப்படாமல் அரிகரி என்று தியானிக்கும் போது மனத்திற் கிருபையுற்றுத் தோன்றினர் திருமாலானவர்—என்றவாறு. (10)

இதையமலர் மிசையுதைய மாதவ னருட்கூர்ந் தெழில்வருண வாளிதனை யிவண்விடுத்தி யென்றே, மதிபகர விசையனடு கணைபாதலத்து மட்டுந் துளைந்திட வெழுந்துபுனன் மல்கு, நதியதனின் மூழ்கி நிரு மலனுகி யேயந் நதிக்கரையி னின்மலனை யிருத்திநறை யூறும், புதியம லர்ச்சனை நிவேதன மியற்றிப் பொற்பதம் வணங்கிபுப சாரமொடு பூமேல்.

(இ - ள்.) உள்ளத்தாமரையில் உதித்த விஷ்ணுவானவர் கிருபையுற்று அழகிய வருணஸ்திரத்தை இவ்விடத்தில் பிரயோகிப்பாயென்று புத்திசொல்ல அர்ச்சுனன் சொல்லுகின்ற வருணஸ்திரத்தை விட அவ்வஸ்திரம் பாதளமட்டுந் துளைக்கத் தண்ணீருவட்டெடுத்து நிறைந்த ஆற்றிற் குளித்துச் சுத்தனுகி அவ்வாற்றங்கரையில் சிவலிங்கத்தை வைத்துத் தேனூறுகின்ற புதுமலரால் அர்ச்சித்து நிவேதனம் செய்து பொன்போன்ற பாதத்தைத் தொழுது உபசாரத்துடன் பூமியின் மீது—என்றவாறு. (11)

தெண்டனென மாலொடு பணிந்துமுன் ஞான மிகுசிந்தை தனிலே யளிகூர்மிசைய,னண்டர்முனி வோர்குலிச னுந்திமல ரோனு மல ரங்கைமுடி மீதிலே கொண்டு குவியாக், கொண்டாக ராவென மகிழ்ந்துருக வேகலை குறைந்தமதி சூடுமெழி னீள்வேணி யரனு, ரொண்டொடி மகேசுரி யோடங்கு மழுமா னுடனு கந்துவிடை மீதில் வரவே.



(இ - ள்.) தெண்டனென்று ஆசையோடுஞ் சாஷ்டாங்கமாகப் பணிந்து பழமையான ஞான மிகுந்த மனத்தி லன்பு மிகுதியாக அர்ச்சுனனவன் தேவரும் முனிவருந் தேவேந்திரனும் பிரமனும் மலரை யொத்த கையைச் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு அரகராவென்று மகிழ்ந்து உள்ள முருகும்படி சந்திரப் பிறையை முடித்த சடையை யுடைய பரமேசுவரர் பார்வதி சமேதராய் மழுமானுந் தாங்கிய கையுடனே இடபவாகனத்தில் வரவும்—என்றவாறு. (12)

வேறு.

கண்டனன் பலகால் வீழ்ந்து கண்களி கூர நோக்கி
முண்டகத் தயனு மாலு முடியடி தேடிக் காணுப்
பண்டைநான் மறைக்கு மெட்டாப் பராபர பவநோய் தீர்ப்போ
யண்டர்நா யகனே நின்னை யறிதரு மறிவொன் றில்லேன்.

(இ - ள்.) பார்த்தன் பலதரம் விழுந்து பணிந்து கண்களிப்புறப் பார்த்துத் தாமரைமேல் விளங்கிய பிரமனுந் திருமாலும் முடியுமடியுந் தேடிக் காணுதற் கரியதாகியும் பழமையான நான்கு வேதங்களுக்கு மெட்டாமலுமிருக்கின்ற பராபரமே, பிறவிநோயைக் கெடுப்பவனே, தேவ தேவனே நின்னை அறியத்தக்க வறிவொன்றில்லாத நான்—என்றவாறு. (13)

நின்னடிக் கமலப் போதை நினைந்திடப் பற்றி லாத
வென்னையும் பொருளா யாள வெளிதினி லருள்சு ரந்தாய்
முன்னவா முக்கண் மூர்த்தி முதலிடை யீறி லானே
பொன்னக வில்லி யெங்கும் பூரண மான நாதா.

(இ - ள்.) நினது பாதத்தாமரை மலரைத் தியானிக்க ஆசையில்லாத என்னையுமொரு பொருளாய் இரக்ஷிக்க எளிதிற் கிருபை புரிந்தாய் முதன்மையானவனே, மூன்று கண்களையுடைய கடவுளே, ஆதியுநடுவு முடிவுமில்லா மகாமேரு வில்லை யுடையவனே, எவ்விடத்திலும் நிறைந்த புராணநாயகா—என்றவாறு. (14)

சிற்பரா னந்த ஞானத் தீங்கனி யூறுந் தேனே
யொப்பிலா மணியே கன்னி யுமையொரு பாகங் கொண்டோ
யிப்பெய ரிக்கு ணத்தோ டிக்குல மெனவொன் றில்லா
யெப்படிப் பாவிக் தாலும் அப்படி யிருக்கு மெந்தாய்.

(இ - ள்.) சிற்பரவின்பமே, ஞானமாகிய வினிய பழத்திலூறுகின்ற தேனே, சமானமற்ற இரத்தினமே, உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்

டவனே, இந்தப் பெயரிந்தக்குணம் இந்தவம்ச மென்றொன்று மில்லாத வனே; எவ்வண்ணமாகப் பாவனை செய்தாலு மவ்வண்ணமாகவே யிருக்கின்ற வெனது பிதாவே—என்றவாறு. (15)

தொண்டருக் கெளியாய் பைம்பூந் துணர்நறைத் தருவி ளங்கு
முண்டருக் கரியா யுன்றாட் கடைக்கல மடைக்கல மியான்
கண்டருள் சேரப் பெற்ற மாதவக் காகூநி யென்றே
தொண்டனேன் றொண்ட னேனென் றோதியே தோத்திரங்கள்

(இ - ள்.) அடியவருக்கெளியவனே பூங்கொத்துகளை யுடைய வாசனையுள்ள கற்பகத்தரு விளங்காநின்ற தேவலோகத்துள்ள தேவர்களுக்கரிதானவனே, உன்னுடைய பாதத்துக்கு அடைக்கல மடைக்கலம் அடியேன். உன்னைத் தரிசித்து உனது கிருபை பொருந்தப்பெற்ற பெரிய தவக்காட்சியாதென்றுணர்ந்திலேனென்று தோத்திரம் பண்ணி—என்றவாறு. (16)

அஞ்சலி விசையன் செய்தே யடிகளைத் துதித்துப் போற்ற
நஞ்சணி கண்டர் நோக்கி நனிபெற நினைத்த தெல்லாம்
நெஞ்சுறக் கேளா யென்ன நினைத்தன வரங்கள் மூன்றென்
றெஞ்சிடா துரைக்க நாதன் கொடுத்தன மெனப்பின் சொல்வான்.

(இ - ள்) அர்ச்சுனன் கைகூப்பிப் பாதங்களைத் துதித்துப் போற்ற விடத்தைத்தரித்த கண்டத்தையுடைய கடவுளவனைப் பார்த்து மிகவும் நீ பெறும்படி நினைத்தவையெல்லாம் உள்ளம் பொருந்தக் கேட்பாயென்று சொல்ல யான்மூன்று வரங்களை நினைத்தேனென்று குறைவின்றி அர்ச்சுனன் சொல்லக் கடவுளர் கொடுத்தோமென்னப் பின்னுஞ்சொல்லுவான் அர்ச்சுனன்—என்றவாறு. (17)

என்மனத் தடிக ளாய்முன் னின்றது மினிமெய் யாளுன்
மின்மணிச் சுபத்தி ரைப்பெண் மணஞ்செய்யும் வேட்கையொன்றே
யின்னதி பெருக்கான் முந்நீர்க் கியைந்திடு மகிமை யொன்று
முன்னருள் பொலிந்த லிங்க வடிவமிங் குறலொன் றென்றான்

(இ - ள்) எனதுள்ளத்திலிருக்கின்ற தெய்வமா யெதிர் நின்றது முன்னதேயானால் இனிப்பிரகாசியா நின்ற இரத்நாபரணங்களையுடைய சுபித்திரையென்னும் பெண்ணை விவாகஞ்செய்துகொள்ளும் விருப்பமொன்று, இந்த ஆறு பிரவாகத்தினால் கடலுக்கிசையச் செல்லுகின்ற மகத்துவமொன்று, உனது கிருபை மிகுந்தலிங்க வடிவாயிவ் விடத்திலிருத்த லொன்றென்று சொன்னான் அர்ச்சுனன்—என்றவாறு. (18)



ஒல்லையிற் சுபத்தி ரைப்பெண் ணூறமணஞ் செய்வா யிண்டிக்
கல்லகச் சாரல் வந்த பாதல கங்கை நொய்தே
சொல்லரி தென்று வேணிக் கங்கையிற் செம்பொற் குன்ற
வில்லிதான் பத்தி லோர்பால் விடுத்தன னதியும் பொங்க

(இ - ள்) சீக்கிரத்தில் சுபித்திரையென்னும் பெண்ணை விவாகஞ் செய்யக்கடவை. இவ்விடத்திலிருந்த மலைச்சாரலி லெழுந்த பாதாள கங்கையைச் சுலபமாகச் சொல்லுதற்கரியதென்றுரைத்துச் சிவந்த பொன் மேருவில்லையுடைய பரமசிவனானவர் தமது சடையிற்றங்கிய கங்கையிற் பத்திலொருபாகம் விட்டார் அந்த நதி பெருகும்படிக்கு—என்றவாறு. (19)

பொங்கியே குணக்கு நோக்கிப் புனிதமொ டெழுந்த கங்கை
கங்கைபோல் வருஞ்சு வேத நதியெனக் கடலில் வீழ்ந்து
சங்கமா யதனிற் றோய்வோர் தங்கள்வல் வினையும் போக்கி
யங்கவ ரெழுபி றப்பிற் பவமுத லகற்று மென்றான்.

(இ - ள்) அந்த நதியானது பெருகிக் கீழ்த்திசையை நோக்கிப் பரிசுத்தத்தோடு மெழுந்து கங்காதேவியை யொத்து வருகின்ற வெள்ளாறென்னும் பெயர்ப்பெற்றுக் கிழக்குக் கடலில்வீழ்ந்து கூடி யவ்வாற்றில் மூழ்குபவரது வலிய வினைகளையும் நீக்கியவாது எழுபிறப்பின் பாவங்களையும் வேறக்களையுமென்றுரைத்தார்—என்றவாறு. (20)

வேறு

பார்த்தவிசை யனையீங்குப் பாதலநீர் தோன்றலாற் பருப்பதப்பேர், தீர்த்தகிரி யெனவிளங்கு மன்பூறி மனத்திடையே சிந்திப்போர்க்குக், கீர்த்தியற மருளிலிங்கம் தீர்த்தகிரி யீசனெனக் கிளக்கு நாமஞ், சேர்த்தமெய்ஞ் ஞானத்தர் சிந்தையினு மிங்குமியாஞ் செறிந்திருப்போம்.

(இ - ள்) பின்னும் மகாதேவர் அர்ச்சுனனைப் பார்த்து, இவ்விடத்தில் பாதாள தீர்த்த முண்டான தன்மையாலிம் மலையின்பெயர் தீர்த்தமலையென்று சொல்லும்படி பிரகாசிக்கும். அன்பு மிகுந்து மனத்தில் தியானிப்பவர்க்குப் புகழு மறங்களும் தருகின்ற இவ்வி லிங்கம் தீர்த்தகிரி யீசரிவரென்று சொல்லுகின்ற பெயருள்ளதாப் பொருந்திய உண்மை ஞானத்தையுடைய தவசிகளது மனத்திலும் இவ்விடத்திலும் யாம் பொருந்தி யிருப்போம்—என்றவாறு. (21)

மாமதிமெய் யறிவுநிற லருணெறியே யிடம்பெற்று வாழ்வா யென்றே, தாமறைந்தார் பொன்னுலகத் தேவர்மலர் மழைசிந்தத் தழைவு கொண்டே, பூமகளுஞ் சிறப்படைந்தாள் விசையனன்பு மென்மேலும் புதிதா யுந்தத், தேமலர்கொண் டர்ச்சித்துத் தீர்த்தகிரீ சனைவணங்கிச் சின்னாள் வைகி

(இ - ள்) பெருமையும் ஞானமும் வெற்றியும் கிருபையும் ஒழுக்கமும் இடமும் பெற்று வாழக்கடவையென்று மகாதேவர் அதிரிசியமானார். சுவர்க்கத்திலுள்ள தேவர்கள் பூமாரி பொழியச் செழிப்புற்று பூமகளுஞ் சுகமுற்றுச் சிறப்பை யடைந்தாள். அர்ச்சுனன் மென்மேலும் அன்பு நவ நவமாய்ப் பெருகத் தேன்றங்கிய புட்பங்கொண்டருச்சித்துத் தீர்த்தகிரி நாதரைத் தொழுது சில நாளிருந்து—என்றவாறு. (22)

நின்றுவட திசைநோக்கி வண்டுவரைப் பதிக்கேக நெடிய கூந்தன், மன்றல்கமழ் மடமாது சுபத்திரையை மணம்புணர்ந்து மகிழ்ந்து நேச, மொன்றியத்தி னாபுரியில் வந்துதரு மனைப்பணிந் திங் குவகை பொங்கி, வென்றியொடு துயரனைத்து மகற்றிமிக வாழ்ந் திருந்தா னன்பு கூர்ந்தே.

(இ - ள்) அவ்விடத்தினின்றும் உத்தரதிசையை நோக்கித் துவாரகாபுரிக்குச் சென்று, வாசனைகமழுகின்ற நீண்ட கூந்தலையும் மடமையுமுடைய சுபத்திரைப் பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு சந்தோஷமுற்றுப் பிரியமொருமைப்பட்டு அத்தினாபுரிக்கு வந்து தருமபுத்திரரை வணங்கி, மகிழ்ச்சிமிகுந்து வெற்றியுடனே துக்க முழுவதும் நீங்கி வாழ்வுற்றிருந்தான் சுபத்திரையோடு விருப்ப மிகுந்து அர்ச்சுனன்—என்றவாறு. (23)

இந்நதையை யுயர்சூத னன்முநன்முன் னாரதனுக் கிசைத்தா னென்றே, யக்கமணி மாலையட்ட பாஷண மாநைமிசா ரணியத் துள்ளார், மிக்கமுனி வரந்நுரையா மகிழ்கூர்ந்து பின்னுமவர் விருப்பந் தோன்றித், தக்கவெள்ளூர் நிகழ்காதை மற்றொன்று மொழிகவெனச் சாற்றுஞ் சூதன்,

(இ - ள்) இந்தக்கதையை மேலாகிய சூதமுனிவன் முன்பு பிரமதேவர் நாரதருக்குச் சொன்னாரென்று ருத்திராக்ஷ மணிமாலிகையை ஆபரணமாக எட்டுஸ்தானங்களில்தரித்த நைமிசாரணியத்திலிருந்த முனிவர்களுக்குச் சொல்ல மகிழ்ச்சி மிகுந்து திரும்பவும் விருப்புண்டாகி நன்மையான வெள்ளூரில் நடந்த சரிதம் பின்னுமொன்று சொல்லவேண்டுமென்று முனிவர் வினவச் சூதமுனிவர் சொல்லுவார்—என்றவாறு. (24)



திருநதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் நான்கிற்குக் கூடிய திருவிருத்தம் (138)

## ஐந்தாவது மாதவர் சருக்கம்.

நாதனார்மகிழ் வதரிகாச் சிரமத்தி னன்று
மாத வத்தவர் யாவரும் மனமகிழ் சிறக்க
வேத மாகம மாதியாம் புராணங்கள் விளங்க
வோதி ஞானவா ரிதிபடிந் துறைந்திடு நாளில்.

(இ - ள்.) மகாதேவர் சந்தோஷித்திருக்கின்ற பதரிகாச்சிரமத்தில் வசித்தமுனிவ ரெல்லோரும் உள்ள மகிழ்வுற்று வேதாகம முதலிய பழைய நூல்களைத் தெளிவுறவாசித்து ஞானசாகரத்தின் மூழ்கி வாசஞ்செய்கின்ற தினத்தில்—என்றவாறு. (1)

கணங்கொண் மாமழை யிலாமையாற் காசினி யாவு
மணங்கொண் மாமலர் வாவிபு நதிகளும் வற்றிப்
பிணங்கு பூஞ்சினைத் தருவெலாம் பிஞ்சுகாய் கனிக
ளிணங்கிடுங் கந்த மூலப லாதியின் றிறந்த.

(இ - ள்.) மேகந்திரண்டு பெய்கின்ற பெரிய மழைகளில்லாமையினால் பூமி எவ்விடங்களிலும் வாசனை பொருந்திய தாமரைப்பூந்தடாகங்களும் நதிகளும் வற்றிச் சூழ்ந்த பூங்கொம்புகளையுடைய மரங்களெல்லாம் பிஞ்சுகள் காய்கள் பழங்கள் பொருந்திய கந்தமூலபலாதிகளுமின்றி மாய்ந்தன—என்றவாறு. (2)

விரிக திர்சுடும் வெம்மையாற் றோன்றுமங் குரங்க
ளெரியி னிற்படு கிருமிபோ லெரிந்திட வெங்கும்
பரிவு டன்செய்பைங் கூழின்றி விளைவஃகிப் பசியா
லரிய மானிட ரியாவரு மயக்கமுற் றயலவர்.

(இ - ள்.) விரிந்த சூரியகிரணந்தகிக்கின்ற வெப்பத்தினால் முளைத்த முளைகள் எரிகின்ற நெருப்பில் விழுந்த புழுவைப்போலக் கரிந்துபோக எவ்விடத்திலு மன்புற்றுச் செய்கின்ற பயிர்களில்லாமல் விளைவுகுன்றிப்பசியினாலரிதாகிய மனிதரெல்லோரும் மயக்கமுற்று வருந்தினர்—என்றவாறு (3)

பாத லம்படத் தொடுதலும் பருகநீர் காணு
தேதமுற் றுவல் விலங்குபுள் ளாதிக ளெவையு
மாத ரத்துட னலைந்தே ரிளையருந் திடப்போய்க்
காத டைத்துவீழ்ந் திறந்திடக் காலமெய் தியதால்.

(இ - ள்.) பாதாளமட்டும் தோண்டினாலும் உண்ணுதற்குத் தண்ணீர் தோற்றாமற் குற்றம் பொருந்தி வலியமிருகங்கள் பறவைகள் முதலான யாவும் விருப்பத்துடனே கானலைத் தண்ணீரென்றெண்ணிச் சென்று செவி யடைத்து விழுந்து சாகக்காலம் சம்பவித்தது—என்றவாறு. (4)

விழைவின் மாமுனி வரரது கண்டிங்கு மேவி
லழியு நந்தவ விரதமு மன்றிநம் மடியார்
தழைய வார்ந்திடக் கனிகிழங் கின்மையாற் றந்த
மிழிவு காரியஞ் செய்குவ ரிழப்பரென் றெண்ணி.

(இ - ள்.) ஆசையற்ற மகாமுனிவர்கள் அதனைப்பார்த்து இவ்விடத்தில் நாமிருக்கில் நமது தபோநிலைமையுங் கெடுவதலல்லாமல் நமது சிஷ்யர் செழிப்படையப் புசித்தற்குப் பழங்கள் கிழங்குகளில்லாமையினால் அறக்கனி ற்றாழ்வான செய்கைசெய்து சீவன் மடிவார்களென்று நினைத்து—என்றவாறு. (5)

அளவின்மாதவ ருந்ததிக் கணவன்மாட் டணுகி
வளமை யிந்தவிவ் வனத்திடை நெடுநாள் வைகி
யுளநி னைத்திடும் விரதங்க ளனைத்துஞ்செய் துய்ந்தேந்
தளர்வ கன்றன முனதரு ணிழலினிற் றங்கி.

(இ - ள்.) மட்டற்ற முனிவர்கள் அருந்ததி நாயகரான வசிட்டரிடத்திற்சென்று வனப்பமிகுந்த இந்த ஆரணியத்திலனேக நாளிருந்து மனத்தினினைந்த விரதங்கள் முழுவதுமியற்றி வாழ்ந்தோம். விசனம் நீங்கினோம். உன்னுடைய கிருபையாகிய நிழலிற் பொருந்தி—என்றவாறு. (6)

இங்க ணுமினி யுறைந்திடி லெழிலிபொய்த் ததனு
லெங்க ணேமமா தவஞ்சிவ விரதமு மேகும்
பொங்க மாகவாழ்ந் திடுமிடம் புகலுமி னென்னச்
சங்க மாமுனி வோர்துதித் தின்னுஞ்சாற் றுவரால்.

(இ - ள்.) இவ்விடத்தில் நாம் வசிக்கில் மழையில்லாமையினாலே எமது நயமுந்தவமுஞ் சிவவிரதமும் நீங்கும். மகிழ்வுற்று வாழ்கின்ற வோரி



டம் சொல்லுவீர்களென்று முனிவர் கூட்டங்கள் துதித்துத் திரும்பவுஞ் சொல்லுவார்கள்—என்றவாறு. (7)

பாரி லரசநீ தியுமறங் களும்பயிர்விளைவும்
வேரி யங்குழன் மின்னனார் கற்புமெய்த் தவமு
மூரி மால்விடை யான்விர தமுமக முற்று
மாரி யின்றழி யும்மென மறைசொலும் வழக்கால்.

(இ - ள்.) பூமியின்கண் அரசரது நீதியுந் தருமமும் பயிர்கள் விளைதலும் வாசம் பொருந்திய நீண்ட கூந்தலையுடைய மாதரது கற்பும் உண்மையான தவமும் வலிமையும் பெருமையு முடைய விடபவாகனத்தையுடைய கடவுளது பத்தியையும் யாகமுமாகிய எல்லாம் மழையில்லாவிடிற் கெடுமென்று வேதமுரைக்கின்ற நியாயத்தினால்—என்றவாறு. (8)

எங்க ணேமமும் பசிவரிற் சிதைந்திடு மெழிலார்
கங்கை வார்சடைக் கண்ணுதல் கருணையின் விளங்கும்
துங்க மாதவ வடிவெடுத் தொருபுடை தோன்றித்
தங்கு பான்மைபோ லுறைமுனி தாள்பணிந் திசைப்பார்.

(இ - ள்.) எங்களுடைய நியமும் பசியானது மேலிட்டழிந்து போமென்று அழகுபொருந்திய கங்கையைத் தரித்த நீண்ட சடையுடைய சிவனது கிருபையினாற் பிரகாசிக்கின்ற மேலானதவமே வடிவங்கொண்டோரிடத்தில் தோன்றியிருக்கின்ற தன்மைபோலிருந்த வசிஷ்டமுனிவரது பாதங்களை வணங்கிச் சொல்லுவார்—என்றவாறு. (9)

அன்ன மேயுயிர்க் காதர வாகிய தல்லா
லன்ன மேமகஞ் செய்வதற் கருந்துணை யாகு
மன்ன மேசிவ தருமங்க ளனைத்தையுங் கொடுக்கு
மன்ன மேசுகந் தரும்பொரு ளாதலா லையா.

(இ - ள்.) அன்னமே சீவனுக்காதாரமாகியதுமன்றி, அன்னமே யாகாதிகளைச் செய்கிறதற்கரிய துணையாகும். அன்னமே சிவவிரதங்கள் தருமங்களெல்லவற்றையுந் தரும். அன்னமே இன்பந்தருகின்ற பொருளாகையினாலும் ஸ்வாமி—என்றவாறு. (10)

இந்த நாட்டுயி ரியாவுமுய்ந் திடவுமே யாங்கள்
சிந்தை கூர்தரச் செய்தவ முடிந்திடச் சீதச்
சந்த மாமலர் நதிகளும் வனங்களுந் தழைத்தே
சுந்த ரப்பொழி லுடையதே தலமெனச் சொன்னார்.

(இ - ள்.) இத்தேசத்து சீவராசிகள் சகலமும் பிழைக்கும் படியாயும் நாங்கள் மனமகிழ்ச்சியடையச் செய்கின்ற தவம் நிறைவேறும்படியாயும் குளிர்ச்சிவடிவமான தாமரைபூத்த தீர்த்தங்களும் ஆரணியங்களுஞ் செழித்து அழகிய சோலை சூழ்ந்திருக்கின்ற தேர்தவிடமென்று வினவினர்—என்றவாறு. (11)

வேறு.

வாசமல ரோனுதவு மாமுனி மனங்கொண்
டோசனையி னொலொரு முகூர்த்தம துணர்ந்தே
தேசலவு ஞானவிழி யாலது தெரிந்தே
யாசைவினை யற்றதவ ரன்புற வுரைப்பார்.

(இ - ள்.) வாசனை பொருந்திய தாமரைமலராசனத்தை யுடைய நான்முகனீன்ற மேன்மையான வசிஷ்ட முனிவர் உள்ளத்திலொரு முகூர்த்தம் யூகித்தறிந்து ஒளிதங்கிய ஞான திருஷ்டியினாற் றெரிந்து ஆசையாகிய வியாதி நீங்கின அம்முனிவர்களன்புறச் சொல்லுவார்—என்றவாறு. (12)

முத்தர்பர வும்பரன் முடித்தநதி தன்னிற்
பத்திலொரு பாலது பகிர்ந்துவிட வாறாய்ச்
சுத்தியிடு மந்நதி சுவேதநதி யென்றே
யத்தல மிசைப்பொலியு மாரமுத மொப்பாம்.

(இ - ள்.) சீவன்முத்தர்கள் துதிக்கின்ற பாவசிவன், சிரசிற் றரித்த கங்கையிற் பத்திலொரு பாகம் பிரித்துவிட ஆறாய்ப் பாய்வது, அந்த ஆறு வெள்ளாறென்று பெயர்பெற்று அந்த ஸ்தலத்தில் தெவிட்டாத அமிர்தத்தை யொத்து விளங்கா நிற்கும்—என்றவாறு. (13)

பொன்னுமணி யுந்தரள மும்புடை கொழிக்கும்
மன்னுசிறை வண்டுமது வுண்டுகளி கொண்டே
யின்னிசைகள் பாடிவிளை யாடுமல ரெங்கும்
பன்னுமர விந்தமொடு பானலமு மல்கும்.

(இ - ள்.) பொன்னும் ரத்தினமும் முத்துக்களும் பக்கங்களிலே கொழித்துத் தள்ளும், பொருந்திய சிறைகளையுடைய வண்டுகள் தேனை யருந்தி மயக்கங் கொண்டு இனிய இராகம்பாடி விளையாடுகின்ற மலர்களெவ் விடங்களினும், நெருங்கிய தாமரைகளும் நீலோற்பலங்களும் நிறைவுற்றிருக் கும்—என்றவாறு. (14)



துப்பனைய வாய்ப்பசிய சூட்டுமட வன்ன
மெய்ப்படு சிறைக்கையினின் மென்பெடையை யன்பாய்ச்
செப்பரிய காதலொடு சேர்த்துநய மெய்தி
யெப்பொழுது மல்குபுளி னங்களு மிலங்கும்.

(இ - ள்.) பவளத்தை யொத்த வாயும் பசுஞ்சூட்டையுமுடைய இள வன்னங்கள் தமதுடம்பி லுற்ற சிறகாகிய கையினால் மெல்லிய பெட்டை அன்னங்களை யன்புற்றுச் சொல்லுதற்கரிய ஆசையுடனே அணைத்துச் சுக மடைந்தப்போது நிறைந்திருக்கின்ற புளினங்கள் விளங்கா நிற்கும்— (15)

வேறு.

அந்தநதி யிருகரையின் மருங்கெல்லா மரம்பையினன் கனிகள்
விண்டு, சிந்தியிடு நறுந்தேறல் பெருக்கெடுத்துப் பழனமெல்லாஞ்
செறிந்து பாய்ந்து, நந்தினங்கள் சூலுளைந்து முத்தீனு மடை
யுடைத்து நளின வாவி, வந்துபுகுந் திடத்தகட்டு வாளைகுதித் திட
வளங்கண் மல்கு மாதோ.

(இ - ள்.) அந்தச் சுவேத பாகீரதியினிரண்டு கரையின் பக்கமெல்லாம் வாழையினது நல்லகனிகள் வெடித்தொழுகுகின்ற தேன்வெள்ளம் பாவி வயல்களெல்லா வற்றிலும் சேர்ந்து பாய்ந்து சங்குகள் கருப்பத்தால் வருந்தி முத்துக்களை உயிர்க்கின்ற மடைகளை யுடைத்துத் தாமரைமலர்த் தடாகத் தில் வந்து புகுந்திடத் தகட்டு வடிவான வாளைமீன்கள் குதித்தாடும்படிக்கு வளப்பமிகுந்து—என்றவாறு. (16)

செஞ்சாலி யுடன்கன்னல் வெண்பாளைச் செம்பழுக்காய்ப்
பசிய பூக, மஞ்சாயன் மடக்கிள்ளை யினம்பூவை பஞ்சரம்விட் டகலா
தெய்தி, நஞ்சேறு மணிகண்டர் புகழ்கூறி யினிதுறையு நாளிகேர,
மெஞ்சாமல் நாடோறும் பழுத்தோங்கும் வருக்கைமா விருக்க
மெங்கும்.

(இ - ள்.) நெற்பயிர்களும் கரும்புகளும் வெண்ணிறமான பாளைகளையுஞ் சிவந்த காய்களையுடைய பசுங்கமுக மரங்களும் அழகிய சாயலு மடைமையு முடைய கிளிகளும் இளமையான பூவைகளும் தமது கூட்டை விட்டு நீங்காமற் சேர்ந்து விடந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவனது கீர்த் தியைப் பேசி நன்மையோடும் வசிக்கும் தென்னமரங்களும் குறைவின்றி யெந்நாளும் பழுத்து உயர்ந்திருக்கின்ற பலா மரங்களும் மாமரங்களும் எவ்விடங்களினு மிருக்கும்—என்றவாறு. (17)

ஈசனது சிவபூசை யியற்றுவதற் கிசைந்த நந்தா வனங்க ளெங்கும், வாசமிகு கரவீரம் வலம்புரிமல் லிகைமுல்லை வகுள நாகம், பாசிலைச்செண் பகநீல மாவமரா பாடலம்ப மசந் கொன்றை, யாசில கில் செவ்வந்தி மந்தார முதலனைத்து மலர்ந்து காட்டும்.

(இ - ள்) மகாதேவருடைய நன்மையான ஆர்தனை செய்வதற்குப் பொருந்திய நந்தவனங்களெவ்விடங்களிலும் வாசனை மிகுந்த அலரியும், நந்தியாவர்த்தம் மல்லிகை முல்லை மகிழ் புன்னை பசியவிலை களையுடைய செண்பகம் கடம்பு குங்குமம் மரா பாதிரி சந்தனம் கொன்றை குற்றமற்றவ கில் செவ்வந்தி மந்தாரை முதலிய செடிகள் மரங்களனைத்தும் பூத்து விளங்கும்—என்றவாறு. (18)

முகிறவழுஞ் சிகரநெடு வரைச்சாரன் மருங்கெலா முழைக ளூடு, வகிர்நா வுரகமணி யிளங்கதிர்செம் பருதியென விளங்கித் தோன்றும், செகக்கமழுஞ் சினைப்புடர்பைந் தளவினறுங் கொடி சூழ்ந்த செறிவு தோறு, மகமகிழத் தவம்புரிவோர்க் கிட்டபன்ன சாலையென வழகு மேவும்,

(இ - ள்) மேகந்தவழா நின்ற கொடுமுடிகளையுடைய நெடியமலைச் சாரலின் பக்கமெல்லாம் குகைகளினிடத்தில் பிளப்பாயிரண்டு நாக்கினையுடைய சர்ப்பங்களினிரத்தினங்கள் இளங்கிரணத்தையுடைய சிவந்த சூரியனைப்போற் பிரகாசித்துத் தோற்றும். வாசமுள்ள கிளைகளிற் படர்ந்த பசிய முல்லையினது நல்ல கொடிகள் பரவிய இடங்களெல்லாம் உள்ளங் களிப்பத் தவஞ் செய்பவருக் கியற்றிய பன்னசாலையொத்து அழகு பொருந்தி யிருக்கும்—என்றவாறு. (19)

மா தவிகோங் கிலவுவளர் தேக்குமரா மரமதவ மலர்செந்தாமரை தாதிமந்த மாலமா மலகமா லரசபனை தழைந்த ஞாழல், நீதிலாப் பிண்டிகுரா வலர்காஞ்சி முதற்றருக்கள் செழித்தே யோங்கும், மாத வுறு பசிநோய்தீர்க் கிடவென்றுங் கந்தமூ லங்க ளுண்டாமி,

(இ - ள்) குருக்கத்தி கோங்கு முருக்கு வளர்ந்ததேக்கு ஆச்சா அத்தி மலர்கின்ற செந்தாமரை மாதுளை தமாலம் நெல்லி ஆல் அரசு பனை தழைகின்ற குங்குமம் குற்றமற்ற அசோகு கோட்டம் மலர்ந்த காஞ்சி முதலிய விருக்ஷங்கள் செழித்து வளர்ந்திருக்கும் ஆதலால் பொருந்திய பசியாதி நீங்குதற்கென்னாளும் கந்தமூலங்களுண்டாயிருக்கும்—என்றவாறு. (20)



சித்தர்வித்தி யாதரர்கின் னரர்கள்காந் தருவர்முதற் றேவ ரியாரு, நித்தியம்வந் தருந்தவள நதிதோய்ந்து நேமமுடன் றுதிக்க நாளும், கைத்தலத்திற் கலைமழுவைத் தரித்தகங்கா தராகிக் கயிலை மேவு, மத்தரெனுந் தீர்த்தகிரி யீசருமை யுடனிற்பா ரங்கு தானே,

(இ - ள்) சித்தர் விஞ்சையர் கின்னரர் கந்தருவர் முதலாகத் தேவர்கள் சகலரும் தினந்தோறும் வந்து அருமையான வெள்ளாற்றின் மூழ்கி நியமத்துடனே ஸ்தோத்திரம் பண்ண வெந்நாளும் கைகளினிடத்தின்மான் மழுவைத்தாங்கிக் கங்கையைத் தரித்து வெள்ளியங்கிரியிற் பொருந்திய கடவுளாகிய தீர்த்தகிரீசரும் உமாதேவியோடு மெழுந்தருளி யிருப்பார் அவ் விடத்தில்—என்றவாறு. (21)

தரங்கநெடும் கடலேழுஞ் சுவறிடினும் விண்ணின்மழை தான் பொய்த் தாலும், கரங்கொள்கதிர் திரிந்து தெற்கு வடக்காகிக் கோணிலைகள் கலங்கி னாலும், சிரந்தழுவு நதிச்சடிலத் தீர்த்தகிரி யீசரருட் டிறமை யாலே, வரம்பெறுமத் தலந்தனக்கோர் காலமுநல் குரவில்லை வழுத்தக் கேளீர்.

(இ - ள்.) அலைகளையுடைய நெடிய சமுத்திரங்களேழும் வற்றினாலும் ஆகாயத்தினின்று மழையில்லா விட்டாலும் கிரணங்களையுடைய சூரியர் சந்திரர் தெற்குவடக்காகிக் கிரகங்களினது கதிதப்பிப் போனாலும் சிரசிற்றவழுகின்ற கங்கையைத் தாங்கிய சடையையுடைய தீர்த்தகிரீசரது கருணை நிலைமையினாலே வரம்பெற்ற அந்தஸ்தலத்திற் கொருகாலத்திலும் இல் லாமையென்றநில்லையாகும் யாஞ்சொல்லக் கேட்பீராக—என்றவாறு. (22)

ஆதலினல் லத்தலத்துக் கேகிநுங்கண் மனநினைத்த யாவுமெய்தி, மாதவங்களனைத்துநிறை வேறுமதி னேசமுடன் வாசஞ் செய்தாற், போதமுறு மகம்வேள்வி புரிவதற்கே குசஞ்சமித்தும் பொலிந்து வைகு, மோதியவத் தானமெங்கே யெனிலுரைப்ப னெனவசிஷ்ட னுரைப்ப தானன்.

(இ - ள்.) ஆதலாலந்த ஸ்தலத்திற்குச் சென்றாலுங்களுடைய மனத்திற் சிந்தித்த சகலமும் பெறப்படும் மேலான தவங்களெல்லாம் நிறைவேறும். மிகுந்த பிரியத்தோடும் வசித்தால் ஞானமுதிக்கும். யாகாதிகள் செய்வதற்குத் தருப்பை சமித்துகள் செழித்திருக்கும். சொல்லிய அந்த விடமெவ்விடமென்றாற் சொல்லுகின்றேனென்று வசிட்டமுனிவர் சொல்லுவாரயினர். (23)

வேறு.

கயல்பாயுந் தடங்க டோறுங் கதிர்ச்சங்கங் கருப்பங் கொண்
டியல்பாய்ச்செங் கமல மலர்ப் பொகுட்டின் மிசை யினிதேறி
யுயர்வான மணித்தரளந் தனையீன்றங் குறையவளம்
செயலாக மிகுங் கொங்கு தேசத்தி னொருபாலில்.

(இ - ள்.) மீனங்கள் குதிக்கின்ற தடாகங்களிலெல்லாம் பிரகாசி யாநின்ற சங்குகள் கர்ப்பங்கொண்டு சுபாவமாய்ச் சிவந்த தாமரைமலரினுச்சியின் மீது நன்மையாகவேறி மேன்மையான முத்துமணிகளையீன்று இனிதாகவவ்விடத்தில் வாசஞ் செய்யும்படியான வளப்பங்களே செயற்கையாய் மிகுந்த கொங்குநாட்டி லொருபக்கத்தில்—என்றவாறு. (24)

தவமுனிவோர்க் கினியவெலாந் தரமேன்மை பெற்றதுநான்
புவனியிலுந் தமதிதுவே யெனவுலகம் புகன்றதாற்
கவலையின்றி யத்தலத்துக் கெய்துவோ மாண்மினென
வுவகையுடன் முனிவோர்க ளனைவோரு மொருங்கெழுந்தார்.

(இ - ள்.) தவஞ்செய்கின்ற முனிவருக்கினிமையானவை முழுதும் கொடுக்குப்படி யுயர்வுற்றது பூமியின்கண் உத்தம ஸ்தலமிதுவே யென்று உலகம் சொல்லப்பட்டது. துன்பமில்லாமலந்த ஸ்தலத்துக்குப் போவோம் என்று வசிஷ்டமுனிவர் சொல்லச் சந்தோஷத்துடனே இருடிகள் சகலருமொருங்கே யெழுந்தார்—என்றவாறு. (25)

யாகமது புரிவதற் கியன்றிடுநற் பொருளியாவுஞ்
சேகரம தாவெடுத்துச் சிஷரும்பின் னெய்திடவே
யோகஞ்செ யாதனமு முயர்தண்டு மொளிர்கோலும்
சீகாமுங் கைக்கொண்டு சிந்தைகளி கூர்ந்திடவே.

(இ - ள்.) யாகஞ் செய்வதற்கிசைந்த நல்லதிரவியங்கள் சகலமும் சம்பாதித் தெடுத்துக்கொண்டு மாணக்கரும்பின்னேவர யோகஞ் செய்கின்ற ஆதனமு மேன்மையான தண்டு மாத்திரைக் கோலுங் கமண்டலமும் கையிலே தாங்கி மனக்களிப்புற்று—என்றவாறு. (26)

அவ்விடத்தில் வாசஞ்செய் யரியவன தேவதைக்கும்
கவ்வையில்லாத் தருவுக்குங் கருத்துகந்தே யினிதுரைத்துச்
செவ்வியதா யுடனுறைந்த சிலவிலங்கும் புள்ளுகளும்
மவ்வியமும் பகையுமிலா தன்புடன்பின் றொடர்ந்தேக.



(இ - ள்.) அந்தவிடத்தில் வசிக்கின்ற அருமையான வனதேவதைக்குந் துன்ப மில்லாதமரங்களுக்கு மனப்பிரியத்துடனே நன்மொழிகூறி செவ்வையாகத் தம்முடனே வாசஞ்செய்த சில மிருகங்களும் பறவைகளும் அஞ்ஞானமும் விரோதமு மில்லாமல் அன்போடும் பின்னே தொடர்ந்துவர—என்றவாறு. (27)

குரைகடலி னகடுழக்குங் குளிர்கான்யா றுடன்வனமும்
வரைநெருங்கு மணிச்சிகர வரையாவுங் கடந்தேகி
விரைசெய்நறும் பூமணியும் விளங்கியசு வேதநதி
திரையினெடுங் கரத்தேந்திச் சென்றெதிரக் கரைசேர்ந்தார்.

(இ - ள்.) ஒலிக்கின்ற சமுத்திரத்தின் வயிற்றைக் கலக்குகின்ற குளிர்ந்த காட்டாறுகளும் ஆரணியங்களும் மூங்கிலு நெருங்கிய அழகிதான சிகரங்களையுடைய மலைகளுங்கடந்துபோய் வாசனைசெய்கின்ற நல்ல மலர்களையும் மணிகளையும் பிரகாசிக்கின்ற வெள்ளாறனது அலைகளாகிய கையிலேந்திச் சென்றெதிர்கொள்ள அவ்வாற்றங்கரையை யடைந்தார். (28)

வருந்தவள நதிவளமு மலர்ச்சோலைப் பெருவளமுந்
திருந்துபடர் வனவளமுஞ் செம்பதுமத் தடவளமு
மருந்திடநன் மூலமெலா மளிக்குநெடு மலைவளமும்
பொருந்தமிகப் பார்த்துடலம் பூரித்தங் கினிதிருந்தார்

(இ - ள்.) பெருகிவருகின்ற வெள்ளாற்றின் வண்மையு மலர்ந்த தோப்புகளின் மிகுந்த வண்மையும் செவ்வையாகப் பரவிய ஆரணியத்தின் வளமையுஞ் செந்தாமரை பூத்த தடாகத்தின் வளமையும் புசிப்பதற்கு நன்மையான மூலபலாதிகளெல்லாம் தருகின்ற நெடிய மலைகளின் வளமையும் மிகவு முய்த்து நோக்கி உடம்பு பூரித்து அவ்விடத்தினன்குற்றுத் தங்கினர்—என்றவாறு. (29)

இத்தலஞ்சு வேததீவுக் கிணையாக விருத்தலினால்
மெய்த்தவனா வசிட்டருடன் மிகுமுனிவர் பாவமுறச்
சித்திரசு வேதபுரி யெனநாமஞ் செப்பியிட
வத்திருநாள் முதல்வெள்ளூ ரெனவிளங்கி யமர்ந்ததுவே

(இ - ள்) உண்மையான தவத்தையுடைய பெருமை பொருந்திய வசிஷ்ட முனிவரோடு மிகுந்தவம் முனிவர்களு மாசை பொருந்த இந்த ஸ்தலம்சுவேத தீவைத் யொத்திருக்கின்றமையால் அழகிய சுவேதபுரி

யென்று பெயர் சாற்ற அந்த நன்னாதியாக வெள்ளூரென்று புகழ் விளங்கி யிருந்தது—என்றவாறு. (30)

நதியாடித் தங்கடங்க ணன்னியமத் தொழின் முடித்து
விதிமாலி னுடனின்ற வேதமுனி வனைநோக்கித்
துதியார்வத் துடன்செய்து தொழுதுமகிழ்ந் திடுங்காலை
யெதிராக மணிக்கலசக் கோபுரமொன் றினைக்கண்டார்

(இ - ள்) அம்முனிவரெல்லோரும் வெள்ளாற்றிற் குளித்துத் தங்கள் தங்களது நன்மையான நியமச்செயலை முடித்துப் பிரியத்தோடும்பிரமனின்ற வேதங்களை யுணர்ந்த வசிஷ்டமுனியைக் கண்ணுற்று விருப்பத்தோடேர் துதி செய்து வணங்கிச் சந்தோஷித்திருக்கும்போது தமக்கெதிரே இரத்தினச் சிகரகோபுர மொன்றை அவ்விடத்தில் பார்த்தார்கள்—என்றவாறு. (31)

கண்டவுடன் வீழ்ந்திறைஞ்சிக் கனகமதி லாலயத்தை
மண்டுபெருங் காதலுடன் வலஞ்செய்தங் குட்புகுந்து
வெண்டரள நகையிமைய வெற்புதவு மின்றோய்ந்த
வெண்டடந்தோட் டீர்த்தகிரி யீசனைப்பூசித்தேத்தி.

(இ - ள்) பார்த்தவுடனே விழுந்து வணங்கிப் பொற்பிராகாரத்தை யுடைய கோவிலை நிறைந்த பெரிய வாசையோடும் பிரதக்ஷிணம் வந்துள்ளே புகுந்து வெள்ளிய முத்தை யொத்த பற்களையுடைய இமைய மலையீன்ற உமாதேவியைக் கலந்த பெருமையுற்ற எண்டோளாகியதீர்த்தகிரியீசரைப் புகழ்ந்து தோத்திரம் பண்ணி—என்றவாறு. (32)

மலைச்சாரன் முழையிடத்து மலர்த்தருவின் பொழிலினும்
கலைக்கூட்டம் விளையாடுங் கடிகொள்வனப் புதருள்ளூ
மலைத்தெகு மணித்தவள நதிக்கரையு மரியதவ
நிலைத்தேசெய் தருந்ததியின் கோனருட னங்கிருந்தார்

(இ - ள்) மலைச்சாரலின் குகைகளினிடத்தும் புஷ்பங்களையுடைய மரங்களினிழலிலும்மான் கூட்டம் விளையாடுகின்ற வாசனையுள்ள ஆரணியப் புதர்களினுள்ளும் இரத்தினங்களைக் கொழித்துச் செல்லுகின்ற வெள்ளாற்றங்கரையிலும் அரிதாகிய தவத்தையுள்ள நினைத்துச்செய்து அருந்ததிப் பெண் பிரியாகிய வசிஷ்டமுனிவரோடு மவ்விடத்திலிருந்தார்கள்—என்றவாறு. (33)



வேறு.

இன்ன வாறு தவங்க ளியற்றிடக்
கன்னி மாதுமை யாளுடன் கங்கையைச்
சென்னி சூடிய தேவன்வெள் ளேற்றின்மேன்
மன்னும் வெள்ளி மலைவிட் டிறங்கியே

(இ - ள்) இவ்வண்ண முனிவோர் தவங்களைச் செய்ய கன்னிப் பெண்ணாகிய பார்வதியோடும் வெள்ளைவிடை யூர்ந்து கங்கையைச் சிரத்திற்றரித்த மகாதேவர் பொருந்திய கயிலை மலையை விட்டிறங்கி—என்றவாறு. (34)

மாரி யின்றி மரஞ்செடி வாடியும்
பாரி லெங்கும் பயிர்விளை வஃகியு
மேரி கால்குள நீர்வறண் டிட்டதுஞ்
சீரின் மன்னுயிர் துன்புறு தேக்கமும்

(இ - ள்.) மழையில்லாமல் மரங்களுஞ் செடிகளும் வாட்ட முற்றதும் பூமியிலெவ்விடத்திலும் பயிர்கள் விளைதல் குறைவுற்றதும், ஏரிவாய்க்கால் தடாகங்களில் நீர் வற்றினதும் சிறப்பின்றிச் சகல பிராணிகளுந் துக்கங் கொண்டு மெலிவதும்—என்றவாறு. (35)

அருளி னுள்ளத் தறிந்துல கெய்தியே
தெருளி னேக்குற்றுச் சென்றிடுங் காலையின்
மருவு நற்றா ளங்களை வாரியே
விரிசு வேத நதிக்கரை மேவியே.

(இ - ள்.) கிருபையினுற்றமது திருவுளத் திலுணர்ந்து பூவுலக மடைந்து ஞானவிழியால் பார்த்துச் செல்லும்போது பொருந்தியால லித்திலங்களை வாரிப்பரவிவருகின்ற வெள்ளாற்றங் கரையிலிருக்கின்ற—என்றவாறு. (36)

கழையுஞ் சாலியுங் கார்ப்பயிர் யாவுமே
விழைவு முற்றி விளங்கிட மாங்குயில்
குழைக்க ரும்பனைக் கூவிடுஞ் சோலைசூழ்
தழைவ ளங்கொள்வெள் ளூரினைத் தான்கண்டார்.

(இ - ள்.) கரும்புகளும் செந்நெற்களும் மருதப்பயிர்கள் முழுவதும் விளைவுமுதிர்ந்து செழிப்புற மாமரங்களிற் கோகிலங்கள் கரும்பைவளைக்

கின்ற மன்மதனை யழைப்பது போலக்கூவுகின்ற தோப்புகள்சூழ்ந்து தழைத்து வளமையுற்றிருக்கின்ற சுவேதபுரியைக்கண்டார்—என்றவாறு. (37)

இலகு நல்வள மெய்திய திப்பெருந்
தலமதென்று மகிழ்ந்தெழிற் சம்புவைக்
கலகை வேற்கட் கனிமொழிப் பூங்குழன்
மலைமடந்தையு நோக்கி வழுத்துவாள்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற நல்லவளப்பந்தங்கி யிருக்கின்றது இந்தப் பெரியஸ்தலமென்று மகிழ்வுற்று அழகுபொருந்திய கலகஞ்செய்கின்ற வேலையொத்த விழியும் கனியையொத்த மொழியும் பூமாலையணிந்த கூந்தலையுமுடைய மலைமகள் மகாதேவரைப்பார்த்துச் சொல்லுவாள்—என்றவாறு.

எண்ணு மிவ்வெழி லிப்பதிக் கெய்திய
தின்னம் யாவர் செயலென்று மாதவர்
நண்ணி வாச முறுவது நான்றெரி
வண்ண மோதென வள்ளல் விளம்புவார்.

(இ - ள்.) கருதத்தக்க இவ்வழகு இந்நகர மடைந்திருக்கின்ற நிச்சயம் யாருடைய செய்கை. என்றும் முனிவர்கள் பொருந்தி வசிப்பதுவும் யான் றெரியுமாறு சொல்லுவீராக வென்ன மகாதேவர்சொல்லுவார்—என்றவாறு. (39)

பண்டு வில்விசை யன்னொரு பான்மையாற்
றொண்டு செய்தெனைப் பூசித்துத் தூயதாய்
விண்டு வந்தொழு மேவ வரியதாட்
புண்டரீ கத்தைப் போற்றி யிரந்தனன்.

(இ - ள்.) முன்புவில்லையுடைய அருச்சுனன் ஒருவாறு தொண்டு செய்தென்னை யாராதித்துப் பரிசுத்தமாய்த் திருமாலும் வணங்க வடைதற்கரிதான பாதாம்புயத்தை வணங்கி வரங் கேட்டான்—என்றவாறு. (40)

அடிப ணிந்த வாசன் மகிழ்ந்திடப்
படியி லிந்தநன் னுடென்றும் பன்மணி
வடிவு காட்டி வயங்கு நதிகளும்
கடிகொள் காவுங் கதிர்ப்பயி ரோங்கவும்.

(இ - ள்.) பாதத்தை வணங்கி அருச்சுனவாசன் சந்தோஷமுறப்பூமியின் கண்ணிந்த நன்மையுற்ற தேயத்திலெக்காலும்பல இரத்தினங்களுருவந்தோற்றிப் பிரகாசிக்கின்ற ஆறுகளும் வாசனையுள்ள சோலைகளும் கதிர்களை யுடைய பைங்கூழ்களும் செழிப்பை யடையவும்—என்றவாறு. (41)



திங்கண் மூன்று மழைபெய்து செம்மையிற்
றங்கு நல்வள மின்னித் தழைந்திடப்
பொங்கு போரு ளாலே புகன்றது
மங்க ளுயக ...டு ...ரிவையே.

(இ - ள்.) மாதமும்மாரி பொழிந்து ... ...ருக்கின்ற நல்ல வளப்பம் பொருந்திச் செழிக்கும்படி மிகுந்த பெரிய ...பயினும்... ...ன்பு சொல்லியதை அழகிய கண்களையுடைய பெண்ணே நீயுந் தெரிந்திருப்பாய் என்றவாறு. (42)

மான்று ...ந னிபம்பவுஞ் சில்லரி
துன்று நூபுரத் தூமலர்த் தாளினு
ளன்று நன்றுன் னருளி னலமெனக்
குன்ற வில்லி யொடுபின்னுங் கூறுவாள்.

(இ - ள்.) இப்படியென்று மகாதேவர் சொல்லவும், பார்த்த ...க்க னெருங்கிய சிலம்பணிந்த பரிசுத்தமான மலரையொத்த பாதத்தையுடைய அம்பிகை நல்லது நல்லது உனதுகருணைத் தன்மையென்று மேருவில்லையுடைய கடவுளோடு விரும்பவும் சொல்லுவார்—என்றவாறு. (43)

இப்பெ ரும்பதி தன்னி லிருந்துநாஞ்
செப்பு கின்ற வுயிர்கள் செழிப்புற
வொப்பி னல்வர மீந்துறு வாமென்று
அப்பு துங்கனி வாய்மயில் சொல்லலும்.

(இ - ள்.) இந்தப் பெரிதான ஸ்தலத்தில் நாமிருந்து சொல்லாநின்ற ஜீவராசிகள் செழிக்கும்படி யொப்பற்ற நன்மையான வரங்களை யளித்துச் சுகமுற்றிருப் போமென்று பவளத்தையுங் கனியையு மொத்தவாயையுடைய மலைமகளுரைக்க—என்றவாறு. (44)

மாலு நான்முகன் வானவ ரும்தொழு
வால முண்டரு ளங்கண னின்பமுற்
றேல வார்குழ லாயிங் கிருக்கநற்
கால மெய்தும தோதுவன் காணென.

(இ - ள்.) மகாவிஷ்ணுவும் பிரமனும் தேவர்களும் வணங்க விடத்தை யருந்திய மகாதேவர் மகிழ்ச்சியுற்று மயிர்ச்சார்தணிந்து நீண்ட அனகத்தை யுடையவனே இவ்விடத்திலிருக்க நல்லதான ஓர்காலம் வரும் அதை யுணர்ப்பேன் தெரிவை யென்று சொன்னார்—என்றவாறு. (45)

கையில் வேத்திரக் கோலும் கதிர்பெறு
மெய்யி லங்குவெண் ணீறுஞ் சுரிகை[illegible]
ளையனு நந்தி தேவ[illegible] முகச்
[illegible]செய்ய தாமரை நோக்கினர் செப்புவார்.

(இ - ள்) கரத்தில் பிரம்பும் கோலும் பிரகாசமுள்ள தேகத்தில் விளங்குகின்ற வெண்மையான விபூதியும் உடைவாளையு முடைய வெள[illegible] பிதாவாகிய திருநந்தி தேவரது விகசித செவ்விதான வதனார விந்தத்தைப் பார்த்து சொல்லுவார்—என்றவாறு. (46)

முன்ன ரெய்து முனிவ ரிடந்தனின்
மன்னி யோரவர் மாதவ முஞ்சிவ
மின்று சீலமு நேமத்து மேன்மையும்
முன்னி யுள்ளத் துணர்ந்தெய்து வாயென.

(இ - ள்) முன்பு இவ்விடத்தில் அடைந்த இருடிகளிடத்திற் சென்று அவர்களது மகாதபசும் பிரகாசிக்கின்ற ஒழுக்கமும் நியமங்களின் மேம்பாட்டையும் யோசித்து மனதிற்றெரிந்து வருதி—என்றவாறு. (47)

ஓதி வெள்ளிடை மீதுமை பாகனுடன்
பாதி மாமதி வேணிப் பரமன்று
னேத மில்கயி லாயஞ்சென் றெய்தியே
காத லோடங் கிருந்தனர் காலென.

(இ - ள்) இவ்வண்ணஞ்சொல்லி வெள்ளி யிடபத்தின் மிசை மலை மகளோடுஞ் சந்திரப் பிறையணிந்த சடையையுடைய பரமசிவன் குற்றமற்ற கைலயங்கிரியிற் சென்று சேர்ந்து பிரியத்துட னங் கிருந்தார்—என்றவாறு

கூறு கின்ற குறுமுனி நேர்தர
மாறில் சூதனை மாதவர் நோக்கியே
வீறு நந்திபோய் மீண்டிடு மாறதை
யீறு காறுஞ்சொல் லென்ன விசைக்கின்றான்.



(இ - ள்) சொல்லிய அகத்தியரை யொத்த வேறுபாடில்லாத சூத முனியை இருடிகள் பார்த்துப் பெருமையுற்ற நந்திதேவர் போய்த் திரும்பி வந்த பிரகாரம் முடிவுவரையிற் சொல்லுவீரென்னச் சூதர் சொல்லுகின்றார்

மாதவர் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ஐந்துக்குத் திருவிருத்தம் (187)

## ஆறாவது வேள்விச் சருக்கம்.

முக்கண னருள்புரிய முந்திவிடை கொண்டு
மிக்கதொரு நந்திமறை வேதியனை யொப்பத்
தக்கவெழின் முப்புரியு தாத்திடை நயங்கச்
செக்கர்விர லிற்பவுத் திரக்குசை செறித்து.

(இ - ள்) இவ்வாறு மூன்று கண்களையுடைய பரமசிவ னருள்செய்ய முன்னர் தாம் விடைபெற்ற மேன்மையான ஒப்பற்ற திருநந்திதேவர் வேதங்களை யுணர்ந்த அந்தணனைப்போல் அழகு நிலைத்த பூணூல் மார்பிற் பிரகாசிக்கச் சிவந்த விரலிற் பவுத்திர தருப்பை சேர்த்து—என்றவாறு. (1)

வட்டமகு டச்சடை கழுத்தணி மலர்க்கை
கட்டுசெப மாலைமணி கண்டிகை யிலங்க
விட்டதிரி புண்டர வெணீறழ கெறிக்க
வட்டதிசை சுற்றுமறை யாகம மணக்க.

(இ - ள்) விருத்தமான கிரீடம் போலுற்றசடையுடனே கண்டவாபரணமும் மலர்போன்ற கையிற்கொண்ட செப வடமு மிரத்தினப்பதக்கமும் பிரகாசிக்கின்ற திரிபுண்டரமாய்த் தரித்த வெள்ளிய விபூதியினழகும் விளங்க எட்டு திக்கிலுஞ் சூழ்ந்து வேதாகமம் பரிமளிக்க—என்றவாறு. (2)

சற்சையுடன் மெய்யினிடை வற்கலை தரித்துச்
சிற்சொருப ருத்ரசெபம் வாயிடை செபித்து
நற்கெதைபி டித்தகை நடுங்கவுடல் கூனித்
தற்சரீர மூப்பொடு தளர்ந்தபழ மொப்ப.

(இ - ள்.) திரைத்த வுடம்பில் மாவுரி தரித்து ஞான ரூபமானருத்திர செபம் வாயிற் செபித்துக்கொண்டு நன்மையான தெண்டைப் பிடித்தகரம் விதிர்ப்புற உடம்பு வளைந்து தனது சரீர மூப்புடனே குழைந்தகனியை யொத்திருக்க. (3)

அங்கவியர் வாறமர நீழலி லிருந்து
தங்கியு மெழுந்துமெள மெள்ளவே தளாடி
வெங்கதிர் வெயிற்குடல் விடாய்கொடு தவிப்ப
இங்குவிழு வாரென வெடுத்தடி நடந்து,

(இ - ள்.) தேகத்தில் வேர்வைதணிய மரத்து நிழலிலுட்கார்ந்து தங்கியும் பின்பெழுந்து பையப்பையத்தடுமாற்றமுற்று வெவ்விய சூரியனது வெயிலினுடல மிளைத்துக்களைத்து இவ்விடத்தில் விழுவாரென்னும்படி யடி பெயர்த்து நடந்து—என்றவாறு. (4)

நீருறு சுவேதபுரி நீடியவெள் ளாறு
சேருநிரை யாச்சிரம மேயரிது சேர
வாரமிகு மாதவர்கள் கண்டுள மகிழ்ந்து
சாரவரு சீடரொடு தாமெதிர் நடந்து.

(இ - ள்.) தன்மை பொருந்திய தவமாகரத்தைச் சார்ந்த வெள்ளாற்றங்கரையினிலுறைந்த வாச்சிரமத்திலருமையாகச்சேர அன்புமிகுந்த அம்முனிவர்கள்பார்த்து மனங்களித்துத் தொடர்ந்துவருகின்ற மாணாக்கரோடுந் தாங்களெதிர்சென்று—என்றவாறு. (5)

ஆதர வுரைத்துவள வாச்சிரம மூடே
போதுமென வேயழைத்துப் போயினர் பணிந்தே
யேதமறு தாள்கழுவி யாதன மிருத்திச்
சீதவுப சாரமிகு பூசையது செய்தார்.

(இ - ள்.) இனியவையுரைத்து மேன்மையான வாச்சிரமத்திற்கு வாக்கடவீரென்றழைத்துச்சென்று தொழுது குற்றமற்ற பாதங்களைக்கழுவி ஆசனத்திலுட்காரவைத்துக் குளிர்ந்த வுபசாரமிகுந்த வாராதனை செய்தார்—என்றவாறு. (6)

ஆதர முளம் பெருகி யாதன மிருந்த
வேதமுடி வைத்தெரியும் வேதியனை நாடி
நீதியினில் வேள்விநிறை வேறுவகை நீரெம்
மாதவ பலத்தினெளி தாக வியவன்வந்தீர்.

(இ - ள்.) ஆசையானது மனத்திற் பொங்கி யாசனத்திலிருந்த வேதாந்த முணர்ந்த பிராமணனைப்பார்த்து நன்னெறிப்படிக்கு யாகமுடிவுறும் பிரகாரம் நீர் எமது தவப்பிரயோசனத்தினாலே இவ்விடத்திற் கெழுந்தருளினீர்—என்றவாறு. (7)



என்றுமுக மன்பல வியம்பமு மலங்கள்
வென்றசத கோடிமறை வித்தக விருத்த
னென்றுமொழி கின்றன னுறுந்தவம் விளங்க
நன்றுதிட மோசபல மோநிறைவு நன்மை

(இ - ள்.) இப்படியென்று பல உபசாரங்களைச் சொல்ல மும்மலங்களைச் செயித்த நூறுகோடி வேதாந்த ஞானவார்த்திகர் சொல்லுவார், பொருந்திய தவம் பிரகாசிக்க நன்மையாக வுள்ளந்திடமுற்றதோ, நிறைந்த நல்ல ஞானஞ் சித்தித்ததோ—என்றவாறு. (8)

வேறு.

காருக பத்தி யாதிக் கண்ணெரி வேள்வி செய்யச்
சீருறப் பலித்த தோநற் றருப்பைகள் சமித்து சீடர்
பாருயர் மரம்வி லங்கு பறவையாச் சிரம மின்பங்
கூருட னனைத்துநன்று யிருந்ததோ வினிமைகூர

(இ - ள்.) காருகபத்திய முதலியவக்கினி மார்க்கயாகம் புரிய நல்ல தருப்பை சமித்துகள் சிறப்புறக்கதித்திருக்கின்றனவா? நமது சீடர்களும் பூமிக்கணுயர்ந்தமரங்கள்மிருகங்கள்பட்சிகளாசிரமங்களிவையெல்லாஞ் சுகமிகுதியோடு நன்குற்றிருக்கின்றனவோ சந்தோஷிக்கும்படிக்கு—என்றவாறு.

விண்ணூறு மழைக ளின்றி வெயின்முதிர்ந் தளவின் மாந்த
ரெண்ணிலா வருத்தங் கொண்டே யிறந்தனர் விலங்கு புட்க
[illegible]ணிய தருக்கள் மற்று மடிந்தன ஞாலத் துங்கள்
புண்ணிய[illegible] யன்றோ பொலிவுபெற் றிருக்கு மாறே.

(இ - ள்.) ஆகாயத்தின[illegible] மாரியில்லாமல் வெயின் மிகுந்து வரைவற்ற மனிதர்கள் கணக்கற்றதுன்ப மடை[illegible]மாய்ந்தார். மிருகம்பட்சிகளும் பொருந்திய மரங்களுமற்றயாவைகளும் நாசமுற்றன. பமியின் கண்ணுங்கடருமத்தினிலேயாலல்லவோ சிறப்பையடைந்திருக்கின்றன—என்றவாறு.

அடவியில் வதிந்த வுங்க ளாச்சிர மங்க ளான
புடவியு நதியு மற்றப் பூமர நிழலுங் கந்தம்
படுசுவைக் கனியு மீண்டே பலன்றரு கின்ற நீரான்
முடிவின்மா தவத்தா லியானுந் தெரிசன முற்றுப் பெற்றேன்

(இ - ள்.) ஆரணியத்தில் வாசஞ்செய்த வுங்களுடைய வாசிரமங்களான பூமியும் தீர்த்தமற்றுள்ள புட்பங்களையுடைய மரங்களினிழலும் வாச

லையுற்ற வினிய பழங்களு மிவ்விடத்திற் பிரயோசனங் கொடுக்கின்ற தன்மையால் அளவற்ற மகா தபசினுல் காணு முங்களது தெரிசனம் நன் ருகப் பெற்றேன்—என்றவாறு. (11)

நீங்கள்செய் தவத்தி னாலே நமக்கரா னெதிரா நிற்பா
ரீங்கதற் கைய மில்லை யிருங்கட றருமி யாவும்
பாங்குற மிகுசஞ் சாரம் பண்ணினேன் வளமை தன்னி
லோங்கிய வளங்கண் டிங்கே யும்மிடை வந்து சார்ந்தேன்

(இ - ள்.) நீவிரியற்றுந் தவத்தாலுமக்கு மகாதேவர் பிரத்தியக்ஷமாய் வருவா ரிவ்விடத்திற்குச் சந்தேகமின்று. பெரிய கடல்சூழ்ந்த புவிமுற்றுஞ் செவ்வையாக மிகவுஞ் சஞ்சரித்தேன். வளப்பத்தின்மேலாகிய வளப்பத்தைப் பார்த்திவ்விடத்தில் வந்து சேர்ந்தேன்—என்றவாறு. (12)

இனியும தருளா லென்ற னிருளெலாமகன்றவென்று
தன துள்ளங் குளிர்ந்து நின்ற விப்பிரன் றனக்குக் கந்தங்
கனிநறை மூலந் தந்து கடும்பசி யகற்றிப் பின்பும்
முனிவரு மறத்தினைத்த மூப்பு வேதியனு மாங்கு.

(இ - ள்.) இனியுங்கள் கிருபையினு லெனது அஞ்ஞானாந்த கார முழுது நீங்கினவென்று தனது மனங் குளிர்ந்திருந்த வந்தணருக்குக் கிழங்கு பழம் வாசனையுள்ள மூலவர்க்கங்களைக் கொடுத்து மிகுந்த பசியை நீக்கிப் பின்னர் இருடியரு மிகவும் இளைத்த வயோதிகப் பிராமணரும் அவ்வி டில்—என்றவாறு. (13)

தம்மதி யினிலா ராய்ந்து கண்ணுதற் சரி— பெசி
மெய்ம்மயிர் பொடிப்ப வுள்ள ...காக் தருதி மேனிச்
செம்மையி னிருந்தார் ...றுச் சேருப கார மாக
வம்முனி ...ன மேலா மருந்துரு வாசர் சொல்வார்.

(இ - ள்) தமது விவேகத்தாலாராய்ந்து நெற்றிக்கண்ணையுடைய கட வுளது சரித்திரங்களைப்பேசி உடலம் புளகித்துக் களிப்புறு தன்மை யடைந்து செவ்விதாக விருந்தார். பின்பு லோகோபகாரமாயுந்த முனிவரில் மேம்பாட்டையுடைய அருமையான துருவாசமுனி சொல்லுவார்—என்ற வாறு. (14)

மறையவர் முதல்வ லிங்கோர் வார்த்தையுண் டுரைக்கக் கேண்மோ, வுறையுமித் தலத்தி னன்(



தப், பொறைபெறு முனிவர் யாரும் பொருந்தமெய் யின்ப முற்றோம், அறைகட லுலகி லையா மழையிலா தயர்ந்த தென்னோ

(இ - ள்.) ஐயா வேதியரி லாதியானவரே இவ்விடத்தொரு மொழி யுண்டு சொல்லக் கேட்பீராக. வசிக்கின்ற இவ்விடத்தில் உம்மைத் தரிசித்து நானும் பொறுமையுடைய விவ்விருடியர் யாவரும் சேர மெய்யா நந்தத்தை யடைந்தோம். ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த பூமியில் வானமின்றி மயங்கியதி யாதோ—என்றவாறு. (15)

மருமலர் நதிகள் வாவி வற்றியும் வளங்கள் குன்றித்
தருவெலா முலரத் தீது தருங்கால முற்ற தாலே
யுருவெழிற் சராச ரங்க ளுய்யுமா றெவ்வா றி யாங்கள்
விரவுமாச் சிரம மான வெதரிகாச் சிரமம் விட்டே.

(இ - ள்.) வாசனையுள்ள புட்பங்களையுடைய ஆறுகளும் தடாகங் களும் வறண்டு வளப்பங்கள் குறைந்து விருக்ஷங்களெல்லாங் காய்ந்து போகப் பொல்லாங்கு தருகின்ற காலம் சம்பவித்தபடியால் அழகிய உறுப்புகளை யுடைய சராசரங்கள் பிழைக்கு மார்க்க மெப்படி, நாங்கள் வசித்த ஆசிரம மான வெதரிகாசிரமத்தை விடுத்து—என்றவாறு (16)

தொழத்தகு வடமீன் வேட்ட தூயநன் முனிவ னாலே
தழைச்சிறை யனங்கண் டுஞ்சுந் தண்மலர்ச் சுவேத தீரத்
தெழிற்பொலி வதுகண் டிங்க ணிருந்தன மிமைய மீன்ற
மழைக்குழற் கயற்க ணுடன் மணாளன தருளி னாலே.

(இ - ள்.) வணங்கத்தக்க அருந்ததி இச்சித்த பரிசுத்தமுநன்மையும் பொருந்திய வசிஷ்ட முனிவரால் விரித்த சிறகுகளையுடைய அன்னங்களித் துறைகின்ற குளிர்ந்தமலர்களையுடைய இந்தச் சுவேத நதிக்கரையில் அழகு சிறந்திருப்பதையறிந்து இவ்விடத்திலிருகின்றோம். இமையபருவதம் பெற்ற மேகம்போன்ற குழலும் மீன்போன்ற விழிகளுமுடைய உமையவளின் கணவனது கிருபையினுல்—என்றவாறு. (17)

இந்தநந் தேச முற்று மேர்வள மெய்தி வேண்டும்
சுந்தமூ லம்ப லாதி கருத்துற வளர்த லாலே
வந்தன மித்த லத்தில் வாசஞ்செய் திருந்தோம் நீரும்
சிந்தைகூர்ந் திடவிங் கெய்தத் தெரிசனங் கண்டுய்ந் தேமால்.

(இ - ள்.) இந்நாடு முழுவதும் அழகும் வளப்பமும் தங்கி வேண்டு மான கிழங்கு வேர் கனி முதலியன மனது பொருந்த விருத்தலாலித் தலத் திற்கு வந்து யாங்கள் வசித்திருக்கின்றோம். நீங்களும் உள்ள மகிழும்படிக்கு இவ்விடத்திற்கு வரவும், தெரிசனை கண்டு வாழ்ந்தோம்—என்றவாறு. 18

வேத்திரக் கரத்தா யிந்த மேதினி நிரப்பை நீக்கி, காத்தளிப் பவரியார் சூற்கொள் கணமழை பொழிந்து பைங்கூழ், நேர்த்தி யாய் விளைந்து பொங்க நிலத்துயிர்த் தொகுதி யாவு,மாத்துய ரகன்று வாழ்வ தெவ்வழி வழங்கு கென்றான்.

(இ - ள்.) பிரம்புதாங்கிய கையையுடைய நந்திபோல்பவரே இப்பூ வுலகத்தின் இல்லாமையைப்போக்கிப் பாதுகாப்பவரியாவர்? கருவுற்று முகிற் குழாங்கள் மழைபெய்து பயிர்களழகாய்விளைந்து பிரபலிக்கப் பூமியின் கண் ணுள்ள ஜீவராசிகளெல்லாம் பெரியதானதுன்பம் நீங்கிப் பிழைக்கின்ற தெப்படிச் சொல்லவேண்டுமென்றார்—என்றவாறு. (19)

காலமூன் றுணருந் தெய்வக் கருணைவே தியருங் கேட்டே யெலவோர் முகூர்த்த மியோகத் தியானஞ்செய் திதையுந் துன்னிச், சீலமா தவரை நோக்கிச் செப்புவார் திலத்தி னெய்போன், ஞாலமீ துயிரெண் பத்து நான்கிலக் கத்துந் தோய்ந்தே.

(இ - ள். பூதபௌவிஷ்யவர்த்தமானங்களைத் தெரிகின்ற கிருபையுள்ள அந்தப் பிராமணரும் கேட்டு இயல்பா யொருமுகூர்த்த நேரம் யோகத் தியானஞ் செய்து மனதினினைத்து ஒழுக்கமுடைய விருடிகளைப்பார்த்துச் சொல்லுவார். எள்ளிலெண்ணெய்போல உலகத்தி லெண்பத்து நான்கு லக்ஷஞ் ஜீவராசிகளிலும்கலர்து—என்றவாறு. (20)

அளித்தளித் தழிக்கு மூவ ராகியே யொருவ னாகு, ருளப் பொலி வுடனே காஞ்சி யுமையவ டமுவ மெய்யில், வளைத்தழும் பேற்றார்முன்னம் மார்க்கண்டன் றனக்காய்க் கூற்றன், றுளக்க முற் றவனி வீழத் துணைப்பதத் தாலு தைத்தார்.

(இ - ள்.) படைத்துக்காத்துமாய்கின்ற மூவருந்தாமேயாகி ஒருவரு மாகியகடவுளாய் மனமகிழ்ச்சியோடுங் காமாக்ஷிதேவி ஆலிங்கனஞ்செய்யத் தம்முடம்பில் வளையல்களின் சுவடுறும்படிதாங்கினார். முன்புமார்க்கண்டனி மித்தம் இயமன்கலங்கி பூமியில்விழும்படிக்குப் பாதத்தாலுதைத்தார்— என்றவாறு. (21)



அசைவிலாச் சுயோத னன்ற னமர்விளை யாட்டாய் வென்று
வசையிலா வீரவெற்றி வாகையே புனைய மாய
னிசைவுறக் குரகத் தேரி னிரதசா ரதியாய் வந்த
விசைய னுக் கருளாற் பாசு பதந்தந்த விமலர் தானே.

(இ - ள். பகைவருக்குக் கலங்காத துரியோதனனது யுத்தத்தை விளை யாட்டாகச்செயித்து நிந்தையில்லாத வீரத்துவத்தோடு வெற்றிகொள்ள ஸ்ரீகிருஷ்ணசுவாமி குதிரைகளைப்பூட்டிய இரதத்திற்குச்சாரதியாயிசைந்த அந்த அருச்சுனனுக்குக் கிருபையினாலே பாசுபதாஸ்திரம் அளித்தபரி சுத்தர்—என்றவாறு. (22)

உயிரெலாஞ் சுகத்தை மேவி யுய்ந்துளத் தின்பம் பெற்றே
யயர்விலா திருக்க நாளு மருண்மிகத் தருவா ரந்தச்
செயிரறு முக்கட் டேவர் சிந்தையின் மகிழ்ச்சி கூர
மயலகல் வசிட்ட ராலே மகம்புரிந் திடுவி ரென்றான்.

(இ - ள்.) ஜீவகோடிகளெல்லாம் இன்பத்தைப்பொருந்தி வாழ்ந்து துன்பமில்லாதிருக்க மிகவுந்தயவுசெய்வார். அந்தச்சினமற்ற மூன்றுகண்களை யுடைய கடவுளர்திருவுள்ளத்தின் மகிழ்ச்சியுண்டாக மயக்கநீங்கிய வசிட்ட முனிவரால் யாகஞ்செய்வீரென்று சொன்னார்—என்றவாறு (23)

மகமது புரிந்தால் வேண்டும் வரமெலாங் கொடுப்பர் பின்னும்
செகமதி னெருங்கி வாழும் சீவரா சிகளு மொன்றுஞ்
சுகமது பெறவே மாரி சொரிந்துபைங் கூழ்க ளோங்கி.
மிகவளம் பொலியச் செய்வார் மெய்யிது திண்ணந் தானே.

(இ - ள். அவ்வண்ண மியாகமானது செய்தால் வேண்டியவரங்க ளெல்லாமீவார். அன்றியும் உலகத்திற்செறிந்து வாழாநின்ற வுயிர்க்கூட்டங் களும் எந்நாளும் இன்பமடையும்படி மழைபொழிந்து பயிர் செழித்து மிகவும் வளமையுண்டாக அருள்செய்வார். இதுசத்திய மிதுநிச்சயம்— என்றவாறு. (24)

என்றுசொன் மறையோ னுள்ள மின்பமீ தூர நண்ணி
நன்றுட னுபசா ரத்தாற் பூசிக்க நந்தி யண்ண
றன்றிருக் கோலங் காட்டி நின்றிடத் தவத்தோர் யாரும்
மின்றெமர் தவமோ வந்திங் கெய்திய தென்னத் தாழ்ந்தார்.

(இ - ள்.) இப்படி என்று சொல்லிய யந்தணரது மனத்திலானந்தமானது மேலே ததும்பச்சேர்ந்து நன்மையோடும் உபசாரத்தினாலேதுதிக்க அவ்வந்தணராகிய நந்திதேவர் தமது திருவுருவத்தைக்காட்டிநிற்க அவ்விருடிகள் யாவரு மின்றைக்கு எமது தவப்பலனே இவ்விடத்தில் வந்துசேர்ந்ததென்று வணங்கினார்கள்—என்றவாறு: (25)

பணியுமா தவரை யெல்லாம் பார்த்திபில் விடையி லேறும்
கணிகொளுங் கடுக்கை யான்றன் கருணையா லுங்க ளைமத்
துணிவினை யறிந்து வாவென் றனுப்பிட வந்தே னீங்க
டணிவிலாச் சுகங்கள் பெற்றுத் தரணியில் வாழ்வி ரென்றே.

(இ - ள்.) வணங்கிய இருடிகளெவரையும் நோக்கிப் பெருமை பொருந்திய இடபவாகனமூர்த்தி, மாலையாகக்கட்டிய கொன்றை மலரை யுடைய கடவுளானவர் தயவினாலுங்களுடைய நல்லொழுக்கப்பகுப்பினை தெரிந்துவாவென்றனுப்ப யான்வந்தேன். நீங்கள் குறைவற்ற வின்பம் பொருந்திப் பூமியின்கண் வாழக்கடவீர்—என்றவாறு. (26)

இங்குமே வியனுப் வந்தி திசைத்தநா னிகையில் வெள்ளைச்
செங்கணை றுடையார் நாளுஞ் சிந்தைகூர் நந்தி யென்றே
யங்கவ ரார்வங் கூர வறைந்திர சிதவெற் பெய்தி
மங்கையோர் பாகர் தம்பால் வந்தடி யிறைஞ்சிச் சொல்வார்.

(இ - ள்.) இவ்விடத்திலந்தணருருவாய் வந்திதனைச்சொல்லிய நான் ஒப்பில்லாத வெண்ணிறமும் சிவந்தகண்களையுமுடைய இடபவாகனத்தை யுடையவருக்குத் தினந்தோறுமுள்ளமகிழ வெவல்செய்கின்ற நந்திதேவனென்று அம்முனிவர் பிரியமுறும்படிசொல்லி வெள்ளியங்கிரியிற் சென்று மலைமகளையொருபாகத்தில்வைத்த மகாதேவரிடத்தில் வந்து அவரது பாதத்தை வணங்கிச் சொல்லுவார்—என்றவாறு. (27)

வெள்ளூறு மெண்ணெய் போல வெவ்வுயிர் தொறுநி றைந்தங்
குள்ளுணர் வாகி ஞான வொளியதா யுவமை யில்லாய்
தள்ளூறு மூல மாகித் தருமொரு கரியு மான
வள்ளலே முக்கண் மூர்த்தி மலரடி போற்றி போற்றி.

(இ - ள்.) எள்ளிற்றங்கிய வெண்ணெயை யொத்துச் சகலவுயிர்களி லும் கலந்து பரிபூரணமா யறிவுக்கறிவாகி ஞானப்பிரகாசமா யொப்பற்றவனே தள்ளுதற்கரிய சத்தமாகித தருக்கவொரு சக சாக்ஷியுமாகிய கட



வளே திரிநேத்திரஸ்வரூபி, நினது பாதாரவிந்தங்களுக்கு வந்தனம் வந்தனம்.—என்றவாறு. (28)

உளத்தின்மெய் யன்பி னூடே யுதித்தவா னந்தத் தேனே
யளப்பிலா வுயிர்க ளாகி யைம்பெரும் பூத மாகி
விளக்கிய கருணை வெள்ள வேலையாய் வேத நான்கு
நிலைக்குஞா னத்துக் கெட்டாச் சேவடி போற்றி போற்றி.

(இ - ள்.) உள்ளத்தின்கண் மெய்யன்பினிடமாகத் தோன்றிய இன்பரசமே, அளவற்றவுயிருமாகிப்பஞ்சபூதங்களுமாகிப் பிரகாசிக்கின்ற கிருபை பெருகுகின்ற சமுத்திரமுமாகி நான்கு வேதங்களில் நிறைந்த முடிவாகிய ஞானத்திற்கு மெட்டாத நினது சிவந்த பாதங்களுக்கு வந்தனம் வந்தனம் என்றவாறு. (29)

காலனை யுதைத்த காலா காமனை யெரித்த கண்ணா
வாலமுண் டிருண்ட கண்டா வடுகளி றுரித்த கையா
மேலடர் புரநீ றாக்கும் வெண்சிறு நகையாய் வேதன்
மாலறிந் திடாத சோதி வடிவமே போற்றி யென்று

(இ - ள்) யமனை யுதைத்த பாதத்தை யுடையவனே, மன்மதனைத் தகித்த கண்ணுடையவனே, விடத்தை யருந்திக் கறுத்த கண்டத்தை யுடையவனே, கொலை செய்கின்ற யானையை யுரித்தகைகளை யுடையவனே, மேம்பாடுள்ள நெருங்கிய திரிபுரங்களைச் சாம்பராக்கிய வெண்மையான குறுமூரலை யுடையவனே, பிரமனும் திருமாலு மறியக் கூடாத சோதி ஸ்வரூபமே வந்தனம்—என்றவாறு. (30)

செங்கரங் குவியத் தாழ்ந்து தெண்டனிட் டெழுந்து பல்கா
லங்கைவாய் புதைத்து நின்றே யருந்தவ ரிருக்குந் ... னருண்மேற் கொண்டு
பொங்கியே மகிழ்ச்சி தோன்றப் ...
தங்கின னிப்பா ... ரூராத் தாபதர் செய்தி சொல்வாம்.

(இ - ள்.) சிவந்த கைகளைக் கூப்பிச் சாஷ்டாங்கமாய்ப் பலதரம் தெண்டம் செய்தெழுந்து, அங்கையினால் வாய்பொத்திநின்று, அரிய தவஞ் செய்வோரிருக்கின்ற தன்மையை மிகுந்த சந்தோஷமுண்டாகும்படி நந்தி தேவருரைத்தார்; கிருபை மேற்கொண்டு கடவுளிருந்தார். பின்பு வெள்ளூரிற்றங்கிய முனிவரது செய்கையைச் சொல்லுவாம்—என்றவாறு. (31)

வேறு.

வெள்ளாற்றி னிருபுடையின் முனிவசெல்லோ ரனைவருமே
மேவி யோர்பால், தள்ளாப்புண் ணியதிலைற்றி னன்கான வோரை
யினிற் றவவ சிட்ட, னெள்ளாத முதல்வனென நிச்சயித்து மற்று
முள்ளி விருடி னாத, ருள்ளுறுமன் பினிருந்து விக்குகளா யொரு
வேள்வி யியற்ற லுற்றார்.

(இ - ள்.) தவளமாநதியி லிருபக்கத்திலுமிருந்த முனிவர்கள் சகலரும் திரண்டு ஓரிடத்தில் சேர்ந்து தள்ளப்படாத புண்ணியாசனில் நன்மையான இலக்கினத்தில் தவத்தையுடைய வசிட்டமுனிவரை நிந்தையில்லாத தலைவராகத்திட்டஞ்செய்து மற்றைய முனிசிரேஷ்டர் உள்ளத்திலுறுகின்ற அன்பினாலே இருந்துவிக்குகளாயுமிருந்து மகாதேவருக்காகிய ஒரு யாகஞ் செய்ய யத்தனித்தார்—என்றவாறு. (32)

மறையவரை யழைத்தோமத் திரவியங்க டருவித்து வாசம் வீசு
நறுநிழற்கா மலிந்தவயர் சுவேதநதிக் குணதிசையி னண்ணி வாச
லறையினான் காயக சாலைகா வணமேற் கட்டு மலங்க ரித்துக் [றும்.
குறைவினெடுந் தோரணமும் வேதிகையு மாக்கியதிற் கோண மூன்

(இ - ள்.) வேதியரை யழைத்து ஓமத் திரவியங்களைத் தருவித்து வாசனை வீசுகின்ற நல்ல நிழலையுடைய தோப்புகள் மிகுந்து நிறைந்திருக்கின்ற தவளமாநதியின் கீழ்த் திசையிற் சேர்ந்து வாயிலுள்ளதுடுத்த வீடுகளும் நான்குள்ளதாக யாகசாலையும் பந்தரும் விதானமும் ஒப்பனைசெய்து தாழ்வில்லாத நெடிய தோரணங்களும் திட்டுகளுஞ் சமைத்து அதில் மூன்று கோணங்களும்—என்றவாறு. (33)

மடமை செய்துனிரும் பியகருமம் விரைவாகத் தமதிட்ட தெய்வம்
விசேட ராகி, [illegible]வணங்கி யொருமுகூர்த்தம் சுசியாகிச் செபசீல
பெண் ணருகு சேர்ந்து, [illegible]கிட்டருந்தற் புருவாரு மருந்ததிப்
சைவபர மானம[illegible] வெள்ளிசெயு மிச்
சையே தழைக்கும் வண்ணம்,

(இ - ள்) இயற்ற விரும்பிய தொழில் சீக்கிரத்தி னிறைவேறத் தங்களது இஷ்டதெய்வத்தைத் தொழுது போற்றி வணங்கி ஒரு முகூர்த்த நேரத்திற் பரிசுத்தராகிச் செபவொழுக்க விசேடராய்த்தலைவராகியவசிஷ்ட முனிவர் அந்தக் கற்பே வடிவமாகிய அருந்ததி மங்கை சமீபத்திலிருந்து



சைவத்தன்மையான யோரியாகஞ் செய்கின்ற வாசையே உண்டாக்கியபடி என்றவாறு. (34)

நிறுத்திமவு னத்துடனே தீக்கிதரா முதன்மையுளார் நியம
மாயோர், புறத்திலத்து வரிபிரம ரோதாவுக் காதரவாய்ப் புனிதராகித்
திறக்கருமம் விரைவுடனே யசுவத்தின் கோலரணிச் செந்தீ வேத,
முறைப்படியே கடைந்தனலை வளர்த்ததற்காம் பொருள்பலவு முற்
றத் தந்து

(இ - ள்.) நின்றுகொண்டு மௌனத்தோடுந் தீக்ஷிதராகித் தலைமையாயிருப்பவர் நேமத்துடனே ஒரு பக்கத்தில் அத்துவரி பிரமர் ஓதாவென்பவர்களுக்குச் சகாயமாய்ப் பரிசுத்தராகிச் சாகிருத்தியத்தைச் சற்று சீக்கிரமாய்ச்செய்து சிவந்த அக்கினியை வேதமுறைமைப்படி கடைந்து அழலை வளர்த்து அதற்காகிய பொருள்கள் பலவகைகளையும் முடிவுற ஆகுதி கொடுத்து—என்றவாறு. (35)

ஆனபாத் திரஞ்சுருக்குச் சுருவமுட னால்வேத மறிந்த வேறுய்
தானமுறும் பதினாறி ரித்தியுக்க ளேதோடங்கத் தவர்க்கு மேலாய்
ஞானமிகு வசிட்டன் வெண்ணெய் பூசியே யிருமருப்பு நயந்த தான
மானதுதோற் புதுக்கலைகொண் டருக்கியா சமனசெபம் வளர்த்
துப் பல்கால்.

(இ - ள்.) ஆகத்தக்க பாத்திரஞ் சுருக்குச் சுருவமென்பவற்றுடனாகிய கிருத்தியங்கள் நான்குவேதங்களையும் உணர்ந்தோராய் அவ்விடங்களிலிருக்கின்ற பதினாறு இரித்தியுக்களை யாரம்பிக்க முனிவர்க்கு மேலானவராய் ஞானமிகுந்த வசிஷ்ட முனிவர் வெண்ணெயாற்றிமிரப்பட்டு, இரண்டு கொம்புகளும் செவ்விதான மான்தோலைப் புத்துடையாயுடுத்து, அருக்கியம் ஆசமனம் செபங்களைப் பலதாஞ்செய்து—என்றவாறு. (36)

இம்முறையாய் நான்மறைதேர் முனிவசிட்டர் பத்தியுட னிலங்
கா நிற்கச், செம்மையத்து வரியுவென்பார் சமித்துக்க ணெய்ய
விசு சேர வோமம், மெய்ம்மைநெறி வழுவாது செய்தனரோ தா
வெனபார் விளங்கு கின்ற, பொய்ம்மைதீர்மந்திரமாஞ் சூத்திரங்
கள் செவித்துவிதி புகல்வ தானார்.

(இ - ள்.) இவ்வண்ணமாக நான்குவேதங்களையு முணர்ந்த வசிஷ்ட முனிவர் இன்புடனே பிரகாசிக்கச் செவ்விதான அத்துவரியுவென்ப

வர் சமித்துகளும் நெய்யும் அவிசுகளுஞ் சேரும்படிக்கு ஓமத்தொழிலினு ண்மைமார்க்கம் தப்பாமற்செய்தார். ஓதா என்பவர்பிரகாசிக்கின்ற பொய் யற்ற மந்திரங்களாகிய சூத்திரங்களைச்செபித்து விதிப்படிசொல்லி நடத்து வாராயினர்—என்றவாறு. (37)

வேறு.

கான முற்காதாச்செய்ய சாமமே பிரமா கற்ற
ஞான வம் மந்தி ரத்தை நவிலவில் வத்தி யூபத்
தானமில் பசுவைச் சேர்த்தி யுறும்விதி யால்வ தைத்தே
யானமந் திரத்தி னாலே வபையெடுத் தநிநெய் வார்த்து.

(இ-ள்) உத்காதாசாமகானஞ் செய்ய பிரமரென்பவர் தாம்பயின்ற அந்த ஞான மந்திரத்தைச்சொல்ல வில்வத்தாலமைத்த யூபஸ்தம்பத்திற் குற்றமற்ற பிராணியைச்சேர்த்துப் பொருந்திய விதிப்படி வதைத்தல் செய்து, ஆகியமந்திரத்தினாலே யர்தவபையை எடுத்து அதில் நெய்யைச் சொரிந்து—என்றவாறு. (38)

கணமுனி வோர்கள் காணக் கனலிடை யோமஞ் செய்தா
ருணர்வுற மணஞ்செய் தண்கொண் டுலவையங் குலவா நிற்ப
வணை தரு சமித்தி னாலே யமுற்கட வுட்க ளிக்க
மணமுடன் வளர்ந்த செந்தீ வலம்புரி தோற்ற மாக.

(இ-ள்.) முனிவர் கூட்டங்கள் பார்க்க அக்கினியிலோமஞ் செய் தார்கள். தெரியும்படிக்கு வாசனையும் குளிர்ச்சியும் பொருந்தித்தென்றல் வீசச் சேர்ந்திருக்கின்ற நமத்திலே மகிழ்ச்சியுடையவாசனையோடு சிவந்த அக்கினிவலம்புரிதோற்றமாய்ச் சுவலிக்க—என்றவாறு. (39)

சாலையில் வதிந்து மல்கு மதிநிக டழைக்க நல்ல
மூலமுங் கனியுந் தேனு முகமலர் மலரத் தந்து
மேலுறிந் திருத்துக் கட்கு வியன்கடி சூத்தி ரங்கண்
மாலுறு கமண்ட லங்கண் மாவுரி மருங்கிற் கேற்ப.

(இ-ள்.) யாகசாலையினிறைந்திருந்த முனிவர் மகிழ நன்மையான கிழங்குகளும் பழங்களும் தேனு முகாரவிந்தமலரக் கொடுத்து பின்பு இருத் துவிக்குகளுக்கு விசாலமான கடிசூத்திரமும் சூத்திரங்களும் பெருமையுற்ற கமண்டலங்களும் இடைக்கேற்ற மாவுரியும்—என்றவாறு. (40)



கைக்குச முடியுந் தெர்ப்பா தனங்களுங் கலைத்தோ லீந்து
தக்கதீ வேள்வி செய்து தழலது சயன மாகித்
தொக்கவிட் டிகையாற் கட்டித் தொடங்கியே கரும மெல்
மிககரித் தூக்க மாமேல விளம்புமந் திரத்தி னோசை. [லாம்

(இ-ள்) கைக்கு அங்குசமும் தெர்ப்பாசனமும் பெருமை பொருந் திய மான்றோலுமளித்து நன்மையுடைய அக்கினியாகஞ்செய்து தணலி ருந்து ஆகாயமட்டும் அளாவுகின்ற யாகத்தில் பஞ்சகிருத்தியங்கள் யாவையும் ஆரம்பித்து மேலான இரித்துவிக்குகளாற் சொல்லப்பட்ட மந்தி ரத்தின் சத்தமானது—என்றவாறு. (41)

திக்குக ளனைத்தும் பாய வெதிரொலி சிறந்து பொங்க
லக்கனன் மகத்தை நோக்கி யதிசயித் தன்பு கூரத்
தக்கரித் துக்க ளோடு வசிட்டனுந் தழலின் வேள்வி
முக்கணன் றனைக்கு றித்துச் செய்யவே முயற்சி யானார்.

(இ-ள்.) திசையெல்லா முட்ட அலைகளையுடைய சமுத்திரங்கள் சத் தத்துடனேபொங்கஅந்த அக்கினியாகத்தைப்பார்த்துஆச்சரியமுற்று,அன்பு மிகுதியாக மேன்மையுள்ள ருத்துவிக்குகளுடனே வசிட்டமுனிவரும் அந்த அக்கினியாகத்தை மகாதேவரைக் குறித்துச் செய்யும்படி முயலலானார்—என்றவாறு. (42)

உருத்திர சூத்தி ரத்தைச் செபித்துநல் லழலி னோமந்
திருத்தியத் துவரி யாரும் செய்தன ரோதா வென்பார்,
புரிச்சத ருத்தி ரத்தைச் செபித்திடப் புரையொன் றில்லா
விருக்கியை யுத்கா தாவு மதனையே செபிக்க லிப்பால்

(இ-ள்.) உருத்திர சூத்திரத்தைச் செபித்து நன்மையான அக் கினிஹோமத்தைத் திருத்தமுற அத்துவரிகள் யாவருஞ் செய்தார்கள். ஓதாவானவர் செய்யப்பட்ட சதருத்திரத்தைச் செபஞ்செய்ய குற்றமற்ற வேதத்தை யுணர்ந்த உத்காதா வென்பவரும் அச்சதருத்திரத்தையே செபிக்க இப்புறத்தில்—என்றவாறு. (43)

துதித்திடு மொருபா லந்தச் சுப்பிர மணிய ராக
மதித்திரித் தியுவா னோருஞ் சுப்பிர மணியோ மென்ற

விதித்திடு மந்தி ரத்தைச் செபித்தவ் வரசு வில்வ
முதற்கருங் காலிமுன்னாஞ் சமித்துகண் முறைமை யாக.

(இ - ள்.) துதிக்கத்தக்க ஓரிடத்திலத்தமுருகமூர்த்தி யாகப்பாவித்து, மறுபடியுந் தேவர்கள் எல்லாம் சுப்பிரமணிய [illegible] விதித்த மந்திரத்தைச் செபித்தவராய் அரசு வில்வ முதன்மையான கருங்காலிமுதலிய சமித்துகளால் வேதவிதிப் பிரகாரம்—என்றவாறு. (44)

புரிந்திடு மழற்க ணெய்யும் பொரியிவை வபையி னோடு
மிருந்தவத் துவரி யோமஞ் செய்தன ரிமையாத் தேவர்
பரிந்தெழ முனிவர் வெய்ய பன்னிரண் டருக்க ரெண்மர்
திருந்திய விருவ ரேகா தசவுருத் திரர்க ளோடும்.

(இ - ள்.) செய்கின்ற அக்கினியிடத்தில் நெற்பொரிகளாகிய வித்துக்களை வபையினுடனே அவ்விடத்திலிருந்த அத்துவரி என்பவர் ஓமம்பண்ணினார். இமைத்தலற்ற தேவர்களும் அன்புற்றுப்பார்க்க வெழுந்தருளிய இருடிகளும் வெவ்விய துவாதசாதித்தரும் அஷ்டவசுக்களும் மருத்துவர்களும் ஏகாதச உருத்திரர்களுடனும்—என்றவாறு. (45)

மாலய னுடனே திக்குப் பாலரு மற்றுள் ளோருஞ்
சாலுமவ் வேள்வி நோக்கி யதிசயித் துவந்து தக்க
சீலமா முனிவர் தம்மைக் களிப்புடன் புகழ்ந்தார் தேரும்
பாலரித் திருக்க ளோடு பற்பல பேர்க ளொன்றாய்.

(இ - ள்.) விஷ்ணு பிரமனோடு அஷ்டதிக்குப் பாலகரும் மற்றத் தேவர்களும் நன்மையுற்ற அந்த யாகத்தைப்பார்த்து அற்புதமுற்றுச் சந்தோஷித்துத் தகுந்த நல்லொழுக்கம் பூண்டமுனிவர்களைக்களிப்போடும் புகழ்ந்தார்கள். தெளிந்த தன்மையுடைய ரித்திவுக்களுடனே பலபல முனிவர்களுமொன்றாய்க்கூடி—என்றவாறு. (46)

ஒருமன னுடன்மெய்ஞ் ஞான வசிட்டரு முள்ம கிழ்ந்தே
கருதரு மகத்த முற்க ணெந்தையாங் கடவு ளான
வருடரு பரம னுக்கே யவிர்ப்பாகங் கொடுத்தா ரங்கே
திரிபுர மெரித்த முக்கட் டேவாங் கயிலை நாதர்

(இ - ள்.) ஒருமையுற்ற உள்ளத்தோடும் உண்மைஞானத்தை யுணர்ந்த வசிஷ்ட முனிவரும் மனமகிழ்ந்து நினைத்தற்கரிய அவ்வியாகக்



கினிக்கண் எமதுபிதாவாகிய கடவுளான கிருபைபுரிகின்ற மகாதேவருக்கு அவிர்ப்பாகங் கொடுத்தார். அவ்விடத்தில் திரிபுரத்தை யெரித்த மூன்று கண்களுடைய கடவுளாகிய கைலாசபதி—என்றவாறு. (47)

அமையுமை தடந்தோள் வேற்க ணஞ்சுகக் கரத்தா ளான
வுமையவ ளுடன்வந் தெய்த வொப்பிலா முனிவ ராதி
யிமையவர் கண்டு கண்ணி னின்பவா னந்தம் பொங்கச்
சிமையமார் புடன்மெய் ரோமஞ் சிலிர்த்திடச் சிந்தை கூர்ந்து.

(இ - ள்) மூங்கிலை யொத்த தோள்களும் வேலையொத்த கண்களும் அழகிய கிளிப்பிள்ளையை வைத்தகையுமுடைய மலைமகளோடு மெழுந்தருளச் சமானமற்ற முனிவராதியான தேவர்களுந் தெரிசித்துக் கண்களிற்றடையற்ற வானந்தபாஷ்பம் பெருக மலைபோன்ற மார்புடனேயுடம்பு மயிர்க்கூச் செய்த மனங்களித்து—என்றவாறு. (48)

சதுர்மறை முடியிற் பொன்னஞ் சபையிடந் தன்னி லடை
ரிதையவா லயத்தி லுள்ளு மென்றுநீங் காது வைகும்
விதியுநா ரணனும் போற்றி யுறுதற்கு மரிதா மந்தப்
பதவன சத்தில் வீழ்ந்து பணிந்துளம் பரிவு கூர.

(இ - ள்.) நான்கு வேதத்தின் முடிவிலுங் கனகசபையின்கண்ணும் அடியவர்துள்ளக் கோவிலினிடத்தும், எந்நாளும் பிரியா திருக்கின்றதும் பிரமனும் திருமாலுந் தொழுது பொருந்துவதற் கரிதானதுமாகிய அந்தப் பாதாரவிந்தத்தில் வீழ்ந்து தொழுது மனத்திலன்புமிக—என்றவாறு. (49)

பரவுமா னந்த வெள்ளம் படிந்துவாய் குழறிக் கண்ணீர்
விரவுமெய் பொடிப்ப நின்று விரைமலர்ச் செங்கை தன்னைச்
சிரமிசை கூப்பி வேதந் தேடியுங் காணா தானை
வாரிரு வசி[illegible]ரோடு மாதவர் துதித்துச் சொல்வார்

(இ - ள்.) விரிவுற்ற இன்பப் பிரவாகத்தில் மூழ்கி மொழி தழுதழுத்து ஆனந்தக் கண்ணீர் உடம்பை நனைக்க நின்று வாசனை பொருந்திய மலரை யொத்துச் சிவந்தகைகளைச் சிரசின் மேலே குவித்து வேதங்களுந் தேடிக் காணக்கூடாத கடவுளை வாத்தின் மிகுந்த வசிட்டர் முதலிய முனிவர்கள் தோத்திரம்பண்ணிச் சொல்லுவார்கள்—என்றவாறு. (50)

பனிவரை யரச னீன்ற பாவைபங் காளா சீதப்
புனிதமாங் குழவித் திங்கள் புனைந்திடு முடியா யார்க்கு
நினைவதற் கரிய சச்சி தானந்த ரூபா நித்த
வனகவா னந்த வாதி யந்தமு நடுவு மில்லாய்

(இ - ள்.) இமைய பருவதராசன் பெற்ற பெண்பாகனே, குளிர்ச்சியும் பரிசுத்தமும் பெருமையும் பொருந்திய இளஞ்சந்திரனைத் தரித்த சிரசை யுடையவனே, யாவர்க்கு நினைக்கவுமரிய சச்சிதானந்தஸ்வரூபா, அழிவில்லாதவனே, பாவமற்றவனே, எல்லாமானவனே, முதலு முடிவும் நடுவு மில்லாதவனே—என்றவாறு. (51)

அருவமா யுருவ மாகி யழிவிலாப் பொருளு மாகி
யொருவனாய் நின்று மஷ்ட மூர்த்தியா யுகந்தாய் முந்நீர்
தருபெரு முலக மியாவுந் தந்தழித் தாக்க வல்லாய்
பொருவில்சிற் பரவ கண்ட பூரண நிர்க்கு ணத்தாய்.

(இ - ள்.) அருவமானவனும் உருவமுள்ளவனுமாகி அழிவில்லாத பொருளுமாகி ஒருவனாகி யிருப்பவனே, அஷ்ட மூர்த்தியாயும் பிரியங் கொண்டிருப்பவனே, கடல் சூழ்ந்த பெரிதான உலகமுழுதும் சிருஷ்டி ஸ்திதி சங்கா[illegible]ஞ் செய்கின்ற வல்லவனே, ஒப்பற்ற ஞான பரனே, சகலத்திலும் நிறைந்தவனே, திரிகுணமில்லாதவனே—என்றவாறு. (52)

ஆலநீ ழலினால் வர்க்கு மறைமுறைந் திட்டாய் ஞான
சீலனாய்ப் பேதா பேதச் சிந்தனை யில்லா யெல்லா
ஞாலநீ டுயிர்த ழைக்க நாதனாய் நிறைந்தா யந்தக்
காலனைக் கடிந்து சீர்மார்க் கண்டனைப் புரந்தா யென்றும்

(இ - ள்.) வடவிருக்ஷ நிழலிற் சனகாதி நால்வருக்கும் தருமாதி சதுர்வித புருஷார்த்தங்களைப் போதித்தவனே, ஞான ஒழுக்கமுள்ளோனாகிப் பேதா பேத நினைப்பில்லாதவனே, சகல வுலகத்திலும் விரிந்த ஜீவராசிகளை இரட்சிக்கின்ற கர்த்தனாக நிறைந்தவனே, அவ்வியமனைக் கோபித்துச் சிறப்புற்ற மார்க்கண்டனை இரக்ஷித்தவனே யென்று துதித்து—என்றவாறு.

ஏகமா யனேக மாகி யிருந்தவா போற்றி ஞான
யோகவா ரிதிப டிந்த வும்பர்தம் பிரானே போற்றி
மோகமா மதனைச் செற்ற முக்கண்ணா போற்றி வேத
வேதனே போற்றி யென்றும் பிறப்பிறப் பிலாதாய் போற்றி.



(இ - ள்.) ஒன்றாகியும் அனந்தமாகியும் இருக்கின்றவனே வந்தனம். ஞானயோக சமுத்திரத்தின் மூழ்கிய தேவர் தேவனே வந்தனம். மகாமோகனாகிய மன்மதனை யெரித்த மூன்று கண்களை யுடையவனே வந்தனம். வேதத்தின் பொருளானவனே வந்தனம். எந்நாளும் சனித்தல் மரித்தலில்லாதவனே வந்தனம்—என்றவாறு. (54)

மேருவை வளைத்து வில்லாய் மேவலர் புரங்கள் செற்றாய்
காருறு மால முண்ட கண்டனே போற்றி சோம
சூரியாக் கினிக ளாகத் தோன்றிய கண்ணா போற்றி
சீருறுந் தக்கன் வேள்வி சிதைத்த சங்கரனே போற்றி.

(இ - ள்.) மகாமேருவை வில்லாய்வளைத்துச் சத்துருக்களது திரிபுரங்களை யெரித்தவனே, கறுத்த விஷத்தைப் புசித்த கண்டத்தை யுடையவனே வந்தனிம். சந்திரனும் சூரியனும் அக்கினியுமாகத் தோன்றிய கண்களையுடையவனே வந்தனம். சிறப்புறுத தக்கனது யாகத்தை யழித்த சங்கரனே வந்தனம்—என்றவாறு. (55)

முகுந்த கோவிந்த னான்குமுகத்தவன் வானோ ரியார்க்கு, மகந்
தனிற் பற்றவெட்டா வற்புதத் தனிக்கூத் தாட, லுகந்திடு மிறைவா
போற்றி யொளிர்வெண்ணீ றணிந்தாய் போற்றி, புகழ்ந்தமா
விடையாய் போற்றி புண்ணியா போற்றி போற்றி

இ - ள்.) திருமால் பிரமன் தேவர்கள் முதலிய யாவருக்கு முள்ளத்தாற் புகழ்வதற்கு மெட்டாத அதிசயமான ஒப்பற்ற நடனமாடுதலிற் பிரியங் கொண்ட தேவனே வந்தனம். பிரகாசிக்கின்ற வெண்மையானவிபூதியணிந்தவனே வந்தனம். யாவரும் புகழ்கின்ற பெருமையுள்ள இடபவாகனா வந்தனம். புண்ணிய மூர்த்தியே வந்தனம்—என்றவாறு. (56)

பாடுறத் தொடரும் பாசப் பழவினைச் சிமிழ்ப்பு நீக்கி
வீடருள் பரனே போற்றி மெய்ப்பத யிணையை யேத்திப்
பாடிய வன்பர் தங்கள் பவப்பிணி யகற்ற வந்த
சேடமை மருந்தே போற்றி தேவனே போற்றி போற்றி.

(இ-ள்.) வருத்தம் செய்யத் தொடருகின்ற பந்தமாகிய பழவினை யென்னும் சிறையை விடுவித்து வீட்டைத் தருகின்ற கடவுளேவந்தனம். உனது மெய்யாகிய உபயபாதங்களையும் புகழ்ந்துபாடுகின்ற தொண்டர்களது பிறவி நோயைத் தீர்க்க வந்த மாட்சிமைப் பட்ட மருந்தே வந்தனம். தேவனே வந்தனம் என்றவாறு. (57)

அங்கணா போற்றி யோத்து மாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மெய்யர் கருத்தனே போற்றி வானோர்
தங்கணா யகனே போற்றி சங்கவெண் குழையா போற்றி
யெங்கணல் வாழ்வே போற்றி யீசனே போற்றி போற்றி

(இ - ள்.) அங்கணாவந்தனம். ஆதிக்கத்தக்கவேதமுடிவே வந்தனம். சர்ப்பத்தைக் கங்கணமாகத்தரித்தவனே வந்தனம். மெய்யருள்ளத்திலிருப்பவனேவந்தனம். தேவர்கள்தேவனேவந்தனம். வெண்மையான சங்கக்குழை தரித்தவனேவந்தனம். எமது நன்மையான வாழ்வே வந்தனம். நாதனே வந்தனம்—என்றவாறு (58)

என்றுநற் றுதிக ளாவா லேத்திட வெழில்சேர் வெள்ளிக்
குன்றனா ருவகை யுள்ளங் கூர்ந்துமா வசிஷ்ட னோடு
நின்றமா தவரை யெல்லா நிறையருட் கண்ணா னோக்கி
நன்றுசெய் நீங்க ளெல்லாம் நயந்திடு மன்பி னாலே

(இ - ள்.) இப்படியென்று நல்லதோத்திரங்களை நாவாற்புகழ அழகு பொருந்திய வெள்ளியங்கிரிவாசர் மனத்திற்களிப்புமிகுந்து பெருமை தங்கிய வசிட்டமுனிவருடனே நின்ற முனிவரையெல்லா நிறைந்த கிருபைக் கண்ணாற்பார்த்து நன்மைசெய்கின்ற நீங்களென்னிடத்தில் விருப்பங் கொண்ட அன்பினாலே—என்றவாறு (59)

புரிந்திடு மகமெய்ஞ் ஞான போதமா தவமு முள்ளந், தெரிந்
தியா மகிழ்ச்சி யுற்றுந் தெளிவுறு மனத்தி லாய்ந்து, பொருந்து
மெய்த் தவரே வேண்டும் வரமெலாம் புகலில் யாமும், திருந்தற
வருள்வே மென்று செங்கண்மால் விடையான் கூற.

(இ - ள்) செய்தயாகத்தையும் ஞானத் தன்மைபூண்ட தவசையும் மனதிற்றெரிந்து யாம் சந்தோஷமாயினோம். உங்களுடைய தெளிவுற்ற வுள்ளத்திலாலோசித்துப் பொருந்திய மெய்யான தவஞ்செய்கின்ற முனிவர்களே வேண்டிய வரங்களை யெல்லாஞ் சொன்னால் யாம் திருத்தமுறக் கிருபை செய்வோமென்று சிவந்த கண்களும் பெருமையும் பொருந்திய இடப வாகனத்தை யுடையவர்சொல்ல—என்றவாறு. (60)

ஒப்பறுந் தவத்தோர் யாரு மொருமன தாக வுன்னிச்
செப்புவா ரையா யாங்க டெரிசனஞ் செய்ய வோர்ந்து



தப்பறச் செய்த வேள்வி தமதுளத் திசைந்த வாறு
மெய்ப்படி யாகி விந்த விரிதிரை வேலை சூழ்ந்த.

(இ - ள்.) ஒப்பற்றமுனிவர் சகலரும் ஒருமித்தவுள்ள முடையவராகி, ஆலோசித்துச் சொல்லுவார்; ஸ்வாமி நாங்கள் தெரிசிக்கும்படிக்குத் தெரிந்து குற்றமின்றிச்செய்த யாகம் தேவரது திருவுள்ளத்திற்குச் சம்மதமான தன்மை மெய்யாயினிந்த விரிவாகிய அலைகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த—என்றவாறு. (61)

அவிர்மணிச் சுடிகை யார்பை யார்முடிச் சுமையுந் தான
புவனியெண் பத்து நாலா யிரலக்க வுயிர்கள் புந்தி
யுவகைபெற் றிருந்து வாழ்க வோடுமா நதித டாகந்
தவலறு மிலஞ்சி கானந் தருக்களும் பயிரு மோங்க.

இ - ள்.) பிரகாசிக்கின்ற இரத்தினச் சிரங்கள் பொருந்திய படங்களையுடைய பாம்பினால் சுமக்கப்பட்ட பூவுலகத்தில் எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளும் மனமகிழ்ச்சி யடைந்து வாழும்படிக்கும், ஓடுகின்ற நீரையுடைய தீர்த்தங்களும் பொய்கைகளும் கெடுதலற்ற குளங்களும் கால்வாய்களும் நல்ல விருக்ஷங்களும் பயிர்களும் விருத்தியாகவும்—என்றவாறு.

தரங்கநீர்க் கடலின் மேய்ந்து தண்முகின் மாரி பெய்ய
வரந்தர வேண்டுங் கங்கை மாதினை முடியில் வாமப்
புரந்தனி லிமைய மாதைப் பொருந்திடு நாதா வென்றே
யிரங்குமா தவரை நோக்கி இன்பமுற் றிறைவர் சொல்வார்.

(இ - ள்.) அலைகின்ற நீரையுடைய சமுத்திரத்தின் நீரையருந்தி வந்து குளிர்ந்த மேகங்கள் மழைபொழியவும் வரமருளவேண்டும். கங்கா தேவியைச் சிரத்திலும் மலைமகளை யிடபாகத்திலுஞ் சேர்த்த கடவுளே என்றிரக்கின்ற முனிவரைப்பார்த்து ஆனந்தமுற்று மகாதேவர் சொல்லுவார்—என்றவாறு. (63)

அந்தவா றுலக மெல்லா மதிகநல் வளங்க ளோங்க
வந்துறை சராச ரங்கண் மனமகிழ்ந் திருந்து வாழ்க
விந்தநன் னாடு முன்ன மெழிலிமா மழைகள் பெய்யச்
சுந்தர மிகுவே ளாண்மை விளைவுற வென்று சொன்னார்

(இ - ள்.) அவ்வண்ணமே யுலகமுழுவதுமிகுந்த நன்மையான வளமையைப்பெறுக. வாசஞ்செய்கின்ற சரசெந்துக்களும் அசரங்களுமனமகிழ்ந்து

தழைத்திருந்து வாழக்கடவன. இந்நான்மைபொருந்தியநாட்டில் முன்னதாக மேகங்கள் மிகவும்மழைகளைப் பொழியக்கடவன. அழகுமிகுந்த வேளாண்மை களன்றாய் விளைவுபெறக் கடவனஎன்றுரைத்தார்—என்றவாறு. (64)

சொன்னமான் மழுவை யேந்துஞ் சூலபா ணியனை நோக்கி
யின்னுமோர் வரந்தா னெங்கட் கிசைந்திட வேண்டுமென்னப்
பன்னுமா தவத்தோர் யாரும் பகர்ந்திடப் பரமன் றானு
மன்னவா றளிப்ப னென்ன வறைந்தன னறைய லுற்றார்.

(இ - ள்.) இப்படிச்சொல்லிய மானுமழுவுஞ் சூலமுங் கையிலேந்திய கடவுளைப்பார்த்து இன்னமும் எங்களுக்கு ஒருவரந்தரவேண்டுமென்று நெருங்கிய முனிவர் சகலரும் சொல்ல மகாதேவரும் அவ்வண்ணம் தருகின்றோமென்றுரைக்க முனிவர்சொல்லுவார்—என்றவாறு.

கருதுமிச் சுவேத தீர்த்தக் கரையினில் வாச மாக
வருளுட னுலக மும்ப வறங்களெண் ணான்கி யற்றுந்
திருவுட னுறைந்தே யாங்கள் சிந்தித்த யாவு மீய்ந்து
பரிவுட னமைத்து திப்போர் பவவினை யனைத்து மாற்றி

(இ - ள்.) மதிக்கத்தக்க விந்த வெள்ளாற்றங்கரையில் நீங்காமல் கிருபையோடு முலகம்பிழைக்க முப்பத்திரண்டு தருமங்களைடத்துகின்ற உமாதேவியோடு வாசஞ்செய்து நாங்கள் நினைத்த வரங்களெல்லா மீய்ந்து அன்புடனே உம்மைத்தோத்திரம் பண்ணுவோரது தீவினைகளெல்லாந்தீர்த்து—என்றவாறு. (66)

முனிவரர் தமக்கெல் லாமெய் முதல்வராம் வசிட்ட ரன்பா
யினிதுட னுமைக்கு றித்தே யிசைந்தநல் வேள்வி செய்ய
மனதுட னிருக்க வென்றே மலரடி பணிந்தி யின்பங்
கனிதரத் துதித்த லோடும் கண்ணுத லார்வ மெய்தி.

(இ - ள்.) முனிசிரேஷ்டருக்கெல்லாம் மெய்ம்மையுணர்ந்த தலைவராகிய வசிட்டமுனிவர் அன்புற்ற நன்மையோடும் உம்மைக்குறித்து இசைந்த நன்மையான யாகஞ்செய்யத் திருவுளங்கொண்டிருக்க வேண்டுமென்று மலரையொத்த பாதங்களை வணங்கி இன்பங்கனியத் தோத்திரஞ்செய்யவும் பரமசிவன் விருப்பங்கொண்டு—என்றவாறு. (67)



மகிமைசேர் வெள்ளூர் தன்னில் வருதவ ளத்தீ ரப்பாற்
றகைமையா யறவோர் போற்றத் தாந்தோன்று நாத ராகிப்
பகாரு முலகில் யாரும் பரவவேண் டியவ ரங்கள்
அகமகிழ் வுடன்கொ டுத்தே யதுமுத லங்கி ருந்தார்.

(இ - ள்.) மகத்துவம்பொருந்திய வெள்ளூரில் வருகின்ற வெள்ளாற்றங்கரையில் நற்றன்மையோடு முனிவர்வணங்கத் தாந்தோன்றியீசராகிச் சொல்லற்கரிய உலகத்தில்யாவரும் வணங்க வேண்டியவரங்களை மனமகிழ்வுடனே அருள்செய்து அந்த நாள் முதல் அவ்விடத்தி லிருந்தார்-என்றவாறு.

மொழியுமவ் வாறந் நாடு முன்மழை பெய்ய யாரும்
தழைவுறப் பின்பு முன்னீர்த் தரணியி லெங்கு மாரி
பொழிதர விளைவு முற்றிப் பொலிந்திடச் சீவ ராசி
செழுமையாய்த் தருக்கள் யாவுந் தேங்கனி பழுத்து மல்க.

(இ - ள்.) சொல்லிய அந்தப்பிரகாரம் அந்நாட்டில் முன்னதாய் மழைபெய்யச், சகலருஞ் சந்தோஷிக்கும்படி பின்புகடல்சூழ்ந்த பூமியிலெவ்விடத்திலு மழைபொழிய வேளாண்மைவிளைந்து சிறக்கச் சீவராசிகள்செழித்து மரங்களெல்லாந் தேனூறிக் கனிகள்கனிந்து நிறைந்திருக்க-என்றவாறு.

தீயநல் குரவை நீங்கிச் சீவசெந் துக்க ளெல்லாம்
மேயநற் சுகத்தை யெய்தி மேவிட முனிவர் சூழத்
தூயமெய் வசிட்டர் வானோர் துதித்திட மகமுடித்தே
பாயலைச் சுவேத தீர்த்தம் படிந்துநன் னியமஞ் செய்தே.

(இ - ள்.) கொடிதான தரித்திரம் நீங்கிச் சீவராசிகளெல்லாம் பொருந்திய நல்ல இன்பமடைந்திருக்க, முனிவர்கள் சூழப் பரிசுத்தமான உண்மையுணர்ந்த வசிட்ட முனிவர் தேவர் புகழ யாகத்தைமுடித்தார். பின்பு தாவுகின்ற அலைகளையுடைய வெள்ளாற்றில் மூழ்கி நன்மையான நியமங்களைச் செய்து—என்றவாறு. (70)

ஒளிபெறு வடமீ னென்னு மொருமினுண் மணாளன் றன்னைத்
தெளிவுறு முனிவர் போற்றிச் செகமெலா மாரி பெய்து
வளமலிந் ததுநீர் செய்த மகந்தினற் பெருமை யாலே
தளர்வுறு தியற்று மெங்க டவங்களும் பலிக்க லாமோ.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற அருந்ததியென்னு மொப்பற்ற பெண்ணின் கணவனாகிய வசிட்டரைத் தெளிவுற்ற முனிவர்கள் வணங்கி கீர்த்திய

யாகத்தின் பெருமையினு லுலகமெங்கு மழை பெய்து வளப்பமிகுந்தது. தளர்வின்றிச்செய்த எங்களுடைய தவங்களும் பலித்தன—என்றவாறு (71)

வறுமையா லியாங்க ளென்றும் வருந்திடா வண்ண நன்மை
பெறுமக மியற்று கின்ற பெரியமா தவரின் ஞலே
குறைவிலா வளங்கள் பெற்ற கொள்கையான் மணிகொ ழிக்கு
மறையுமிந் நதியும் நாமம் வசிட்டமா நதியா மென்றே.

(இ - ள்.) இல்லாமையினுலே நாங்களெப்போதும் வருத்தமுறாத படிக்குநன்மையடைகின்றயாகம் புரியா நின்ற பெரிதான தவமுடையவரே, உம்மாலே குறைவற்ற வளப்பங்களை யடைந்த தன்மையால் முத்துக்களைக் கொழிக்கின்ற சொல்லப்பட்டவிந்த வெள்ளாற்றிற்கு வசிட்ட நதி என்று பெயராகுமென்றுரைத்து—என்றவாறு. (72)

இற்றைநாண் முதலாய்ப் பார்மே லிவ்வண்ணம் விளங்க வென்று
சொற்றன ரின்னீர் தோய்ந்தோர் சுத்தரே யாவ ரென்று
மற்றவப் பிரத நானம் செய்துமா தவரெல் லோரும்
தெற்றரு முளம கிழ்ந்தே வெதரிகாச் சிரமஞ் சேர்ந்து,

(இ - ள்.) இன்று முதலாகப் பூமியிலிந்தப்படி பிரகாசிக்கக் கடவ தென்றுசொல்லி, இவ்வாற்றில் மூழ்கினோர் பரிசுத்தராவரென்று மறு நாளுதயத்திற் குளித்து, முனிவர்கள் சகலரும் தெரிய மனத்தில் மகிழ்ச்சி யுற்று வெதிரிகாச்சிரமமடைந்து—என்றவாறு. (73)

மறைநெறித் திறம்வ ழாது மகங்கண்மா தவங்கண் முன்போ
னிறையவே மகிழ்ச்சி பொங்க நிலைத்தனர் வெள்ளூர் வெள்ளாற்
றுறுதுறைத் தீரந் தன்னி லொப்பிலா வசிட்ட னென்போன்
குறைவற வாசஞ் செய்து மகிழ்ந்தனன் கோடி காலம்.

(இ - ள்.) வேதமார்க்கத்தன்மை வழுவாமல் யாகங்களும் தவங்களும் நிறைவுறச் சந்தோஷமுற்று வசித்திருந்தார். வெள்ளூரில் வெள்ளாற்றிற் பொருந்திய துறையின் கரையிற் சமானமற்ற வசிட்ட முனியானவர் குறைவற்ற சந்தோஷமுற்றுக் கோடிகாலம் வசித்திருந்தார்— (74)

இம்முறை நிகழ்ந்த காதை யெனவுள மகிழ்ச்சி கூர
நைம்மிசா ரணிய மேவும் நல்லருந் தவர்க்குச் சூதன்
மெய்ம்மையா யுரைக்கப் பின்னும் விருப்பமாய் முனிவர் கேட்ப
வம்மகப் பரியின் காதை மற்றுமொன் றுரைசெய் வானால்.



(இ - ள்.) இவ்வண்ணமாக நடந்த கதையென்று மனமகிழ்ச்சியோடு நைமிசாரணியத்திலிருந்த நன்மையான அரிய தவமுடைய முனிவர்களுக்குச் சூதமுனிவர் உண்மையாகச்சொல்லத் திரும்பவும் பிரியமுற்று அம்முனிவர்கள் வினவ வசிட்டர் மகம்புரிந்தமையால் மகப்புரியென்று பெயர் பெற்ற அவ்வெள்ளூரின் சரித்திரம் பின்னும் ஒன்றைச் சொல்லுகிறார்— (75)

வேள்விச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 6-க்குத் திருவிருத்தம்—(263)

## துந்துமிச் சருக்கம்.

உம்ப ரன்பு றுஞ்சுயம்பு நாதனுக் குவகையாய்ச்
செம்பொனால யம்பொ லிந்த மண்டபஞ் சிறக்கவே
கம்பமாம தில்களும் மியற்றியே கனிந்துள
நம்புகாத லோடு பின்னு நன்மையின் வளர்த்தனர்.

(இ - ள்.) தேவர்களன்பு செய்கின்ற தான்தோன்றீசனுக்குப் பிரியமுற்றுச் சிவந்த பொன்னாலயமும் உயர்ச்சியான மண்டபமும், சிறப்பாகிய தூண்களும், பெரிதாகிய மதில்களும் செய்வித்து மனங்கனிந்து விரும்பிய ஆசையுடனே பின்னும் நன்மையான வளமுறும்படிக்கு—என்றவாறு. (1)

வீசுசாம ரங்களால வட்டம்வெண் குடைத் திரள்
பூசனைக் கினங்கள் விம்மு பொம்மல்வெம் முலைத் தட
வாசமன் மடந்தைமாதர் மாங்குயிற்கு நேரவே
பேசுபாட லாடன்மங்க ளத்திசை பெருக்கவே.

(இ - ள்.) வீசுகின்ற சாமரங்களும், ஆலவட்டங்களும், குடைகளும் பூசைசெய்வதற்கான சமான்களும் விம்மிப் பெருத்து விருப்பத்தைச் செய்கின்ற முலைகளில் வாசனைத் திரவியங்களணிகின்ற பெண்கள் குயிலை யொத்துச் சொல்லுகின்ற பாடலும் ஆடலும் மங்களவாத்தியங்களு மிகுதியாக—என்றவாறு. (2)

பாளைமட் டலர்ந்திலங்கு பச்சைதாளி சோரமேல்
சீளவிட்ட பைங்குடும்பு நேர்திரைத்த வாழைகள்
வாளெழிற்க ணாடிகன்னல் வைத்துவண் கொடுங்கைகள்
தோளிணைத்த பண்டிசுற்று கொண்டலெட்டு சிகரமே.

(இ - ள்.) தேன்விரிந்து பிரகாசிக்கின்ற பசியதென்னம்பாளைகளும், செடிதாய்த் தொங்கவிட்டிருக்கின்ற பனங்குலைகளும் வரிசையாய் வைத்த வாழைமரங்களும், ஒளிசெய்கின்ற அழகியகண்ணாடிகளும், கரும்புகளும் வைத்து, வளைவையான கொடுங்கைகளும், வட்டமாய்ச் செய்த வண்டிகளும் மேகமண்டலத்தைத் தொடுகின்ற சிகரமும் செய்து—என்றவாறு. (3)

வண்டுகாணமொய்த்தி சைக்கு மாலைநின் றிலங்கவே
யெண்டிசா முகங்களீது மேருவென் றியம்பவே
கொண்ட தேர்கண் மன்றவோகை கூரமிக்க திருவிழா
வண்டர்பா புரத்தை மான வேள்வி பூணா யாக்கியே.

(இ - ள்.) வண்டுகள் மொய்த்து ராகம் பாடுகின்ற பூமாலைகளிருந்து பிரகாசிக்கவும் எட்டுத்திக்கிலு முள்ளவர்கள் இது மேருவென்று சொல்லும் படியான தேரும் இரதோற்சவமும் மிகுந்த பிரியந்தருகின்ற திருவிழாக்களுமாக்கி அவ்வெள்ளூரைத் தேவலோகத்தை யொப்பாகச் செய்தார்கள்—என்றவாறு. (4)

வேறு.

தானமீடு தவந்தியான மியற்றி வாதயபர் சந்நிதி
ஞானமோடு சயம்புநாத ருள்சிறந்திட நாடொறு
பானபூசை நடந்தகாலையி லாலயத்திடை தெற்கிலோர்
வானமீடு பலாவிருக்கம் வளர்க்கநெஞ்சின் மதித்தலால்

(இ - ள்.) தானங்களும் நெடியதவங்களும் செய்து, பெருமைதங்கிய உயர்ந்த சந்நிதியில் தெளிவுடனே சுயோற்பத்தீசர் அருள்பெறும்படியாய்த் தினந்தோறும் பூசைசெய்து வருங்காலத்தில், ஆகாசமளாவிய ஒருபலா விருக்ஷத்தை வளர்க்கும்படி மனதில் நினைத்தலால்—என்றவாறு. (5)

மின்னுலாவு சிவாலயத்தொரு தென்வில்வந்து விருப்பமாய்
வன்னியன்பி ரமன்றரும்பிர மன்செய்மண்டப மன்னியே
யென்னையாளு பத்துமூல ரிருக்கமேவுள தாகுமென்
றுன்னிமேற்றிசை வித்தைவைக்க முளைத்தெழுந்த துயர்ச்சியாய்

(இ - ள்.) ஒளிவீசுகின்ற சிவாலயத்தின் தென்புறத்தில்வந்து விருப்ப முற்று வன்னியனென்னும் பிரம புத்திரனாகிய விசுவகர்மா இயற்றிய மண்டபஞ் சேர்ந்து என்னை இரக்ஷிக்கின்ற அமபத்து மூலரிருப்பதற்கு



மேற்கிலுள்ளதாகுமென்று நினைத்து மேற்குத்திசையில் முளையை நாட்ட முளைத்து உயர்ச்சியாய் வளர்ந்தது—என்றவாறு. (6)

நீர்சொரிந்து வளர்க்கநின்று தழைந்துசாயை நெருங்கிமே
லேர்சொரிந்த நிழற்பொலிந்திருள் பச்சையாய் நிலமூடுற
வேர்சொரிந்து கனிந்திடுஞ்சுளை வீசுகின்ற மணத்தொடே
சீர்சொரிந்த தினந்தொறுங்கனி யொன்றுதந்திடு செய்கையாய்.

(இ - ள்.) தண்ணீர் சொரிந்துவளர்க்க வளர்ந்து தழைந்து இலைகள் நெருங்கியமேலே அழகுபொருந்திய நிழல் சொரிந்துவளர்ந்தது இருண்ட பச்சைநிறமாய் நிலத்தை மூடுருவ வேர்கள்பாய்ந்து கனிகின்ற சுளைகள் வாசனைபரிமளிக்கின்ற சிறப்புற்ற நாளொன்றுக்கு ஒரு பழந்தருகின்றதாய்

அஞ்சுவேத புரிக்கண்மேவு சயம்புநாத ருட்டா
விஞ்சியேதின மோர்பழந்தா விமலமான நிவேதன
நெஞ்சுவந்து தினஞ்செயுந்தொழி னீதியிற்றவ ருமலே
வஞ்சிபோலிடை மாதருந்ததி யோடிருந்தனன் வாசமாய்.

(இ - ள்.) அழகிய வெள்ளூரின்கண் பொருந்திய சுயோற்பத்தீசர் கிருபைசெய்ய நன்மையுற்று நாளொன்றுக்கு ஒவ்வொரு பழம் பழுக்க மனம் விரும்பித் தினஞ்செய்கின்ற பரிசுத்தமான நைவேத்தியத்தொழி லினியாயர் தவறுமற்செய்து வஞ்சிபோலு மிடையையுடைய அருந்ததியோடு வசித்திருந்தார்—என்றவாறு. (8)

முத்தமெற்று தரங்க நீரிடை மூழ்கியேசிவ பூசையா
மத்தியானவி னைத்தொழிற்செய வஞ்சுவேத நதிக்கணே
பத்திமீதுற வேகினன்பயில் சீடர்பற்பலர் சுற்றவே
மெய்த்தவத்தினன் மீளுமுன்விளை யுற்சரித்திர மேசொல்வாம்.

(இ - ள்.) முத்துக்களைக் கொழிக்கின்ற அலைகளையுடைய தண்ணீரில் முழுகிச் சிவபூசையும் மத்தியான சந்நிதித் தொழிலும் செய்யும்படிக்கு வளம்பொருந்திய வெள்ளாற்றுக்கு அன்பு மேற்கொண்டு பழகுகின்ற மாணுக்கர்கள் பலர் சூழச் சென்றார். சென்ற அவ்வசிட்டர் வருவதற்குமுன் நடந்த ஒரு துராத்மாவின் சரிதையைச் சொல்லுவாம்—என்றவாறு. (9)

வெவ்விழிக்கடை யேபொறித்தழல் சிந்தவிண்மழை கால்கொளு
மவ்விருட்கிணை யாகியஞ்சன வெற்பிசைந்திரு கால்கொடே

யிவ்வயிற்செலல் போனடப்பவ னிந்துவெண்பிறையொத்தபல்
வவ்வுதீயிடி போல்வெடிக்குரல் வைத்தவெம்முழை வாயினன்.

(இ - ள்.) வெவ்விய கடைக்கண்ணில் நெருப்புப் பொறிசிந்த மேகங்கள் மழைக்கால்கொண்ட இருட்டுக்கிளையாகிய நிறமுற்று ஓரஞ்சன மலையானது இரண்டு கால்கொண்டு இசைந்து இப்பூமியினிடத்து நடப்பது போல நடக்கின்றவன். வெண்மையான சந்திரப் பிறைபோன்ற தந்தமும் அக்கினியைக் கவர்ந்த இடிபோல முழங்குகின்ற குரலையுமுடைய வெவ்விய மலைமுழையொத்த வாயு முடையவன்—என்றவாறு (10)

பரந்தபார்மனி தப்புலான்முடை நாறுபான்மை படைத்தவன்
வெருண்டெட திர்ந்தவர் சிந்தைமாழ்க மிகச்சுழற்றி விழிப்பவன்
றிரண்டதிண்புய மேசெரித்த வுரோமமொய்த்த சிலம்பனு
னெரிந்தகோபம் விழைந்ததுர்துமி யென்னுநாம விராக்கதன்

(இ - ள்.) விலாசமான பூமியின்கணுள்ள மனித மாமிசத்தின் முடைநாற்றம் நாறுந்தன்மை யுள்ளவன். திரண்டு பருத்தபுயங்கள்நெருங்கிய மயிர்கள் மொய்த்திருக்கின்ற மலையைப் போன்றுள்ளவன். எரிகின்ற கோப மிகுந்த துர்துமியென்னும் பெயரையுடைய அரக்கன்—என்றவாறு. (11)

வேறு.

கடும்பசி காய்ந்திட நெஞ்சு காந்தியே
கொடுஞ்சின வெந்தழல் கொப்ப ளிப்பதா
லிடங்களின் மக்களும் விலங்கு மெண்ணியே
நடந்தன பாதலப் பணி நடுக்கவே

(இ - ள்.) மிகவும் பசியதிகரிக்க மனமெரிந்து கொடிதான வெவ்விய கோபாக்கினி ததும்புகின்றமையால் அவ்விடங்களில் மனிதர்களையும் விலங்குகளையும் ஆராய்ந்துகொண்டு பாதாளத்திலுள்ள ஆதிசேடன் நடுங்கும்படி நடந்தான்—என்றவாறு. (12)

கைத்தலத் தான்மரஞ் சாடிக் கார்வரை
குத்தியே புலகினைக் கொன்று வோமெனு
மொய்த்தவல் வினைவிதி துரப்ப முற்றுசீர்
வைத்தவத் தீர்த்தமால் வரைக்கண் வந்தனன்.

(இ - ள்.) கைகளினாலே மரங்களையடித்துக் கருநிறமான மலைகளைக் குத்தி எந்தவுலகத்தைக் கொன்றுவோமென்று நெருங்கிய வலியவினை



யின் காரியமான விதியானது முடுக்கக் குறைவற்ற சிறப்பையுடைய அந்தத் தீர்த்த மலையினிடத்தில் வந்தான்—என்றவாறு. (13)

விலங்குகள் கண்டுவாய் விட்ட ரற்றியே
கலங்கியே யகன்றிடக் கானிற் புட்குழாஞ்
சிலம்பியே தமதுதாச் சிறைய டித்துவிண்
டலஞ்செழுங் காடென மீதிற் சார்ந்தனன்.

(இ - ள்.) மிருகங்கள் கண்டு வாய்விட்டலறியோடக் காட்டிலுள்ள பறவைக் கூட்டங்கள் கூவித் தங்கள் தாவிகளையுடைய சிறகை யடித்துக் கொண்டு ஆகாசத்தினிடமே செழித்த வனத்தை யொப்பாகச் செய்யும்படி மேலேயடைந்தனன். (14)

அவ்வரைச் சாரலை யகன்று வேள்வியூர்
கவ்வைவெள் ளாற்றினீர்க் கரைகட் டோன்றிய
தெய்வநா யகன்மணிச் சிகரக் கோயிலின்
றிவ்வியப் பலாமரச் செழிப்பைக் கண்டனன்.

(இ - ள்.) அத்தீர்த்தமலைச் சார்பை விட்டு வந்து வெள்ளூரில் ஒலிக்கின்ற வெள்ளாற்றின் கரையினிடத்தில் தோற்றிய சுயோற்பத்தி லிங்காதுஅழகிய சிகரத்தையுடைய கோவிலில் நேர்த்தியான பலாவிருக்ஷத்தின் செழிப்பைப்பார்த்தான்—என்றவாறு. (15)

காண்டலு மக்கணங் கதுமெ னப்புகுந்
தீண்டியக் கனியினைக் கையி னெட்டவே
நீண்டவத் தருநடு நடுங்கி நீசனீ
தீண்டலை தீண்டிடிற் கெடுதி திண்ணமே.

(இ - ள்.) பார்த்த மாத்திரத்திற் சீக்கிரமாக வாலயத்துட் புகுந்து அந்தப் பலாமரத்திலிருக்கும்படியான பழத்தைக் கையினலெட்டவும் கொடிதான அந்த மரம் நடுநடுங்கி இழிந்தவனாகிய நீ யென்னைத் தீண்டாதே தீண்டினல் கெட்டுப் போவாய் இது நிச்சயம்—என்றவாறு. (16)

முருகவிழ் கடுக்கையெம் முக்க ணயகர்க்
கொருகனி தினந்தர வுவகை யெய்தியே
பொருவறு வசிஷ்டன்மெய்ப் பூச னைக்கணே
திருமலி நிவேதனம் செய்து வப்பனல்

(இ - ள்.) வாசனை விரிந்த கொன்றைமாலையைப் புனைந்த மூன்று கண்களையுடைய யெமது கடவுளாகிய தாந்தோன்றி யீசருக்கு நாடோறும் ஒவ்வொரு பழத்தைக் கொடுக்கப் பிரியமுற்று சமானமில்லாத வசிஷ்ட முனிவர் உண்மையான ஆராதனை செய்யுமிடத்தில் சிறப்பு மிகுந்த நைவேத்தியஞ்செய்து சந்தோஷிப்பார்—என்றவாறு. (17)

இற்றைநாட் பூசனைக் கிடறுவந்திடிற்
குற்றமே மிகுமுனி கோபம் பொங்கிடில்
வற்றுமோ வெழுகடல் வைய மாயுமோ
சுற்றுமோ வுன்னையே யென்னையுஞ் சுற்றுமோ.

(இ - ள்.) இன்றையதினம் ஆராதனைக் கிடையூறு சம்பவித்தால் மிகவுந் தப்பிதமாகும். முனிவருக்குக் கோபம் வெளிப்பட்டால் சப்த சமுத்திரமும் வற்றுமோ உலகமடியுமோ உன்னை மாத்திரம் சூழுமோ அல்லாமல் என்னையுஞ் சூழுமோ—என்றவாறு. (18)

எம்முறை நடக்குமோ வெங்ஙனாகுமோ
மெய்மையி லரக்கநீ விருப்பம் விட்டயல்
செம்மையிற் சேறியோ கனியைத் தீண்டியே
யம்மவோ கேட்டினை யடைதியோ வென

(இ - ள்.) எவ்வண்ண நடக்குமோ எப்படியாகுமோ சத்திய மில்லாத அரக்கனே நீ யாசையை விட்டு அப்புறத்திற் செவ்வையாகப் போகின்றாயோ இப்பழத்தைத் தொட்டு ஐயோ கேடுறுகின்றாயோ வென்று—என்றவாறு. (29)

தண்டரு முடக்கனி யொன்று தாங்கியே
விண்டொடும் பணைநெடும் பலாவி னம்பவே
கொண்டிலன் கேட்டினை யுட்கு றித்திலான்
மண்டுபா தகக்கொடு மலையைப் போல்பவன்

(இ - ள்.) குளிர்ச்சி தருகின்ற முள்ளுகளையுடைய ஒரு பழத்தைத் தாங்கிக்கொண்டு ஆகாயத்தைத் தொடுகின்ற கிளைகளையுடைய நெடிய பலாமரமானது சொல்லக் கேளாமல் வருங்கேட்டை நினையாமல் நெருங்கிய பாவமே உருவங்கொண்ட பொல்லாதமலையை யொத்த அரக்கன்— (20)

கனலினுட் பட்டன கருகி வேங்கொடு
வினையினிற் சிக்கினர் தேறமேன்மையா



மினியன சொல்பவை செவிக்க ணேறுமோ
வனுபவ முறைமையை யார கற்றுவார்

(இ - ள்.) அக்கினியிற் சிக்கினவை தீய்ந்து வெந்துபோம். தீவினை சிக்கினவர் தேரும்படி மேம்பாட்டையுடைய நன்மொழிகளைச் சொன்னால் அவைகள் காதில் நுழையுமோ அனுபவிக்க வேண்டிய முறைமையை யாவர் நீக்குவார்—என்றவாறு. (21)

ஆதலான் முட்புறக் கனியை யங்ஙனே
பாதகன் கையினிற் பறித்த ருந்தினன்
யாதுகொ லிஃதென வெண்ணி மாழ்கியே
தீதுற நின்றதத் திருப்ப லாமரம்

(இ - ள்.) ஆதலால் அப்பலாப் பழத்தை அவ்வண்ணமே பாதகனாகிய அரக்கன் பறித்துத்தின்றான். இதுவென்னபாவமென்று நினைத்து வருந்திக் குற்றம்பொருந்தி நின்றது அவ்வழகிய பலாவிருக்ஷம்—என்றவாறு.

ஆங்கது நிகழ்தரு மமையந் தன்னிலே
தீங்கறு பகல்வினைச் செயன்மு டித்தவ
...ங்கிய மாதவத் தொருவ சிட்டனும்
பாங்குறு சடரும் பலரு மீண்டனர்

(இ - ள்.) அவ்விடத்தி லப்படி நடக்கின்ற சமயத்தில் குற்றமற்ற மத்தியானக்கிரியை முடித்தவராகி மிகுந்த தவத்தையுடைய ஒப்பற்ற வசிஷ்டமுனிவரும் நன்மை பொருந்திய சீடராகிய சகலரும் திரும்பி வந்தனர்.

குற்றமே யோருரு வெடுத்த கொள்கையான்
நிற்றலுந் தருநிலை தளர்ந்து நிற்பது
முற்றலுங் கனிபறித் தொழுகு பாலையும்
முற்றுற நோக்கினன் முனிவர் நாயகன்.

(இ - ள்.) களங்கமே ஒரு வடிவங்கொண்டாற்போலுந் தன்மையனான அரக்கனிற்பதையும் பலாமரம் வாட்டமுற்றிருப்பதையும் அதி லிருந்த அழகிய பழத்தைப் பறித்து ஒழுகுகின்ற பாலையும் முடிவுறப் பார்த்தார் வசிஷ்டமுனிவர்—என்றவாறு. (24)

வேறு.

புண்மலிந்த தீவெகுளி பொங்கியுட்கொ தித்தெழக்
கண்சிவந்து பொற்சடைக் கட்டவிழ்ந்து தொங்கவே
வண்முகங் கடுகடுத்து மல்கமுத்த வேர்க்கவு
நண்ணுபாத மேபதைக்க நன்னகை கடித்தனன்

(இ - ள்) துன்ப மிகுந்து பொல்லாத கோபமானது ததும்பி மனதிற் கொதித்துண்டாகக் கண்கள் சிவந்து சடையானது கட்டவிழ்ந்து தொங்கச் செழிப்புள்ள முகங்கடுகடுத்து மணிகளையொத்து வெயர்வு நிறைந்து சொரியப் பொருந்திய பாதங்கள் நடுங்க நன்மையுடைய பற்களைக் கடித்தார் என்றவாறு. (25)

மார்பினுத்த ரீயம்விழ வாயிதழ்து டித்திடச்
சேரவந்து பாதகத் திருடசிவ பூசனைக்
கோர்தவ றிழைத்தி நீயு முய்ந்துபோவை யோவடா
வேர்பறிப்ப தன்றியுன்னை விட்டிடுவ தில்லையே

(இ - ள்.) மார்பிலிருந்த உத்தரியம் நழுவி விழ உதடுகள் துடிக்கச் சமீபத்தில் வந்து பொல்லாங்கு செய்கின்ற கள்ளனே சிவபூசைக்கு விரோதஞ் செய்து நீயும் பிழைத்துப் போவாயோ அடா உன்னை மூலத்தோ[illegible]றுப்ப தேயன்றி விடுவதில்லை—என்றவாறு. (26)

முக்கணார் நிவேதன முறைப்படி பழுத்திடு
மிக்கனி பறித்தருந்த வெவ்வண நினைத்தியோ
செக்கர்வெய்யி லிந்துவோடு தென்றலுங் கனிந்திடு
மக்கனியை வந்துதீண்ட வஞ்சியுண் ணடுங்குமே

(இ - ள்.) மூன்று கண்களையுடைய சுயோற்பத் தீசருக்கு நிவேதிய மாகிற முறைமைப்படி தினமொன்று பழுக்கின்ற இந்தப் பழத்தைப் பறித்துத் தின்ன எப்படி நினைத்தையோ, சிவந்த சூரிய கிரணமும் சந்திர கிரணமும் தென்றற் காற்றுங் கனிகின்ற அந்தப் பழங்களை வந்து தீண்டுதற்குப் பயந்து மனது நடுங்கும்—என்றவாறு. (27)

ஈனமிக்க தீயநெஞ்சி லியாதுமறி வின்றியே
தேனொழுக்கு மிக்கனிசு வைத்தருந்து தீமையாற்
றேனொழுக்கு வெற்பெனக் கிடத்தியச் சிமத்தென
ஞானமெய்த் தவத்தினன் சபித்தன னலங்கெட



(இ - ள்.) தாழ்ச்சிமிகுந்த கொடிதான மனத்தி லெவ்வளவும் விவேக மில்லாமல் தேனைச் சொரிகின்ற இந்தப்பழத்தைத் தின்ற குற்றத்தினால் தேனொழுகுமலையாகி மேற்றிசையிலிருக்கக் கடவாயென்று ஞானமுணர்ந்த வசிஷ்டமுனிவர் அவ்வாக்கனுறுப்பு நலமழியச் சபித்தார்—என்றவாறு. (28)

பின்றருவை நோக்கியிக் கயவன்முன் பிறங்கவே
நின்றகனி யேமறைக்கு நீர்மையின்றி நிற்றலா
லின்றுமுதற் பட்டையிலை வேர்கள்பிஞ்சு காய்கனி
யென்றுமொரு வர்க்குமுப காரமில்ல தாகுவாய்

(இ - ள்.) பின்பு அந்தப் பலாமரத்தைப் பார்த்து இந்தத் திருடன் முன்னே யுயர்வுற்று நின்ற பழத்தை மறைக்குந் தன்மையின்றி இருந்தமையால் இந்நாளாதியாக நினது பட்டைஇலை வேர் பிஞ்சு காய் பழங்களி லொன்றாவது ஒருவருக்கும் பிரயோசனப் படாதபடி காட்டி லுப்பையாகக் கடவாயென்று சபித்தார்—என்றவாறு. (29)

காட்டிலுப்பை யாய்விடக் கடவையென்று வஞ்சின
நாட்டியே சபித்தலு நடுங்கியக் கயவனும்
கோட்டுவண் பலாவிருக்ஷ முங்குலைகு லைந்துமெய்
வாட்டமுற்று மாதவ வசிட்டனை வணங்கியே.

(இ - ள்.) காட்டிலுப்பை மரமாகக் கடவாயென்று கோபத்துடனே சபிக்கவும் பயந்து அவ்வாக்கனும் கிளைகளின் வளங்களையுடைய பலாமரமும் நடுநடுங்கிச் சரீரம் வாடி மகாதவத்தையுடைய வசிஷ்டமுனிவரைத் தொழுது என்றவாறு. (30)

வேறு.

தண்ணிலா முடித்த வேணித் தாந்தோன்றி ஞரைப் போற்று
மண்ணலே யமல மூர்த்தி யருந்தவ முனிவர் நாதா
பண்ணவா ஞான சோதி பவவிருட் பானு வேமெய்ப்
புண்ணியா சிறியோர் தீமை பொறுத்திட வேண்டும் வேண்டும்

(இ - ள்.) குளிர்ந்த சந்திரனைத் தரித்த சடையையுடைய சுயோற்பத் தீசரை யாராதிக்கின்ற பெருமையின் மிகுந்தவரே, பரிசுத்த வடிவமானவரே, அரிய தவத்தையுடைய முனிசிரேஷ்டரே, சுவாமி, ஞான விளக்கமே, பாவமாகிய இருளைக் கெடுக்கின்ற சூரியனே, உண்மையை யுணர்ந்த புண்ணியரே அற்பராகிய யாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் மன்னிக்கவேண்டும்—என்றவாறு. (31)

புழுவது பொருட்டு வெம்பிப் பொங்குமோ கடல்க ளேழும்
தழைவறப் புற்காய் வானந் தவறியே காயு மோவின்
குழவியின் குற்றம் பெற்றோர் கொள்வரோ கொடியேஞ் செய்த
பிழையினைப் பொறுத்தல் வேண்டும் கருணையிற் பெரியோ யென்று

(இ - ள்.) புழுவினது பொருட்டாகக் கோபமுற்று எழுகடலும் பொங்குமோ, தழைதல் கெடும்படிக்குப் புல்லின்பொருட்டு ஆகாயமழை பெய்தலற்றுக் காயுமோ, குழந்தைகளின் குற்றத்தைப் பெற்றவர்கள் பாராட்டுவார்களோ பொல்லாதயாங்கள் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும் கிருபையிற்பெரியவரே—என்றவாறு. (32)

இருபத மலரி றைஞ்சி யிரங்கியே யச்சங் கூர்ந்த
தருவையுங் கனிப றித்தோன் றன்னையு நோக்கி யங்கண்
றிருவருள் சுரந்து செய்த தீமையால் வந்த சாபம்
வரமுனி மகதி வீணை நாரதன் வருமட் டுண்டு

(இ - ள்.) வசிஷ்டரது உபய பாதங்களையும் வணங்கி விசனமுற்று பயமிகுந்த அந்தப்பலாமரத்தையும் பலாப்பழத்தைப் பறித்த அவ்விராக்ஷதனையும் பார்த்து அவ்வண்ணங்கிருபையுண்டாகி நீங்கள்பண்ணின குற்றத்தினால் வந்தசாபமானது அருள்செய்கின்ற முறுக்காணிகளைப்பூட்டிய வீணையையுடைய நாரதமுனிவர் வருகிறவரைக்கு மிருக்கும்—என்றவாறு. (33)

அன்னவன் வருவ தோரி லருங்கிரே தாயு கத்திற்
பின்னருஞ் சாபந் தீர்ந்து பெருமையை யடைந்து மேலாம்
பொன்னிலத் தமரர் போற்றப் பொலிவுபெற் றிருப்பீ ரென்று
நன்மொழி வாய்ம லர்ந்து நவின்றனன் முனிவர் நாதன்

(இ - ள்.) அந்தநாரதன் வருகின்ற காலத்தை யறியுமிடத்து அரிய திரேதாயுகத்திலாகும். அதன்பின் உங்களது சாபநிவர்த்தியாகிப் பெருமை பொருந்திய மேலாகிய சுவர்க்கத்திலுள்ள தேவர்கள் துதிக்கச் சிறப்பையடைந்திருப்பீரென்று நல்ல வார்த்தையை வாய்மலர்ந்துரைத்தார் வசிட்டமுனிவர்—என்றவாறு. (34)

அன்றுநாண் முதலா யீச னாலயப் பச்சி மத்தே
மற்றவன் றேனொ ழுக்கு மலையெனக் கிடந்தான் பாரிற்
சொற்றவப் பலவுங் கான மதுகமாய்த் தோன்றி நின்ற
குற்றமா தவவ சிட்டன் பூசனைக் குளநி னைந்து



(இ - ள்.) அன்று முதலாகத் தாந்தோன்றீசர் கோவிலின் மேற்கே அவ்வரக்கன் தேனொழுக்கு மலையாயிருந்தான். சொல்லிய அப்பலா விருக்ஷமும் காட்டிலுப்பை மரமாகத் தோன்றி நின்றது. இப்பால் மகாதவத்தையுடைய வசிஷ்ட முனிவர் பூசை செய்ய உள்ளத்தினினைந்து என்றவாறு.

அன்றுதாந் தோன்றி னாரை நீரினா லபிடே கஞ்செய்
தொன்றிய மலரி னாலே யருச்சனை யொழுங்கி யற்றி
நன்றுறு தூப தீபம் யாவையு நடத்திக் கும்ப
மன்றனீ ரல்லான் மற்றோர் நிவேதனம் வாய்த்த தின்றால்

(இ - ள்.) அன்றைக்குத் தாந்தோன்றீசரைத் தண்ணீரினா லபிஷேகஞ்செய்து பொருந்திய புட்பங்களினாலே அர்ச்சனை விதிகளைச்செய்து நன்மை பொருந்திய தூபதீபாராதனை முதலிய யாவுஞ்செய்து குடத்திலுள்ள வாசனை பொருந்திய தண்ணீரைத் தவிர வேறொரு நிவேத்தியமும் அகப்பட்டதில்லை—என்றவாறு. (36)

மனமது வருந்தி யன்பு மலரவே யீச னுக்குப்
பனிநறு நீர்நி வேத னத்துப சாரம் பாவித்
தினனுத யஞ்செய் மட்டு மன்றிரா விருந்து மற்றைத்
தினமரு ணோதயத்திற் சென்றிட மனநி னைந்து

(இ - ள்.) அதனால் உள்ளத்தில் விசனமுற்று அன்பு மேலிடத் தாந்தோன்றீசருக்குக் குளிர்ந்த நல்ல சலத்தினாலேயே நிவேத்தியோபசாரஞ்செய்து சூரியோதயமாகுமட்டும் அன்றிராத்திரியு மிருந்து மறுதினத்தில் அருணோதய காலத்தில் அவ்விடம்விட்டுச் செல்லும்படிக்கு மனத்தில் நினைத்து—என்றவாறு. (37)

சங்கரா மழுவு மானுந் தரித்தரு ளிறையே போற்றி
பொங்கரா வணிகள் பூண்ட புண்ணிய முதலே போற்றி
கங்கையு மதியும் வேணிக் கணிந்தகண் ணுதலே போற்றி
கொங்கல ரிதழி யந்தார்க் குன்றமே போற்றி போற்றி

(இ - ள்.) சங்கரா மழுவு மானும் கரங்களிற்றாங்கிய கடவுளே சரணம். கோபம்பொங்குகின்ற சர்ப்பாபரணத்தை யணிந்த தலைமையான புண்ணியனே சரணம். கங்கையையுஞ் சந்திரனையுஞ் சடையிற்றரித்த நெற்றிக் கண்ணை யுடையவனே சரணம். தாதுக்கள் விரிந்த கொன்றைமாலையை யணிந்தவனே சரணம் சரணம்—என்றவாறு. (38)

மாலய னிருவர் தேடு மறையினுட் பொருளே போற்றி
யாலநல் லமுதா யுண்டன் றமரரைக் காத்தாய் போற்றி
காலனை யுதைத்த வீரக் கழலுடைக் கடவுள் போற்றி
சீலமா ரடியார் நெஞ்சிற் றித்திக்குஞ் சுவையே போற்றி

(இ - ள்.) விஷ்ணுவும் பிரமனுமாகிய விருவருந் தேடுகின்ற வேதத்தின் அந்தரங்கப் பொருளே சரணம். விடத்தை நல்ல அமிர்தமாகப் புசித்து அன்னாளில் தேவர்களை ரக்ஷித்தவனே சரணம். இயமனை யுதைத்த வீரத் தண்டையை யணிந்த பாதத்தையுடைய கடவுளே சரணம். ஒழுக்கம் பொருந்திய அடியவரது உள்ளத்தில் தித்திக்கின்ற ரசமே சரணம். (39)

செப்பரும் பரமே போற்றி சிதம்பர சிவனே போற்றி
முப்புர மெரித்தாய் போற்றி முத்தலைப் படையாய் போற்றி
யொப்பிலெம் மடிகள் போற்றி யுயர்விடைக் கொடியாய் போற்றி
யப்பனே யரனே போற்றி அரகர போற்றி போற்றி

(இ - ள்.) சொல்லுதற்கரிய பரமனே போற்றி சிதம்பரனே சிவனே சரணம். திரிபுரங்களை யெரித்தவனே சரணம். சூலத்தையுடையவனே சரணம். சமானமில்லாத எம்முடைய கடவுளே சரணம். உயர்ந்த இடபக் கொடியையுடையவனே சரணம். அரனே அரஹரா சரணம் சரணம்—என்றவாறு. (40)

திறம்வளர்த் திடுமெய்ப் பச்சை நிமலைநல் லடியா ருள்ளப்
புறம்வளர்த் தவள்பூண் கொங்கைப் பொறைவளர்த் தவணூல்வேதத்
திறம்வளர்த் தவளீ ரேழு செகம்வளர்த் துயிர்க்கெண் ணான்கா
மறம்வளர்த் தவள்பங் காளா வண்ணலே போற்றி போற்றி

(இ - ள்.) கார்த்திவளர்கின்ற பச்சைமேனியுடைய நிமலையும் நன்மையான அன்பரது மனதினிடத்தில் அன்பு வளர்த்தவளும் ஆபரணங்களையணிந்த தனச்சுமையை வளர்த்தவளும் நான்கு வேதவகைகளைச் செய்தவளும் பதினாலுலகங்களையும்பெற்றுச் சீவகோடிகளுக்கு முப்பத்திரண்டு தர்மங்களை வளர்த்தவளுமாகிய மலைமகள் பங்கையுடைய கடவுளே சரணம்—என்றவாறு. (41)

நாவினால் வழுத்தப் பெற்றே னயந்துகை குவிக்கப் பெற்றேன்
மேவுறும் படிவத் தாய்நின் மலர்த்தாளை வணங்கப் பெற்றேன்



பாவிகள் மனதுக் கெட்டாப் பராபர வுனக்கு நாயேன்
ஏவலுக் கெளிய னாக வென்னமா தவஞ்செய் தேனோ

(இ - ள்.) நாவினாலுன்னைத் தோத்திரம் செய்யுமாறு பாக்கியம் பெற்றேன், விரும்பிக்கை கூப்பப்பெற்றேன். கேடற்ற வடிவுள்ளவனே யானின்று மகிழ்வுற்றுன்னைத் தொழப்பெற்றேன். பாவிகள் மனதிற்கு எட்டாத பராபரனுக்கு அடியேனேவல் செய்ய வெளிதில் கிடைக்க என்ன தவஞ் செய்தேன்—என்றவாறு. (42)

விதித்தரு ளிறையு நீயே விண்புவி யனைத்துங் காக்கும்
கதிக்கு மாதவனு நீயே கருணையா லுயிரை யெல்லாஞ்
சிதைத்தருள் பவனும் நீயே செகத்துயிர்க் குயிரு நீயே
துதிக்குமேழ் கடலும் வெற்புந் தொன்னிலம் யாவும் நீயே

(இ - ள்.) சிருஷ்டிக்கின்ற பிரமனும் நீயே ஆகாயம் பூமி முழுதும் இரக்ஷிக்கின்ற மேன்மையுள்ள விஷ்ணுவும் நீயே கிருபையினாலே யுயிர்களை யெல்லாம் அழிக்கின்ற உருத்திரனும் நீயே உலகத்தில் உயிருக்கு உயிரானவனும் நீயே புகழத்தக்க எழுசமுத்திரமும் மலைகளும் பழமையான பூமி முதலான சகலமும் நீயே—என்றவாறு. (43)

வேறு.

ஞானப் பெருக்கோ கதிப்பரமா னந்த விளைவோ தவயோக, மோனச் சுடரோ பவவினைநோய் முருக்கு மருந்தோ வருள்பழுத்த, தேனிற் கனியோ மனத்துணையோ தெளிவே படரும் கொழுங் கொம்போ, கானத் தொனியோ முழக்கமன்றிக் கவின நடிக்குந் திருப்பாதம்

(இ - ள்.) ஞானப்பிரவாகமோ மோக்ஷந்தருகின்ற பரமானந்த விளைவோ தவஞ்செய்கின்ற யோகியரது மௌனப்பிரபையோ பாவவினையென்னும் வியாதியைக் கெடுக்கின்ற மருந்தோ கிருபை பழுத்த தேனூறிய பழமோ உள்ளத்துணையோ தெளிவுபடர்கின்றகொழுங் கொம்போ இராகத்தின் ஒலிமுழக்கஞ்செய்ய அம்பலத்தில் அழகுபொருந்திய நடனஞ்செய்த திருப்பாதம்—என்றவாறு. (44)

வேறு.

என்னவே பலவும் போற்ற விளங்குநாந் தோன்றி யீசர்
மின்னிய மதலை யின்சொல் விரும்புந்தாய் தந்தை போலும்

மன்னிய கருணை கூர மகிழ்ந்துநல் வரம்பெற் றென்பா
லுன்னிய வெள்ளூர் தன்னி லுறைந்தன னன்பி னன்றே

(இ - ள்.) இப்படிப் பலவிதமாய்த் தோத்திரம் பண்ணவும் இரக்க முற்ற சுயோற்பத்தீசர் ஒளிபொருந்திய சிறுகுழந்தைகளின் இனியசொற்களை விரும்புகின்ற மாதா பிதாக்களைப்போலும் மிகுந்த கருணைசெய்யக் களிப்புற்று நன்மையுள்ள வரங்களைப்பெற்று அன்பினாலே நிலைக்கின்ற வெள்ளூரில் அன்றையதினமிருந்து மறுநாளில்—என்றவாறு. (45)

ஒன்றிய நெறிம னத்துத் தாப்பிய ரோமஞ் செய்யச்
சென்றிட வேண்டு மையா வெதரிகாச் சிரமந் தன்னில்
என்றவ னழைக்க நெஞ்ச மியைந்துமா தவவ சிட்டர்
நன்றெனச் சீடர் சூழ நடந்தனர் நாரி யோடும்

(இ - ள்.) ஒருமைப்பட்ட நன்மார்க்கமுள்ள மனதையுடைய தாப்பிய முனிவர் ஐயா யாகஞ்செய்வதற்கு வெதரிகாச் சிரமத்துக்கு வரவேண்டுமென்று அவ்விடத்திற்கு அழைக்க மனஞ் சம்மதித்து மகாதவத்தையுடைய வசிஷ்ட முனிவர் நல்லதென்று சீடர் சூழ்ந்து வர அருந்ததியுடனே சென்றார்—என்றவாறு. (46)

வித்தக வேள்வி செய்தற் கழைத்தமெய்ம் முனிவன் பின்னே
யுத்தர திசையை நோக்கி விரைந்துசென் றுவகை கூரத்
தத்துவ நிலைவ ளர்க்கும் வெதரிகாச் சிரமஞ் சார்ந்து
முத்தழல் வினைமு டித்துச் சிறந்தனன் முதன்மை யாக

(இ - ள்.) அதிசயமான யாகஞ் செய்வதற்கு அழைத்த மெய்மை தெரிந்த தாப்பிய முனிவனோடு வடதிசையை நோக்கிச் சீக்கிரத்திற் சென்று சந்தோஷ மிக ஞான நிலையை வளர்க்கின்ற வெதரிகாச் சிரமத்திற் சார்ந்து யாகக் கிருத்தியத்தை நிறைவேற்றிச் சிறப்படைந்து தலைமை பெற்றிருந்தார்

உரைப்பரும் வெள்ளூர்க் காதை யொன்றிது வென்று சூதன்
விரித்திட மகிழ்ச்சி கூர்ந்து நைமிசா ரணிய மேவும்
திருந்தவ முனிவர் வெள்ளூர்ச் சிலமே யின்னுங் கேட்கக்
கருத்தென வவரை நோக்கிக் கதையொன்று சொல்வான் சூதன்

(இ - ள்.) சொல்லவரிய வெள்ளூர்ச் சரிதம் இதொன்றென்று சூத முனிவர்சொல்லச் சந்தோஷித்து நைமிசாரணியத்திலுள்ள அழகிய தவத்தை



யுடைய முனிவர்கள் வெள்ளூரினொழுக்கத்தைப் பின்னுங்கேட்க எங்களுக்கு மனதென, அம்முனிவரைப் பார்த்து மற்றொரு சரித்திரத்தைச் சூத முனிவர் சொல்லுவார்—என்றவாறு. (49)

துந்துமிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் 7-க்குத் திருவிருத்தம்—(311).

## 8-வது இந்திரச் சருக்கம்.

கடுக்கை சூடிய செஞ்சடைக் கருமிடற் றெந்தைக்
கடுக்கு மன்பின னருமறை முடிவள வறிந்தோன்
பொடிச்சி றந்தசெம் மேனியன் புண்ணிய மனையான்
றடுப்ப ருந்தவத் திறன்முனி புங்கவன் சாமி

(இ - ள்.) கொன்றை மாலைதரித்த சிவந்தசடையையுங் கரிய கண்டத்தையுமுடைய மகாதேவருக்குப் பொருந்திய அன்புடையவன். அரிய வேதாந்தத்தின் அளவைத்தெரிந்தவன். விபூதிதாரணத்தினாற் சிவந்த தேகத்தை யுடையவன். தருமத்தையொத்தவன். விலக்கக்கூடாத தவவலிமையுடைய முனிநாதன். நன்மையுள்ளவன்—என்றவாறு. (1)

நாம மேதுரு வாசனென் றுலகினி னாட்டும்
தோமி லாதவன் மற்றொரு காலையிற் றூய
பூமி யெவ்விட மெந்நதி புனிதமென் றெண்ணிக்
காமர் வேள்வியூர் வெண்ணதி கருத்தினிற் றேறி

(இ - ள்.) துருவாசனென்னும் பெயரையுலகத்தில் தரித்த குற்றமற்றவன். ஒருகாலத்தில் பரிசுத்தமானஸ்தலம் எவ்விடம் பரிசுத்தமானநதி யெவ்விடம் என்றாலோசித்து அழகிய வெள்ளூரையும் வெள்ளாற்றையும் உள்ளத்தி னிச்சயித்து—என்றவாறு. (2)

பூவ லங்கொடு பற்பல நாடுகள் புகுந்து
கோவை வாய்ப்பனி வரைமகள் பங்கில்வாழ் குன்ற
மேவு மாதலத் திரையெறி தடநதி வெற்பு
மோவி லாதுசென் றெங்கணுந் தேறிடா துள்ளம்

(இ - ள்.) பூமியை வலங்கொண்டு பலபல தேசங்களில் சென்று கோவைக்கனியைப் போலும் வாயினையுடைய இமையகிரியினது மகளாகிய உமா தேவியை ஒரு பாகத்திலுடைய மலைபோன்ற கடவுள் தங்கிய மகா ஸ்தலங்களும் பார்த்து எவ்விடத்திலு மனஞ் சம்மதியாமல்—என்றவாறு. (3)

கொங்கு நாட்டிடை வந்தனன் வளங்களைக் குறித்துப்
பொங்கு காதலிற் றலங்களு நதிகளும் பொருப்பு
மங்குல் கண்வளர் கின்றமா வனங்களு நோக்கி
இங்கி தற்கிணை யில்லையென் றுளத்தினி லெண்ணி.

(இ - ள்.) கொங்கு தேயத்தின்கண் வந்து வளமைகளைப் பார்த்து மிகுந்த ஆசையினாலே ஸ்தலங்களையும் தீர்த்தங்களையும் மலைகளையும் மேகந் தூங்குகின்ற பெரிய வனங்களையும் பார்த்துப் பூமியின்கண் இந்நாட்டிற்குச் சமானம் எதுவும் இல்லையென்று மனதிலெண்ணி—என்றவாறு. (4)

முருக லர்ந்துநு ணறையுண வரியளி முரலுங்
கருமு கிற்குலங் கண்வளர் கன்னியஞ் சோலை
யருவி யாறதிர் முழக்கமெங் கணுமறு வியல்பின்
மருவு பல்வளத் தீர்த்தவெற் பருகினில் வந்தான்

(இ - ள்.) வாசனை விரிந்து இதழின்வழியே தேனொழுகப் புள்ளிகளையுடைய வண்டுகள் சத்திக்கின்ற கரியமேகக் கூட்டங்கள் நித்திரை செய்கின்ற இளந்தோப்புகள் சூழ்ந்து அருவியாற்றின் ஒலிகள் எவ்விடத்தும் நீங்காத தன்மையுடைய பல வளப்பம் பொருந்திய தீர்த்த மலையின் சமீபத்தில் தூருவாசரென்பவர் வந்தார்—என்றவாறு. (5)

வேறு.

வருமுனி வரனை நோக்கி வானுயர்ந் தெழுந்த தீர்த்த
கிரியிடைத் தருக்கள் காற்றிற் கசைவன கிளர்ந்து பொங்கிச்
சிரமசைத் திடல்போற் காந்தள் செங்கைகம் பித்தல் போலும்
அளியிசை மங்கல வொலிபோ லருவியா னந்த நீர்போல்

(இ - ள்.) ஆகாயத்தை யளாவி யுயர்ந்திருக்கின்ற தீர்த்த மலையினிடத்துள்ள மரங்கள் காற்றினலைகின்றது, செழிப்புற்றுக் களித்துத் தலையை யசைத்தல்போலும்; காந்தப்பூக்களசைவது கைகளை யாட்டுதல்போலும்; வண்டுகளினிசைகள் மங்கலத்தொனிபோலும்; அருவி சொரிதல் ஆனந்த பாஷ்பம்போலும்—என்றவாறு. (6)

வேறு.

கொன்றைமாமலர் பொன்னின்மாரி சொரிந்த தொத்தது கோகிலம்
நின்றகாள மிசைத்தல்போன்முனி வருநெறித்தல மெங்குமேற்



சென்றவெய்யி னிரைத்த வெப்பது சீதமாக வகுத்தபூ
நன்றுதாமுப சாரவண்மை நடத்தல் போல விருந்ததே

(இ - ள்.) கொன்றை மலர்களுதிர்தல் பொன்மழை பொழிந்தாற்போலும்; குயில்களிருந்து கூவுதல் எக்காளத் தொனி செய்தல்போலும்; தூருவாச முனி வருகின்ற மார்க்க மெவ்விடத்திலு மேலே செல்லுகின்ற சூரியன் பரப்பிய சூட்டினைக் குளிரவைக்கும்படி மரங்கள் புட்பங்களைச் சொரிதல் நன்மையான வுபசார வளங்களைச் செய்தல் போலுமிருந்தது—என்றவாறு. (7)

கற்பளிங்கயல் மன்னுமிந்திர சாலமேபல கண்ணுற
நிற்குமிந்திர னோர்நோக்கயி ராவதத்தை நிகர்க்குமா
னற்பளிங்கினி லுற்றகார்முகி றன்னைவெள்ளையி ராவத
மற்புரந்தர னேறிநின்றது மானுமவ்வரை வண்மையே

(இ - ள்.) பளிங்குக் கல்லானது பக்கத்திலிருக்கின்ற இந்திரசாலமென்கின்ற ஒளியுள்ள கல்லைப் பல கண்களோடு நிற்கும் தேவேந்திரனைப் பார்க்கின்ற அயிராவதத்தை யொத்திருக்கும். நல்ல பளிங்குக் கல்லிற்றவழாநின்ற கரிய மேகம் நன்மை பொருந்திய வெண்ணிறமான அயிராவதத்தில் வலிமை பொருந்திய தேவேந்திரனேறி யிருப்பதை யொக்கும். அந்த மலையின் வளப்பம்—என்றவாறு. (8)

தாதருந்தளி ரும்பியேவளர் தண்டலைக்குள ளிக்குலம்
பாதவங்கள் வளைந்துசுற்றிய பான்மைமுற்றிய முதுமரம்
போதலர்ந்துப குருநன்றி புரிந்ததென்று விழாமலே
நாதலாறி யிறுக்குபூணது கட்டுகின்றது போன்றன

(இ - ள்.) பூந்தேனையுண்ண ஆசைகொண்டு வளர்கின்ற வண்டுக் கூட்டங்கள் தோப்பினிடத்தில் மரங்களைச் சூழ்ந்து சுற்றுகின்ற தன்மை, முற்றிய விருத்தன்மையையுடைய மரமானது பூக்கள் மலர்ந்து பலநாளும் நமக்கு நன்மையே செய்ததென்று விழாதிருக்கும்படி ஆசையுற்று அதற்குப் பூண்கட்டுவதை யொத்தன—என்றவாறு. (9)

காட்டிலுப்பை யுருக்குமாமலர் கானில்விண்ணிடை மீனினங்
கூட்ட முற்றத மன்பனைப்பணி கொள்ளுமக்குறை தீரவே
காட்டின் மிக்குறு தீர்த்த வெற்பான் நல்குமாறினி நாம்வரம்
கேட்டுவாழ்வுகொள் வோமெனும்படி கீழிறங்குதல் போலுமே

23.38 N22



(இ - ள்.) காட்டிலுப்பை மரங்களிலுதிர்கின்ற மலர்களைப் பார்க்கில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் கூட்டமாய்நின்று தங்களுடைய நாயகனாகிய சந்திரனைப் பாம்பு பற்றுகின்ற அந்தக்குறை நீங்கும்படி நாடுகளின் மேன்மையான தீர்த்த மலையிற் சென்றரும்படிக்கு நாமெல்லாம் வரங்கேட்டுச் சுகத்தைப் பெறுவோமென்று கீழேயிறங்கி வருதல் போலவிருக்கும்—(10)

விட்புலத் துயர் பஞ்சமா தரு மேவிடுஞ்சுவை யுட்பட
முட்புறத் துறு கனிகளொழுகு ஞானவாரமு தன்னதோர்
நிட்களப்பொரு ளுன்னியென்பு நரம்புமேலுற நிஷ்டையா
யுட்கனிந்திடு மதுரமூறிய யோகமாதவர் மானுமே

(இ - ள்.) ஆகாயவழியாய் உயர்ந்த பலாவிருக்ஷம் பொருந்திய இரசமுள்ளேயிருக்கப் புறத்தில் முள்ளுகளையுடைய பழங்கள், முதிர்ந்த ஞானமிர்தத்தை யொத்த களங்கமற்ற பரம்பொருளைத் தியானித்து எலும்பு நரம்புமேலே தோன்ற நிஷ்டையிலுள்ளம் பழுக்க ஆனந்தச் சுவையூறுகின்ற யோகிகளாகிய தபோதனரையொக்கும்—என்றவாறு. (11)

அற்பர் கண்டொரு காரியத்தி லகத்தின்வன்மை யிருத்தியே
பொற்புறக்கனி வூறுமின்சொல் புறத்தினின்பம் விளைத்தல் போல்
நற்படைப்பையின் மாங்கனித்திர ளுண்மை காணென வோர்கிளி
சொற்பொருத்துதல் கேள்விகொள்வது போலவண்டிசை சாற்றுமே

(இ - ள்.) அற்பரானவர்பார்த்து ஒரு காரியத்திலுள்ளத்தில் வலிதாய் வைத்து அழகு பெறச் சுவை யூறுகின்ற இனியமொழிகளைப் புறத்திலின்பமுண்டாகச் சொல்லுதல்போல் நல்ல தோப்பினிடத்தில் மாங்கனித்திரள்கள் பொருந்தி யிருத்தலைப்பாரென்று ஒருகிளி சொல்லும். வண்டுகள் இராகம்பாடிக்கொண்டு கேட்பது போல் சூழும்—என்றவாறு. (12)

வேறு.

மெய்வளை குணமு டைத்தாய்ச் சோற்றினை யேந்தி மேலாய்ச்
செய்யுமஞ் சலிபோன் மொக்குள் சென்னியிற் கொண்ட தாழை
துய்யர்போ னிற்க வீயாத் தன்மையே தோன்றக் கண்டே
யெய்திட நகைபோன் முல்லை மலருமவ் விடங்க ளுண்டே

(இ - ள்.) உடல் வணங்கிய தன்மையுள்ளதாய்ச் சோற்றை யேந்திக்கொண்டு மேலே கும்பிடுதலைப்போலே தலையிற் பூவரும்பையுடையதாகிய தாழைமரம் பெரியோரைப்போல் நிற்க, கொடாத லோபகுணமதனிடத்தி



லிருப்பதைப் பார்த்து சிரிப்புண்டாகியதுபோல், முல்லைச் செடிகள் மலர்ந்திருக்கின்ற இடங்களுள்ளன—என்றவாறு. (13)

இவைமுத லுயர்ந்து விண்ணோ டியைந்திடு பொதும்பர்க்கோட்டி
னவிர்மலர் தருதீந் தேனு மக்கனி தருசெந் தேனுந்
தவழ்தர மணம்வி ரிக்குந் தண்ணெனு மருவி யாறு
முவகையி னளிக ளார்க்குஞ் சுனைகளு முடைய தம்மா

(இ - ள்.) இவை முதலாக வுயர்ந்து ஆகாயத்தோடு பொருந்துகின்ற சோலையின் கிளைகளில் விரிந்த மலர்கள் சொரிகின்ற இனியதேனும் அக்கிளைகள் பழுத்துப் பழங்கள் சொரிகின்ற தேனுங்கலக்க வாசனை வீசுகின்ற குளிர்ந்த அருவியாறுகளுமுடையது—என்றவாறு. (14)

திரையிலைக் கொடிக ளேறுஞ் செழுங்கமு கவிழ்க்கப் பாளை
விரிதலை யரம்பைக் கூன்காய் கனிந்ததேன் மிகவும் பாயக்
கருமுகில் கிழிக்கு நாளி கேரத்தின் கனிகள் சிந்தும்
விரவிய சீத மிக்கா லுறுபனி வெற்பை போலும்

(இ - ள்.) திரைந்த இலைகளையுடையதாய்க் கொடிகள் படர்ந்து செழித்த கமுகமரங்கள் பாளைகளை விரிக்க விரிந்த தலையையுடைய வாழையினது வளர்ந்த காய்கள் கனிந்தொழுகிய தேன் மிகவும் பாவக், கரிய மேகத்தைப் பிளந்துயர்ந்த தென்னமரங்களின் பழங்கள் விழப் பரந்த குளிர்ச்சியினாலே அத்தீர்த்த மலையானது பொருந்திய பனிமலையாகிய இமைய பருவதத்தைப் போலும்—என்றவாறு. (15)

76888

தண்டலை மதுவ ருந்தி மென்சிறை பரப்பித் தாழ்ந்து
வண்டுக டுயிலப் பூவின் வாரியுண் டிருள்க மஞ்சூற்
கொண்டலி னிடியென் றெண்ணிக் குஞ்சரத் தோகை தன்னை
கண்டருஞ் சிறைவி ரித்துக் களிமயி லாடிக்கு மாதோ

(இ - ள்.) தோப்பில் தேனைக் குடித்து மெல்லிய சிறகுகளை விரித்து ஒடுங்கிய பூவின்கண் வண்டுகளித்திரை செய்ய யானை பிளிறுகின்ற தொனியைக் கடல்நீரை யருந்தியிருள்கம்மிய அழகிய கருப்பங் கொண்ட மேகத்தினிடியென்று நினைந்து சிறகுகளை விரித்துக் களிப்புற்ற மயில்கள் நடனஞ் செய்யும்—என்றவாறு. (16)

தண்சுனை நறைநீர் பொங்கிச் சலசலென் றருவி யாகித்
தூண்பல விளைந்து தோற்றிக் கறங்குகான் யாற்றை யெய்ந்து

தண்புறு வனச்சு வேத நதியினுக் குவமை கூறில்
பண்புறு பாலி னோடு தேனையே கலந்த பான்மை

(இ - ள்.) குளிர்ந்த சுனையில் வாசனை பொருந்திய தீர்த்தமும்பிச் சலசலவென்று அருவியாகிப் பலவிடங்களில் சீக்கிரமாய்ச்சென்று தோன்றிச் சத்திக்கின்ற காளியாற்றை யொத்துச் செல்லுகின்ற அழகு நீங்காத வெள்ளாற்றிற்கு உவமை சொல்லுமிடத்துச் சுவைத்தன்மையுடைய பாலினுடனே தேனைக் கலந்ததன்மையேயாம்—என்றவாறு. (17)

சிங்கந்தன் னகத்தால் யானைக் கும்பகல் லறைதிறக்கப்
பொங்கியே சொரிந்த முத்தும் புரைபடா வேயின் முத்தும்
கங்குலி னிலவெ றிப்பக் காவிக ளலரா நிற்கச்
செங்கம லங்கு விந்து மூடியே திறந்தி டாதால்

(இ - ள்.) சிங்கமானது நகத்தினாலே யானையினது மத்தக மாகிய சிமிழைத்திறக்க மிகுந்து உதிர்ந்த முத்துகளும் குற்றமில்லாத மூங்கிலின் முத்துக்களும் இராவி [illegible] கிரணங்களை யெறிக்க நீலோற்பலங்களலர்ந்து செந்தாமரைப் பூக்கள் குவிந்து அலராமல் மூடிக்கொண்டே யிருக்கும்—என்றவாறு. (18)

பல்லரி யாக்கை வெங்கூர்ப் பற்பகு வெவ்வாய் வன்கண்
வல்லிய நகத்தான் மாய்ந்த மான்மத மணங்கள் வீசும்
கல்லகக் குகையிற் றெண்ணீ ரேற்றிடக் கறங்கு மோதை
தொல்லையில் எதிராய் மேதை யுறுவரை யழைத்தல் போலும்

(இ - ள்.) பலவரிகளையுடைய உடம்பும் வெவ்விய கூர்மையுடைய பற்களும் வெவ்விதான பெரிய வாயுமுடைய கொடியபுலியினது நகத்தினாலே கிழிக்கப்பட்டு மடிந்த கஸ்தூரி மிருகங்களின் மதங்கள் வாசனை யை வீசும். கற்குகைகளிற் றெளிந்தசலம் போயடிக்கச் சத்திக்கின்ற சத்தமானது சீக்கிரத்தி லெதிர்கொண்டு தெளிந்த முனிவரை யழைப்பது போலும்—என்றவாறு. (19

இன்னபல் வளங்க ளெய்த வனஞ்செறிந் திலங்கி யோங்குந்
தன்னிக ரில்லாத் தீர்த்த கிரியிடைத் தவத்தோர் சித்தர்
பொன்னில வமரர் வைகும் பொருந்திரை யருவி கூடு
நன்னர்வெள் ளாற்றின் றீர மெய்தினன் முனிவர் நாதன்



(இ - ள்.) இத்தன்மையான பலவளப்பங்கள் பொருந்திய வனங்களை நெருங்கிப் பிரகாசித்துயர்ந்த தனக்குச் சமானமற்ற தீர்த்தமலையினிடத்து முனிவருஞ் சித்தரும் பொன்னாட்டிலுள்ள தேவரும் இருக்கின்ற மோதுகின்ற அலைகளையுடைய அருவியாறு கூடுகின்ற நன்மை பொருந்திய வெள்ளாற்றங்கரையிற் சேர்ந்தார் முனிசிரேஷ்டராகிய துருவாசமுனிவர்—(20)

வளந்தனை மதித்தின் பாயம் மகிமையைப் போற்றி ஞானந்
தெளிந்திடு தலமி தென்று தவமது செய்ய வேண்டி
விளங்குமப் புனற்றீ ரத்தின் விண்முகின் மேவ வோங்கி
கிளர்ந்தசன் னிதியிற் றீர்த்த கிரியிறை யவனைக் கண்டே

(இ - ள்.) அவ்வளப்பங்களை மெச்சி மகிழ்ச்சியாகி யந்த மகிமையைப் புகழ்ந்து ஞானத்தை யுணர்த்துகின்ற ஸ்தலமிது வென்று தவஞ்செய்யக் கருதி ஒளிசெய்கின்ற அவ்வெள்ளாற்றங்கரையில் ஆகாயத்துள்ள மேகங்கள் தவழவுயர்ந்து சிறப்புற்ற கோபுரவாயிலில் தீர்த்தகிரி யீசரைத்தரிசித்து—

வணங்கினன் படிமேல் வீழ்ந்து மலர்க்கரங் குவித்து நன்று
குணங்குறி யில்லா ஞானக் குன்றமே கும்பக் கொங்கை
யணங்கொரு பாகா நாயேற் கருடா வேண்டு மென்றே
யிணங்குபே ரறிவி னேத்தி வசிக்கவே யிசைந்து நெஞ்சம்

(இ - ள்.) பூமியின் மிசை வீழ்ந்து வணங்கி மலர்போன்ற கைகளைக் கூப்பி நின்று குணமுங் குறியுமில்லாத ஞானமலையே, குடம்போன்ற ஸ்தனங்களையுடைய மலைமகளைப் பாகத்திலுடையவனே, அடியேனுக்குக் கிருபை செய்யவேண்டுமென்று மிகுந்த அறிவினாலேதுதித்து அங்கு வாசஞ் செய்யத் துருவாச முனியானவர் மனமிசைந்தார்—என்றவாறு. (22)

வண்டிசை முரலத் தீந்தேன் மல்குகான் முல்லை வல்லி
விண்டமல் லிகை படர்ந்த முழைப்பன்ன சாலை மேவிக்
கொண்டன வின்பங் கல்வி குரைகடல் கடந்து ஞானங்
கண்டவ ருறைந்தா ரங்குச் சீடர்கள் கருதிச் சூழ

(இ - ள்.) வண்டுகள் பாட இனிய தேனிறைந்த வாசனை பொருந்திய மலர்களையுடைய முல்லைக் கொடிகளும், மலர்ந்த மல்லிகைகளும் படர்ந்த குகைகளிலும் பன்னகசாலைகளிலும் இருந்து இன்பமுற்றுக் கல்வியாகிய சப்திக்கின்ற கடலைக்கடந்து ஞானத்தையுணர்ந்த முனிவர் அவ்விடத்தில் மாணக்கர் துதித்து சூழும்படிக்கு வாசமாயிருந்தார்—

தந்தொழில் வழாது நின்று தவத்திறம் வளர்த்தே யன்பு
முந்திய வதிதி பூசை முடித்துப்பல் காலஞ் செல்லக்
கந்தகன் மலர்ச மித்துத் தெர்ப்பைகள் கருத்தி னுன்னி
வந்தமா ணாக்க ரோடு மோர்தினம் வனத்திற் சென்றார்

(இ - ள்.) தமது இருக்கியங்கள் தவறாமலிருந்து தவத்தன்மையை வளர்த்து அன்புமிகுந்த அதிதிபூசைமுடித்துப் பலகாலம்போக, கந்தமூல மாகிய கிழங்குகள் நல்ல மலர்கள் காஷ்டங்கள் தெர்ப்பைகள் கொண்டுவர மனதில் நினைத்துச் சீடர்களோடு சேர்ந்து ஒரு நாள் வனத்திற்குப் போயி னர் துருவாசர்—என்றவாறு. (24)

விடியுமுன் னாகஞ் செல்லும் வேலைமா காம்ப ரப்பிப்
படரிருட் குழும்பெ றிந்து பாய்திரை யருட்டுந் தண்ணீர்க்
கடன்முகட் டுதித்தான் செய்ய கதிரவன் கண்டு செய்கை
முடியவே வேண்டி யங்கோர் கனையினை மூழ்க வந்தான்

(இ - ள்.) விடிவதற்கு முன்னமே தூரமாக நடக்கும்போது கிரணங் களை விரித்து நெருங்கிய இருட்கூட்டங்களைக் கடிந்து அலைதாவி மோதா நின்ற தெளிந்த நீரையுடைய சமுத்திரத்துச்சியிற் சிவந்த சூரியனுதயமா னது கண்டு காலைக் கடமை முடிக்கவேண்டி அவ்விடத்திலொரு தடாகத்தில் குளிக்க வந்தார்—என்றவாறு. (25)

வேறு.

ஆங்கது நிகழ்ந்தபின ராயிரக்கண் வேந்த
னோங்குமயி ராவதப் பிடரின்மிசை யுற்றுத்
தேங்குமிசை துந்துமி யொலித்திசை யளக்க
தூங்குமணி வெண்குடைகள் சுற்றிலும் நிழற்ற

(இ - ள்.) அவ்விடத்தி லவ்வண்ணமாக நடந்த பின்பு ஆயிரங் கண் களையுடைய தேவராசன் உயர்ந்த அயிராவதத்தின் முதுகின் மேல் ஏறி நிரம்பிய சப்தத்துடன் துந்துமி வாத்திய முழங்க முத்துக்கள் தொங்குகின்ற வெள்ளைக் குடைகள் சுற்றிலும் நிழலைச் செய்யவும்—என்றவாறு. (26)

அன்னநடை நுண்ணிடை யணிமுலைய சம்பைக்
கன்னியர்க ளாலவட்டம் சுகக்கவரி வீச
மின்னுபர தத்தொழில் விதிப்படி நடிக்க
கின்னரர்கள் கந்தருவர் கீதயிசை பாட



(இ - ள்.) அன்னம் போன்ற நடையும் நுண்ணிய இடையும் அழகிய ஸ்தனங்களுமுடைய தேவப் பெண்கள் ஆலவட்டம் போடச் சாமரம் வீச பிரகாசிக்கின்ற பரதநாட்டியத் தொழிலின் முறைப்படி நடனஞ் செய்ய கின்னரர் கந்தருவர் சங்கீதங்கள் பாட—என்றவாறு. (27)

மருத்துவ ரியக்கரொடு மாதவர் குழாங்க
டிருக்கருடர் கிம்புருடர் திக்கினுறை பால
ருருக்கியொடு சூழவொளி யந்தரத்தின் வீதி
யுருக்கிளர் விமானமிசை யூர்திமிசை யாக

(இ - ள். மருத்துவரும் இயக்கரும் முனிவர் கூட்டங்களும் சிறப்பை யுடைய கருடரும் கிம்புருடரும் அஷ்டதிக்குப் பாலரும் விருப்பத்துடனே ஆகாயவீதியி லுருவஞ் சிறந்த விமானத்தின் மேலும் வாகனத்தின் மேலும் ஏறிவரவும்—என்றவாறு. (28)

வந்தனன் சுவேதநதி தோன்றுமணி வெற்பிற்
கந்தமலர் சீர்ச்சுனைகள் காவினிடை நோக்கி
பந்தமறு சீடர்பலர் பங்கினில் நெருங்க
முந்துதுரு வாசமுனி மூழ்குசுனை கண்டான்

(இ - ள்.) வெள்ளாறு தோன்றுகின்ற அழகிய தீர்த்தகிரியின்கண் வந்தான். வாசனை பொருந்திய மலர்களையுடைய தடாகங்களையும் தோப்பு களையும் பார்த்துப், பற்றில்லாத சீடர்பலரும் பக்கத்தில் நெருங்க முதன்மை யான துருவாசமுனி ஸ்நானம் பண்ணுகின்ற தடாகத்தைப் பார்த்தான்—

அச்சுனையின் வந்தன னருந்தவனு மங்கே
யிச்சையோ டெதிர்ந்துபல வாசிக ளியம்ப
வச்சிர மலர்க்கரன் முனிவதன நோக்கி
நச்சர வெடுத்தபுவி நன்கினிருந் தீரோ

(இ - ள்.) பார்த்த அத்தடாகத்திற்கு வந்தான். அரியதவத்தை யுடைய துருவாசரும் அவ்விடத்திலாசையோடும் எதிர்சென்று ஆசீர்வாதங்களைச் சொல்ல வச்சிராயுதம் தாங்கிய மலர்போன்ற கையையுடைய இந்திரன் துரு வாசரது முகத்தைப் பார்த்து விடத்தை யுடைய அரவந் தாங்கிய பூமியில் நன்மையுற்றிருந்தீரோ—என்றவாறு. (30)

பொன்னுலகு விட்டிவண் புரிந்துவரு செய்தி
யென்னைமொழி கென்றிட விருந்தவ னுரைப்பான்

முன்னமொரு காலையில் வசிஷ்டர்முத லோரும்
மின்னதி தலத்தினிடை யாகமது செய்தோம்

(இ - ள்.) தேவலோகத்தை விட்டு இவ்விடத்தில் விரும்பி வந்த காரியமியாது சொல்லீரென்ன, பெருமை பொருந்திய துருவாசமுனிவர் சொல்வார். முன்னொரு காலத்தில் வசிஷ்டர் முதலானவரும் இந்த ஸ்தல நதி தீரத்தினிடத்தில் யாகம் செய்தோம்—என்றவாறு. (31)

மின்பா சணிந்தவர் விசாரந்தருள் கொடுத்தா
ரன்பினொடு நாள்பலருந் துயின னன்றே
மின்புதர வெந்தகரு மிந்தகருங் கொல்லா
நன்பதியி தென்றுமன நாடியிவண் வந்தோம்

(இ - ள்.) பிரகாசிக்கின்ற மழுவைத் தாங்கிய பரமசிவன் சீக்கிரத்தில் கிருபை தந்தார். அன்புற்றுப் பல நாளிருந்து பின்பு நீங்கினோம். இன்பத்தைக் கொடுப்பதற்கு எந்த ஸ்தலமும் இத்தலத்திற் கிணையாகாது. நல்ல ஸ்தலமிது வென்று மனதிலாலோசித்து இவ்விடத்திற்கு வந்தோம்— (32)

சேலெனும் விழிச்சியங்கர் தீர்த்தகிரி நாத
ராலயத்தைக் கண்டன மருச்சனைகள் செய்ய
சீலமலர் வனச்சமித்துந் தெர்ப்பை யிலை யெண்ணிக்
காலையிவண் வந்தனம் கதிரவ னுதித்தான்

(இ - ள்.) சேல் மீனுக்குச் சமானமாகச் சொல்லுகின்ற கண்களையுடைய உமையவளைப் பாகத்திலுடைய தீர்த்தகிரீசரது கோவிலைப் பார்த்தோம். பூசை செய்ய ஒழுங்காகிய புஷ்பங்கள் காஷ்டங்கள் தர்ப்பைகள் இலைகளை வேண்டி விடியற்போதி லிவ்விடத்திற்கு வந்தோம். சூரியனுதயமாயினான்—என்றவாறு. (33)

இப்புனலின் மூழ்கியிவ ணெங்கடன் கழித்தே
மொப்பின் மணி தீர்த்தகிரி நாதருள் ளுவக்க
மெய்ப்பரிவி னொடுபூசை செய்துமேல் விரும்பு
மப்பதியின் வாசமகிழ் வாயுற நினைந்தே

(இ - ள்.) இந்தத் தீர்த்தத்திற்குளித்து இவ்விடத்தி லெமது காலைக்கடன் முடித்தோம். ஒப்பற்ற இரத்தினமாகிய தீர்த்தகிரி யீசர் திருவுளமகிழ மெய்யான் பினுடனே யாராதனை செய்து பின்பு விருப்பமுற்று அந்தத் தலத்திற் சந்தோஷமாய் வாசஞ்செய்ய நினைத்தோம்—என்றவாறு. (34)



நறையுயிர்க் கும்பஞ்ச தருநீழலின்னு வோய்நீ
முனை [illegible] துவன மொழிதியென் றுரைக்க
விறல்புரிவ லாரிமுனி வித்தகனை நோக்கி
யுறுபரி சொழுங்குட னுரைப்பன து கேண்மோ

(இ-ள்.) தேனைத் தருகின்ற பஞ்சகற்பக விருக்ஷத்து நிழலிலிருக்கின்ற நீர் இவ்விடத்துக்கு வந்ததென்ன முறைமையாச் சொல்லுவீர் என்றுரைக்க வெற்றி பொருந்திய தேவேந்திரன் அந்த ஞான முனிவனைப்பார்த்து, நான் வந்த தன்மையை மார்க்கமாய்ச் சொல்லுவேன் அதனைக் கேட்பாய்— (35)

வேதன்முன் நாரதனுக் கோர்தினம் விரித்தே
யோதினன் சுவேதபுரி யுண்மைக ளெலாமவ்
போதவையி லுள்ளவர்கள் யாவரும் புரிந்தே
மாதவமீ தென்றுள மதித்தனர்கள் காண

(இ - ள்.) முன்னொரு நாள் நாரதமுனிக்கு வெள்ளூர் ஸ்தலத்தின் உண்மைகளை யெல்லாம் பிரமதேவர் சவிஸ்தாரமாகச் சொன்னார். அப்பொழுது சபையிலிருந்தவர்கள் யாவரும் இது மஹா ஸ்தலமென்று மனதுக்குள் மெச்சினார்கள். அத்தலத்தைக் காணுதற்கு—என்றவாறு, (36)

அன்றுமுத லின்றளவு மாதரமிகுந்து
மன்றல்கமழ் தீர்த்தவரை மாநதிவெள் ளாறை
என்றுவிழி காண்குறுவ மென்றுநினைந் திருந்தே
னின்றது கிடைத்ததென வின்பமொடு ரைத்தே

(இ - ள.) அந்நாள் முதல் இந்நாள் வரையில் ஆசை மிகுந்து வாசனை பரிமளிக்கின்ற, தீர்த்த மலையினின்று வருகின்ற மஹா நதியாகிய வெள்ளாறு சூழப்போகின்ற சுவேத மஹா ஸ்தலத்தை எந்நாளிந்தக் கண்கள் காணப்பெறுமென்று நினைந்திருந்தேன். அது இன்றைக்குக் கிடைத்ததென்று சந்தோஷத்துடனே சொல்லி—என்றவாறு. (37)

மாதவனொ டிந்திர னுமறிதிலாவெள் ளாற்றிற்
காதலொடு தோய்ந்துளம் களிப்பினொடு போற்றி
யேதமறு தீர்த்தகிரி யீசனை வணங்கி
வேதவொளி வெள்ளிநகர் மேவினன் விரும்பி.

(இ - ள்.) அத்துருவாசமுனிவரோடு தேவேந்திரனும் மோதுகின்ற அலையையுடைய வெள்ளாற்றி லாசையுடனே மூழ்கி மன மகிழ்ச்சியோடு

குற்றமற்ற தீர்த்தகிரி யீசனை ஸ்தோத்திரம்பண்ணித் தொழுது வேத கோஷ்டங்களையுடைய சுவேதபுரியை விருப்பமுற்றுச் சேர்ந்தான்— (38)

வேறு.

திருமலி வேள்வி யூரிற் சேர்ந்துவெள் ளாற்றின் றீர
மருவிநீர் தோய்ந்து ஞான வசிஷ்டரா சிரமம் நோக்கி
யரியபொன் மாரி பெய்த தாதலாற் பொன்னு மதென்
றுரிமையா யன்பு கூர்ந்தங் காலயத் துட்பு குந்தான்

(இ - ள்.) செல்வ மிகுந்த வெள்ளூரில் சேர்ந்து வெள்ளாற்றிற் பொருந்தி நீராடி அவ்வாற்றங்கரையில் ஞானமுணர்ந்த வசிஷ்டமுனிவரது ஆசிரமத்தைப்பார்த்து அரிதான சொர்ணமழை பெய்தமையால் இது பொன்னூடாமென்று உரித்தான அன்பு மிகுந்து அவ்விடத்திருக்கின்ற சிவாலயத்துள் புகுந்தான்—என்றவாறு. (39)

இறைவர்தாந் தோன்றி னாரை வலங்கொடு வணங்கி யேத்தி
பெறும்பரி செல்லாம் பெற்றே னென்றுபே ருவகை பொங்கிக்
கறைமிடற் றெந்தை முக்கட் கனியருள் கருணைக் காளாய்
மறைபுக ழுத்த லத்திற் செய்தனன் வாசந் தின்னாள்

(இ - ள்.) தாந் தோன்றிய கடவுளாரைப் பிரதக்ஷிணம்வந்து பணிந்து ஸ்தோத்திரம் பண்ணிப் பெறவேண்டிய பாக்கிய முழுவதும் பெற்றேனென்று பெரிதான களிப்பு மிகுந்து கரிய கண்டமும் மூன்று கண்களுமுடைய எமது பிதாவாகிய கனிபோல்வார் அருள்செய்கின்ற கிருபைக்குப் பாத்திரனாகி வேதங்கள் துதிக்கின்ற அவ்வெள்ளூரிற் சிலநாள் வசித்திருந்தான்—என்றவாறு. (40)

சுவைதரும் கரும்பின் முத்தஞ் சாருமூலச் செறுத்தன் மேதிக்
கலைவயிடி யுறந்த மாழ்கிக் கதிகியோ நெல்லிற் சென்றங்
கவிர்தர லத்தா லஞ்சி யயர்கருஞ் சேற்றிற் றுஞ்சும்
புவிபுகழ் வெள்ளூர்த் தன்மை நோக்கினன் வியப்பு பொங்க

(இ - ள்.) இனிப்பைத் தருகின்ற கரும்பினது முத்துக்கள் சாரா நின்ற முலைகளும் மலைகளும் மடியுமுடைய எருமைகளது கன்றுகள் ஆல் கனிலுமுறத்தத் துன்பமுற்றுச் சீக்கிரத்தில் நெல் வயலிற் செல்ல அவ்விடத்திற் பிரகாசிக்கின்ற முத்துகளாற் பயந்து பக்கத்தில் கறுப்பு நிறமான சேற்றில் நித்திரைசெய்கின்ற வுலகம் புகழா நின்ற வெள்ளூரின் வளப்பத்தை அதிசய மிகப் பார்த்தான்—என்றவாறு. (41)



சத்திர சாலை கோடி சதுர்மறை வேள்விச் சாலைச்
சித்திர மாட மேடைத் தெருவெலாங் கண்டின் பாகு
மித்தல மகிமை வேத னன்றியா ரியம்பு வாரொன்
றத்தரு நீழல் வேந்தன் சென்றன னமரர் நாட்டில்

(இ - ள்.) ஒரு கோடி அன்ன சத்திரசாலைகளும் வேதங்களொலிக்கின்ற யாக சாலைகளும் அழகியமேல் மாடங்களுமாய் விளங்கிய தெருக்களையெல்லாங் கண்டு மகிழ்ச்சி யடைகின்ற இந்த ஸ்தலத்தின் மகத்துவத்தைப் பிரமதேவனே யல்லாது மற்ற யார் சொல்ல வல்லாரென்று அந்தக் கற்பக நிழலிலிருக்கின்ற இந்திரன் தேவலோகத்துக்குப் போயினான்.—என்றவாறு.

எண்ணரு மகிமை வெள்ளூர்ச் சரித்திர மீதொன் றென்று
பண்ணவர் கேட்பச் சூதன் பகர்ந்திட மகிழ்ச்சி கூர்ந்து
புண்ணிய தலத்தின் காதை மற்றொன்று புகறல் வேண்டு
மண்ணலே யென்னச் சூதன் முனிவரார்க் கறைய லுற்றான்

(இ - ள்.) நினைத்தற்கரிய மகத்துவமுடைய சுவேதபுரியின் சரிதையி தொன்றுமென்று முனிவர் கேட்கும்படி சூதமுனி சொல்லச் சந்தோஷமிகுந்து அந்தப் புண்ணிய ஸ்தலத்தின் சரித்திரத்தை இன்னமொன்று சொல்லவேண்டும் சுவாமி என்று வினவிய அந்த முனிவர்களுக்குச் சொல்ல வாரம்பித்தார்—என்றவாறு. (43)

இந்திரச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 8க்குத் திருவிருத்தம்—(354)

## 9.வது சுசீலச் சருக்கம்

சதுர்மறை நெறியும் வேள்விச் சடங்குமா தவமு மோங்க
விதிமுறை வளர்க்கு மேலோர் வெதரிகாச் சிரமந் தன்னில்
மதிதெளி வறிவின் மிக்க மகிமையன் பவவி ருட்கோ
ருதைய வாதவனைப் போல்வா னுரோமசனென்னும் பேரான்

(இ - ள்.) நாலு வேதங்களின் ஒழுக்கமும் யாக கிருத்தியங்களும் தவங்களும் முறைப்படி வளரச் செய்கின்ற பெரியோர் வசிக்கின்ற வெதரிகாச்சிரமத்திலிருப்பவன்; புத்தியிலும் தெளிவிலும் விவேகத்திலு மிகுந்த பெருமையுள்ளவன்; பிறவியென்னும் இருளுக்கு உதிக்கின்ற சூரியனை யொத்தவன்; ரோமசமுனி என்னும் நாமமுடையவன்—என்றவாறு.

இந்திர னிந்தி ராணி யிருநிதி பஞ்ச தாரு
மூந்துமா ரமுதும் வெண்பாற் கடலிடை மூழ்கச் சொல்லு

லாமந்துடைத் தவத்தின் மிக்கவொரு துருவாசன் றன்னைச்
சிந்தையிற் காண வேண்டி நினைந்தனன் றிறம தாக

(இ - ள்.) இந்திரனையும் இந்திராணியையும் இருந்திகளையும் ஐந்து கற்பகங்களையும் முன்னெடுத்த அமிர்தத்தையும் வெண்ணிறமான பாற்கடலில் மூழ்கச் சொல்லிய வலிமை பொருந்திய தவத்தின் மிகுந்த ஒப்பற்ற துருவாச முனிவனைக் காணவேண்டுமென்று உறுதியாக மனத்தில் நினைத்தார் ரோமசமுனி—என்றவாறு. (2)

விருப்பமென் மேலு மோங்க வெதரிகாச் சிரம நீங்கிக்
கருப்பவ மொழிக்கு முக்கட் கடவுள்வாழ் தீர்த்த வெற்பி
லிருக்குமச் செய்கை யோர்ந்து விரைவினி லெய்த வெண்ணித்
தருக்கிளர் கானங் குன்று சாரன்மா வரைக டந்தே

(இ - ள்.) ஆசையானது மேலுமேலும் அதிகரிக்க வெதிரிகாச் சிரமத்தை விட்டுக் கருவிற் றங்குகின்ற பிறப்பை நீக்குகின்ற மூன்று கண்களையுடைய பரமசிவனெழுந்தருளி யிருக்கின்ற தீர்த்தமலையில் துருவாசமுனி யிருக்கின்ற செய்தியைத் தெரிந்து சீக்கிரத்திற் செல்ல நினைந்து மரங்கள் செழித்திருக்கின்ற காடுகளுஞ் சிறுமலைகளுஞ் சாரல்களும் பெரிய மலைகளும் கடந்து—என்றவாறு. (3)

எய்தினன் றீர்த்த வெற்பி லெய்துரு வாசர் வாசஞ்
செய்யுமாச் சிரமந் தன்னிற் சேர்தலு மெதிர்கொண் டாங்கே
யையரோ மசனே யிங்கு வருகவென் றழைத்துள் ளன்பாய்
மெய்யுப சாரம் பண்ணி வழிவரு விழுமந் தீர்த்து

(இ - ள்.) தீர்த்தமலையைச் சேர்ந்து நற்குணமுடைய துருவாசமுனி யிருக்கின்ற ஆசிரமத்தில் சேரவும் துருவாசர் எதிர்சென்று ஐயா உரோமசரே இவ்விடத்திற்கு வாருமென்று அழைத்துப் போய் உள்ளன்போடு மெய்யான வுபசாரங்களைச் செய்து வழிநடந்து வந்த சிரமத்தைத் தீர்த்து—

கந்தமூ லங்க ளீய விருப்பினுற் கைக்கொண் டாங்கே
யந்துரு வாசர் வாழு மாச்சிர மத்துக் கப்பாற்
சிந்தைகூர் பன்ன சாலை செய்துறை கின்ற நாளிற்
புந்தியின் மகிழ்வா யோர்நாள் வனத்தயல் போந்த போது

(இ - ள்.) கந்தமூலங்களைக் கொடுக்க விருப்பத்தோடு வாங்கிக்கொண்டு பின்பு துருவாசரிருக்கின்ற ஆசிரமத்திற்கு அப்புறத்தில் மனது



விரும்பிப் பன்னசாலை செய்து அதில் வாசஞ் செய்திருக்கின்ற நாளில் ஒரு நாள் மனமகிழ்ச்சியாய் அந்த வனத்தின் பக்கத்திற் செல்லும்போது—

வேறு.

ஆர ணக்குலத் துதித்தவ னணிமணிப் புளகப்
பூர ணக்குடத் தனத்தியர் புரிதரு மதனன்
சீரி ணக்குமுந் நூலினன் முடியினற் சிகையன்
றூர லைத்தெழின் மார்பினற் சந்தனங் கமழ்வோன்

(இ - ள்.) பிராமண வம்சத்தில் பிறந்தவன்; இரத்தின பாணங்களையுடைய மாதர் ஆசைப்படுகின்ற மன்மதனை யொத்தவன்; சிறப்புறச்சேர்த்த முந்நூலையணிந்தவன்; சிரசிற்குடுமி முடிந்து மாலைகளையணிந்த அழகிய மார்பிற் சந்தனவாசனை பரிமளிக்கத் திமிர்ந்திருப்பவன்—என்றவாறு. (6)

தன்னெ றித்தொழில் யாவையுந் தணந்துண் மாலாயத்
துன்னெ றிக்கடி தொடுத்துழன் றூசையிற் றுவக்காய்
மன்னு பொய் கொலை சூதொடு காமமே மலிந்து
பொன்மு தற்கள வனைத்தையும் புரிந்தனன் புரையாய்

(இ - ள்.) தனது ஆசாரச்செய்கைகள் முழுதும்நீங்கி மனது மயக்கங்கொண்டு துர்மார்க்கப் பிசாசபற்ற வருத்தி மாதராசையிற் பிடிபட்டுப் பொய்யுங் கொலையுஞ் சூதும் காமமுமிகுந்து திரவிய முதலாகிய திருட்டுகளெல்லாம் குற்றமுறச் செய்தான்—என்றவாறு. (7)

ஈறில் பாதக மியற்றிய தன்மையா லிவனைக்
கூறு பாதக னென்றுபேர் சொல்லுவார் குணத்தோ
ரூறு மாப்பெரும் பாதக மியற்றிடி லுடனே
வீறி யிம்மையிற் றுயர்தரு மென்னு நூல் விதியால்

(இ - ள்.) முடிவில்லாத பாவங்களைச் செய்த குணத்தினால் இவ்வந்தணனைச் சொல்லுகின்ற பாதகனென்று பெயரிட்டு வழங்குவார் நல்லோர். மிகுந்த பெரிய மகாபாதகம் செய்தாலுடனே பெருகி இப்பிறப்பிலேயே துன்பத்தைக் கொடுக்குமென்ற நூல் முறையால்—என்றவாறு.

எணிணில் பாதக மிவன்றனை வருத்தலு மேங்கிப்
புண்ணு மீயொடு குருதியும் புழுக்களு மலிந்து
நண்ணு துன்முடை நாற்றமே சுற்றெலா நாற
மண்ணின் மாதுயர் கொண்டவன் விழிதுயில் மறுத்து

(இ - ள்.) அளவற்ற பாவங்கள் இவனைவருத்தஞ் செய்யவும் விசமுற்றுப் புண்களும் ஈக்களும் இரத்தமும் புழுக்களுமிருந்து பொல்லாத முடைநாற்றமே உடற்புற மெல்லாம் நாறப் பூமியின் கண்மிகுந்த துன்பமடைந்து கண்ணுக்கு நித்திரை யில்லாதவனுகி வருத்தப்பட்டு— (9)

அறிவில் லாமையாற் செய்தன மளவிலாப் பவங்கண்
முறைமை யாயினிப் போம்வகை யென்னென முன்னிக்
கறைமி டற்றாக் கச்சினன் கழலிணை கருதி
மறுகி யேமிகத் திரிந்தனன் வலங்கொடு புவியை.

(இ - ள்.) அறிவில்லாமையினுலே யளவற்ற பாவங்களைச் செய்தோம். ஒழுங்காக இனிப்போகும் வழி எவ்வாறென்று யோசித்துக் கறுப்பு நிறமான கண்டத்தையும் அரவக்கச்சினையுமுடைய சிவனது பாதத்திணையைத் தியானித்து மிகவும் துன்பமுற்றுப் பூமியை வலங்கொண்டு திரிந்தான்—என்றவாறு. (10)

அந்த ரக்கரு முகிற்குழாங் கண்டுயி லடையுஞ்
சந்த நீள்பொழிற் றீர்த்தவெற் பிடத்தினிற் சார்ந்து
முந்து ரோமச முனிவனைக் கண்டுபோய் முறையிட்
டுய்ந்து போம்வகை நீருரைப் பீரென வோதி

(இ - ள்.) ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற கரியமேகக் கூட்டங்கள் நித்திரை செய்கின்ற நெடிய சந்தனச் சோலைசூழ்ந்த தீர்த்தமலைச் சமீபத்திலடைந்து அவ்விடத்தி லெதிரிட்ட உரோமச முனிவரைக் கண்டு அவரிடத்திற்சென்று அழுது நான் பிழைத்துப்போம் வழியைச் சுவாமி நீர்சொல்வீர்

தொழுது பன்முறை யவனிமேல் வீழ்ந்தடி துதித்து
அழுது கண்கணீர் சோரவுள் ளாவியங் கயர்ந்தே
பொழிவில் பாதக மெண்ணில வுஞற்றிய கொடியோன்
பிழையி னுன்மிகத் துயர்கொள விளைந்தது பெருநோய்

(இ - ள்.) அவரது பாதங்களைப் பலதரம் பூமியின் மிசை விழுந்து வணங்கி ஸ்தோத்திரம் பண்ணி அழுது கண்களில் நீர்சொரிய மனதும் பிராணனும் வருந்தித் தீருதற்கரிய பாவங்களை அளவின்றிச் செய்த பொல்லாதவனுகிய வெனது தப்பிதத்தினுல் மிகவும் துன்பத்தை யனுபவிக்கப் பெரிய வியாதியானது சம்பவித்தது—என்றவாறு. (12)



மான திப்புன லெண்ணில தோய்ந்தனன் வரைமா
னுன மென்முலைத் தழும்புமார் பிலங்கிய நாதர்
தான மர்ந்தமா தலங்களு மெண்ணில தங்கி
யீன மீதறப் பணிந்தது மெத்தனை தினமே

(இ - ள்.) அளவற்ற பெருமை பொருந்திய புண்ணியத் தீர்த்தங்களில் முழுகினேன். மலைமகளாகிய மானைப் போன்ற உமாதேவியினது கஸ்தூரி திமிர்ந்த மிருதுவான முலைச்சுவடு மார்பிற் பிரகாசிக்கின்ற கடவுளார் வீற்றிருக்கின்ற அளவில்லாத மகா ஸ்தலங்களிலுமிருந்து குற்றமாகிய வினைநோய் கெடும்படிக்கு வணங்கினதும் எவ்வளவோ நாள்கள். 13

அரிய மாதவ ராச்சிர மங்களி லடைந்து
விரியு மென்றுயர் விளம்பிய தினங்களும் பலவே
யரிய விப்பெரும் பாவமீ தொன்றினு மகலா
தெரி யெனச்சுடு கின்றதென் செய்குவே னிறைவா

(இ - ள்.) அரிதானதவம் செய்கின்ற முனிவர் ஆச்சிரமங்களிற் சேர்ந்து மிகுதியாகின்ற என்னுடைய துன்பத்தைச் சொல்லிக்கொண்ட நாட்களும் பலவாகும். இந்தப் பெரிய பாவத்துக் குரிமையாய்வந்த இந்த வியாதியானது ஒன்றிலும் போகாமல் அக்கினியைப்போல் தகிக்கின்றது. என்னசெய்வேன் சுவாமி—என்றவாறு. (14)

உன்ன டித்திருத் தாமரைப் போதொரு மருந்து
நின்மொ ழித்திற மிதற்கொரு மந்திர நெறியா
மென்ன வேதுணிந் தடைந்தன னருள்விழி யொளியா
மன்னு செய்கைவே றில்லையே யிலவையோர் மாற்றம்

(இ - ள்.) உன்னுடைய அழகிய பாதத்தாமரைமலரே ஒரு மருந்து. உனது வார்த்தை கலமே யிவ்வினைக்கு ஒருமந்திர ஒழுங்குமாகு மென்று துணிந்து நின்னைச்சரணமடைந்தேன். கிருபாதிஷ்டி யினுலினி நீரிவ்வினையைப் பார்க்கவேண்டும். செய்யத்தக்கது வேறில்லை வேறில்லை— (15)

ஐய நின்னடைக் கலமடைக் கலமினி யடியேன்
செய்யு மாறிது வென்றெரு திருவருள் புரியாய்
யைய வேன்றெனத் தளர்ந்தவ னிற்பது கண்டு
தூய்ய ரோமச முனிவான் விழியருள் சார்ந்து

(இ - ள்.) சுவாமியுனது பாதங்களுக்கு அடியேன் அடைக்கலமடைகவும். செய்யும் வண்ணமிதுவென்று ஒரு அநுக்கிரகம் செய்யவேண்டு வஞ்சகனாகிய எனக்கென்று துன்பமுற்று அப்பாதக னிற்பதைக்கண்டு பரிசுத்த மனதையுடைய ரோமச முனியானவர் கண்ணருள் பெருகி— (16)

பாதகம்பல வன்மையிற் பயிற்றிய படிறு
யீறு வல்வினை யெத்தலம் அருநதி யெவையும்
தீதி லாச்சிரமங்களுந் தீர்ப்பதற் கொழியா
தாத லாலிதற் குண்மையாந் தருமமொன் றறைவன்

(இ - ள்.) பல்பாவங்களை யுனது வலிமையினாலே செய்த பொய்யனே இதுவலிதான வியாதி. எந்தஸ்தலங்களாலு மெந்த நதிகளாலும் குற்றமற்ற ரிஷிகளாசிரமங்களாலும் இந்தக் கொடிதான வியாதியைத் தீர்க்கப்போகாது. ஆதலாலிதற்குச் சத்தியமாகிய ஒரு தருமஞ்சொல்லுகிறேன் கேள்—

கருத்த தொன்றியே யன்புநெக் குருகமெய்க் காதல்
பெருக்க வத்திறங் கேட்டியென் றுவகையே பெருக
வுரைக்க லுற்றனன் பைந்தழை யுயர்கிளை வில்வத்
தருக்க ளான்மிக விளங்கிய தோர்வனந் தகையாய்

(இ - ள்) மனமொருமித்து அன்பினாலுருகிக் கரைய உண்மையான அந்த மொழியைக் கேட்பாயாக என்று மகிழ்ச்சி பொங்கச் சொல்ல வாரம்பித்தார். பசிய இலைகளும் உயர்ந்தகிளைகளுமுள்ள வில்வ மரங்களால் மிகவும் பிரகாசிக்கின்றது ஒரு சோலை அழகியதாயிருக்கின்றது—என்றவாறு. (18)

அவ்வ னஞ்சொலில் வசிஷ்டனா முனிவ னாசிரமம்
மெய்வ னத்தயல் வெண்ணதி வெண்ணதித் தீர்த்தங்
கொவ்வை வாய்மயில் பங்கர்தாந் தோன்றினர் கோயில்
எவ்வ நீங்குவெள் ளூரென வத்தல மிசைப்பார்

(இ - ள்.) அந்தச்சோலையைச் சொல்லுமிடத்து வசிஷ்டனென்கின்ற முனிவரது ஆசிரமமாகும். அந்தத்தோப்பின் சமீபத்தில் வெள்ளாறு ஒன்று வருகின்றது. அவ்வாற்றங்கரையில் கோவைப் பழம்போன்ற அதரத்தையுடைய மயிலையொத்த மலைமகள் பாகராகிய சுயோற்பத்தீசர் ஆலயமொன்றிருக்கின்றது. துன்பத்தைக் கெடுக்கின்ற வெள்ளூரென்று அந்தஸ்தலத்துக்குப் பெயர் சொல்லுவார். (19)

ஆங்கு நீவிரைந் தேகியந் நதியினீ ராடிப்
பாங்க ராட்கொள வென்றுதாந் தோன்றிய பரம



ரோங்கு மாலயம் வலங்கொடே யுள்ளுறப் புகுந்து
தேங்கு காதலிற் பணிந்துநாத் துதித்துளந் தெளிவாய்

(இ - ள்.) அத்தலத்திற்கு நீ சீக்கிரத்திற் சென்று அவ்வெள்ளாற்றில் மூழ்கி அதன் பக்கத்தி லிருக்கின்ற அடியார்களை ரக்ஷிக்கும்படி தாமேலிங்க வடிவமா யெழுந்தருளிய மகாதேவரது உயர்ந்த கோவிலைப் பிரதக்ஷணமாக வந்துள்ளே சென்று பரிசுத்த மனதோடு வணங்கி நாவினால் தோத்திரம் பண்ணித் தொழுது—என்றவாறு. (20)

யாக சாலையி னீற்றினை யெடுத்துட லணிந்து
தாக நீக்குமவ் வில்வநீ ழலினிடைத் தங்கி
யோக மிக்கவெள் ளூரிடை வாசமா யுற்று
லேகு மிவ்வினை யீதலா லொன்றினு மேகா

(இ - ள்.) யாக சாலையில் விபூதியை யெடுத்து உடம்பிற் பூசிப் பவதாகத்தைப் போக்குகின்றஅவ்விடத்திருக்கின்ற வில்வமரத்து நிழலிலிருந்து உற்சாக மிகுந்தவெள்ளூரினிடத்தில் வாசஞ் செய்திருந்தால் இந்தக்கொடிய வியாதி நீங்கும். இதனைத் தவிர மற்றொன்றினாலும் நீங்காது—என்றவாறு.

சத்தி யம்மிதை யுண்மையாய் மனதிடைத் தங்க
வைத்தி டாயினி முன்னமோர் சரிதையிவ் வணமா
யத்த லத்தினி னடந்ததிவ் வளவென வறியாப்
பத்தி யாம்பல புவனமும் மகிழ்ந்திடும் பரிசு

(இ - ள்.) இது சத்தியமாம். இதனையுண்மையாக உன் உள்ளத்திலிருத்தி நினைக்கக்கடவாய். இனிமேல் முன்பு ஒரு சரித்திர மிவ்விதமாக அந்த ஸ்தலத்தில் நடந்தது. இவ்வளவென்று உணரப்படாத ஒழுக்கமாம் பலவுலகமும் மகிழுந்தன்மை—என்றவாறு. (22)

வேறு.

அள்ளனெடு நீர்வயலி லன்னநிரை துஞ்சல்
கொள்ளவள மேபெருகு குண்டின புரத்தி
லுள்ளமறை யோர்மக புநித்துமகிழ் கின்ற
வெள்ளலருஞ் சம்புக னெனும்பெயர் படைத்தோன்

(இ - ள்.) சேற்றையுடைய நிறைந்த நீர் இருக்கின்ற வயல்களில்அன்னத்தொகுதிகள் நித்திரை செய்ய வளப்பமிகுந்த குண்டினபுரத்திலிருக்

கின்ற வேதியரது வம்சத்திற் பிறந்து களிப்புற்றிருக்கின்றவன். நிந்தையில்லாத சம்புகனென்னும் பெயர் பெற்றவன்—என்றவாறு. (23)

புண்டரிக நாண்மலர் பொலிந்தநறை வாச
முண்டுமகிழ் கொண்டதனி லோடிமறி பட்ட
வண்டிணைகள் போலவத னத்திடை கருங்கட்
கொண்டமட மாதினை வதைத்திடு கொலைக்கு

(இ - ள்.) தாமரையினது அன்றலர்ந்த மலரிற் சிறந்த வாசனையுள்ள தேனையுண்டு களிப்புண்டு அம்மலரின்கண்ணே யோடித் தடைப்பட்ட இரண்டு பெட்டை வண்டுகளைப்போல முகத்தினிடத்திற் கரிய கண்களையுடைய தனது மனைவியாகிய மடமைபொருந்திய பெண்ணைக் கொன்ற ஸ்திரீஹத்தி தோஷத்திற்கு—என்றவாறு. (24)

நெஞ்சுருகி மாழ்கிவிழி நித்திரையும் விட்டா
னஞ்சியுணு மூணையு மகற்றின னடங்கா
நஞ்சினை யருந்தியுழல் வாரென நடுங்கி
வஞ்சமிகு தன்செயலும் வந்தது நினைப்பான்

(இ - ள்.) மனது கரைந்து வருத்தப்பட்டுக் கண்ணுறங்குவதும் நீங்கினான். பயந்து உண்கின்ற உணவையும் நீக்கினான்; மிதமற்ற விஷத்தைப் புசித்து வருந்துகின்றவரைப்போல விதிர்விதிர்த்து வஞ்சகமிகுந்த தனது கெட்ட செய்கையையும் சம்பவித்த துன்பத்தையுங் கருதினான். (25)

அன்னமறை யோனுயர் சிவாலய மனேகம்
மன்னினை நதிப்புனல் வரம்பில குளித்தா
னுன்னரிய பாவவினை யொன்றினும் விடாதால்
முன்னவன்வெள் ளூரனுகி மூழ்கினன் வெள்ளாறு

(இ - ள்.) அத்தன்மையனான சம்புகனென்னும் பிராமணன் மேலான அனந்த சிவாலயங்களையடைந்தான். அளவற்ற நதிகளில்மூழ்கினான். நினைத்தற்கரிய பாவ வினையானது ஒன்றிலும் நீங்காமல் முதற் கடவுள் வாழ்ந்தருளிய வெள்ளூரையடைந்து வெள்ளாற்றிற் குளித்தான்—என்றவாறு.

பின்பரம னுக்கடிமை பேணிய திறத்தாற்
றுன்பவினை யேகியொரு சோதியுரு வானா
னன்பினுட னன்னகரில் வாசமுற லானா
யின்பவமு மேயகல வவ்வண நினைத்தி



(இ - ள்.) பின்பு சுயோற்பத்தி யீசரது தொண்டு விரும்பிச் செய்த தன்மையால் துயர் செய்கின்ற தீவினையானது நீங்கி யொப்பற்ற பிரகாசம் பொருந்திய வடிவுடையவனானான். அன்புகொண்டு அவ்வெள்ளூரில் வசித்திருக்கப்பெற்றான். உன்னுடைய பாவமு நீங்குதற்கு அந்தப்பிரகாரம் நினைப்பாய்—என்றவாறு. (27)

என்னுமுனி ரோமசனை யின்பொடு துதித்தே
யன்னவகை செய்குவன தெத்திசையி னையா
நின்னருளுரைத்தியென நேரின்முனி சொல்வார்
மன்னுமதி பாதகம் வளர்த்தமட வோய்கேள்

(இ - ள்.) இப்படியென்று சொன்ன ரோமச முனிவனைச் சந்தோஷத்துடனே ஸ்தோத்திரம்பண்ணி அந்த வண்ணஞ் செய்வேன்; அத்தலமெந்தத் திசையில் சுவாமி கிருபையினாலே சொல்வீரென்ன ஒப்பற்ற ரோமச முனியுரைப்பார். பொருந்திய மிகுந்த பாவங்களை வளரச் செய்த அறிவிலாதவனே கேட்பாய்—என்றவாறு. (28)

கூறுநக ரண்ணிது குரோசமுள தார
மாறுவ சிஷ்டமுனி யாச்சிரம மங்கே
வீறிவளர் வில்வவன மெய்த்தரு வெழுந்தே
யேறுவது வெண்கயிலை யேணியது போலும்

(இ - ள்.) சொல்லிய அத்தலம் சமீபத்திலிருக்கின்றது; யோசனை தூரமாம்; ஒழுக்கம் பொருந்திய வசிஷ்ட முனிவரது ஆசிரமம் அவ்விடத்திலிருக்கின்றது. பெருத்து வளராநின்ற வில்வமரச் சோலையிலிருக்கின்ற மரங்கள் வெள்ளிய கயிலையங்கிரிக்கு ஏறவைத்த ஏணியை ஒத்திருக்கும்—என்றவாறு. (29)

பாயிரு டோக்குமொரு பானுகிர ணங்க
ளாயிரமு முட்புகு நிறத்தினறி யாவா
மீயுயர் பனைத்திரள் வரிக்குயின் மிகுந்தே
தூயகலாழ வில்லிவிரு தென்பது தெரிக்கும்

(இ - ள்.) பரவிய விருளையோட்டுகின்ற ஒப்பற்ற சூரியனது ஆயிரங் கிரணங்களி லொன்றாயினும் உள்ளே நுழையுந் தன்மையிற் றெரியாதன வாகி மேலே யுயர்ந்த கிளைகளின் கூட்டங்களிற் பொறிகளையுடைய குயில்கள் கூவுதல் பரிசுத்தமான கரும்பு வில்லையுடைய மன்மதனது விருதாகிய எக்காள வாத்திய மென்பதைத் தெரிவிக்கும்—என்றவாறு. (30)

பொன்னிற மலர்த்திரள் பொலிந்தகரு நாவன்
மன்னுகனி கஞ்சமென மலர்க்குள்விழு பான்மை
நன்னதிப்பெண் ணீலநிற நன்கழங் கெறிந்து
பின்னரது கைக்கொ.டு பிடிப்பதனை.மானும்

(இ - ள்.) பொன்னிறமான புட்ப நிறைகள் நிறைந்திருக்கின்ற கரு நாவன் மரத்திற் பொருந்திய பழமானது மெல்லிய தாமரை மலரில் விழுகின்ற தன்மையானது நல்ல நதியாகிய பெண்ணானவள் நீலவர்ணமான அம்மை பொருந்திய கழங்கு வீசிப் பின்னதனைக் கையினாலே பிடிப்பதை யொத்திருக்கும்—என்றவாறு. (31)

கந்தமலர் வீசிய கரும்பனைகொள் புன்னை
தந்தமலர் தாரகை தயங்குவன போலுங்
முந்திபவ சோகருண மொய்ம்மலர் நெருக்க
மந்தமதன் வெற்றியழ லம்புநிரை போலும்

(இ - ள்.) வாசனைபொருந்திய புட்பங்க ளுதிர்கின்ற பெரிய கிளைகளையுடைய புன்னை மரங்களிற் பூத்திருக்கின்றமலர்கள் நட்சத்திரங்கள் பிரகாசித்தலையொக்கும். முன்னதாயிருக்கின்ற அசோக மரங்களின் சிவந்திருந்த மலர்களின் திரளானது அந்த மன்மதனுடைய செயம்பொருந்திய வெப்பமான கணைகள் நிறைந்தாற்போலும்—என்றவாறு. (32)

எளிதுரை புகன்றியு மீவினிலை யார்போ
லளியின்மு ரன்றபலி லஞ்சமலர் கின்ற
துளிநறைகொள் செண்பக மரங்களயல் சூழ
வளர்தரு மரால்வகு ளங்களொடு நெல்லி

(இ - ள்.) இலேசான சொற்களைச் சொல்லிலும் கொடுத்தலிற் சம்மதியாதவரைப்போல் வண்டுக்கூட்டங்கள் சத்தித்துப் பக்கத்திற் பயப்படும்படிக்கு மலராகின்ற செண்பக மரங்கள் சூழ்ந்திருக்க வளரா நிற்கு மாதுளைமரங்களும் மகிழுமரங்களும் நெல்லிமரங்களும்—என்றவாறு. (33)

கொலைபினை விலங்குகளு நெஞ்சினிடை கொள்ளா
வலைவறு வசிட்டமுனி யாச்சிரம மங்கே
நிலவியவெள் ளாறுதிரை நீர்படியி னப்போ
துலைவுதரு தீவினை யொழித்துமகிழ் நல்கும்



(இ - ள்.) கொலைசெய்வதை மிருகங்களும் மனத்தினினையா. மனத்தினலைவற்ற வசிட்ட முனிவரது ஆசிரம மவ்விடத்தி லிருக்கின்றது. பரவிய வெள்ளாற்றில் அலைகளையுடைய நீரின் மூழ்கினலப்பொழுது துன்பத்தைக் கொடுக்கின்ற பாவவினையை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்—என்றவாறு.

திரைகரங்கள் வண்டிசைசொல் சேர்சுழிநல் லுந்தி
நுரைகணகை வாண்முக நுவன்றவர விந்தம்
அரைமணி யொலித்திடுவ தன்னவொலி பாசி
கரியகுழ லாகுமொரு கங்கைமக ளுக்கே

(இ - ள்.) அலைகளோகைகளும் வண்டுகளினிசையே வார்த்தையும் பொருந்திய நீர்ச்சுழியே நல்லவுந்தியும் நுரையே பற்களும் சொல்லிய தாமரைமலரே ஒளிபொருந்திய முகமும் அந்நீரொலியே இடைமணியோசையும் சைவலமே கரிய கூந்தலுமாம் ஒப்பற்ற சுவேதபாகீரதியென்னும் பெண்ணுக்கு—என்றவாறு. (35)

பாய்தருமப் புனலினிடைத் தருப்பணங்கள் பண்ணி
மாதவர் விடும்பவுத் திரங்களொடு தொர்ப்பை
போதுகொடு செல்லுதலி னேவல்புரி வோர்போ
லோதுநதி வாரிபுக வோடிய பெருக்கே

(இ - ள்.) பரவுகின்ற நீரில் தருப்பணங்கள்செய்து முனிவர்கள் விடுகின்ற பவுத்திரங்களுடனே தர்ப்பைகளையும் மலர்களையும் வாரிக்கொண்டு நடத்தலால் சொல்லுகின்ற வெள்ளாறு சமுத்திரத்திற் புகுத ஓடுகின்ற பிரவாகமானது ஏவல் செய்வாரைப் போலும்—என்றவாறு. (36)

ஒப்பறுவ சிட்டன்மக சாலையுறு நீறு
மெய்ப்புறு திருத்தமையும் வெவ்வினைக ளரு
மப்பொடித ரித்தவர்கள் ஞானவர ராவ
ரிப்படியி லங்குதல மற்புதமி சைக்கில்

(இ - ள்.) சமானமற்ற வசிட்டமுனிவரது யாகசாலையிற் பொருந்திய விபூதியானது மேனியிற்பட்டால் மதிக்கத்தக்க செல்வம்பெருகும். கொடிய வினைநீங்கும். அவ்விபூதியைத்தரித்தவர் ஞானபூரணராவார். இவ்வண்ணம் விளங்குகின்ற தலத்தின் அதிசயத்தைச் சொல்லுமிடத்து—என்றவாறு.(37)

மெய்த்தவ வசிட்டமுனி வேள்விவிதி செய்ய
வத்தருமை பாகரு ளாகியெதிர் நின்று

சித்துமலி யிருத்திபுக்க டெக்கணை களாக
மெய்த்தநிறை வாமதிதி கட்குமகிழ் முற்ற

(இ - ள்.) மெய்மையான தவத்தையுடைய வசிட்டமுனிவர் யாக முறைமைகளைச் செய்ய மலைமகளைப் பாகத்தில் வைத்த அத்தராகிய மகா தேவர் கிருபையுற்றுப் பிரத்தியக்ஷமாய் நின்று ஞான நிறைந்த இருத்தி யுக்களுக்குத் தக்ஷிணைகளாகவும் நெருங்கி நிறைந்திருக்கின்ற முனிவர் களுக்குச் சந்தோஷம் பெருகவும்—என்றவாறு. (38)

மன்னிய குபேரனை யழைத்துவள மல்கப்
பொன்மழை பொழிந்திடுதி யென்ன மகிழ்பொங்கி
அன்னவனு மவ்வகை பொழிந்தனனெல் லோரும்
துன்னுதிர ளாப்பனிதி சுமப்பனவெ டுத்தார்

(இ - ள்.) நிலைபெற்ற குபேரனையழைத்து வளப்பம் நிறைய சுவர்ண மாரி பெய்வாயென்றுரைக்கச் சந்தோஷம் பெருகிய குபேரனும் அவ்வண்ணமே செய்தான். சகலரும் நெருங்கியவைகளான திரவியங்களைச் சுமக்கு மளவும் வாரிக்கொண்டார்கள்—என்றவாறு. (39)

மற்றது குவித்தனர் மலைக்குநிக ராக
வுற்றமக சாலைநில மெண்டிசை யொதுக்கு
முற்றுநிறை கூபவரை வைத்ததனை மூடி
நற்றவர் நடந்தனர் வியப்பிதுள ஞாலம்

(இ - ள்.) மற்ற திரவியங்களை மலைபோல் குவித்து பொருந்திய யாக சாலை நிலத்தினெட்டுத் திக்கினிட முழுதும் பள்ளமானவைகளில் நிறைய வைத்து அத்திரவியத்தை மூடி நன்மை பொருந்திய முனிவர்கள் போயி னார். இவ்வதிசயத்தையுடைய பூமி—என்றவாறு. (40)

வேறு.

நாக கங்க ணந்த ரித்த நாத னித்தி யோனிட
பாக மாவ றம்வ ளர்த்த பாவை வைத்த மாமலை
யோக நால்வ ருக்க றத்தை யோதமுன் னளித்தவன்
சாகை வேத வுட்பொருட் சயம்புலிங்க மானவன்

(எ - று.) சர்ப்பத்தைக் கங்கணமாகப் பூண்ட நாயகன் நித்தியன் வாம பாகத்திற் றருமங்களை வளர்த்த பதுமைபோன்றவளை வைத்த பெருமை யுற்ற மலையை யொத்தவன்: சனகாதி நால்வரோகியர்க்குத் தருமங்களை



முன்புசொல்லிக் கொடுத்தவன்; வேதத்தினர்தாங்கார்த்தமேயிடமானவன்; சுயோற்பத்தி லிங்கமானவன்—என்றவாறு. (41)

பூதி யக்க மாலை கற்றை வேணி கொண்ட பொற்பது
மேதி னிக்கு ளாயுதம் பயிற்று விக்கு மெய்க்குரு
சாத கர்க்குத் தான்மு னஞ்செய் தன்மைபோற் றவத்தினர்க்
கீது செய்கை செய்தி ரென்று காட்டல்போ லிலங்குமே

(இ - ள்.) விபூதியும் உருத்திராக்ஷ மாலையுங் கட்டி யிருக்கின்ற சடை யுந் தாங்கி யிருக்கின்ற அழகானது பூமியின் கண்ணே ஆயுதப் பயிற்சி செய் விக்கின்ற மெய்யாசிரியன் பழகுபவர்க்கு முன்பாகத் தான் செய்து காட்டு கின்ற தன்மையைப் போலத் தவஞ் செய்வோருக்கு இவ்வண்ணமான செய லைச் செய்வீர்களென்று காட்டுதலைப் போலப் பிரகாசிக்கும்—என்றவாறு.

வரைகள் மூன்று மோபடைத்த ளித்த ழிக்கும் வண்மைமூ
துரைசெல் முத்தொ ழிற்கு ணங்க ளங்கு ரித்த வுண்மைபோ
லரவ நல்ல டம்பு னைந்த வண்ணல் மன்னு மாலய
நிருதி மூலை யின்மரந்த ழைத்த தென்று நிற்குமால்

(இ - ள்.) மூன்று மலைகளுமே சிருஷ்டித்து இரக்ஷித்துச் சங்கரிக்கின்ற வளப்பத்தினால் சொல்லுகின்ற முத்தொழிலின் குணங்களானவை முளைத்த நிச்சயம்போலச் சர்ப்பத்தை நல்ல மாலையாக வணிந்த கடவுளிலை பெற் றிருக்கின்ற கோயிலினிருதி மூலையிலொரு விருக்ஷந் தழைத்திருக்கும்.

காட்டி லுப்பை யாயிப் போது காண வங்கி யைந்திடு
மீட்டு மேலு கத்தி னிற்ப லாவி ருக்ஷ மாகுமா
லீட்டு மாலை யத்தில் வாயு மூலை யாக சாலையே
நாட்டு வெண்பொ டிப்ப சுக்கள் பாவ நாச மாகுமே

(இ - ள்.) இப்பொழுது காட்டிலுப்பை மரமாக யாவருங்காண அவ் விடத்திலிருக்கின்றது. திரும்ப வருகின்ற யுகத்தில் பலாமரமாகும். செய்த வக்கோயிலின் வாயு மூலையிலிருக்கின்ற யாகசாலையில் வைத்திருக்கின்ற வெள்ளிய விபூதியானது ஜீவர்களினது பாவங்களைக் கெடுக்கும்— (44)

சாலை யைக்கண் கண்ட வர்க்கு நீற்றி னைத்த ரித்திடும்
சீல ருக்கு மெய்த்த வங்கண் ஞானமுத்தி சித்தியாம்
ஆல யத்த டைந்த வர்க்கு மன்பு டன்று தித்திடும்
மேல வர்க்கு மெய்து பேறிங் கேவ ரேவி ளம்புவார்

(இ-ள்.) அந்தயாக சாலையைக் கண்ணால் பார்த்தவர்களுக்கும் அவ்விபூதியை யணிகின்ற ஒழுக்க முள்ளவர்களுக்கும் மெய்யான தவங்களும் ஞானமு முத்தியுஞ் சித்திக்கும். கோவிலைச் சேர்ந்தவருக்கும் பக்தியுடனே ஸ்தோத்திரம் பண்ணுகின்ற மேலானவருக்கும் கிடைக்கா நின்ற பிரயோசனத்தை யாவர் சொல்லுவார்—என்றவாறு. (45)

என்று ரைத்த ரோம சன்ச ரண்பு கழ்ந்து றைஞ்சியே
நன்றெ னக்க ருத்தி யைந்து நான்ம றைக்கு லத்தினன்
சென்ற னன்வெள் ளாற்றின் மூழ்கி வெண்ணீ றுஞ்சி றக்கவே
நின்று பூசி னன்மெ யெங்கு நீணி லாவெ றிக்கவே

(இ-ள்.) என்று சொல்லிய ரோமசமுனியினது பாதங்களைத் துதித்து வணங்கி நல்லதென்று மனமிசைந்து நான்கு வேதங்களை யுணர்ந்த வம்சத்திற் பிறந்த அப்பாதகனாகிய அந்தணனானவன் சென்று வெள்ளாற்றிற் குளித்து வெள்ளிய விபூதியைச் சிறப்புற அவ்விடத்தினின்று தரித்துக் கொண்டான் உடம்பெங்கும் நெடிய கிரணங்கள் பிரகாசிக்க—என்றவாறு.

ஈச னாலை யத்தின் முன்னி றைஞ்சி யேது தித்தலும்
பாச வல்வி னைக்கு ழாங்கள் பானு முன்ப னிக்குழாம்
நேச லக்கு மாறு போலத் தீர்ந்த மேனி யுற்ற நோய்
மாச ழுக்க கற்றினன்சு சீல னாகி மன்னினன்.

(இ-ள்.) சுயோற்பத்தீசர் கோவிலின்முன் வணங்கி ஸ்தோத்திரம் பண்ணின மாத்திரத்தில் பற்றிய வலியவினைக் குழாங்கள் சூரியன் சந்நிதியிற் பனிக்குழாங்கள் வலிமை கெடுந்தன்மையைப்போல் நீங்கின. உடம்பிற் பற்றிய வியாதியையும் குற்றமான மனத்தி னழுக்கையும் தொலைத்துச் சுசீலனாயிருந்தான்—என்றவாறு. (47)

அற்பு தத்தை யெண்ணி யெண்ணி யன்பு றக்க சிந்துளந்
தற்ப தப்பொருட்ச யம்பு லிங்கர் பொற்ச ரணகளைப்
பொற் புறத்து தித்து வந்து புண்ணி யத் தலத்தில் யான்
பெற்ற பேறெ வர்க்கு மில்லை யென்று பின்னீங்காமலே.

(இ-ள்.) அவ்வதிசயத்தை நினைந்து நினைந்து அன்பு பொருந்த மனங்கரைந்து தற்பதார்த்தமாகிய சுயோற் பத்திலிங்கருடைய பொன் போன்ற பாதங்களை அழகு பொருந்தத் தோத்திரம்பண்ணி இந்தப் புண்ணிய ஸ்தலத்திற் கியான்வந்து பெற்ற லாபம் யாவருக்குமில்லையென்று பிரியாமல்—என்றவாறு. (48)



வேத வேள்வி யூரின் வாச மேவி யேயிருந்தனன்
போது மாரி தேவ ரும்பொ ழிந்த னர்சி றக்கவே
மாத வங்கள் வாழ்வ டைந்து செல்வ மோங்கி மன்னினன்
ஈது காதை யென்று சூதன் மாத வர்க்கி சைத்தனன்

(இ-ள்.) வேதங்கள் முழங்குகின்ற வெள்ளூரில் வாசமாகிப் பொருந்தியிருந்தான். தேவர்கள் புட்ப மழை பொழிந்தார்கள். மகா தவங்கள் வாழ்வு பொருந்திச் செல்வ மிகுந்து நிலைபெற்றனன். இது ஒரு சரித்திர மென்று சூதமுனிவர் முனிவர்களுக்குச் சொன்னார்—என்றவாறு. (49)

சூதன் மாமு கத்தை நோக்கி யன்பொ டுந்து றந்தவ
ரோது வேள்வி யூரின் காதை யின்ன மும்முரை யெனக்
காத லோடு கேட்க வேக னிந்துமாய வி[illegible]
னாத ரத்தி னோடு சூதன் மாதவர்க் கறைகுவான்

(இ-ள்.) சூதமுனிவனது முகத்தைப் பார்த்துப் பிரியத்துடனே முனிவர்கள் சொல்லப்பட்ட வெள்ளூரின் சரித்திரக் கதையின்னுஞ் சொல்லீரென்று ஆசையோடு வினவ மனங் கனிந்து சந்தோஷித்து விருப்பத்துடனே சூதமுனிவர் அம்முனிவருக்குச் சொல்லுவார்—என்றவாறு. (50)

சுசீலச் சருக்கம் முற்றிற்று,

ஆகச் சருக்கம் 9 க்குத் திருவிருத்தம் 404

## 10 வது கபிலச் சருக்கம்.

சந்தன வனங்களு மருவிச் சாரலுங்
கந்தரச் சிகரமுங் கரியின் மத்தகம்
சிந்திய முத்தொளி ரிடமுஞ் செய்தவ
வந்தண ராச்சிர மத்தின் சீருமே

(இ-ள்.) சந்தனச் சோலைகளும் அருவி சொரிகின்ற மலைச் சாரலும் மேகந்தவழுகின்ற கொடுமுடியும் யானையினது கும்பஸ்தல முதிர்த்த முத்துக்கள் பிரகாசிக்கின்ற இடங்களும் செய்கின்ற தவத்தையுடைய முனிவராச் சிரமங்களின் சிறப்பும்—என்றவாறு. (1)

மன்னிய விமவரை மருங்கு வாழ்வதும்
தன்னிக ரிலாச்சிவ தலமற் றுங்கதை

யுன்னுகே தாரமென் றோது வார்பெய
ரென்னையாண முக்கண ரியைந்தி ருப்பது

(இ - ள்.) பொருந்திய விமயகிரியின் சமீபத்திலிருப்பது தனக்குச் சமானமில்லாத சிவஸ்தலம். அத்தலத்தை நினைக்கத்தக்க கேதாரமென்று பெயர் சொல்லுவார். என்னை ரக்ஷிக்காநின்ற முக்கண்களையுடைய கடவுள் பொருந்தியிருக்கின்றது—என்றவாறு. (2)

அப்பதி யிடத்தினி லரிய நான்மறை
மெய்ப்பொரு ளுணர்தரு விமலச் சிந்தையான்
முப்புரி மார்பினன் ஞான முற்றுமே
கைப்படு நெல்லியங் கனியிற் கண்டனன்

(இ - ள்.) அக்கேதார ஸ்தலத்தினிடத்தில் அருமையான நான்கு வேதங்களினுண்மைப் பொருளை யுணர்ந்த புனிதமான மனதை யுடையவன். பூணூலணிந்த மார்பையுடையவன். ஞானமுழுவதும் உள்ளங்கை நெல்லிப்பழம் போலக் கண்டவன்—என்றவாறு. (3)

தண்டுகைக் கொண்டவன் சடைமு டித்தலன்
புண்டரக் குறிநுத னீற்றுப் பொற்பினன்
கண்டிகை மாலைகள் கவினச் சாத்தினோன்
கொண்டபேர் கபிலனென் றினிது கூறுவார்

(இ - ள்.) தண்டு கையிலே தாங்கி யிருப்பவன், சடை முடி தரித்திருப்பவன், திரிபுண்டரந்தரித்த நெற்றியில் விபூதி யழகுடையவன், கண்டிகைகளும் மாலைகளும் அழகு செய்ய வணிந்தவன், கபிலனென்னும் பெயரையுடையவன் என்று சொல்லுவார்—என்றவாறு. (4)

அம்முனி யவ்விடை யாண்டு நாடொறும்
மெய்ம்மைமா தவத்தினை விளைக்குங் காலத்திற்
செம்மையாஞ் சித்தர்கந் தருவர் வானவர்
பொய்ம்மைதீர் சிவதலம் புகலு கின்றதில்

(இ - ள்.) அக்கபில முனிவரவ்விடத்தில் நாடோறும் வருஷம் மெய்யாகிய தவத்தைச் செய்கின்ற காலத்தில் சித்தரும் கந்தருவரும் தேவர்களும் பொய்யைத் தீர்க்கின்ற சிவஸ்தலங்களின் பெருமையைப் பேசினதில்— (5)

எம்மிறை எத்தல மகிழ்ந்த தென்னில்வெம்
மைம்முகி றவழெழில் மாட மேடைசேர்



மெய்ம்மறை புகழ்தரு வெள்ளி யூரெனத்
தம்முவ கையின்மொழி சாலப் பேசினார்

(இ - ள்.) எமது கடவுளாகிய பரமசிவன் எந்தத்தலத்திற் சந்தோஷித்திருப்பாரென்றால் கறுத்த மேகங்கள் தவழா நின்ற உப்பரிகை மேடைகள் சேர்ந்திருக்கின்ற மெய்ம்மையான வேதங்கள் ஸ்தோத்திரம் பண்ணுகின்ற வெள்ளூராகுமென்று தமது பிரியத்தினாலே மிகவும் பேசினார்—என்றவாறு.

செப்பிய திருமொழி செவிக்க ணேறலு
மெய்ப்புள கிதங்கொள யோக மேவிப்பி
னெப்பொழு தப்பதி யெய்து நாமென
பொய்ப்பவந் தீர்த்தவன் புந்தி யெண்ணியே

(இ - ள்.) அவ்வண்ணம் பேசிய திருவாக்குத் தமது காதிற்புகுதவும் உடலம்புளகாங்கிதங்கொண்டு ஞான யோகத்திலிருந்து பின்பு எக்காலத்தில் தாம் அந்த ஸ்தலத்தைச் சேருவோமென்று பொய்யாகிய பிறவியை நீக்கிய கபிலமுனிவர் புத்தியிலாலோசித்து—என்றவாறு. (7)

யாத்திரை யேகக்கே தார மென்பதி
நீத்தனன் புவிவலங் கொண்டு நேரிலாக்
க்ஷேத்திரத் தலங்களுங் கிரியும் பன்னதித்
தீர்த்தமுந் தெரிசனை செய்து மூழ்கியே

(இ - ள்.) யாத்திரை செல்லும்படிக்குக் கேதார மென்னும் ஸ்தலத்தைவிட்டுப் பூமி பிரதக்ஷணமாய் ஒப்பற்ற புண்ணிய க்ஷேத்திரமாகிய ஸ்தலங்களையும் மலைகளையும் தரிசித்துப் பல புண்ணிய நதியிற் குளித்து-என்றவாறு.

தண்ணறு மருவியின் முழக்குந் தந்திக
ளெண்ணில பிளிறியே யிடிக்கு மோதையும்
பண்ணவர் துந்துபி யார்ப்பும் பாங்கெலா
நண்ணிய தீர்த்தவெற் பதனை நாடியே

(இ - ள்.) குளிர்ச்சியும் நன்மையும் பொருந்திய அருவிகளினோசையும் எண்ணக்கூடாத யானைகள் பிளிறிட்டுக் கூப்பிடுகின்ற சத்தமும், தேவர்களது துந்துமி வாத்திய கோஷ்டமும், பக்கங்களெல்லாம் பொருந்திய தீர்த்த மலையை நாடி—என்றவாறு. (9)

வந்தனன் செங்கதிர் வரையு மோர்புறஞ்
சந்தன மணங்களே சாரு மோர்புற

மிந்துகாந் தச்சிலை யிலகு மோர்புறம்
தந்தியின் மதநதி தவழு மோர்புறம்

(இ - ள்.) அக்கபிலமுனிவர் வந்தபோது சிவந்த சூரிய கிரணமொழியும் ஒரு பக்கத்தில், சந்தனவாசனைகள் சார்ந்திருக்கும் ஒருபக்கத்தில், சந்திரகாந்த கற்களிலகும். மற்றொரு பக்கத்தில் யானையினது மதங்கள் ஆறாகச்செல்லும் ஒருபக்கத்தில்—என்றவாறு. (10)

கின்னரர் பாடல்கள் கிளைக்கு மோர்புறம்
துன்னுவெள் ளாற்றலைச் சும்மை யோர்புறம்
மின்னிய வேய்மணி பிறழ்வ தோர்புறம்
முன்னருந் தவத்தினர் சாலை யோர்புறம்

(இ - ள்.) கின்னரரது பாடல்கள் சப்திக்கும் ஒருபக்கத்தில், நெருங்கிய வெள்ளாற்றினலைகள் சத்திக்கும் ஒரு பக்கத்தில், மின்னியிருக்கின்ற மூங்கிலின் மணிகள் பிரகாசிக்கும் ஒரு பக்கம். நினைப்பதற்கரிய தவத்தைப் புரிவோர் ஆசிரமம் ஒருபக்கம் இருக்கும்—என்றவாறு. (11)

காயிலை தின்றுதாங் களிப்ப ரோர்புறம்
வாயுவா காரமாய் மகிழ்வ ரோர்புறம்
தீயழ லைந்திடைச் செழிப்ப ரோர்புறம்
வாய்திற வாதொழி மவுன ரோர்புறம்

(இ - ள்.) காயும் இலையுந்தின்று கொண்டு உளங்களித்திருப்பார் ஒருபுறம். காற்றினையாகாரமாய்க் கொண்டுமகிழ்வார் ஒருபுறம். எரிகின்ற பஞ்சாக்கினி மத்தியில் தவத்திற்செழித்திருப்பார் ஒருபுறம். வாயைத்திறந்து பேசாதமௌனிகளொருபுறம் இருப்பார்—என்றவாறு. (12)

இன்னன பலவள நோக்கி யெய்தியே
முன்னுறுங் கபிலமா முனியைக் கண்டெழுந்
தன்னவ ரருங்கிய பாத்தி யங்களாற்
றுன்னுப சாரமே நூழச் செய்தபின்

(இ - ள்.) இத்தன்மையான பலவளங்களைப்பார்த்துச்சென்று எதிருற்ற கபிலமுனிவரை அவ்விடத்தில் வாசஞ்செய்கின்ற முனிவர்கள்கண்டு எழுந்து அருக்கிய பாத்தியங்களினாலே மிகுந்தவுபசாரங்களைச் செய்த பின்னர்—என்றவாறு. (13)



வருகவென் றன்பினு லழைத்து மாமன
முருகியா தனந்தர வுவகை கொண்டிருந்
தரியகே தாரம்விட் டன்பின் வந்தவன்
பெரியமா தவர்முக நோக்கிப் பேசுவான்

(இ - ள்.) வாருமென்றுஅன்புற்று அழைத்துஉள்ளங்கரைந்து ஆசனங்கொடுக்கச் சந்தோஷமுற்றிருந்து அரிதானகேதார ஸ்தலத்தைத்துறந்து அன்புற்று வந்தகபிலமுனிவர் பெரிதான தவத்தையுடைய முனிவரதுமுகத்தைப்பார்த்துச் சொல்லுவார்—என்றவாறு. (14)

மின்னிய வைம்புலப் பந்தம் வேரறுத்
துன்னிய யாக்கையி னூன்பு லர்த்தியே
யன்னம்விட் டருந்தவம் வருந்தி யாற்றுவீ
ரென்னவுண் ணினைவுதா னித்த வத்தினால்

(இ - ள்.) பிரகாசித்த பஞ்சவிடயக்கட்டுகளை வேரோடுங் கெடுத்து நினைக்கின்ற வுடம்பினைத்து தசையை யுலரச்செய்து அடிசிலை நீக்கி யரிய தவத்தைவருந்திச் செய்கின்றவர்களே! இந்தத்தவஞ் செய்வதினால் உங்களுள்ளத்திற் கருதியதியாது—என்றவாறு. (15)

ஒப்பறு மந்தணீ ரோது மென்னவே
செப்பிய கபிலனை நோக்கிச் செப்புவா
ரப்பொடு பிறையரா வணைந்த செஞ்சடை
மெய்ப்படி வஞ்சரற் கால மேகம்போல்

(இ - ள்.) சமானமற்ற முனிவரே சொல்லக் கடவீரென்று சொல்லக் கபிலமுனிவரைப்பார்த்துச் சொல்லுவார். கங்கையுடனே பிறையுஞ் சர்ப்பமும் சேர்ந்திருக்கின்ற சிவந்தசடையும் சத்தியமான வுருவமுஞ் சாற்காலத்து மேகத்தைப்போன்று—என்றவாறு. (16)

கருங்களம் பச்சைமா திடமும் காட்டவே
பரம்பரன் றெரிசனைப் பலிப்பை யெண்ணியே
யருந்தவம் விளைத்தன மைய வென்றுரை
தருந்தவர் கேட்கவக் கபிலன் சாற்றுவான்

(இ - ள.) கரியகண்டமும் பார்வதியிடப் பாகத்திலும் தோன்ற மகாதேவர் பிரத்தியக்ஷமாகத் தக்க பிரயோசனத்தைக்கருதி அரியதவத்தைச்

செய்கிறேனையாவென்று சொல்லிய முனிவர் கேட்கும்படியாய்த்தக்க கபில முனிவர் சொல்லுவார்—என்றவாறு. (17)

கருதுகே தாரமுங் காசியும் மகிழ்ந்
தரியமா தவம்புரிந் தாங்கி ருந்தன
னுரியகந் தருவர்மற் றுயர்ந்த சித்தர்கள்
பெருமையா மகிமையைப் பேசி னாரவை

(இ - ள்.) தியானிக்கத்தக்க கேதாரத்திலும் காசியிலும் சந்தோஷமுற்று அரிதானதவஞ்செய்து அவ்விடத்திலிருந்தேன். மகிமையான கந்தருவரும் சித்தர்களும் பெருமைபொருந்திய ஒரு மகிமையைப் பேசிக்கொண்டிருந்தார். அதுயாதென்றால்—என்றவாறு. (18)

பாரிடை யுயிர்கள்செய் பாவந் தீர்ப்பது
பேரொளி யுள்ளது பிரம மாமுனி
சீரிய வசிட்டன்முன் செய்த வேள்வியா
லாரணி வேணியான் சுயம்பு வானது

(இ - ள்.) இப்பூமியினிடத்துச் சீவர்கள்செய்தபாவங்களைத் தீர்ப்பது பெரிதானகீர்த்தி பெற்றிருப்பது. தர்மமுனியாகிய தவச்செல்வத்தையுடைய வசிஷ்டர் முன்பு செய்தயாகத்தினால் ஆத்திமாலையணிந்த சடையையுடைய மகாதேவர் சுயம்புலிங்கமாயினது—என்றவாறு. (19)

நிறந்தரு செஞ்சடை நிமல நாயக
னறம்வளர்த் தவளொடு னமர்ந்து மானிடர்
பிறந்திறக் குந்துயர் நீக்கிப் பின்னையுஞ்
சிறந்துபல் வரங்களும் பலிக்கச் செய்வது

(இ - ள்.) ஒளியைத்தருகின்ற சிவந்தசடையுடைய மகாதேவர் தர்மவர்த்தினியோடுந்தங்கி மனிதர்களது பிறந்து மடிகின்றபிற வித்துன்பத்தைப் போகச்செய்து பின்னுஞ்சிறப்புற்ற பலவரங்களும் பயனுறும்படிக்குச் செய்யத்தக்கது—என்றவாறு. (20)

தெண்டிரைக் கரங்கொலி திசைப ரக்கநீர்
கொண்டவெண் ணதிக்கரை குலவி வாழ்வது
கண்டவர் கேட்டவர் கருதி னோர்வினை
விண்டகன் றோடவே விளங்கி நிற்பது



(இ - ள்.) தெள்ளிய அலைகளடிக்கிற சத்த மானது திசைகளிற்பரவுஞ் சலப்பிரவாகங்கொண்ட வெள்ளாற்றின் தீரத்திற்றங்கிவாழ் வுற்றிருப்பது, தரிசித்தவர், அம்மகிமையைக் கேட்டவர் தியானித்தவருடைய வினைகளைபற்று விட்டுப் பிரிந்தோடும்படிக்குப் புகழ்பெற்றிருக்கின்றது—

இன்னன மகிமைக ளேய்ந்து வாழ்வினிற்
பொன்னக ரெனப்பொலி வாய்ச்சி றப்பது
தன்னிக ரில்லதோர் தலம்வெள் ளூரெனப்
பன்னுவர் பெயர்தவம் பண்ணு வோர்க்கிடம்

(இ - ள்.) இத்தன்மையான மகிமைகள் பொருந்திய செல்வத்தில் தேவலோகத்தைப்போல மிகவும் சிறப்புடையது. தனக்கிணையில்லாத ஒரு ஸ்தலம்வெள்ளூரெனப் பேர்சொல்லுவார். தவம்செய்வோர்க்குநல்லவிடமாம்

என்றுவா னவரொடு சித்த ரின்புட
னன்றுகூ றினரென தகத்து வாவினா
னன்றுறு மித்தல வாச நாடியே
துன்றுபே ரன்புடன் றாப்ப வந்தனன்

(இ - ள்.) இப்படியென்று தேவருடனே சித்தர்மகிழ்ச்சியோடும் அன்றைக்குச்சொன்னார். எனது மனோவாஞ்சையினாலே நன்மைபொருந்திய இந்தஸ்தலத்தில் வாசஞ்செய்ய யோசித்து பேரன்பானது செலுத்துதலாலே இவ்விடம்வந்தேன்—என்றவாறு. (23)

எனமொழி கபிலனை நோக்கிச் செய்தவ
முனிவர்கள் புகலுவர் முனிவர் நாதனீ
யினிமையி னிவண்வர வென்செய் தேந்தவ
நனிவர மீசா னல்கும் வண்ணமோ

(இ - ள்.) என்று சொல்லிய கபிலமுனியைப் பார்த்துத் தவஞ்செய்கின்ற அம்முனிவர் சொல்லுவார். இருஷீசுவரரே நீர் மகிழ்வுற்றிவ் விடத்திற்கு வர என்னதவஞ் செய்தோமோ! இது பரமசிவன் மிகவும் வரங்களைத் தருகின்ற பிரகாசமோ—என்றவாறு. (24)

மழைவெயில் வாயுவின் வருந்தி யேயுளம்
பழியறச் செயுந்தவம் பலித்த தின்றலோ
விழிகளிப் பெய்தினோம் விமல மாயுயிர்
தழைவடைந் தோமுடல் சபல மாயது

(இ-ள்.) மழையிலும் வெய்யிலிலும் காற்றிலும் உடம்பு வருந்தி மனதினது குற்றம் நீங்க யாம் செய்கின்ற தவம் இன்றைக்கல்லவோ பயன்பட்டுக் கண்களிப்படைந்தோம். பரிசுத்தமாகிய சிவன் சேழிப்புற்றேம். இவ்வுடலம் பிரயோசனமாயிற்று—என்றவாறு. (25)

யாங்களு நும்முட னெய்தி யத்தலப்
பாங்கரின் வாசமே மருவப் பண்ணுதி
பூங்கம லாலயன் போலு மையனே
யீங்கிது சிந்தனை யெமக்கு மென்றனர்.

(இ-ள்.) நாங்களும் உம்முடனே வந்து அந்தஸ்தலத்தில் வாசமாயிருக்கச் செய்வாய். அழகிய தாமரை மலராசனத்தை யுடைய பிரமதேவனை யொத்த சுவாமி, இவ்விடத்தி லெங்களுக்கும் இதுவே யோசனை யென்று சொன்னார்—என்றவாறு. (26)

அறுபகை வென்றவ ராங்கி சைத்திடப்
பெறுமொரு கபிலனும் பெருமகிழ்ச்சியே
யுறவினி வருகவென் றோதி மாதவர்
செறிவுட னடந்தனன் றிருவெள் ளூர்வழி

(இ-ள்.) காமாதியாறு பகைகளையும் வென்ற முனிவர்கள் சொல்லக் கேட்ட ஒப்பற்ற கபில முனிவர் பெரிதான சந்தோஷம் பொருந்த இனி வாக் கடவீரென்று அம்முனிக் கூட்டத்தோடு தாமுஞ் சென்றார் திருவெள்ளூருக்குச் செல்லும் மார்க்கமாய்—என்றவாறு. (27)

வெண்பொடி யொளிதிகழ் மேனி மாதவர்
நண்பொடு வருவழி யருகு நாண்மலர்ப்
பண்பயில் வரியளி முரன்று பாடியே
கண்படை கூருமோ ரோடை கண்டனர்

(இ-ள்.) வெள்ளிய விபூதியின் கிரணம் பிரகாசிக்கின்ற தேகத்தையுடைய முனிவர் வருகின்ற மார்க்கத்தின் சமீபத்தில் புதிதாயலர்ந்த புட்பத்தில் ராகம்பாடுகின்ற புள்ளிகளையுடைய வண்டுகள் சத்தித்துப் பாடி நித்திரைசெய்கின்ற ஒரு சிற்றாற்றினைப் பார்த்தார்—என்றவாறு. (28)

வலம்புரிச் சங்குகள் வயிறுளைந் தீன்றவந்
நலந்தரு வெண்மணி நகைக்கத் தாமரை
குலங்கள்வாய் மூடும்வெண் மணலின் குன்றமேற்
புலந்துபின் சேவலோ டன்னம் புல்லுமே



(இ-ள்.) வலம்புரிச்சங்குகள் உதரம் வருந்தி யீன்ற நன்மையான முத்துகள் பிரகாசிக்கத் தாமரை மலர்க்கூட்டங்கள் வாய்குவியும். வெண்ணிறமான மணற் குன்றின்மிசைப் பிணங்கிப் பின்னாற் சேவலுடன் பெட்டை யன்னம் புணரும்—என்றவாறு. (29)

மணிதெளித் தனபுன லோடை மற்றிது
துணிவரு மதிசயந் தோன்றுந் தன்மையாற்
குணமொடு நாமமுங் கூறு கென்றிடப்
பணியணி பவனிரு பதத்தைப் போற்றியே

(இ-ள்.) முத்துக்களைப் பரப்பினது போலும் நீரையுடைய இவ்வோடையானது துணிவு பொருந்தி யிருக்கின்ற அற்புத முண்டாகின்ற குணத்தினாலிதன் குணத்துடனே பெயருஞ் சொல்லுவாயெனப் பாம்பாபரணத்தைப் பூண்ட கடவுளது பாதங்களைத் துதித்து—என்றவாறு. (30)

அருந்தவக் கபிலனு மறைதன் மேயினான்
பெருந்தவத் தீரிது பிணிக ணீக்கிடு
மருந்திடிற் றிவலைமற் றுடலின் மேற்படிற்
புரிந்தவல் வினைத்துய ரனைத்தும் போக்குமே

(இ-ள்.) அரியதவத்தை யுடைய கபிலமுனிவர் சொல்வார். பெரிதான தவத்தையுடைய இவ்வோடை நீரை யருந்தினால் நோய்களைத் தீர்க்கும். குளித்தாலும் ஒரு துளி நீரானது வுடலின் மிசை பட்டாலும் முன் செய்த தீவினையானது பஞ்சிலிட்ட தீப்போற் பறந்து போகும்— (31)

உரியபேர் பொற்கதி ரோடை யென்பர்க
ளிருகரைப் பாங்கரிற் கூப மெங்கணும்
திரவியங் குடங்களிற் சேமஞ் சேர்ந்தன
வரிதித னழற்றிசை யணிகொள் வேள்வியூர்

(இ-ள்.) இதற்குரிமையான பெயர் பொற்கதிரோடையென்று சொல்லுவார்கள். இதன் இருகரைப் பக்கங்களிற் பள்ளவரைகளெவ்விடங்களிலும் பொற்குவைகள் குடங்களில் பத்திரப்படுத்தி யிருக்கின்றன. அருமையான இவ்வோடையினது அக்கினிதிக்கில் அழகுபெற்ற வேள்வியூ ரென்னும் ஸ்தலமாம்—என்றவாறு. (32)

என்றது கேட்டனர் களித்தி சைந்துதா
னன்றென நடந்தனர் வேள்வி நன்னகர்

சென்றனர் திருவெள்ளா றதனின் மூழ்கினர்
நின்றுநல் வசிட்டனை நினைந்து வாழ்த்தியே

(இ - ள்.) என்று கபிலமுனிவர் உரைத்ததைக் கேட்டுக் களிப்புற்று நல்லதென்று நடந்து நன்மைபொருந்திய வெள்ளூரைச் சேர்ந்து வெள்ளாற்றில் மூழ்கிப் பின்னர் வசிட்ட முனிவரைத் தியானித்து அவருடைய யாகசாலையை அடைந்தார்கள்—என்றவாறு. (33)

வேள்விசெய் சாலையில் வேள்விப் பூதியைத்
தூளனஞ் செய்தனர் துரிச நீத்தனர்
காளமுண் டிருண்டதோர் கண்ட னெந்தைதன்
றாளிணைக் கருதியே கோயில் சார்ந்தனர்

(இ - ள்.) யாகஞ்செய்த மண்டபத்தில் யாகநீற்றினைத் தூளனஞ்செய்து குற்றமறப்புனைந்தார். விடத்தையருந்தி யிருள்போன்ற கண்டத்தையுடைய ஒப்பற்ற எமது பிதாவாகிய தான்தோன்றியீசரது பாதங்களைத் தியானித்துக் கோவிலைச் சேர்ந்தனர்—என்றவாறு. (34)

முன்பணிந் திறைஞ்சினர் முற்றி யூறிடு
மன்பினு லாகரா வமல நாயக
மின்பணி யிடைச்சிபங் காளவெண் பிறை
நன்பணி புனைந்தவா நடன மூர்த்தியே

(இ - ள்.) கடவுள் முன்னர்ச் சாஷ்டாங்கமாக வணங்கி முதிர்ந்து ஊறுகின்ற பக்தியினால் ஆஹரா; களங்கமற்ற நாதனே; மின்னலையொத்த இடையையுடைய மலைமகளைப் பாகத்திலுடையவனே ; வெண் பிறையையும் நல்ல பாம்பையும் தரித்தவனே ; நடனமூர்த்தியே !—என்றவாறு.

அண்டர்மா லயனிவ ரறியொ ணாவடி
தொண்டரே மியாதினாற் றுதிக்குந் தன்மைதான்
பண்டியாஞ் செய்பிழை பலவுண் டேனுமாட்
கொண்டுநீ பொறுத்தருள் கருணைக் குன்றமே

(இ - ள்.) தேவர்களும் திருமாலாகிய பிரமாவும் அறியமுடியாத பாதங்களை அடியேங்களெந்த அறிவினாலறியப் போகிறோம். முன்பு நாங்கள் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்து ஆட்கொள்ளவேண்டும் கிருபாசலனே—என்றவாறு. (36)



என்றுநாத் துதித்திட விருகை கூப்பியே
நின்றுதா மாடுவார் களிப்பி னீடுவா
ரொன்றிய மனத்தொடு பாடி யொண்ணறைக்
கொன்றையந் தாரின ரருளைக் கொண்டனர்

(இ - ள்.) இப்படியென்று நாவானது தோத்திரம்பண்ண இரண்டு கைகளையுங்கூப்பி நின்று ஆடுவார்; ஒரு மித்தவுள்ளத்துடனே பாடி விளங்குகின்ற தேன் பொருந்திய கொன்றை மாலையையுடைய சுயோற்பத்தீசரது கிருபையைப் பெற்றுக்கொண்டவராய்—என்றவாறு. (37)

வெள்ளியங் கிரியிறை விமல நாயகன்
றள்ளவில் கருணையிற் சயம்பு வாய்த்திரு
வுள்ளமே மகிழ்தல மொப்பி லாதெனத்
தெள்ளிய வறிவினால் வாசஞ் செய்தனர்

(இ - ள்.) அழகிய கயிலைமலையி லிருக்கின்ற மகா தேவர் ஸ்வயம்புவாயிருக்கின்ற இந்தஸ்தலத்திற்கு எந்த ஸ்தலங்களும் சமானமில்லையென்று இந்த இடமே வாசஞ்செய்திருந்தார்—என்றவாறு. (38)

பன்னசா லைகள்பல வியற்றிப் பாய்திரை
நன்னதிக் கரையிரு மருங்கு நண்ணினர்
மன்னுகா லம்பல கழித்து வைகிய
பின்னவ ரவர்தம திருப்பைப் பேணினர்

(இ - ள்.) பன்ன சாலைகள் பற்பலசெய்து அலைகளையுடைய வெண்ணை இக்கரையிரண்டு பக்கத்திலும் சேர்ந்து நிலைபெற்றுக் காலங்கழித்துப் பின்பு தங்கள் தங்கள் ஆசிரமஞ்சென்றார்கள்—என்றவாறு. (39)

யீதொரு காதையென் றியம்பித் ஞானநூற்
சூதனு நைமிசா ரணியத் துய்த்தவ
மாதவர் தம்மையே நோக்கி மற்றுமோர்
காதைவெள் ளூரதிற் சொல்லிக் காட்டுவான்

(இ - ள்.) இதுவொரு சரித்திரமென்று சொல்லி ஞானநூலையுணர்ந்த சூத புராணிகரும் நைமிசாரணிய வாசிகளாகிய மகாமுனிவர்களைப் பார்த்துப் பின்னும் ஒரு சரித்திரம் வெள்ளூரின் மகிமையைச் சொல்லியறிவிப்பார்—

கபிலச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம், 10-க்குத் திருவிருத்தம். 444.

# சுனந்தன் சருக்கம்.

## வேறு.

அம்புயப் பொருட்டின் மேலா யரசனும் வீற்றி ருக்க
பம்புபைந் தூவிக் கண்ணுற் பன்மயி லடிக்கக் காவிற்
செம்பொனின் கட்டி போற்றே மாங்கனி சிதறு மீவி
னம்புநே பாள மென்னும் வளர்தரு நாட்ட கத்தில்

(இ - ள்.) தாமரைப் பொருட்டின் மேலாக இராசவன்னங் கொலுவிருக்கப் பசிய தூவிகளிற் கண்களையுடைய மயில்கள் நடனஞ்செய்யச் சிவந்த பொன்கட்டியைப்போலும் மாம்பழங்கள் பரிசிவதுபோலும் வளமையுள்ள நக்கநேபாளமென்கிற தேசத்தில்—என்றவாறு. (1)

அருமறைக் குலத்து தித்தோ னைந்தழ னடுவ ணின்று
புரியுநற் றவங்கண் மற்றும் புண்ணியத் தொழில்களான
கிரியைகள் செய்வான் பேர்சு கிர்த்தியென் றுரைப்பார்பாரோர்
பரிவொடு கல்வி யென்னும் பௌவமுங் கரைய றிந்தோன்

(இ - ள்.) அரிய வேதங்களை யுணர்ந்தவன், பிர்ம வம்மிசத்திற் பிறந்தவன்; பஞ்சாக்கினி மத்தியிலிருந்து செய்கின்ற தவங்களும் நல்ல தருமங்களும் செய்பவன்; சுகிர்த்தியென்று பூமியிலுள்ளவர்கள் பேர் சொல்லுவார்கள். கல்வியென்கிற சமுத்திரத்தையும் கரைகண்டவன்—என்றவாறு. (2)

எழிலொளிர் சுகிர்த்தி யென்போற் கில்லறம் வளர்க்க வந்தாள்
மழைமதர் நெடுங்கட் செவ்வாய் வனமுலை சுமந்து நைந்து
குழைநுசுப் புவமை நொய்ய நூல்விதி வடிவு கொண்டாள்
விழைதரு கற்புத் தோன்றும் வித்தனார் பேர்சு சீலை

(இ - ள்.) அழகு பொருந்திய சுகிர்த்தியென்னும் மறையவனுக்கு மனைவாழ்க்கைத் தருமத்தை வளர்ச் செய்யவந்தவள்; குளிர்ந்தவார்த்தையுடையவள்; நீண்ட கண்களும் சிவந்தவாயும் அழகிய தனங்களும் நுண்ணிய இடுப்பு முடையவள்; பதிவிரதா தர்மத்திற்கு வித்துப்போன்ற சுசீலையென்னும் பெயருடையவள்—என்றவாறு. (3)

இருவரு மன்பு கூர்ந்தங் கில்லறம் வளர்த்துப் பன்னு
ளருமகப் பேறொன் றின்றி யழுந்தினர் துன்ப வெள்ளம்
இருமையு முறுதி பெற்றே மில்லையூழ் நரகி னுய்க்கில்
வெருவலென் றெம்மைத் தாங்கி விடுவதற் கொருவ ரின்றே



(இ - ள்.) சுகிர்த்தியும் சுசீலையுமாகிய சதிபதிகளிருவரும் பிரியமிருந்து அந்த நேபாள தேசத்தில் பலதினம் இல்லற தர்மங்களை நடத்தி வருகிறதோடு அரிதான புத்திரபாக்கியம் இல்லாததினால் துக்கப் பிரவாகத்தி லழுந்தினவராகி இருமையிலும் உறுதிபெற்றிலேம். நரகத்தில் தள்ளினால் பயப்படாதே என்று தாங்கி விடுவதற்குஒருவருமில்லை (4)

யாதியாஞ் செய்து மென்ன வெண்ணியே யுள்ளந் தேறி
வேதநா யகனைத் திங்கள் வேணியான் றன்னைப் போற்றிக்
காதல்கொண் டிருக்கப் பின்போர் காலத்திற் கருக்கொண் டுறி
மாதுநல் வயிற்றி னோராண் மகவுவந் துதித்த தன்றே

(இ - ள்.) நாங்களென்ன செய்வோமென்று விசாரமுற்று மனந்தேறி வேதநாயகராகிய சந்திரனைத் தரித்த சடையையுடைய மகா தேவரைத் துதித்துப் புத்திரவாஞ்சை கொண்டிருக்கப் பின்னால் ஒருகாலத்திற் கருப்பமுற்று அச்சு சீலையென்னும் பெண்வயிற்றில் ஒரு ஆண்பிள்ளைவந்து பிறந்தது—என்றவாறு. (5)

உதித்தவம் மகவைப் பாங்கு வளர்த்தன ருலகி லுள்ளோர்
துதிக்கமெய் யுவகை கூர்ந்து சுனந்தனென் றதற்கு நாமம்
பதித்தனர் சவுள மாதிக் கருமங்கள் பலவுஞ் செய்தார்
விதித்தவெட் டாண்டின் முந்நூல் வேதமே யோதல் செய்தார்

(இ - ள்.) பிறந்த அப்பிள்ளையை வளர்த்தார். உலகத்திலுள்ளோர் புகழும்படி உடலம் பூரித்துச் சந்தோஷ மிகுந்து சுனந்தனென்று பெயரிட்டார். சௌளாதிக்கிருத்தியங்கள் பலவற்றையும் செய்வித்தார். எட்டாம் வயதில் பூணூல் தரித்து வேதங்களைப் படிக்கச் செய்தார்—என்றவாறு. (6)

பெற்றவர் மகிழ்ச்சி செய்யப் பின்புபன் னாட்கள் செல்ல
வுற்றதெவ் வனமென் றோது மொருபெரும் பூத மேறி
மற்றவன் மறந்தான் கல்வி வேதங்கள் வண்மை யெல்லாஞ்
சுற்றிய பாசம் போலத் துலக்கினன் மாத ராசை

(இ - ள்.) பெற்ற தாய்தந்தையர் சந்தோஷப்படப் பின்னர் பல தினங்கள் கழிய யவ்வனமென்றுரைக்கின்ற ஒரு பெரிய பூதமேற் கொண்டு பற்றிற்று. அச்சுனந்தனென்பவன் கல்வியையும் வேதங்களையும் நெறிகளையுமெல்லாம் மறந்துவிட்டுச் சுற்றிக்கொண்ட பாசத்தைப்போல மகளிராசைத் துவக்கமுற்றான்—என்றவாறு. (7)

தன்னையே வருந்திப் பெற்றோர் சாற்றிய சொல்லுங் கேளான்
மன்னிய மதத்து லாவும் யானைபோன் மயக்கங் கொண்டா
னின்னறீ ரிடபம் போல வுடலிறு மார்ந்து செல்வன்
கன்னியர் முயக்க ரூத காமுகர் நட்புக் கொண்டான்

(இ - ள்) தன்னைத் தவஞ்செய்து வருத்தமுற்று ஈன்றவர்கள்சொன்ன வார்த்தையுங்கேளான்; நிலைபெற்ற மதத்தினாலே சஞ்சரிக்கின்ற யானையைப் போல மனது மருட்சிகொண்டான். துன்பமற்ற இடபத்தையொத்து வுடம்பு கொழுத்து நடப்பான்; மாதரைத்தழுவுதல் விடாத காமியருடைய சினேகம் பற்றினான்—என்றவாறு. (8)

தன்னிக ரின்றி யெங்குஞ் சென்றுதன் கண்ணிற் கண்ட
பொன்னனை யாரை வவ்விப் புணர்ந்துசெல் காலத் தன்னின்
பின்னிலை நிகர்த்த வோர்பெண் கற்பினை விளக்க வந்தா
ளன்னிய னுரிமைத் தேவி யவளிடைக் காதல் வைத்து

(இ - ள்.) தனக்கிணை யில்லாமல் எவ்விடங்களிலுஞ் சென்று தனது கண்ணினாலே தனித்துக்கண்ட பொன்போன்ற மடவாரைக் கவர்ந்து வலிதிற் கலந்து நடக்கின்ற காலத்தில் மின்னலை யொப்பானவளும் கற்பென்பதைப் பிரகாசிப்பிக்கப் பிறந்தவளும் அன்னியன் ஒருவனுக்குரித்தான மனைவியுமாகிய ஒரு பெண் அந்தப் பெண்ணிடத்திலாசையை வைத்து. (9)

சுழன்றனன் சிலநா ளோர்நாட் டனிமையாய்த் தோன்று மாற்றால்
விழைந்தன னவளைக் கண்டு வலிதின்மேல் வீழும் போது
கொழுந்தெரி போல நெஞ்சங் கோபமாய் வலிதி னென்மேல்
விழுந்தனை யுனக்குச் சாபம் புலையனாய் மேவு கென்றாள்

(இ - ள்.) சிலநாள் அலைந்தான். ஒரு தினம் அம்மாது தனிப்பட்டெதிர்ப்பட்ட தன்மையால், அவளைப் பார்த்துக் காம மிகுந்தவனாகி வலுவந்தமாய் மேல் விழும்போது, சுவாலையுற் றெரிகின்ற அக்கினியைப் போல மனதிற்கோபமுற்று வலுவந்தமா யென்மீதில் வீழ்ந்தாயாதலின் உனக்குச் சாபம் நீசனாகக் கடவை யென்றாள்—என்றவாறு. (10)

உரைத்தவச் சாபந் தோன்றி யுடலுடல் கருகிக் கூறை
புரைபடு மழுக்குப் பற்றிப் பொன்னணி கலன்கள் யாவு
மிரும்பினி லணியாய்ச் சொல்லு மறிவும் வேறாகிக் காணத்
தரிக்கன னீசத் தன்மை புலைமையிற் றலைமை யானான்



(இ - ள்.) அப்பெண்ணிட்ட சாபத்தினாலே வுடம்பு கறுத்து வஸ்திரங்களிற் குற்றமாகிய அழுக்குப் பிடித்துப் பொன்னுபரணங்களெல்லாம் இரும்பாபரணங்களாகி வார்த்தையும் புத்தியும் வேறுபட்டு இழி குலத்தன்மை பூண்டவனாகி நீசத்தன்மையில் முதன்மை யாயினான்—என்றவாறு. (11)

வேறு.

செல்வநிலை விட்டுடல் செருக்கிய மதத்தால்
வல்வினை யிழைத்தது வரம்பிலை யநேக
முல்லைநகை யார்முலை முயக்கின்முறை யின்று
கொல்வதல தில்லைதொழில் செய்துமகிழ் கொள்கை

(இ - ள்.) ஆசாரச் செல்வத்தினிலையை விடுத்து உடம்பு கொழுத்த மதத்தினாலே வலிதான தீவினை செய்ததற்கு அளவில்லை. முல்லை யரும்பை யொத்த நகையை யுடைய அனேகமான பெண்களினது தனங்களைத் தழுவுதலில் முறைமையில்லை. தொழில் செய்து சந்தோஷிக்கின்ற தன்மையானது கொலை செய்வதன்றி வேறில்லை—என்றவாறு. (12)

கோவினி னிறைச்சிபல கொன்றுணவு கொள்வ
னேவறு புலைச்சியர்கள் போகமொரு மிப்பான்
பாவிகப டத்தொழில்கள் பற்பல விழைப்பான்
றாவிவிரி புட்குலம் வதைத்துயிர் தொலைப்பான்

(இ - ள்.) பசுக்களைக் கொன்று அதன் மாமிசங்களைப் புசிப்பாகக் கொள்வான். தீயசெய்கை கெடாத நீசப் பெண்களின் புணர்ச்சியிலொன்று பட்டிருப்பான். வஞ்சகச் செயல்களைப் பல பலவாகச் செய்வான். தாவிகளை விரிக்கின்ற பறவைக் குலங்களைக் கொன்று சீவனைப் போக்குவான்—(13)

வாயிடை யருந்துவன் மதுக்களை முகந்து
தீயகள வுக்களவு செய்வன்மனை தோறும்
தாயுமுள் வெறுப்பள்புவி நாயகி சலிப்ப
ளாயினவ னுக்கிணை யவனையல தின்றே

(இ - ள்.) கள்ளை மொண்டு வாயாற் குடிப்பான்; வீடுகள் தோறும் பயமில்லாத திரவியத்தைத் திருடுவான். பெற்ற தாயும் மனது வெறுப்பாள் பூமாதேவியும் நடுங்குவாளாதலால் அச்சுனந்த னென்பவனுக்குச் சமானம் அவனே அல்லாமல் வேறில்லை—என்றவாறு. (14)

இன்னசெய லாயொரு புலைச்சியை யிசைந்து
தன்னுகுடில் கட்டியவள் சோறிட வருந்திப்
பின்னர்மகிழ் போகமொடு பிள்ளைபல பெற்று
மன்னினன னேகதின மாதுற வளர்ந்தான்

(இ - ள்.) *இத்தன்மையான செய்கையினாலே ஒரு நீசப் பெண்ணை மனையாட்டியாகச் சம்மதித்துக் குடிசை கட்டி அந்த நீச மாது சமைக்கும் சோற்றை வாங்கிப் புசித்துச் சந்தோஷிக்கின்ற வாழ்க்கையோடு பல மக்களையீன்று அந்த நிலையில் நெடுநாளிருந்தான் சுனந்தனென்பவன்— (15)

தீயவழி பாதக மியற்றிய திறந்தா
லாயவினை கூடியவ னுன்னைய வதைக்க
மேயபெரு நோய்கிருமி வெங்குருதி மல்க
மாயும்வகை மூப்புநரை வந்துடல் வதைந்து

(இ - ள்.) பொல்லாத மிகுந்த பாவங்களைச் செய்த குணத்தினால் வினைகளெல்லாந் திரண்டு இச்சுனந்தனது சிவனைச் சூழப் பொருந்திய பெரு நோயினாலே புழுக்களும் வெவ்விய இரத்தமும் நிறையச் சாகுந் தன்மையான விருத்தாப்பியம் வந்து நரைத்து உடம்பு கூனி—என்றவாறு.

அல்லலொ டழுங்கியவ னுள்ளுடு மாறு
மெல்லுயி லடுங்கொடு நமன்சின மெழுந்தே
யொல்லைவரு கென்றுபல தூதரை யுறுக்கிக்
கல்லெறிவை யொத்தசில கட்டுரை புகன்றான்

(இ - ள்.) துன்பத்துடனே வருந்தி அச்சுனந்தனது உயிர் தத்தளிக்கு மளவில் கொல்லுகின்ற கொடிய யமதருமராஜனவன் கோபங்கொண்டு சீக்கிரத்தில் வாருமென்று பல தூதரை அழைப்பித்துக் கல்லினாலே வீசுவதை யொத்த சில கொடிய வார்த்தைகளைச் சொன்னான்—என்றவாறு. (1

வஞ்சகம் விளைத்திடு சுனந்தனுயிர் வாழு
ளெஞ்சிமுடி வாகிய தினிக்கடிதி னேகி
யஞ்சவவன் மெய்கயி றழுந்திட விறுக்கி
நெஞ்சுலர வாயுலர நீவிர்கொடு வந்தே

(இ - ள்.) கபடஞ்செய்கின்ற சுனந்தனது உயிருடைய வாழ்நாள் குறைந்து முடிவாயிற்று. இனிச்சீக்கிரத்திற் சென்று பயப்படும்படிக்கு அவனுடம்பிற்பாசக் கயிறழுந்த இறுக்கிக்கட்டி அவனது மனது உலரவாய் உலர நீங்கள்கொண்டு வருவீர்—என்றவாறு. (18)



பற்றியுயிர் கொன்றவழி பாதகனி ரங்கச்
சுற்றியொரு பாறைமிசை தூள்பட வடிப்பீர்
மற்றொருவன் மாதினை மணந்தவுட லத்தை
யெற்றியொரு செக்கினிடை யிட்டவ ணரைப்பீர்

(இ - ள்.) சீவர்களைப் பிடித்துக் கொலைசெய்த மிகவும் பாதகனாகிய சுனந்தனனவன் வருந்தச் சுழற்றி ஒரு பாறையின்மேல் பொடிபடும் படியாய் மோதுவீர். வேறொருவனது மனைவியைக்கலந்த அவன் உடம்பை ஒரு செக்கிலிட்டு அரைப்பீர்—என்றவாறு. (19)

ஓருயிர் வதைத்தத னுடற்றசை யருந்தும்
சீரிலிதன் வாயினிடை செம்பினை யுருக்கி
வாருமவ னைக்கொடிய கும்பியின் மயங்க
வூர்புழுகு அட்டைகளும் வுண்டுறும்வகை செய்வீர்

(இ - ள்.) ஒரு சீவனைக்கொன்று அதனுடம்பிலிருக்கின்ற மாம்சத்தைப் பொசிக்கின்ற வாயினிடத்தில் உருக்கின செம்பை வார்ப்பீர். பின்பு அவனைக் கொடிதான நரகத்தில் மயங்கும்படி யூருகின்ற கிருமிகளும் அட்டைகளும் அருந்தும்படியாய்த் தள்ளுவீர்கள்—என்றவாறு. (20)

களவுசெய வேகுமிரு கால்கள்கலில் வைத்தே
உளிகொடு தறித்திடி ருலக்கையி லிடிப்பீ
ரெளியவரை வழக்கினி லிழுத்துடைமை கொண்டான்
விளியவுடல் வெந்தெரிய விட்டிடுதி ரெண்ணெய்

(இ - ள்.) திருடச் செல்லுகின்ற அவனது இரண்டு கால்களையும் கல்லின்மேல் வைத்து உளியாலே வெட்டுவீர். உலக்கையினாலே இடியுங்கள் எளியவரை வழக்கிலிழுத்துப் பொருள்களைப்பறித்த அவனுடலம் வெந்து எரியும்படியாக அக்கினியிலிட்டு எண்ணெயை விடுங்கள்—என்றவாறு. (21)

சூதொடுபொய் சொல்லுமவ னுத்துணித் தறுத்து
வாதையாப் படித்துவாயில் லாச்சிமெய் யிலாடியே
யாதுசெய்வ னென்றிரங்கி யெய்க்கச் சூலமொன்றவன்
மீதுசுற்றி வி[illegible]ந்து மீளவுமிடிப்பிரே

(இ - ள்.) [illegible]கம் பேசுகின்ற அவனுடைய நாவைப்
[illegible]பை அடித்து, அவனது சரீரத்தில்,

வாச்சியாடி என்ன செய்வேனென்று இளைக்கும்படியாய் ஒரு சூலத்தை அவன் மேல் சுழற்றிவிட்டெறிந்து திரும்பவும் அவனை இடியுங்கள்— (22)

என்றுபல கூறினான் றூதர்தமை யேவ
நின்றவவர் பணிந்துவிடை கொண்டுநினை வைப்போற்
றுன்றினர்கள் வெங்கதைகள் சக்கரங்கள் சூல
மொன்றியெறி கற்களொடு பாசமொழி யாதே

(இ - ள்.) இப்படியென்று பலவாகச்சொல்லி எமனானவன் தூதர்களை அனுப்பத் தூதர்கள் வணங்கி விடைபெற்றுக்கொண்டு மனோவேகமாய் நெருங்கிச் சென்றார்கள். தெண்டாயுதங்களும் சூலமும் வீசுகின்ற கல்லுக ளுடனே பாசக்கயிறும் நீங்காமலெடுத்து—என்றவாறு. (23)

அஞ்சனப் பருவதங்கள் போலவுடன் மார்பும்
விஞ்சுபிறைப் பல்லிடி யிடித்தன வெடிச்சொல்
வெஞ்சின வழற்பொறி யுகுத்தவிழி கொண்ட
நஞ்சுரு வெடுத்தனைய தூதர்பலர் நண்ணி

(இ - ள்.) மைநாகபருவதம்போலத் தேகமும் மார்பும் ஒளிவீசுகின்ற பிறையையொத்தபல்லும் இடிஇடித்ததை யொத்த பேரொலியுடைய சொல் லும் கொடிய கோபத்தினாலே அக்கினிப் பொறிகளை வீசுகின்ற கண்களை யுடைய ஆலகாலமே வடிவமெடுத்தாற்போன்ற எமதூதர்கள் பலபேர்கூடி அச்சுனந்தனைச் சேர்ந்தார்—என்றவாறு. (24)

ஓர்புற மிருப்புலக்கைக ளோர்புற மழுக்க
ளோர்புறங் குறுந்தடிக ளோர்புறத்திற் சூலம்
மோர்புறத்தில் வாட்படைக ளோர்புறத்தில் வேல்க
ளோர்புறத்திற் கல்லெறிக ளோர்புறத்திற் பாசம்

(இ - ள்.) ஒரு பாகத்தில் இருப்புலக்கைகளும் ஒரு பக்கத்தில் மழுக் களும் ஒரு பக்கத்தில் குறுந்தடிகளும் ஒரு பக்கத்தில் சூலமும் ஒரு பக்கத் தில் வாளாயுதங்களும் ஒரு பக்கத்தில் கல்லெறிகளும் ஒரு பக்கத்தில் பாசக் கயிறுங்கொண்டு—என்றவாறு. (25)

கொக்கரிப்பர் சுற்றுவர்கை கொட்டுவர்நில் லாதே
சக்கரத்தி னிற்றிரிந் துறுக்குவ ரதட்டிக்
கைக்கதை சுழற்றிடுவர் பற்களைக் கடிப்பார்
மெய்க்கயி றெடுத்தலைத்து வீசுவர் கழுத்தில்





(இ . ள்.) உரப்புவார் இவனைச்சூழ்ந்து கொள்வார். கையைக் கொட் டுவார். நில்லாமல் குலாலசக்கரத்தைபோல் திரிந்து கோபிப்பார். அதட்டிக் கையிலிருக்கின்ற தண்டாயுதத்தைச் சுழற்றுவார். பற்களைக் கடிப்பார். தாமுடம்பிற் போட்டிருந்த பாசத்தையெடுத்துச் சுழற்றி இச்சுனந்தனது கழுத்தில் வீசுவார்—என்றவாறு. (26)

கட்டுவ ரிறுக்குவர்கள் காலினி லுதைப்பார்
குட்டுவர் சுழற்றுவர்கள் குத்துவர்கள் கையால்
வெட்டுவர்கள் வாயினில் விழுங்குவர்கள் போலே
யெட்டுவர் பிறைப்பல் விதழைத்திறப் பாரே

(இ - ள்.) இந்தச் சுனந்தனைக் கட்டுவார்; இறுக்குவர்; காலாலே யுதைப்பார்; குட்டுவார்; கைகளினாலே குத்துவார்; வாயினாலே விழுங்கு பவரைப்போல எட்டிப் பிடிப்பார்; பிறையை யொத்த பல்லைக் காட்டுவார் சுனந்தனானவன் பிரமிக்கும்படியாய்—என்றவாறு. (27)

இன்னலிடும்பைக ளியற்றவெம தூத
ரென்னசெய்குவேனென விளைப்புடன் றவித்தே
முன்னறிவி லாததொழின் முயங்கினனந் தோவென்
றுன்னியங்கோர் செய்கையற்று நொந்தனன் சுனந்தன்

(இ-ள்.) இத்தன்மையான பல துன்பங்களை யெமதூதர்கள் செய்யயாது செய்வேனென்று ஆயாசத்தோடும் பாதவித்து முன்னால் விவேகமில்லாத செய்கைகளைத் தழுவிச் செய்தேனே ஐயோவென்று நினைத்து அவ்விடத்தி லொருசெயலுமின்றி வருந்தினான் சுனந்தனானவன்—என்றவாறு. (28)

வேறு.

மெய்ம்மயங்கி நெட்டுயிர்ப் பெறிந்துவாடி விம்மியே
யம்மவோவென் செய்வலென் றலறிவாய் குழறியே
பொய்ம்மலிந்த சிந்தைநைந்து கண்களிற் புனல்விழ
வம்மெனவ மழுந்ததூதர் வாதைசெய்ய மாழ்கியே

(இ - ள்.) அங்கஞ் சோர்ந்து பெருமூச்சுவிட்டுத் துவண்டுதேம்பி அந் தோ யாது செய்வேனென்று அழுது வார்த்தை தடுமாற வஞ்சக மிகுந்த மனது நைந்து கண்களிலிருந்து நீர் சொரிய வாவென்று கூப்பிட்டயம தூதர்கள் வருத்தஞ் செய்யத் துன்பமுற்று—என்றவாறு (29)

மயங்கிமூர்ச்சை யாகவாவி வாங்கியேகு காலையிற்
புயங்கபூட ணன்சுவேத மாநகர்ப்பொ லிந்திடும்

சயந்தருவ சிட்டன்வேள்விச் சாலையுற்ற நீறுட
னியங்கும்வெண் ணதித்திவலை காற்றெறடுத் திறைத்ததால்

(இ - ள்.) சுனந்தனனவன் பிரக்ஞை தப்பி மூர்ச்சையாக அவ னுயிரைவாங்கிக்கொண்டு எமதூதர்கள் போகும் பொழுது சர்ப்பா பரணத்தையுடைய சயம்புவினது வெள்ளூரில் எழுந்தருளியிருக்கின்ற வெற்றியைத் தருகின்ற வசிட்டர் யாகசாலையிலிருந்த விபூதியுடனே செல்லுகின்ற வெள்ளாற்றி னீர்த்துளியையுங் காற்றானது வாரியிறைத்தது—(30)

அந்தரத்தி னேகுகின்ற வாருயிர்ச் சுனந்தன்மேன்
முந்துநீறு நீருமுற்ற பெற்றியான் முனந் துயர்
சிந்தைகொள்ளுந் தூதர்கைய டிக்கலக்கந் தீர்ந்துதா
னுய்ந்துபோகு மாறவன்றனெஞ்சுஞ் ஞானமுற்றதே

(இ - ள்.) ஆகாய மார்க்கத்திற் செல்லுகின்ற யாதனா சரீரியாகிய சுனந்தனென்பவன்மீது முன்சொல்லிய யாகசாலை நீறும் வெள்ளாற்றின் தீர்த்தமும் பட்டமையினாலே முன்பு துன்பமுழுந்த மனதிற்கொண்ட வெமதூதர்கள் கையாலடிக்கப் படுகின்ற கலக்கமானது நீங்கித்தான் பிழைத்துப்போகும் வண்ணம் அந்தச் சுனந்தன் மனம் ஞானத்தையடைந்தது—

...றேர்விளங்கு சோதிசெம்பொ னாலயம்
வாருதிக்கட் பள்ளிகொள்ளு மால்விரிஞ்சன் வானவர்
கூருதித்த சூலஞ்செங்கை கொண்டமா கணத்துடன்
வோமுற்ற சித்தர்சுற்று மெய்த்தவர் நெருங்கவே

(இ - ள்.) சிறப்புத் தங்கிய வெள்ளூரின்கண் வீற்றிருக்கின்ற தாந்தோன்றி ஈசரது செம்பொன் மயமான கோவிலையும் பாற்கடலிற் சயனித்திருக்கின்ற விஷ்ணுவும் பிரமதேவனும் தேவர்களும் சூலங்களைச் சிவந்த கைகளிற் றாங்கிய சிவகணங்களுடனே சித்தர்களும் நெருங்கி யிருக்க—

அத்தலச் சிவாலயத்தை யன்பினோடு கண்டவர்
முத்திசேர நல்குபான்மைய பூமுனின் னிலக்குபேர்
மொய்த்தநீழற் காட்டிலுப்பை மென்முகின் முயக்கமாய்
வைத்தஞான மேமணக்கும் வண்மையாவும் நோக்கனும்

(இ - ள்.) விளங்காநின்ற அவ்வெள்ளூரென்னும் புண்ணியஸ்தலத்தில் சிவாலயத்தை அன்பினுடனே தெரிசித்தவர் மோக்ஷ வீட்டை



யடையும்படியான தன்மையானது முதிர்ந்து ஆகாயத்தை யளாவிய நிழலையுடைய காட்டிலுப்பை விருக்ஷமாயிருப்பதும் அதன்மேல் மேகந் தவழ்வதையும் ஞானமேபரிமளிக்கின்ற வளமையை முழுதும் சுனந்தனனவன் பார்த்தவளவில்—என்றவாறு. (33)

வெவ்வினைப் பயன்கள்யாவும் விட்டுநோக்கி யோடின
செவ்விதாய் நிறைந்திலங்கு சித்தசுத்தி யெய்தினான்
கொவ்வைவாய்ச் சுசீலைபெற்ற கொள்கையை யறிந்தன
னெவ்வமற்ற நற்சுகீர்த்தி தந்தையென் றறிந்தனன்

(இ - ள்.) கொடிதான வினையின் பயனாகிய துன்பமெல்லாம் விடுபட்டு ஓடிப்போயின. மனமானது பரிபூர்ணமாய்ச் சுத்த நிலையையடையலாயினான்; கோவைக்கனிபோன்ற சுசீலா தேவி தன்னை பெற்றதன்மையை யறிந்தான்; நன்மை பொருந்திய சுகீர்த்தியானவரைத் தன் பிதாவென்று அறிந்தான்.—என்றவாறு. (34)

தன்பிறப் பறிந்ததூதர் தாம்பிணி விலக்கியே
வன்புறப் புடைத்துதைக்கும் வாதைமுற்றும் நோக்கினான்
இன்புறுத் தருஞ்சயம்பு நாதவென்று கூப்பிட
மின்பணிந்த நுண்ணிடைச்சி பங்கர்காதில் வீழ்ந்ததே

(இ - ள்.) இவ்வாறு தனது பிறப்பை யுணர்ந்தபோது எமதூதர்கள் பாசத்தினால் விலக்கிப் பிணித்துக் கடினமாக அடித்துதைக்கின்ற வருத்த முழுதும் பார்த்துச் சுகவடிவத்தை யருள் செய்கின்ற சயம்புநாதாவென்று கூப்பிடவும், மலைமகளைப் பாகத்திலுடைய சுயோற்பத்தீசர் திருச்செவியில் வீழ்ந்தது—என்றவாறு. (35)

வேறு.

முக்கணிறை தாந்தோன்றீ யீசனார் திருக்கருணை முற்றிச் சூழும், மக்களை தனைநோக்கி நமதுபத்தன் சுனந்தனையே யந்த கன்றன், மிக்கசினத் தூதர்வவ்விச் செல்லுகின்றார் விரைந்துசென்று விடுவித் தச்சம், புக்கவனை யஞ்சலஞ்சலென் றிவணேக வழைத்து வரப் போமீனீரே.

(இ - ள்.) மூன்று கண்களையுடைய இறைவராகிய தாந்தோன்றிக் கடவுளானவர் திருவருள் கூர்ந்து தம்மைச் சூழ்திருக்கின்ற கணநாதர்களை

பார்த்து நம்முடைய அன்பனாகிய சுனந்தனென்பவனைக் காலனுடைய தூதர்கள் பிடித்துக்கொண்டு போகின்றார்கள். நீங்கள் சீக்கிரத்திற் போய் விடுவித்துப் பயப்படாதே என்று இவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்—என்றவாறு. (36)

என்னவருள் புரிந்துதிரு வாய்மலர்ந்த திருமாற்ற மிசையத் தங்கள், சென்னிமிசைக் கொண்டுவளை சக்கரங்கள் விற்களைதண் டிரிசூ லங்க, ளொன்னலர்க ளுயிர்பருக லன்றியே யுறைபுகுதா வொளிரும் வாட்கள், மின்னகுசெவ் வேல்பிச்ச பிண்டிபா லங்கற்கள் விளங்கக் கொண்டு

(இ - ள்.) இப்படியென்று கிருபை கூர்ந்து திருவாய் மலர்ந்த மொழியைச் சிரசின் மேல் சூடிக்கொண்டு சங்குகள் சக்கரங்கள் தனுசு தண்டம் மழுக்கள் பிண்டிபாலம் சிவனை வாங்குப்படியான திரிசூலங்கள் வேலாயுதங் கள் முதலியவற்றைச் சிவகணங்களானவர்கள் எடுத்துக்கொண்டு (37)

வெண்டிருநீ றிளநிலா வெறிக்கமுடி கோடிகமும் விளங்கப் பூணும், கண்டிகைமா லைகளொலை வைந்தெழுத்தும் சிலக்கதையுங் கலந் தங் கார்ப்பத், திண்டிறற்காற் றினைப்பழித்து மனத்தினையப் பாற் றள்ளிச் சினங்கண் மூழ்க, கொண்டுசமன் றூதர்பக்கல் வந்தடைந்து சீறியெதிர் கொக்க ரித்து

(இ - ள்.) வெண்மையான திருநீற்றுப் புண்டரமானது இளஞ்சிரணம் பிரகாசிக்க அணிந்தவாகு வலயமு மாலைகளும் தொங்கப் பஞ்சாக்ஷரமும் சிவகதைகலந்து சப்திக்க வலிமையும் வெற்றியு முடையவாயு வேகமனோ வேகத்தையும் தள்ளிவிட்டுக் கோப மதிகரிக்கக் கொக்கரித்துக் கொண்டு யெமதூதர் பக்கத்தில் வந்து சேர்ந்தார் சிவ கணங்களெல்லோரும்— (38)

கற்களினார் சிலரெறிந்தார் கைகளினாற் சிலர்புடைத்தார் கண்டே யஞ்சப், பற்களையே சிலர்கடிப்பார் சிலர்தலையின் மயிரை யெல் லாம்பறித்து, நிற்பவரை யடிமுழுஞ் சாலினாற் சிலரிடிப்பார் நிலைவிட் டோடப், பிற்றுடர்வர் சிலரின்ன துயர்விளைத்த தூதர் தம் மைப் பெரிது நோக்கி

(இ - ள்.) எமதூதர்களை கல்லுகளினாலே சிவகணங்கள் வீசினார்கள் கைகளினாலேசிலணங்கள் அடித்தார்கள். இக்கணதிபரைப் பார்த்து எமது தர்பயப்படச் சிலர்பற்களைக் கடிப்பார் சிலர். தலைமயிரையெல்லாம் புறித்து



உதைத்து முழங்காலினாலே யிடித்து ஓடினாலும் விடாமல் பின்னேதொ டர்ந்து இத்தன்மையான துன்பங்களைச் செய்தார்கள் சிவகணங்கள்—

அடியவருக்காரமுதாய்த் தீங்கனியா யறுபகைதீ ரகத்துட் டோன்றுஞ், சுடர்விளக்காய் மருவுதாந் தோன்றினு ரமர்ந்துறை யுஞ்சூழ லான, தடநகராஞ் சுவேதபுரிக் கைந்துகூப் பிடுதூரஞ் சாரு மெல்லை, யிடையொருவன் றெரிசனையாற் செஞ்சடையெம் மானு ருவ மெய்து வானல்

(இ - ள்.) பக்தர்களுக்குண்ணத்தக்க அமிர்தமாகியும் இனியபழமாகி யும் காமாதியாறுபகையுந் தீர்ந்த உள்ளத்திலுதிக்கின்ற பிரகாசம் பொருந்தி யதீபமாகியும் இருக்கின்ற சுயோற்பத் தீசரெழுந்தருளியிருக்கும் இடமாகிய வெள்ளூரென்னும் தலத்திற்கு நாற்றிசையிலும் ஐந்து கூப்பிடுதூரத்தில் ஒருவன் சேருமளவில் நடுவில் அவ்வைந்து கூப்பிடு தூரத்திற்குட்பட்டு நடக்கின்றவன் எமது கடவுள் வடிவமாவான்—என்றவாறு (40)

நீறணிந்த சுனந்தனுக்கு வல்வினைபோய்ச் சடலமெங்கு நிமலமாயும், வேறுளதோ விவன்பெருமை யெம்மனோ ராலெடுத்து விளம்ப லாமோ, சீறுசினத் தூதரோ [illegible] கணங்களுஞ்சசெல னுமென்று, கூறுமுன மலர்விரைந்து கூற்றனையே பணிந்தெழுந்து கூற லுற்றார்

(இ - ள்.) விபூதிதரித்த இச்சுனந்தனுக்கு வலியவினைகள் நீங்கி அங் கமெல்லாம் புனிதமாகியும் வேறுவினை இருக்கின்றதோ இவனது பெரு மையை எம்போலியாரால் எடுத்துச்சொல்லப்படுமோ எமதூதரே உங்களி டத்துக்கு இனிவிரைந்து போங்களென்று கணங்கள் சொல்லுதற்குமுன் னமே தூதர்கள் சீக்கிரத்திற் சென்று எமனைவணங்கிச் சொல்லுவார்கள்.

அளவிறந்த பலபுவனத் தலகிலா வுயிர்ப்பிழைக ளகற்ற வேண்டி, யுளநினைந்து செங்கோலொன் றோச்சியொரு தென்றிசைக் கணுயர்ந்த மேலாய், விளைவுதரு நோயிரண மக்களுடலெய்திலதை வெதுப்பிக் கீறிக் களைவர்போற் பாவிகட்குத் துயர்விளைத்து வினை யொழிக்கக் கடவ தாமால்

(இ - ள்.) எல்லையற்ற பல்லுலகங்களி லளவில்லாத ஜீவர்களின் குற் றத்தை நீக்கவேண்டி மனதில் நினைத்து ஒரு தன்மையாய்ச் செங்கோல்

செலுத்தித் தென்றிசையின் கண்ணேயுயர்ச்சியாயிருக்கின்ற தருமராஜனே ஆசையாற் கொடுக்கப்பட்ட ரிணரோயானதுமனிதர் இடத்தில் உண்டாயின் அதனைவெப்ப முண்டாக்கிக் கிழித்து ஆற்றுபவரைப் போலத் தீயவருக்குத் துன்பத்தைச் செய்து தீவினை நீக்கவேண்டியது தருமமாகும்—

ஐயவெமை யேவு நின தாணை தலைக் கொண்டுவிரைந் தடியோஞ்
சென்று, வெய்யவினைச் சுனந்தனையே துயர்விளைத்துக் கொண்டு
வரும் வேளை வெள்ளூ,ரெய்துமெல்லைவிண்மார்க்கத் தெதிர்த்துச் சிவ
கணநாத ரிடர்கள் செய்த, செய்கையது காணவென்று தமதுமெய்
கள் காட்டியவர் திகைத்து நின்றார்

இ - ள்.) சுவாமி எங்களை ஏவிய உமது ஆக்கினைப் பிராகாரஞ் சீக்கிரத்தில்போய்த் தீவினைசெய்த சுனந்தனைத் துன்பம் செய்து பிடித்துக் கொண்டு வரும்போது வேதபுரியைக் கிட்டியவளவில் ஆகாயமார்க்கத்தில் எதிரேவந்து சிவகணங்கள் எங்களைத் துன்பஞ் செய்தசெயலைப்பாருமென்று தங்களுடலைக்காட்டி யமதூதர்கள் அழுதார்கள்—என்றவாறு. (43)

வேறு.

வெம்பக டுகைக்கு மேலோன் விளம்பிய படர்சொற் கேட்டு
நம்பிய தூதர்க்கு நன்று நவிற்றிய தரும நுட்ப
மெம்பிரா னறிவா னல்லா லியாவர்மற் றறிவார் நெஞ்சக்
கொம்பினிற் பத்தி யென்னும் கொடிபடர் கின்ற கொள்கை

இ - ள். வெவ்வியகடாவை நடத்துகின்ற மேன்மையுடைய தருமனவன் தூதர்களுரைத்தவார்த்தை கேட்டுத் தன்னைநம்பிய அத்தூதர்களுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லித்தருமத்தின் இரகசியத்தையும் மனமாகிய கொம்பினிடத்தில் அன்பாகிய கொடிபடர்கின்ற தன்மையையும் எம்பிரானாகிய கடவுளே அறிவாரல்லாமல் பின்யார்தானறியவல்லார்—என்றவாறு.

அறிந்தசெய் கையினுந் தோற்று மறிவிலாச் செய்கை நண்ணும்
பிறந்திடு மயலோர் செய்கை எதுவாய்ப் பிறந்து தோன்றுங்
கறங்கொலி நீரி னானுங் காசினிப் பேதத் தாலுஞ்
சிறந்ததா பரம் விலங்கு புட்களா லுஞ்ச னிக்கும்

இ - ள். அறிந்த செயலினாலுண்டாகும் அறிவின்றிய செயலினிடத்துத் தோன்றும் வேறுமொரு செயலின் காரணமாயுண்டாகும். ஒலிமுழங்குகின்ற தண்ணீரினாலும் பூமியினிட பேதங்களினாலும் சிறப்பையுடைய தாபரங்களினாலும் மிருகங்களினாலும் பறவைகளினாலும் உற்பத்தியாரும்—



ஆதலா லொன்றிற் றோன்று மதிசய தரும மெனாஅ
காதலார் மார்க்கண் டன்றன் செய்கையைக் கருத்துட் கொண்டும்
போதல ரிதழி வேணிப் புனிதன்றாள் வலியு மெண்ணி
நீதியென் றிருந்தா னப்பா னிகழ்ந்தன நெறியிற் சொல்வாம்.

இ - ள். ஆகையினாலே ஒருவிதத்தினாலேயுண்டாகும் தருமமானது அன்று பத்தியுடைய மார்க்கண்டனுடைய செயலை மனதிலே நினைத்தும் அலர்ந்த கொன்றை மாலையணிந்த மகாதேவரது பாதத்தின் வலிமையை நினைத்து இது ஞாயமென்று இயமனானவன் இருந்தான்— (46)

திருமலி விமான மீது சுனந்தனைச் சிறக்க வைத்தே
இருபுற மாதர் கூட்டஞ் சாமரை யெடுத்து வீச
ஒருபுற மால வட்டந் தென்றலை யுவந்து நல்க
பரவையின் முழக்கம் போலத் துந்துமி பலமு ழங்க

(இ - ள்.) செல்வமிகுந்த விமானத்தின்மேல் சுனந்தனென்பவனைச் சிறப்பாக விருக்கச்செய்து இரண்டுபக்கத்திலும்மாதர்கூட்டங்கள் சாமரமெடுத்து வீச ஒருபக்கத்தில் ஆலவட்டமானது தென்றல்காற்றை யடிக்கச் சமுத்திர கோஷம் போலப் பல துந்துமி வாத்தியம் முழங்க—என்றவாறு. (47)

பொன்னலர் மாரி சிந்த மங்கல மடவார் போற்ற
இன்னரர் பாடற் றீந்தேன் கிளர்தரக் குமுதச் செவ்வா
யன்னமென் னடையா ராடச் சிவகண மருகு சூழக்
கன்னிபங் கானார் வாழுங் கைலைமால் வரையிற் சேர்ந்தார்

(இ - ள்.) சுவர்ணபுட்பம் சொரியச் சுமங்கலைப்பெண்கள் துதிசெய்ய இன்னிசையுடைய தித்திப்பையுடைய தேன்பரவச் சிவந்த அதரத்தையும் அன்னத்தையொத்த மெல்லிய நடையையுமுடைய மாதர்கள் நடனஞ்செய்யச் சிவகணங்கள் பக்கத்திற்சூழ்ந்து வர மலைமகள் பாகத்தையுடைய கடவுளிருக்கின்ற பெருமைபொருந்திய கயிலையங்கிரியை யடைந்தார்—

தடைப்படும் வாயிற் காட்சி தருவிடைத் தேவ னாலே
விடைக்கொடு கோயி லுள்ளே திருமுன்பு மேவி நின்றே
யடுக்கியே தோத்தி ரஞ்செய் தஞ்சலித் திறைஞ்சி யங்கே
கடற்படு நஞ்ச முண்டோர் கருணைபெற் றிருந்தா னன்றே

(இ - ள்.) தடைசெய்கின்ற வாயிலினிடத்துத் தரிசனைகொடுக்கின்ற நந்திகேசுவரராலே உத்தரவுபெற்றுக்கொண்டு கோவிலுட்சென்று தோத்

[illegible] வணங்க சமுத்திர [illegible]
விட்டதையருந்திய மகாதேவரது கிருபையைப்பெற்றுச் சந்தோஷமாக விருந்தான் சுனந்தனனவன்—என்றவாறு. (49)

இத்திறக் காதை முற்று மிருடிகட் கோதச் சூதன்
பத்தியான் முன்னஞ் சம்பு கன்கதைப் பரிசு சொன்னீ
ர் த்திறம் விளங்க வெங்கட் கருள்செய வேண்டு மென்று
மெய்த்தவர் பின்னுங் கேட்கச் சூதனும் விளம்ப லுற்றான்

(இ-ள்.) இத்தன்மையான கதைமுழுதும் முனிவர்களுக்குச் சூதமுனியுரைக்க அன்பினாலே முன்னாற் சம்புகனென்று ஒருவன்சரித்திரம் சொன்னீர். அச்சரித்திரத்தை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர்சொல்ல ஆரம்பித்தார்—என்றவாறு. (50)

சுநந்தன் சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம். 11-க்குத் திருவிருத்தம் 494.

## 12-வது சம்புகச் சருக்கம்.

### வேறு.

உரலனைய காலானை பொழுக் குமத நதிக் கானில்
வரியளிக ளிசைபாட வானர (ம்)லைகெடுப்பக்
கருமுகில்கண் மேன்முழங்க நல்வளமே காட்சியாம்
விரைகமழும் பூஞ்சோலை விதர்ப்பமென வொருநாடு

(இ-ள்.) உரலைப்போன்ற கால்களை உடைய யானைகள் சொரிகின்ற மதவாற்றின் ஒழுக்கில் வரிகளை உடைய வண்டுகள் ராகம் பாடவும் குரங்குகள் இலாவகம் செய்யவும் கரிய மேகங்கள் மேலே சப்திக்கவுமாகிய நல்ல வளப்பங்கள் காணப்படுகிற மலர்ந்த தோப்புகள்சூழ்ந்த விதர்ப்ப மென்றொரு தேசம்—என்றவாறு. (1)

அந்நாட்டின் மனுநீதி யாராய்ந்து பல்லுயிரும்
தன்னுடைய கருணையினாற் றழையவருள் கைவேந்தன்
பொன்னாட்டைத் தாங்குநெடும் புவிபுரக்கு மிந்திரன்போ
லின்னாட்டி லரசுபுரிந் திதயமகிழ் வீமனென்போன்

(இ-ள்.) அத்தேசத்தில் மநுநீதியை விசாரித்துப் பலசீவராசிகளையும் தனதுகிருபையினாலே செழிப்புறும்படி தயவையுடைய கொடுக்கின்ற கையையுடையராசன் சுவர்க்க லோகத்தை விட்டு நெடிய பூலோகத்தைப்



பரிபாலிக்கின்ற தேவேந்திரனைப்போல் இப்பூமியிலிருந்து இராச்சியம் செய்து சந்தோஷிக்கின்ற வீமராசனென்னும் பெயரையுடையவன்— (2)

அருட்கடலாய்க் காத்தளிக்கு மாவணமா டத்தெருக்கள்
பரக்குமுகில் கண்படைகொள் பன்மேடை விண்மதிவந்
திருக்குநெடுங் கோபுரங்க ளெண்டிசையி னிடைக்கொடிவான்
றருக்குலத்தில் படரவளர் சாலமக ழிக்கிடங்கு

(இ-ள்.) கிருபையே தமக்குக் கடமையாகப் பாதுகாக்கின்ற கடைகளும் வீடுகளும் நிறைந்தவீதியும் பரவுகின்ற மேகங்கள் தூங்குகின்ற பல மேடைகளும் ஆகாயத்தில் செல்லுகின்ற சந்திரன் வந்துறங்குகின்ற நீண்ட கோபுரங்களும் எட்டுத்திக்கிலும் கட்டியகொடிகள் தேவலோகத்தில் கற்பக விருக்ஷங்களிற் படருகின்ற மதிலும் விசாலமான அகழியும்—என்றவாறு.

வேதபா ரகராசர் வீறுதன வாணிகருந்
தீதறுசூத் திரர்மற்றுஞ் செறிந்துவள நெருங்கியது
நீதிசேர் குண்டினமென் றொருநகரந் நெடுங்கரி
லோதிநெறி வழுவாத சம்புகனென் றுளனொருவன்

(இ-ள்.) வேதாத்தியயனம் செய்கின்ற அந்தணரும் அரசரும் பெருமை பொருந்திய வைசியரும் குற்றமற்ற சூத்திரரும் நிறைந்து நீதிசெலுத்துகின்ற தனது குல ஒழுக்கம் தவறாத சம்புகனென்னும் பெயரையுடையவன் ஒருவனிருந்தான்—என்றவாறு: (4)

மறைக்குலவா ரிதிதோன்று மாமதிபோல் பவன்மனையாள்
சிறக்குமொரு புத்திமதி யெனுநாமத் திருவனையாள்
நிறைக்குமெழி லவளுடனே நெடுமகங்கள் பலவியற்றிக்
குறித்தபல சோமமது தினஞ்செய்து கொடுமகிழ்வாய்

(இ-ள்.) வேதியர் மரபாகிய சமுத்திரத்திலே யுதித்த சந்திரனையொத்த சம்புகனென்பவனுக்கு மனைவியானவள். சிறப்புவளரா நின்ற புத்திமதியென்னும் பெயரையுடைய லெட்சுமிக்கு ஒப்பானவள். அழகுநிறைந்த அப்புத்திமதியோடு பல யாகங்களைச்செய்து தினமும் சந்தோஷமடைந்து—

முத்தழலுங் கொழுந்துவிட்டு முப்பொழுதும் பூசித்துப்
பத்தியுட னதிதிகளா ராதனைகள் பலவியற்றி
மெத்தமறைச் சடங்காற்றி யாயியாய் மிகவிளங்கிப்
புத்திமதி தன்னுடனே பொருந்தியொழு குங்காலை

(இ - ள்.) ஆகவனீயங் காருகபத்தியம் தெக்ஷிணாக்கினி யென்கின்ற மூன்றக்கினிகளுஞ் சுவாலைவிட்டெழ மூன்றுசந்தியாகாலத்திலும் ஆராதித்து அன்போடும் அதிதிகளுக்குப் பூசைகள் பலவுஞ்செய்து வேதவிதிப் படிகிரியைகள் செய்து புத்திமதியென்னும் பார்யையோடு உள்ளம்பொருந்தி நடக்கின்ற காலத்தில் என்றவாறு. யாஜி என்பது யாயி யென்னநின்றது—(6)

ஓர்பொழுது வைகறையிற் றுயினீங்கி யொளிர்கொன்றைத்
தாரணிந்தோன் றிருநாமம் பலதுதித்துத் தண்ணதியின்
பேரினைத்தோத் திரஞ்செய்து பின்னருந்தெய் வங்கள்பல
சீர்பெறவே வாழ்த்தெடுத்துச் சிந்தைதியா னம்பண்ணி

(இ - ள்.) ஒருநாள் சம்புகனென்பவன் விடியற்காலத்தில் நித்திரை தெளிந்து சிவனது திருநாமங்களைப் பலவாகத் தோத்திரம் பண்ணிக் குளிர்ந்த தீர்த்தங்களின் பெயர்களைப் புகழ்ந்து பின்னும் பலதேவதைகளை நன்மையுடனே வாழ்த்தி மனதாற்றியானஞ் செய்தான்—என்றவாறு. (7)

மேனிருதி மூலையிலே நாலாறு விற்கிடைபோய்த்
தானைமுடி சுற்றியுவர்த் தரையின்மேற் புற்களைப்போட்
டனமல மூத்திரம்விட் டெழுந்துசவு சம்முடித்தாங்
கூனமிலாத் தருக்கொம்பு முறித்துநகை யொளியாக்கி

(இ - ள்.) அதன்பின்னர் நிருதிமூலைப்புறம் நாலாறு விற்கிடையள வுக்குமேற் சென்று உத்தரியத்தைச் சிரசிலே சுற்றிக் களர்நிலத்தின்மிசை புல்லுகளைப் போட்டுக் குற்றமான மலசலங்களை யொழித்துச் சவுசகருமங் களை முடித்து மரத்தின் கொம்பை யொடித்து மூரலைவிளக்கி—என்றவாறு.

காலைநா னஞ்செய்து காயமெங்கு நீறணிந்து
சீலநெறிச் சந்திசெபஞ் செய்கடனை லாங்கழித்துச்
சாலுமழன் மகநிமித்தஞ் சலமுகந்த செம்பேந்தி
ஆலமுண்டார் திருநாம மன்பினுட னுச்சரித்து

(இ - ள்.) உதையகால ஸ்நானம்பண்ணி யுடம்பெங்கும் விபூதிதரித்து, ஆசாரக்கிரமமாய்ச் சந்தியாவந்தன செபமுதலியனசெய்து காலைக்கடனைக் கழித்து அக்கினியோம காரணமாய்த் தண்ணீர் முகந்து செம்பைக் கையி லேந்தி விடத்தையருந்திய மகாதேவரது திருநாமங்களை பக்தியோடு தியா னம் பண்ணிக்கொண்டு—என்றவாறு. (9)



அருணனெழுந் துதிக்குமுன மந்தணன்றன் மனைசேர்ந்து
தருணமனை யாட்டிமக சாலைசுத்தி செய்யாது
வருணநீர் தோயாது மயிர்சோரத் துஞ்சல்கண்டு
முரணியைந்த சமித்தினான் மோதினான் விதிமூட்ட

(இ - ள்.) அருணோதயமாதற்கு முன்னரே சம்புகனென்னு மறை யோன்றன் வீட்டிற் சேர்ந்து அப்பொழுது தனக்கிசைந்த காதலியானவள் ஓமசாலை சுத்திசெய்யாமல் நல்ல நீரின் முழுகாமல் கூந்தல் சோர நித்திரை செய்வதைப்பார்த்து வலிமைதங்கிய ஒரு சமித்தினாலே அவளை யடித்தான். ஊழ்வினையானது முடிவிக்க—என்றவாறு. (10)

அடித்தவடி யுயிர்ப்பொறியிற் றுக்குதலு மக்கணமே
விடுத்துடல மிறந்தனளால் விளைந்ததுயர் விளம்புவரார்
துடித்துமனம் புண்ணாகித் துன்பமரு நஞ்சினையே
குடித்தவர்போ லேமயங்கிச் சோபமிகக் கொண்டிரங்கி

(இ - ள்.) இவ்வண்ணம் அடித்த அடியானது உயிர் தங்குபடியான பொறியிற்படவும் அந்த க்ஷணமே உடம்பைவிடுத்து மாண்டுபோனாள். அப் பொழுது சம்புகனுக்குண்டாகிய துக்கத்தையாவராற் சொல்லப்படும். உள் ளம் துள்ளிப் புண்ணாகித்துன்பம் பொருந்திய விடத்தை யுண்டவர் போல் பிரமித்து மிகவும் சோபமுற்று விசனப்படுவான்—என்றவாறு. (11)

திரிக்குமத்துத் தயிர்போலச் சிந்தைமிக வுங்கலங்கிப்
பெருக்கிநீர் கண்வார நெட்டுயிர்ப்புப் பெரிதுயிர்த்து
வரித்தவெனக் கெப்போது மாறாத வேவல்செய்தே
கருத்தினைப்போ லென்வார்த்தை கடவாதுன் குணமன்றோ

(இ - ள்.) மத்தினாலே அலைவுபடுகின்ற தயிரைப்போல் மனது கலங்கிக் கண்களினின்று நீர்பெருகிச் சொரியப் பெருமூச்சுவிட்டு உன்னை மனைவியாக வரித்த எனக்கு எப்பொழுதும் நீங்காத பணிவிடைகளைச் செய்து என்மனதைப்போல் வார்த்தை தவறாமல் நடப்பதல்லவோ வுனது கடமை—என்றவாறு. (12)

பெண்ணணங்கே யானழைக்கிற் பேசாது மிருந்ததுண்டோ
மண்ணினுறு நித்திரையின் காரணமோ பேரிளைப்போ
உண்மையா தென்றறியே னோர்மாற்ற மோதாதென்
வண்ணமயி லேயென்னை மறந்துநீ தரிப்பாயோ

(இ - ள்.) தெய்வமகளிரைப் போன்றவளேயான் கூப்பிட்டாற் பேசாமலுமிருந்த காரணமேதோ, இப்பொழுது பேசாதிருத்தல் கண்களிற் பொருந்திய துயிலின்பொருட்டோ, அன்றியிருந்த இளைப்போ உள்ளதை யின்னதென்று ஒரு வார்த்தையுஞ் சொல்லா திருப்பதென்ன என்னை மறந்து நீ தரித்திருப்பையோ—என்றவாறு. (13)

நல்வினைகள் செய்தலினுன் கணவனென் றேவல்செய்தாய்
வல்வினைக்கா ளானதினால் வாய்திறக்க லாகாதோ
முல்லைநகை யாயுன்னை முன்னும லடித்தனனால்
அல்லிமலர்த் திருமேனி கயங்கிற்றோ வறிந்திலனே

(இ - ள்.) யான் நல்வினை செய்திருந்தமையாலுனது கணவனென்று பணிவிடைகளைச் செய்தாய். இப்பொழுது வலிய தீவினைக்குள்ளானேன். நீ வாய்திறந்து ஒரு வார்த்தை யுரைக்கலாகாதோ முல்லை யரும்புகளையொத்த முறுவல்களை யுடைய பெண்ணே நின்னை யோசிக்காம லடித்தேன் அழகிய வுடம்பு குழைந்ததோ யானறியேன்—என்றவாறு. (14

எவ்விடத்திற் சென்றனையோ விளமுலையா யுன்குணங்க
ளெவ்விடத்து வைத்தனையோ வென்வார்த்தை கடந்தனையோ
யிவ்விடத்திற் றுயருழக்க வென்னையே தனியிருத்தி
யவ்விடத்திற் செல்வதுனக் கடுக்குமோ வாரணங்கே

(இ - ள்.) இளமை பொருந்திய தனங்களையுடைய பெண்ணே எந்த விடத்திற்குச் சென்றாயோ, உனது குணங்களை யெவ்விடத்தில் வைத்தாயோ எனது வார்த்தையை மீறினாயோ, இப்புவியின் கண்ணே துன்பத்தில் வருந்த என்னைத் தனியாய் விட்டு நீ யிறந்துபோனது உனக்குச் சரியாமோ பெண்ணே—என்றவாறு. (15)

அன்னமென நடக்குநடை யார்பக்கல் வைத்தனையோ
மின்னுதிரு வழகையெல்லா மெவ்விடத்தில் விட்டனையோ
நின்னிடையிற் றுன்பமதை யென்னுளத்தி னீவைத்துப்
பொன்னனையாய் நீயிறக்கப் புலம்பவோ விதியெனக்கு

(இ - ள்.) அன்னத்தைப் போலும் நடக்கின்ற நடையினை யாவரிடத்திலொப்புவித்தாயோ, பிரகாசிக்கின்ற லக்ஷ்மியைப் போன்ற அழகை யெல்லாம் எவ்விடத்தில் விட்டாயோ, உனது இடுக்கண்களை யெல்லாம் என் மனதில் நீ யிருத்தி மடியவும் நான் துக்கப் படவுமோ எனக்குத் தலைவிதி,



வேறு.

இருண்டகா ரனைய வகிர்தரு குழலு மிளம்பிறை நுதலும்வேற்
கண்ணுந், திரண்டபொற் குழைக ளூசல்போ லாடும் செவிகளுஞ்
செண்பக மூக்கு, முருந்துறழ் நகையுங் கொவ்வை யைப்பழித்து
முருக்கினை முருக்கிய விதழும், பாந்தழ கொழுகும் பங்கய முகமும்
பைங்கமு கனையகந் தரமும்

(இ - ள்.) இருண்ட மேகத்தை யொத்த வகிர்ந்த கூந்தலும், இளம்பிறை யொத்த நெற்றியும், வேலைப் போன்ற கண்களும், பொன்னங் குழைகளூசலாடுத லொத்த காதுகளும், சண்பக மொக்கைப் போன்ற நாசியும் பறவையிற கினடியை யொத்த பற்களும் கோவைப் பழத்தை நிகர்த்த விதழும், தாமரை மலர் போன்ற முகமும், பசியகமுகினை யொத்த கழுத்தும்—என்றவாறு. (17)

பைங்கழை யனைய தோள்களு மலர்ந்த பங்கயக் கரங்களு
நெருங்கக், குங்குமம் புனைந்து திரண்டிறு மாந்த கொங்கையுங் கொங்
கையாற் றேய்ந்த, சிங்கமா மருங்கு மேகலை மிழற்றுஞ் சிறந்தநன்
னிதம்பமுந் தும்பி, யங்கைபோற் றொடையுந் தளிரினை மருட்டு மடி
களுநந் தழைத்தபொற் கொடியே

(இ - ள்.) பசிய மூங்கிலையொத்த தோள்களும், மலர்ந்த பூவையொத்த கைகளும் குங்குமமணிந்த தனங்களும், சிங்கத்தையொத்த இடையும், மேகலாபரணம் ஒலிசெய்கின்ற அலங்கார நிதம்பமும், யானையினது தும்பிக்கையை யொத்த தொடைகளும் மாந்தளிர் போன்ற பாதங்களும் வாய்ந்த பெண்ணே—என்றவாறு. (18)

என்னுயிர்க் குயிரா யென்னிரு கண்ணி னிளைப்பெலா மாற்
றுமா ரமுதாய், முன்னரி னின்றிங் கெனக்குப சார மொழிதரு கிள்
ளையாய் மனைக்கு, மன்னிய விளக்காய்த் திகழ்ந்திடு முன்னை மதியிலி
சமித்தினா லடித்தேன், இன்னபெண் கொலைக்கா ளாயினே னந்தோ
வென்செய்வே னென்றுவீழ்ந் தலறி

(இ - ள்.) என்னுயிர்க் குயிராகியும் எனது இரண்டு கண்களிளைப்பினை யெல்லா நீக்குகின்ற தெவிட்டாத அமிர்தமாகியும், என் முன்னிருந்து எனக்குபசாரம் சொல்கின்ற கிளியாகியும், வீட்டிற்கு நிலை பெற்ற

தீபமாகியும் பிரகாசிக்கின்ற வுன்னைப் புத்தியில்லாத நான் சமித்தினால் அடித்து ஸ்திரீஹத்தி தோஷத்திற்கு ஆளானேன்; ஐயோ என் செய்வேன் என்று வீழ்ந்து கதறி அழுது—என்றவாறு. (19)

உள்ளக முருகி யுருகிநின் றழுதே யுதிர்ந்தகண் ணீரிளு னனைந்து, தெள்ளறி வில்லோன் பாதகர் தமக்குட் செறிந்தன னென்றமரீ பூரந்து, கள்ளமின் மடந்தைக் கியற்றிடக் கடவ கடனெலா முடிவுறச் செய்தே, யெள்ளுறு பெரிய பாதகந் தீர்க்க யாத்திரைக் கேகவே யிசைந்தான்

(இ - ள்.) மனமானது கரைந்து கரைந்து நின்று அழுது சொரிகின்ற கண்ணீரினாலே நனைந்து தெளிந்த அறிவில்லாத நான் பாவியானவர்களோடு சேர்ந்தேன் என்று வருத்தமுற்று, வஞ்சகமற்ற புத்திமதி யென்னும் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய கருமக் கடன்களெல்லா முடித்து,யாவரும் நிந்திக்கத்தக்க ஸ்திரிஹத்தி தோஷத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு யாத்திரை செய்ய ஆரம்பித்தான்—என்றவாறு. (20)

வேறு.

ஆத்தி நாக முடியிற் சுமந்திடு
மித்த லத்துறு தீர்த்தங்க ளெண்ணில
வித்த மன்பு சிறக்கப் படிந்தனன்
சுத்தி யாயிலன் பாவத் தொடக்கற

(இ - ள்.) படங்களை யுடைய சேடன் சிரசில் தாங்குகின்ற இந்தப் பூமியின்கண்ணுள்ள புண்ணிய தீர்த்தங்களில் அனேகமாய் மூழ்கினான். அப்போதும் பாவத் தொடர்ச்சி போய்ப் பரிசுத்தமாயிலான்—என்றவாறு.

பூவ லங்கொடு புண்ணிய மாதலந்
சேவை செய்து திரிந்த தனேகநாட்
பாவை பங்கர்தங் கோயில்கள் பற்பல
மேவி யேதெரி சித்து விழிகளால்

(இ - ள்.) பூமியை வலங்கொண்டு புண்ணிய ஸ்தலங்களைத் தெரிசித்து அனேக தினம் கடந்து பார்வதி பாகராகிய மகா தேவரது பல பல கோவிலைச் சேர்ந்து கண்களால் தெரிசித்தும்—என்றவாறு. (22)

அந்த ணாளர்க ளாச்சிர மத்திலே
வந்து சேருற வாசம் புரிந்துமே



யந்த மில்லை வினையக லாமையாற்
சிந்தை நைந்து திரிதரு காலையில்

(இ - ள்.) முனிவர்களுடைய ஆசிரமத்திலே தங்கி யிருந்தும் அதற்கு முடிவில்லாததினாலும் ஸ்திரீ ஹத்திதோஷம் நீங்காமையினாலே மனது நொந்து சஞ்சரிக்கின்றகாலத்தில்—என்றவாறு. (23)

மலையுங் காடுங் கடந்து வருந்தியே
யலைவு கொண்டு துயரிளைப் பாறிட
மலரு நீர்சொரி வாவித டங்களும்
பொலியும் வில்வ வனமும் பொழில்களும்

(இ - ள்.) மலைகளும் வனங்களும் தாண்டி வருத்தப்பட்டு அலைந்த துன்பமும் இளைப்பும் நீங்கும்படிக்குத் தாமரை மலர்ந்திருக்கின்ற நீர் நிறைந்த குளங்களும் தடாகங்களும் தோற்றுகின்ற வில்வ வனங்களும் சோலைகளும்—என்றவாறு. (24)

கண்ட நீலக் கபாலி யருட்பெறு
தொண்டர் சேருந் தொகுதி யிடங்களு
மண்ட மெட்டிய கோயிலு மங்கெதிர்
கண்டு வீழ்ந்துதி யானங் கருதியே

(இ - ள்.) கண்டங்கறுத்துக் கபாலத்தைத் தாங்கிய மஹாதேவருடைய கிருபைபெற்ற அடியார்கள் சேர்ந்திருக்கின்ற கூட்டமான இடங்களும் ஆகாசத்தைத் தொடுகின்ற ஆலயமும் எதிராகக் கண்டு வணங்கி மனதாற்தியானித்து—என்றவாறு. (25)

செல்ல லுற்றனன் செய்த கொடுவினை
யல்ல லுற்று நடுங்கிய தக்கணம்
வில்வ வாரணி யத்திடை மேவியே
யொல்லும் வெண்ணதித் தீரத்தி லுற்றனன்

(இ - ள்.) அவ்விடத்திற்குப்போக ஆரம்பித்தான், அக்கணத்திலேயே அவன் பண்ணின கொடியவினையானது நீங்க ஆரம்பித்தது. சம்புகனென்பவன் வில்வவனத்தினிடஞ் சேர்ந்து குளிர்ச்சி பொருந்திய வெள்ளாற்றின் கரையிற் சேர்ந்தான்—என்றவாறு. (26)

தெள்ளி முத்தந் திரைக ளெறிந்திட
வெள்ள ளங்கள் வெருவும் வெள்ளாற்றிடை

நள்ளின் மூழ்கின னமைவ சிட்டனும்
வள்ள லாசிர மத்தின் மகிழ்வினல்

(இ - ள்.) அலைகள் முத்துக்களைக் கொழித்து வீச அதைக்கண்டு வெண்ணிறமான அன்னங்கள் பயப்படுகின்ற சுவேதமாநதியில் மத்தியான காலத்தில் மூழ்கினன். புகழையுடைய வசிட்டனென்னும் பெருமையிற் சிறந்த முனிவர் ஆசிரமத்தில் சந்தோஷத்துடனே—என்றவாறு. (27)

வேள்வி நீற்றைத் தரித்து விளங்கவே
நீளும் பாதக நீறுப டுத்தினன்
காள முண்டருள் கண்டனை யன்பொடுங்
கோளி லாதெதிர் கும்பிட் டிறைஞ்சியே

(இ - ள்.) யாக விபூதியைப் பிரகாசிக்க வணிந்து வளராநின்ற தனது பாவத்தைச் சாம்பராக்கினன். விடத்தை யருந்திய இருள்போன்ற கழுத்தையுடைய கடவுளைப் பத்தியுடனே எதிரே நின்று கும்பிட்டுப் பணிந்து—(28)

கோயில் சுற்றி வலங்கொடு கோபுர
வாயி லெய்தி மலர்க்கை குவித்தொரு
தாயி லாத தனிமுத னாமமோ
ராயி ரங்களு மன்புட னோதினன்

(இ - ள்.) ஆலயத்தை வலம்வந்து கோபுர வாசலையடைந்து மலரைப்போன்ற கையைக் கூப்பித் தாயென்றொருத்தி யில்லாத வொப்பற்ற முதற் கடவுளினது பெயர்களில் ஆயிரம் பெயர்களையும் பத்தியோடு தோத்திரம்பண்ணி—என்றவாறு. (29)

வைய மேழுண்ட மாற்கரி யாயரு
ளைய வெங்கதி ரம்புலி யாரழ
லெய்து முக்க ணிசைந்தரு ளீறிலி
வைத வக்கொடி யேனையுங் காப்பவா

(இ - ள்.) ஏழுலகத்தையு முட்கொண்ட விஷ்ணுவுக்கு மருமையாயிருக்கின்ற கடவுளே, சூரியன் சந்திரன் அக்கினியுமே மூன்று கண்களாகப் பொருந்திய முடிவில்லாதவனே, வஞ்சகக்கொடியனாகிய என்னையும் காப்பவரே—என்றவாறு. (30)

வேர்த ருப்பனை வித்தி லடங்கியே
நீரி னாற்பத்தி யாய்நிகழ் கின்றதால்



ஓரெ ழுத்தி லடங்குல குக்குநின்
னார ருட்டுணை யன்றிவே றுண்டுகொல்

(இ - ள்.) வேரும் மரமும் கிளைகளும் விதையினுளடங்கி நின்று தண்ணீரினாலே தோன்றி வளர்கின்றமைபோல ஒருமையான எழுத்தி லடங்கிய உலகத்திற்கு நினது கிருபை நிறைந்த நீரே யாதாரவில்லாமல் வேறுண்டோவென்னும் சந்தேகமுண்டோ—என்றவாறு. (31)

என்று கூறித் துதித்திறை யின்னரு
ளன்று பெற்று நதிபதி சூழ்புவி
யொன்று மின்னகர்க் கொப்பிலை யென்றெணி
யன்று முற்கொடு வாச மமர்ந்தனன்

(இ - ள்.) இப்படி யென்று சொல்லித் தோத்திரம் பண்ணிக் கடவுளின் கிருபையை நன்கு பெற்றுச் சமுத்திரம் சூழ்ந்த பூமியின்கண் ஒரு ஸ்தலமும் இந்த ஸ்தலத்திற்குச் சமானமில்லை என்று நினைத்து அந்நாளாதியாக அந்த ஸ்தலத்தில் வசித்திருந்தான்—என்றவாறு. (32)

மன்னு தன்குலத் தொத்த மரபினி
லன்ன மென்னடைச் செவ்வித ழாயிழைக்
கன்னி தன்னை யழற்கட வுட்குமுன்
னன்ம ணஞ்செய் தவனகயி னண்ணியே

(இ - ள்.) நிலைமையான தனது குலத்திற்கொத்த வமிசத்தில் அன்னம் போன்ற நடையையும் சிவந்த அதரமும் ஆபரணங்களையுமுடைய ஒரு கன்னியை அக்கினிதேவன் சாக்ஷியாக விவாகம் செய்து சந்தோஷத்தையடைந்திருந்தான் சம்புகனென்பவன்—என்றவாறு. (33)

வதிட்ட னாசிர மத்தின் மகிழ்வொடு
விதித்த வேள்விகள் வேண்டிய னசெய்க
மதிக்கு மாதவம் புண்ணிய மவ்வவ
துதிக்குஞ் சைவச் சுடரென வோங்கினன்

(இ - ள்.) வசிஷ்ட முனிவரது ஆசிரமத்தில் சந்தோஷத்தோடும் விதிக்கின்ற யாகங்களில் வேண்டியவைகளைச் செய்து தன்னை மதிக்கின்ற யாகத் தவமும் தருமமும் விருத்தியடையச் செய்கின்ற சைவ தீபமெனும்படி பிரகாசித்தான்—என்றவாறு. (34)

வெவ்வினைக்கில்லை வேறு மருந்தென
வெவ்வ முற்றவ ரெய்தற் கெளியது
சைவ முற்றித் தழைந்தவெள் ளூரது
பல்வ வோதை வெள்ளாறு பலித்தது

(இ - ள்.) கொடிய தீவினைக்கு வேறு மருந்தில்லை யென்று துன்ப முடையோர் வந்தடைவதற்கு உரிமையா யிருப்பது சைவ மிகுந்த தழைத்த வெள்ளூரென்பதாம். அலைகளொலிக்கின்ற சுவேதமாநதி சூழப் பெற்றது வெள்ளூர்—என்றவாறு. (35)

கயஞ்சி னத்த கயிலைக் கடவுளே
வயங்கு பல்லுயிர் பேரருள் மன்னவே
சுயம்பு வான தலமிது வென்றெணி
முயங்கி யேசிவ யோகத்தின் முற்றினான்

(இ - ள்.) யானையைக் கோபித்துரித்த கைலை மலையை யுடைய மகா தேவர், பிரகாசிக்கின்ற பல சீவர்களின் மேல் பெரிய தயவு பொருந்தச் சுயோற்பத்தி லிங்கமாகிய ஸ்தலமிதுவாகும் மென்று நினைந்து அத்தலத்தி லிருந்து சிவயோக சாதனத்தில் சம்புகனானவன் முதிர்ச்சி பெற்றான்—(36)

சம்பு கன்கதை யீதென்று சாற்றலு
நம்பு சூதனை மாதவர் நாடியே
யும்ப ரோதுவெள் ளூரிய லின்னமு
மிம்பர்ச் சொல்லெனச் சூத னியம்புவான்

(இ - ள்.) சம்புகனது சரிதமிதுவென்று சொல்லிய சூதமுனிவனை மற்ற முனிவர்கள் பார்த்துத் தேவர்கள் துதிக்கின்ற சுவேத புரியினியற் கையை யின்னமும் இவ்விடத்திற் சொல்லுவீரெனச் சூதமுனிவர் [illegible]ர்—என்றவாறு. (37)

சம்புகச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் பன்னிரண்டுக்குத் திருவிருத்தம் 531



(இ-ள்.) மங்கைப்பருவ மென்னும் அழகியபூவலர்ந்த வல்லிக் கொடியை யொத்த சோமாவதியினது உயர்ந்த வெண்மையான முத்து வடமணிந்து சந்தனஞ்சூழப்பெற்று மூன்று வரைகளையுடையதாகி ஒப்பின்றி அழகுவாய் ந்தகழுத்தினைப் பார்த்து சங்கை யொத்த தென்று சொன்னால் அச்சொல்லி னிடத்தே குற்றமேயாகும்—என்றவாறு. (22)

நச்சுறு கருங்கட் செவ்வாய் நகைமணி மலர்க்கொம் பன்னா
ளிச்சையை விரியச் செய்யும் தோளிணை யியல்பு சொல்லில்
வெச்செனத் தண்ணெ னச்சீர் மிருமுலை வெற்பின் மேலாய்ப்
பச்சிளங் கழைக டோன்றும் பான்மைபோற் சிறக்கு மாதோ.

(இ - ள்.) விடத்தையொத்த கறுத்தகண்களும் சிவந்தவாயு முடைய பிரகாசம் பொருந்திய அழகிய பூங்கொம்பைப் போல்வானது இரண்டு தோள் களின் தன்மையைச் சொல்லு மிடத்துக் குளிர்ச்சியும் வெப்பமுமுற்று நலமி குந்திருக்கின்ற தனங்களாகிய மலைகளின் மேல் பச்சைநிறமான மூங்கில் விளங்க வளர்ந்து நின்றாற் போலும்—என்றவாறு. (23)

காமல சிதம்பூ வன்றிக் காந்தெழின் முற்றுங் காலம்
வரை தரும் பஞ்ச தாரை கொண்டதோ வென்ன வண்ண
விரல்களின் விளங்கிக் காந்தள் விரைமல ரைப்ப ழித்து
திருமலி ரூட கப்பூஞ் செங்கைகள் சிறக்கு மாதோ

(இ - ள்.) அங்கையாகிய பூவினிதழோ அல்லது கையினழகு விரல் களாக விளங்கிவாசனை பொருந்திய காந்தட்பூவை நிகர்த்த அலங்காரமிகுந்த வளையல்களையணிந்த சிவந்த செங்கைகளானவை சிறப்புறும்—என்றவாறு.

தாளமா முடுக்கள் சூழச் சார்ந்துகண் ணொளுங்க ளங்கம்
விரைகொள்வெண் டுகிலதென்னு மேகத்தின் மறையப் பட்டே
யருவமா மிடையின் மீதே யலங்கிளைத் திங்கள் போலுங்
குருமணிச் சுணங்கு பூத்து வீங்கிய கொம்மைக் கொங்கை

(இ - ள்.) முத்துக்களாகிய நட்சத்திரங்கள் சூழப் பெற்று களங்கிய மறுவுடைத்தாகி வாசனை பொருந்திய வெள்ளைத் துசென்கிற மேகத்திலுள் மறைவுபட்டுத் தோற்றப்படாத இடையாகிய ஆகாயத்தின் மிசையிற் பிரகா சிக்கின்ற சந்திரனைப் போலும் அழகிய பொற்றேமல் விரிந்து பருத்துத் திரண்ட முலைகள்—என்றவாறு. (25)

நான்முக னென்னுந் தச்சன் கடைந்தசெப் பிணைக ளண்ணக்
கூனிலா நீலக் காம்பொன் றியற்றியே கொதுக்கா ளிக்கை

வேனில்வே ளரசுக் கீந்த தன்மையின் விளங்கா நிற்கு
மான்மருள் கருங்கண் மங்கை வயிற்றிடை மயிரொ ழுங்கே

(இ - ள்.) நான்கு முகங்களையுடைய பிரமனென்கிற தச்சனானவன் கடைந்த இரண்டு சிமிழ்களைச் சேர்க்க வலையில்லாத நீலநிறமான ஒரு காம்பு செய்து வேனிற் காலத்தை யுடைய மன்மதனாகிய இராசனுக்குக் கொலுக் காணிக்கை கொடுத்த முறைமைபோற் பிரகாசிக்கும் சோமாவதியினது வயிற்றிலிருக்கின்ற மயிரொழுங்கு—என்றவாறு. (26)

சேலினைக் கறுவி நீண்டு செவ்வரி சிதறு முண்கட்
பால்புரை கிளவி யாட லுதரபத் திரத்தை நோக்கிக்
கோலமார் சுவர்க்கச் சார்பி லுதரபத் திரமாய்க் கூறு
மாலபத் திரமென் பார்க ளறிவிலா ரறிந்தோர் கொள்ளார்

(இ - ள்.) மீனைக் கோபித்து நீண்டு செவ்வரி பரந்திருக்கின்ற மையுண்ட கண்களையும் பாலையொத்த சொல்லையுமுடைய சோமாவதியினது வயிற்றினலத்தைப் பார்த்து அழகு நிறைந்த சுவர்க்கச் சார்பில் அமிர்த பத்திரமென்று சொல்லுவார்கள் அறிஞர். ஆலிலையென்று சொல்லுவார்கள் அறியாதவர்கள், அறிவுளோர் சம்மதியார்—என்றவாறு. (27)

பருமையிற் பருவ தம்போற் பருத்துக னஞ்செ றிந்து
திரண்முலைக் கருங்கட் செவ்வி சிந்திய துளிகால் கொண்டு
வருவது போலு மாற்ற லிலஞ்சியென் றும்பேர் வைத்தா
ருருவுறு முரோம ரேகை யுந்தியென் றுரைப்ப ரோரார்

(இ - ள்.) பருமையில் மலையைப் போல் பருத்து கஸ்தூரி நிறைந்து திரண்ட முலைகளினது கறுத்த கண்களினழகு சொரிந்த திவலைகளைக் கால்வாய் கொண்டு வருதலை யொத்தமையா லன்றோ இலஞ்சியென்னும் தடாகத்தினது பெயரைத் தொப்புளுக்கு அமைத்தார்—என்றவாறு. (28)

அழகினை வகுத்த பங்கி னுறுப்பெலா மமையச் செய்து
பிழைபடா விடையின் கூற்றைக் கையுறப் பிடித்தே யுள்ளி
யெழில்பெற நினைவு தோன்றத் தெண்ணமை விடுக்கு மாற்று
லுழைபொரு கருங்கண் மங்கைக் கொருபிடி யிடையா மென்பார்

(இ - ள்.) அழகைப் பிரித்து வைத்த பாகங்களினாலே அவயவங்களை யெல்லாம் பொருந்தச் செய்து மருங்குலின் பாகத்தைக் கையினாற் பிடித்து அழகுபெறச் செய்ய வண்ணத்திற் றோற்றமல் பிரமன் விட்ட தன்மையினாலே யச் சோமாவதிக்குப் பிடியே யிடையாமென்று சொல்லுவார்—. (29)



கன்ன வாயிலி னுடலெலாம் பின்வரக் கருதி
தன்மு டித்தலை முன்புற நீட்டுமத் தகைபோ
லின்னி லத்திடை யறிவெலாங் கவர்ந்திட வெண்ணி
முன்னர் நற்றலை மாத்திரங் காட்டிய முறையோ

(இ - ள்.) பொருளைத் திருட நினைத்துத் திருடர்கள், கன்னவாயிலின் வழியே யுடம்பெல்லாம் பின்னே வர நினைத்துத் தமது சிரசுமட்டும் முன்னே நீட்டுகின்ற அத்தன்மை போல், இப்பூவுலகத்தின் கண்ணுயர்ந்தோரது அறிவை யெல்லாங் கவர நினைத்து முன்பு நன்மையுற்ற தலையை மாத்திரங் காட்டிய முறைமையோ—என்றவாறு. (8)

இப்பெ ரும்புவி யிறந்திடா திருக்குமென் பதுதான்
றப்பி லாவகை யறிந்துபின் வருவது தகையென்
றெப்பு வெம்முலை யெப்படி நோக்குற்ற தோவெனச்
செப்ப மார்பிடைத் தனங்களங் குரித்தன சிறிது

(இ - ள்.) ஒன்றுக் கொன்றிணையான வெப்பம் பொருந்திய முலைகளானவை இப்பெரிதானவுலகம் இறவாதிருக்கு மென்பதைத் தப்பின்றி யுணர்ந்து பின்னரேவருவது தன்மை என்று இப்பொழுது எப்படிப்பார்த்ததோ வென்றுசொல்லும்படி மார்பினிடத்தில் கொஞ்சந்தோன்றின— (9)

வல்லி நேர்பவள் பெதும்பையாம் பருவந்தா மதனை
யல்ல வென்றுபின் மங்கையாம் பருவமங் குற்றாள்
செல்வ மாமயிற் றோகையோ பேசுசித் திரமோ
கொல்லுங் கூற்றுமா தருவினைக் கொண்டதோ வென்ன

(இ - ள்.) வல்லிக் கொடியையொத்த சோமாவதியானவள் பெதும்பைப்பருவம் வந்ததை அன்றென்று நீத்துப் பின்னர் அழகிய மங்கைப்பருவத்தையடைந்தாள். செல்வமுற்ற தோகைகளையுடைய மயிலோ பேசுகின்ற சித்திரமோ அல்லது கொல்லுகின்ற கூற்றுவன் இவ்வடிவு கொண்டானோ—என்றவாறு. (10)

வேறு.

இருளினை வகிர்ந்து நாப்ப ணிலகிய ரேகை காட்டிக்
கருமுகிற் கணங்கள் வானிற் குழுமியே யுலையக் கண்டு
வரியளி குடியி ருக்க வாசமாய் நெருங்கிக் கட்டுண்
டுருவமாய் வார்ந்து கண்டோ ருளமொடு மலர்மு டித்தே

(இ - ள்.) இருளை வகிர்ந்து அதனடுவிற் பிரகாசிக்கின்ற ரேகையணிந்தாற் போன்று தோன்றிக் கரியமேகக் கூட்டங்கள் ஆகாயத்திற் கதறிய

லையைப் பார்த்துப் பொறிகளையுடைய வண்டுகள் குடியாயிருக்கும்படி வாசனை பொருந்தி செறிந்து கட்டுப்பட்டு, அழகுற்று, நீண்டு பார்த்தவருடைய மனங்களினுடனே புட்பங்களையுஞ் சேரமுடித்தது—என்றவாறு. (11)

பாவிருட் கண்ட மாகித் திகழ்பிறைப் பணிய ணிந்தே
யுருவமோ ரிருகூ றாகிக் கமபிசை யுற்று வாச
முருகுலா மாலை நீங்கா திடங்கொடு முற்ற வாமே
யானையே யுவமை மாறு மாய்கருங் குழலின் பொற்பே

(இ - ள்.) பாவிய விருளையொத்த கண்டத்தையுடையவராகிப் பிரகாசிக்கின்ற சந்திரப்பிறையை யாபரணமாகத்தரித்த வடிவமானது ஆண் பெண்ணிரு கூற்றினையுடையவராகி விபூதியின் வெண்மை மேலெல்லாம் பொருந்தினவராகி வாசனைபொருந்திய மலர் மாலையைத் தோளில் நீங்காதணிந்த சிவனையொத்திருக்கும் அச்சோமாவதி கூந்தலின் அழகு— (12)

திங்களம் பிறைக் களங்கம் போன்றிடு திலக நானந்
தங்கியே காரி தன்னாற் றனுத்தலை வளைந்த தாமென்
றிங்குளா ரிலமேற் கூற வியைந்தபே ரழகு மூற்றிப்
பொங்கிநீண் டிலகா நிற்குஞ் சிறுநுதற் பொலிவு தானே

(இ - ள்.) சந்திரப்பிறையிற் களங்கமிருந்தாற் போலக் கஸ்தூரி திலகம் பொருந்தி காமனாலே வில்லினிருதலையும் வளைத்தாற் போன்றதென்று இப்புவியிலுள்ளோர் சொல்லப் பொருந்திய மிகுந்தவழகு முதிர்ந்து நெடிதாய்ப் பிரகாசிக்கும் சிறிய நெற்றியினலங்காரம்— (13)

விளங்குயிர் வருத்தஞ் செய்யும் வெவ்வினை யமைந்த தாலோ
துளங்கியே வளைந்த தென்று சொல்வதாய் நீண்ட கண்வாட்
கொளுந்துணை யுறையோ வென்ன வறிவினிற் கொள்ளும் வண்ணம்
வளைந்தபொற் புருவ மெங்கும் வளைந்தபொற் புருவந் தானே

(இ - ள்.) ஆடவரது பிரகாசிக்கின்ற சீவனுக்குத் துன்பஞ் செய்கின்ற கொடிய வினையைச் சமர்த்தமையினாலேயோ குழைந்து வளைந்திருக்கின்றதென்று சொல்லப்படுவதாகி நீண்ட கண்களென்னும் வாளாயுதத்தைக் கொள்ளுகின்ற இரண்டுறைகளோவென்று அறிவினாலே யோசிக்கும்படி வளைந்திருக்கின்றன அழகிய புருவங்கள்—என்றவாறு. (14)

நல்லசோ மாவ திக்கு முகத்துறு நயன நாசி
யெல்லையிற் குதித்துப் பாய்ந்து மதர்த்துநீண் டிலகிச் செல்ல
லல்லொளி யளிக டிங்க ளமுதமுண் டதனாற் றன்னைக்
கொல்வதாஞ் சண்ப கத்தைத் தாக்கிய கொள்கை போலும்



(இ - ள்.) நன்மைபொருந்திய அச்சோமாவதிக்கு முகத்திலிருக்கும் கண்களானவை நாசியினளவிற் குதித்து நீண்டு பிரகாசித்துக் காதினளவாய்ச் செல்லக் கருநிறத்தையும் பிரகாசத்தையுமுடைய வண்டுகள் சந்திரனிடத்தினின்றும் அமிர்தபானம் பண்ணின வலிமையினாலே தன்னைக் கொல்லுவதாகிய சண்பகமலரை யடிக்கின்ற தன்மையை யொக்கும்— (15)

குழையிழுன் மலியத் தோன்றிப் பனிமலர் கொண்டு மேலே
பழமறைச் சிவச்சீர் தாங்கும் பான்மையா லழகு பொங்கி
யொழுகிய வள்ளைத் தாரு வுவமையென் றுரைப்ப தல்லாற்
கழிமட னன்றோ வள்ளைக் கொடியெனக் கழறு மாற்றம்

(இ - ள்.) காதணிகள் ஒளிமிகுந்து குளிர்ந்த புஷ்பத்தை மேலே தாங்கிப் பழைய வேதமாகிய சிவகதைகளின் நன்மையுங் கேட்டபடி தங்குகின்ற குணத்தினால் அழகுந்ததும்பிய வள்ளைக் குலையைச் சமானமென்று சொல்லுவதல்லாமல் வள்ளைக்கொடியைச் சமானமென்று சொல்லுகின்ற வார்த்தைமிகுந்த அறிவில்லாமையாலன்றோ—என்றவாறு. (16)

நந்துவெண் மணியு ளிருந்து விழிசெறி நாசிச் செவ்வி
இந்துவோ ரமுது குத்த துளிதுனி யியைந்த வாறும்
சுந்தரச் சுரும்பி ரண்டு தம்முயிர் தொலைவ தின்றிச்
சந்ததம் வாசங் கொள்ளுஞ் சண்பகப் பூவைப் போலும்

(இ - ள்.) ஒளி பொருந்திய நித்தில மணிபூண்டு கண்கள் நெருங்கியிருக்கின்ற நாசியினழகு சந்திரன் சொரிந்த ஓர் அமுதத்திவலை நுனியிற் சேர்ந்திருக்கிற தன்மையினாலே அழகிய வண்டுகள் தமது சீவனீங்குதலில்லாமல் எப்போதும் வாசனை கொள்ளுகின்ற சண்பகமலரை யொக்கும்—என்றவாறு. (17)

குழைமணிப் பத்தி பாயக் கோலமா மிணைக்க போலம்
கழைமத னிரதி பார்க்கு மிரண்டுகண் ணாடி போலும்
விழைதரு செவ்வாய்ப் பூர வுவமையை விரிந்துப் பார்க்கி
லெழின்மிகு முத்துக் கோவை வள்ளத்து ளிட்ட தேய்க்கும்

(இ - ள்.) காதிலணிந்த ரத்தினங்களின் கிரணம் பிரதிபலிக்க அழகு செய்யாநின்ற இரண்டு கபோலங்களும் கரும்புவில்லையுடைய மன்மதனும் இரதியும் பார்க்கின்ற இரண்டுகண்ணாடியை யொக்கும். சிவந்தவாயிலிருக்கின்ற பற்களினுவமானத்தையோசித்துப்பார்க்கில் அழகுமிகுந்த நித்திலவடத்தைப் பவளக்கிண்ணத்தில் வைத்ததை யொக்கும்—என்றவாறு. (18)

வெண்ணகை யிலகக் கொண்டு விளங்கும்வாய்க் குமுதப் பூவி
னண்ணிய சொல்லே யூறித் தித்திக்க நயந்த தேன்போ
லுண்ணும் வண்டினங்க ளின்ப மோங்கிமெய் மயங்கு மாப்போல்
வண்மையிற் கேட்போ ருள்ள மகிழ்ச்சியான் மயங்கா நிற்கும்

(இ - ள்.) வெள்ளிய முறுவல் பிரகாசிக்க விருக்கின்ற ஒளியையுடை வாயாகியகுமுதமலரிலூறிய சொல்லானது தித்திக்குந் தேனைப் போலும். தேனையுண்கின்ற வண்டினங்கள் சுகமாயிருந்து உடம்பு மயங்குவது போல அச்சொல்லைக் கேட்பவரது மனமானது மகிழ்ச்சியால் மருளாநிற்கும்—என்றவாறு. (19)

கொவ்வையங் கனியு நாணங் கொள்ளுநல் லிதழுக் கொப்பச்
செவ்விதி னுரைக்கிற் கோப மங்குறச் சிவப்புக் காட்டு
நவ்விபோற் கரிய கண்ணு ணருந்திரு வாய்ம லர்க்குத்
திவ்விய விதழா மென்று தெரித்திடச் சிறக்கு மாதோ

(இ - ள்.) கோவைப் பழமும் இலச்சையடைகின்ற நல்லவதரத்துக்கு வமை செவ்வையாகச் சொல்லு மிடத்து இந்திர கோபமானது கோபமென் பிருத்தலாற் சிவப்பாய்த் தோன்றும். ஆதலால் மானைப் போலுங்கறுத்த கண்களையுடைய சோமாவதியினது புன்முறுவலையுடைய திருவாய் மலர்க் குப் பொருந்திய விதழென்பதேயொக்கும்—என்றவாறு. (20)

குளத்தினை யிடையே தோன்றுங் கோகன கச்செம் போது
குளத்தினைத் தன்பாற் காட்டுங் கொம்பனாள் வதனப்போது
களத்தின்மேற் பட்டிருக்கு மியல்பையுங் கண்ட தன்றே
களத்தினை யுடைய கஞ்சம் பயப்பட லாதென் செய்யும்

(இ - ள்.) குளத்திலிடத்திலே தோன்றும் செந்தாமரை மலரா னது குளத்தைத் தன்னிடத்திலே தோற்றுவிக்கும். பூங்கொம்பு போன்ற சோமாவதியினது, முகமலரானது பொற்களத்தின்மேற் பட்டிருக்கின்ற குணத்தையுங் கண்டதல்லவா? இலைகளையுடைய தாமரைமலர் பயமுறுத லில்லாமல் மற்றென்னசெய்யும்—என்றவாறு. (21)

மங்கையாம் பருவப் பொற்பூ மலர்ந்திடு வல்லி யன்னா
டுங்கவெண் டானஞ் சார்ந்து சூழ்தரு வரைகண் மூன்று
தங்கிமே லில்லா தோங்குங் கந்தரந் தன்னைக் கண்டுஞ்
சங்கைபோப் பென்று சொல்லிற் சொல்லிடைத் தவறுதானே

# 13-வது சோமாவதிச் சருக்கம்

வேறு.

பாவை மாநிலம் புகழ்ந்திடு சிறப்பினைப் படைத்த
திருவு லாவிய கொங்கெனு நாட்டைச் செய்ய
சுருதி யந்தணர் மரபினு டுதித்தரு நேயன்
கருமி டற்றிறை யடிய னுகுமே சாங்கன்

(இ - ள்) கடல்சூழ்ந்த பெருமை பொருந்திய வுலகமெல்லாம் புகழத் தக்க சிறப்பையுடைய லட்சுமி வாசமாயிருக்கின்ற கொங்குநாட்டின் கண் செவ்விதான வேதத்தை யுணர்ந்த பிராமணரது குலத்தில் பிறந்த பரிசுத்த மானவன். கரியகண்டத்தையுடைய பரமசிவனது அடியவன். சாங்கனென் னும் பெயரை யுடையவன்—என்றவாறு. (1)

இருமை யுந்தரு மனையவண் மதுமதி யென்பாண்
மருவி யில்லறம் வளர்த்திட மகிழ்வொடும் வைகி
யரிய நாள்பல சென்றபி னோர்மக வின்றிப்
பெரிய துன்பமுற் றெண்ணியே தேறினன் பின்னர்

(இ - ள்) இம்மையிலும் மறுமையிலும் நன்மை தருகின்ற சாங்கனது மனைவியானவள் மதுமதியென்னும் பெயரை யுடையவள். இவ்விருவரும் பொருந்தி இல்லறத்தை வளரச்செய்து சந்தோஷத்தோடு மிருந்து பலநாட்சென்ற பின்னும் ஒரு மகவுமின்றிப் பெரிதான வருத்தத்தோடு விச னப்பட்டுப் பின்புமனந்தேறினன்—என்றவாறு. (2)

கண்ணு தற்சுரு ணுதிதி கன்னியை யிடமே
நண்ணி னோன்மதி சூடிய நாதனை யல்லா
லெண்ணி லிவ்வர மீபவ ரில்லையென் றிசைசந்தே
யுண்ணை யந்துமா தவமிக வுஞற்றினன் வருந்தி

(இ - ள்.) நெற்றிக்கண்ணுடையவரும் தயாநிதியும் பெண்ணை யிட பாகத்தில் வைத்தவரும் சந்திரனைத் தரித்தவருமாகிய மகாதேவரையன்றிப் புத்திரசந்தானவரந் தருகின்றவர் வேறில்லையென்று மனதில் நினைந்து பெருமை பொருந்திய தவத்தை வருந்தமுற்றுச் செய்தான்— (3)

அன்ன காலையி லாங்கவன் றவத்தினுக் கருளாய்
முன்ன நான்முகன் முகுந்தனுந் தேடிய முதல்வன்

மின்னை யன்னவோர் பெண்மக வளித்தனன் விளங்கப்
பன்னி யாகிய மதுமதி பெண்ணினைப் பயந்தாள்

(இ - ள்.) அக்காலத்தில் அந்தக்கரங்கனது தவத்தினால் கிருபை கொண்டு முன்னாற் பிரமதேவனும் திருமாலும் தேடிக் காணாத தலைவராகிய கடவுளானவர் மின்னலை யொத்த பெண் பிள்ளை பெறக்கடவா யென்றருள் செய்தார். இல்லறம் பிரகாசிக்க மதுமதி மாது ஒருபெண் மகவை யீன்றாள்.

பெற்ற பெண்ணினை நாடொறும் பிறையென வளர்த்தார்
மற்று நாமமே யிலகுசோ மாவதி யென்ன
வுற்ற வன்பினு விசைத்தன ருமையினு மிமவான்
முற்று காதலின் மேனகை மகிழ்ந்திடு முறைபோல்

(இ - ள்.) ஈன்ற பெண் மகவை நாள்தோறும் சுக்கில பக்ஷப் பிறை போல் வளர்த்து வந்தார்கள். சோமாவதி யென்னும் பெயரைப் பிரியத்தோடும் வைத்தார்கள். உமாமகேசுவரியினாலே இமவானும் மேனகையுஞ்சந்தோஷிக்கின்ற முறைமைபோலக் காங்கனும் மதுமதியும் சோமாவதியினால் மகிழ்ந்திருந்தார்கள்—என்றவாறு. (5)

மகவி னாசையு மகிழ்ச்சியு மிகவிபோ வளர்த்த
தகைமை கொண்டனர் காங்கனு மதுமதி தானும்
திகழ வந்தசோ மாவதி தினந்தொறும் வளர
விகழ் நீக்கவள் பேதையெ னிசைத்திடும் பருவம்

(இ - ள்.) புத்திரி மேலுள்ள ஆசையும் அன்பும் ஒன்றோடொன்று இகலிக்கொண்டு வளர்க்க நன்மையை யடைந்தார். காங்கனும் மதுமதியும் பிரகாசிக்க உதித்த சோமாவதியும் நாள்தோறும் வளர்ந்து பேதை என்று சொல்லும் பருவத்தை இகழ்ந்து நன்றினான். (6)

மாம யிற்குநற் றோகைகள் வரும்பரு வம்போற்
காம ரோதியுங் கருநிற மாகியே வளரப்
பூம னத்திடை நாணொழுந் தங்குரம் பொலிய
நாம நீள்விழி செவியுற வுறுவது சமைய

(இ - ள்.) பெருமை தங்கிய மயிலுக்கு நல்ல தோகைகள் வளர்ந்து வருகின்ற பக்குவம் போல் அழகிய கூந்தலுங் கறுப்பு நிற மிருந்து வளரவும் நல்ல மனதில் வெட்கமுண்டாகி முளைத்தெழவும், பிரகாசிக்கின்ற நீண்ட கண்கள் காதுகளைப் பொருந்தவும் அழகு உதயமாகவும்— (7)



பிணிமலர் முறுக்க விழ்ந்த கருங்குழற் பிறைபோ னெற்றி
பணிமொழிச் செவ்வாய் மங்கைப் பருமவல் குற்ப ரப்பு
மணிவளர் சகனப் பூமி வலயத்தைத் தங்கா நின்ற
வணிவளர் கின்ற பாந்தட் படத்தினைப் போலு மம்மா

(இ - ள்.) கட்டிய பூமாலைகளிதழை விரிக்கின்ற கரிய அளகபாரத்தையும் பிறையை யொத்த நெற்றியையும் மெல்லிய சொல்லையும் சிவந்த வாயையுமுடைய சோமாவதி யினது கதித்த நிதம்பத்தின் விரிவு அழகு வளரா நின்ற சகனமென்னும் பூமி வட்டத்தைச் சுமக்கின்ற பாம்பினது படத்தைப் போலும்—என்றவாறு. (30)

திண்டிறற் காம னென்னுந் தேவின்சன் னிதிமு கப்பு
கொண்டவா ழைக்கம் பத்தைக் குறங்கென்ப ரக்கு றங்கைக்
கண்டுபொன் னோடை நெற்றிக் கடமால் யானை யின்கைத்
தொண்டையே பெயராய்க் கொண்டு துதித்தலாற் றுதிக்கை
[யென்பார்

(இ - ள்.) வலிமையும் வெற்றியுமுடைய மன்மதனாகிய கடவுளின் சன்னிதி முகவாயிலிற் கட்டிய வாழை ஸ்தம்பத்தை யொக்கும் சோமாவதியினது துடைகளென்று சொல்லுவார். அத்துடையைப் போன்றதென்று பொன்முகப் படாம் பூண்ட நெற்றியையும் மதத்தையும் உன்மத்தத்தையுமுடைய யானையினது தும்பிக்கையைப் பார்த்துத் துதித்தலால், அத்துதித்தலின் பெயராக்கொண்டே யானைக்கையைத் துதிக்கை யென்று சொல்லுகின்றார்—என்றவாறு. (31)

ஈர்க்கிடை செல்லாக் கொம்மை யிளமுலைத் தடங்கட் செவ்வாய்த்
தாக்கணங் கனைய நங்கை சானுவுக் குவமை தானென்
றாக்கமோ டுரைத்த நெஞ்சி னுவகையா யுலாவு நண்டை
நோக்கின ரலவா வென்ன வழைப்பரா லுவமை நோனு

(இ - ள்.) ஈர்க்குமிடை யினுழையாத நெருக்கமும் திரட்சியும் இளமையுமுடைய தனங்களும் விசாலமான கண்களும் சிவந்த வாயுமுடைய திருமகளை யொத்த சோமாவதியினது முழங்காலுக்குச் சமானம் தானென்று சஞ்சரிக்கின்ற நண்டைப் பார்த்தவர்கள் அம்முழங் காலுக்குச் சமானம் அல்லாவென்று கூறுவார். அதனால் நண்டுக்கு அலவன் என்று பெயராயிற்று.

வேனில்வேள் மலர்க்கைக் கன்னல் வில்லினில் விசைத்தே யெய்யும்
கானறு மலரப் பார்த்த தூணிபோற் கவின்க ணைக்கால்

சானுவர் மிரட்டை ஞெண்டைத் தாக்கியே போர் வாரலா
மீனினை யெதிரே நின்று நோக்கிய விதியைப் போலும்

(இ - ள்.) வேனிற் படையை யுடைய மன்மதனானவன் கையினாலே கரும்பு வில்லிற் பூட்டிச் செலுத்துகின்ற வாசனை பொருந்திய நல்ல புஷ்ப பாணங்களை நிறைத்த அம்புறாத்தூணிபோல் அழகுடையதான கணைக்காலானவை, முழங்கால்களான விரண்டு நண்டுகளை யடித்துச் சண்டை செய்யவரால் மீன்கள் எதிரே நின்று பார்க்கின்ற தன்மை போலும்—என்றவாறு.

இருகணுங் கறுத்துக் கண்டோ ரிதயத்து ளறிவை வாங்கிப்
பருகுதல் போல விம்மிப் பருத்தவெம் முலைக்கோம் பன்னா
டிருமலி புரட்டுக் கொப்புச் சேர்தூக்கிப் பார்க்கின் றோரா
லொருமியா துள்ள மற்றை யுவமையார் சொல்ல வல்லார்

(இ - ள்.) இருகண்களுங் கறுத்துப் பார்த்தவருடைய உள்ளத்திலிருக்கின்ற அறிவைக் கவர்ந்து விழுங்குவதுபோல் தடித்த தனங்களையுடைய சோமாவதியினது அழகுமிகுந்த பாட்டுக்குச் சமானம் இதுவென்று சேர்தூக்கிப் பார்ப்பவராலும் சொல்லுதற்கு மனவுறுதிப் படாது மற்றார்தான் சொல்லவல்லார்—என்றவாறு. (34)

வேட்சிலை கொண்ட வெற்றி விருதினை விளக்கா நின்ற
வாட்சிலை நுதற்கட் செவ்வாய் வானிடைப் பறவாக் கிள்ளை
தாட்செழுங் கமலப் போது தாரையி னெதிரே காண்போர்
காட்சியிற் பதம தாமாற் பதமெனக் கண்டோர் சொல்வார்

(இ - ள்.) மன்மதனானவன் வில்லினாற் பெற்ற செயவிருதினைப் பிரகாசிப்பிக்கின்ற வாள்போன்ற கண்களும் வில்லைப்போன்ற நெற்றியும் சிவந்தவாயுமுடைய கிளிபோன்ற சோமாவதியினது பாதமாகிய செழித்த தாமரை மலரானது கண்ணினால் பார்ப்பவரது மனம் இளகிப் பதமுறுதலால் பதமென்று சொல்லுவார் தெளிந்தோர்—என்றவாறு. (35)

இவ்வகை யணைத்து மைப்பு மாவிலக் கணமி சைக்கு
மவ்விதி பெற்ற மங்கை கடற்படா வமுதந் தானோ
செவ்விசேர் மலையின் வையாத் தெளிசுவைத் தேனோ தெண்ணீர்
பவ்வமெ ழுருதி லாவோ வுயிருடைப் பாவை தானோ

(இ - ள்.) இவ்வண்ணம் சகல அவயவங்களும் இலக்கண நூலிற்சொல்லுகின்ற பிரகாரமாயுள்ள சோமாவதியென்னும் பெண் பாற்கடலிற் பிற



வாத அமிர்தமோ அழகுதங்கிய மலையில் கட்டாத தெளிந்ததித்திப்பையுடைய தேனோ தெளிந்த நீரையுடைய சமுத்திரத்தின் மேல் தோற்றாத சந்திரனோ சிலையுடைய பதுமையே—என்றவாறு. (36)

என்னநல் வனப்பு முற்றி யிசைத்தசோ மாவ திப்பெண்
மன்னுதன் மனநா ணென்னும் படையினான் மலரம் பெய்யும்
கன்னலஞ் சிலைக்கை வேளை வென்றுநற் குணத்திற் கல்லா
ருன்னுதீ வினைக ளெல்லாம் வென்றன ளுவமை யில்லாள்

(இ - ள்.) என்றுசொல்ல நன்மையான அழகுபொருந்திய சோமாவதியானவள் தனது மனதிலுள்ள நாணமென்கிற அம்பினாலே புஷ்பபாணத்தைத் தொடுக்கின்ற கரும்பு வில்லையுடைய மன்மதனைச் செயித்து நல்ல குணத்தினாலே கல்வியறிவில்லாதவர் நினைக்கின்ற தீயசெயலை யெல்லாம் செயித்தாள்—என்றவாறு. (37)

வேறு.

இன்னவியல் கொண்டமட மாதுதனை யீன்ற
நன்னெறி லாம்புரிதரி நான்மறைக் காங்கன்
கன்னியெழின் முற்றினது கண்ணினுறக் கண்டு
மன்னுமணஞ் செய்வதற்கு வந்திலனொ ருத்தன்

(இ - ள்.) இத்தன்மையுடைய மடமைபொருந்திய சோமாவதியென்னும் பெண்ணைப் பெற்ற நாலு வேதமுணர்ந்த காங்கனானவன் இக்கன்னிகையழகு முதிர்ந்ததைக் கண்ணினாற்கண்டு விவாகஞ்செய்து கொள்வதற்கு ஒருவனும் வந்திலன்—என்றவாறு. (38)

செய்தவொரு தீவினை தெரிந்தில னெனத்தா
னையுமனம் வெம்பிமிக நன்மனைவி யான
மொய்குழலன் மாதுமதி முககமல நோக்கி
வெய்துயிர்த்து மாழ்கியொரு சொல்விளம்ப லுற்றான்

(இ - ள்.) யான்பண்ணின தீவினையாதோ தெரிந்திலேனென்று தன் புறுகின்ற மனது மிகவும் வெதும்பித் தனது பாரியாளாகிய மதுமதியினது முகத்தைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டு ஒருவார்த்தை சொல்ல ஆரம்பித்தான்

கோற்றொடி மடந்தைநங் தவத்தில்வரு கோதை
போற்றுமெழின் முற்றினண் முருக்கவிதழ்ப் பின்று
லேற்றமறை யோனொருவன் வந்—முற்றி லேமே
நாற்றிசை துதிக்குமா—

(இ - ள்.) நெடிய வளையல்களையுடைய பெண்ணே, நமது தவத்திற் பிறந்த சோமாவதி யாவரும் புகழத்தக்க அழகு மிகுந்த மங்கைப் பருவத்தை அடைந்தாள். முருக்கமரத்தில் அலர்ந்தபூவை யொப்பானுள். இவளை மணப்பதற்காக அந்தணன் ஒருவனு மிவ்விடத்திற்கு வந்திலன், யாவரும் புகழத் தக்க விவாகக்காட்சியையாம் பெற்றிலம்—என்றவாறு. (40)

சுற்றிலு மிருந்துவரு வேதியர்க டோற்ற
முற்றமண மில்லையென வுண்மையறி யாரா
முற்றிழை தனக்கழகு முற்றியது கண்டு
மற்றிவட்கு நாயகனை யுண்டென மதித்து

(இ - ள்.) சுற்றுப்பக்கங்களிலிருந்து வருகின்ற அந்தணர்கள் காணப்படுகின்ற கல்யாண மில்லையென்கின்ற நிச்சயத்தை யறியார். நிறைந்த ஆபரணங்களையுடைய சோமாவதியின் மங்கைப் பருவத்தைப் பார்த்து இவளுக்குத் தலை வனுண்டென்று நிச்சயித்து—என்றவாறு. (41)

இங்கிவளை விட்டவ னிருந்தவகை யென்னோ
தங்கநதி யாத்திரை செயத்தொடங்கி னானோ
அங்கொருமடந்தையினை யார்வமுற வேட்டே
செங்கையிற் பிடித்தனனோ சிவன்படிந் தானோ

(இ - ள்.) இவ்விடத்தி லிவளைவிட்டு இவளுடைய நாயகனிருக்கின்ற தன்மையாதோ, மேலான தீர்த்தயாத்திரைசெய்ய ஆரம்பித்துச் சென்றானோ, சென்ற விடத்திலே ஒருபெண்ணை விவாகம் பண்ணிக்கொண்டானோ அல்லது இறந்து போய்விட்டானோ—என்றவாறு. (42)

சிவனருளி னாலன்றிச் சென்றிடு மிடத்தே
தவமது புரிந்தனனோ தண்ணளியி னோடு
மிவண்மனத் திருக்கதனை யெண்ணிமன மையுற்
றவமுற விருந்தனனோ யாதென வயிர்த்தே

(இ - ள்.) சிவனது கிருபையினாலே சென்ற விடத்தில் தவஞ்செய்திருந்தானோ இவளது மனதில் வித்தியாசத்தை நினைந்து தன்னுள்ளத்திற் சந்தேகமடைந்து வீணாகத் தனியனாயிருந்தானோ என்னமோவென்று மயங்கி—என்றவாறு. (43)

[illegible]
நோக்கியவன் சாற்றிடுவ னன்பாய்
முன்றவ பலத்திலு[illegible]
[illegible]சுமன் மடந்தை



மன்றலின்முன் பூத்திடும வண்ணமதி னாலே
யொன்றியவிப் பாவமன்னை தந்தையுறு மென்றே

(இ - ள்.) பின்னும் காங்கனனவன் தனது மனவியைப் பார்த்துச் சொல்லுவான். அன்பினாலே நான் முன்செய்த தவபலத்தினால் பிறந்த சோமாவதிப்பெண் விவாகத்திற்கு முன்பே ருதுவாகிய தன்மையினாலே அந்தப்பாவமானது தாய் தகப்பனை யடையும்—என்றவாறு. (44)

வருமுலை யெழுந்தபின் மகட்டருகி லின்றே
தருமம பழிந்திடு முரோமமங் கெய்திற்
பொருவுற மணந்தபுரு டன்மடியு மென்றே
தெருளுமறை கூறியது தேர்ந்திடுமி னென்ன

(இ - ள்.) தோற்றுகின்ற தனமெழுந்த பின்பு விவாகஞ்செய்து கொடுத்தால், அந்த தோஷத்தினால் பெற்றவர்களது அரிய வம்சங்கெடும். தேகத்தில் அதிக ரோமமுண்டாகில் பொருந்த விவாகம் பண்ணிக்கொண்ட நாயகன் மடிவானென்று தெளிந்த வேதங்கள் முறையிடுகின்றன— (45)

ஆண்டுபதி னொன்றளவு மீன்றவ ரகத்தே
வேண்டுத லன்றதன்பின் வைத்திடலல் வெய்யோர்
மாண்டுநர கத்தில்வெகு காலம்வைகு வாரென்
றீண்டுள மெலிந்துதுய ரெய்தினனி சைத்தான்

(இ - ள்.) பதினொருவயசு வரைக்கும் பெற்றவர்கள் தமது வீட்டிலிருக்க விரும்புதல் நன்மை. அதன்மேல் வைத்திருந்தால் அந்தப்பெண்ணைப் பெற்றவர்கள் கொடிய நரகத்தில் அனேககால மிருப்பார்களென்று வேதங்கள் சொல்லுகின்றனவென்று மனது கலங்கித் துன்பப்பட்டுச்சொன்னான்

வேறு.

மறைய வன்றன் வதனத்தை நோக்கியே
பிறைகொ ணெற்றி மதுமதி பேசுவாள்
குறைவு கொண்ட மனங்களி கூரவே
நிறைவு செய்ய வொருத்த னினைத்திடில்

(இ - ள்.) இந்தப்படி சொன்ன காங்கனது முகத்தைப் பார்த்துப் பிறைபோன்ற நெற்றியை யுடைய மதுமதியானவள் சொல்லுவாள். குறையுள்ள நெஞ்சம் களிப்புறும்படிக்கு நிறைவேற்றுவதற்கு யோசிக்கு மிடத்தில் ஒருவனுள்ளான்—என்றவாறு.

கைம்ம லர்க்க ணுழைமழுக் கண்ணுதன்
மெய்ம்ம றைப்பொரு ளாகி விளங்கினோன்
நம்மை யாட்கொளு நாயக னன்றியே
மம்மர் தீர மருந்தில்லை வேறுதான்

(இ-ள்.) மலரைப்போன்ற கையினிடத்தில் மானுமழுவு மேற்றிக் கண்ணுமுடைய மெய்யான வேதத்தின் பொருளாகிப் பிரகாசிக்கின்றவனும் நம்மை இரட்சிக்கின்ற கடவுளுமாகியவனை யல்லாது துன்பம் நீங்க வேறு மருந்தில்லை—என்றவாறு. (46)

ஆத லாற்கரு ணாநிதி யாகிய
மாது பங்கரை யுன்னிநன் மாதவம்
போத ருச்சனை பூசைபு ரிக்குநாம்
வேதத் தாலு மறிவரு மெய்யனே

(இ-ள்.) ஆதலால் தயாநிதியான மலைமகளை இடபாகத்தில் வைத்தவரைக் கருதி நல்ல தவமும் புட்பங்களினாலே யர்ச்சனையும் செய்து வேதத்தாலு மறியக்கூடாத மெய்யானவனே—என்றவாறு. (47)

ஐய னேயம லாவர னேயரு
ளெய்து நல்வரத் தின்றக ணங்குழைத்
தைய லாண்மண மின்றித் தனித்துயில்
செய்யு மாறிது தீர்த்திட வேண்டுமால்

(இ-ள். சுவாமி அனகா, அரனே, உனது கிருபை சேர்ந்த நல்ல வரத்தினாலே பெற்ற பொற்குழையையுடைய சோமாவதிப்பெண் விவாகமில்லாமல் தனியாளாகி நித்திரை செய்கின்ற தன்மையான விதனை நீக்க வேண்டும்—என்றவாறு. (48)

என்ன வோதி யிளம்பிறைச் சென்னியான்
றன்னை வேண்டி வரங்கொளத் தக்கதென்
றன்ன மென்னடை யாள்சொல வந்தவ
னன்ன தீதென நெஞ்சு நயந்தனன்

(இ-ள்.) என்று சொல்லி இளம்பிறை தங்கிய சிரசையுடைய கடவுளை வேண்டுதல் செய்து வரம் பெறுவது தகுதியா மென்று அன்னம் போன்ற மெல்லிய நடையையுடைய மதுமதியானவள் சொல்லக் காங்கேயனவன் இது நன்மையா மென்று மனதில் விரும்பினான்—என்றவாறு. (49)



பெற்ற தாயொடு தந்தையும் பெண்ணுமா
முற்ற மூவரு மொப்பில்வெள் ளூரினிற்
கற்றை வேணிக் கடுக்கை முடியினான்
பொற்றி ருப்பதம் போற்றிடச் சென்றனர்

(இ-ள்.) தன்னை யீன்ற மாதா பிதாவுடனே சோமாவதி மங்கையும் சேர்ந்த மூன்றுபேரும் வெள்ளூரின்கண் கட்டிய சடையுங் கொன்றை மலருந் தாங்கிய சிரசையுடைய தாந்தோன்றி யீசரது அழகிய பாதங்களை வணங்குதற்குப் போயினர்—என்றவாறு. (50)

தேன்று ளிக்கும் மலர்ச்செழுஞ் சோலையி
லேன்ற வண்டிசை மங்கைய ரின்னிசை
தோன்று கின்ற சுருதியி னின்னிசை
யான்றி லங்கு மரியவெள் ளூர்ப்பதி

(இ-ள்.) தேனைத் துளிக்கின்ற மலர்களையுடைய செழித்த தோப்புகளில் வண்டுகளி னிசையும் பெண்கள் பாடுகின்ற இனிய ராகமும் சத்திக்கின்ற வேதங்களி னொலியும் நிறைந்து விளங்குகின்றது அருமையான சுவேதபுரி பட்டணம்—என்றவாறு. (51)

சுயம்பு வாகியு தித்தவர் சங்கரர்
முயங்க றத்தை வளர்த்தவண் முக்கணி
வயங்கு கங்கைவெள் ளூரென வந்தது
நயங்கு லாவி யிருக்கும் நகர்க்கணே

(இ-ள்.) கடவுளாகிய சுயோற்பத்தீசர் பார்வதியாகிய தர்மவர்த்தினி சொல்லுகின்ற கங்கையோ வெள்ளூரென்று தோன்றினது. இவ்வண்ணம் தன்மைதங்கிய வெள்ளூரில்—என்றவாறு. (52)

மன்னும் வெள்ளூரி னண்கரை சேர்ந்தனர்
பன்ன சாலை யியற்றினர் பாங்குற
உன்னு மாதவம் பூசையி லோங்கினான்
கன்னி பாக ரருளினைக் காணவே

(இ-ள்.) நிலைமைபெற்ற வெள்ளூரினது வளமை பொருந்திய கரையை யடைந்து பன்னசாலைசெய்து செவ்வையாக நினைக்கின்ற மகாதவத்திலும் பூசையிலு மிருந்தான், பெண்பாகத்தையுடையவரது கருணையை யுடையும்படிக்கு—என்றவாறு. (55)

காங்கன் மெய்த்தவம் பூசைக் கருத்துற
சூரந்த வன்பினிற் றேவி தொழிற்செய
மரங்கள் வல்லிக் கொடியுமம் மங்கைதான்
பரந்த கந்தம் பலந்தர நண்ணினுர்

(இ - ள்.) காங்கனுனவன் மெய்யான தவமும் பூசையும் மனம் பொருந்திச்செய்ய, மிகுந்த பிரியத்தினாலே அவன் மனைவியாகிய மதுமதியானவள் பணிவிடைகளைச் செய்ய, மரங்களும் கொடிகளும் தேடிக் கந்த மூல பலங்களைச் சோமாவதியானவள் கைக்கொண்டு திரும்பி வருகையில், சேறு முதலான மண்களைக் கழுவுதற்குத் தண்ணீர் பார்க்கும்போது கங்கை நதியைப்போலும் ஓர் ஓடையைக் கண்டாள்—என்றவாறு. (56)

மாலு தித்தவெள் ளூரிடை வாயுவின்
மூலே தன்னின் முயங்கி யொளிர்வது
சேலி னங்க ளவடிருக் கண்ணிணை
போலு லாவப் பொலிவு சிறந்தது

(இ - ள்) பெருமை பொருந்திய வெள்ளூரின் வாயு திக்கிலிருந்து விளங்குகின்றது. மீனினங்கள் அவளது அழகிய கண்களைப்போன்று உலாவ மிகவுஞ் சிறப்புள்ளது—என்றவாறு. (57)

ஆண வத்தைக் கழுவி யருந்தவம்
பூணு வோர்மனம் போற்றெளி வுற்றது
சேணெ டுங்கம லத்தெகி னத்திசை
காணு நீர்மகள் காற்சிலம் பொக்குமே

(இ - ள்.) ஆணவ மலத்தைக் கழுவி அரிய தவஞ் செய்வோருடைய வுள்ளம் போன்று தெளிவுள்ளது. நெடிய தாமரையினது புதிய மலரின் மேலே அன்னங்களொலிக்கின்றது காணத்தக்க நீர் மங்கையினது காலிலிட்ட சிலம்பைப் போலும்—என்றவாறு. (58)

நாட்ட முற்ற குமுத னளனொடு
கூட்ட முற்ற ரகுகுலக் கொற்றவன்
வேட்ட சேனையைப் போல்விரை யம்புயங்
காட்ட லால ளகாபுரி காட்டுமால்

(இ - ள்.) அரசாட்சி பொருந்திய குமுதன் நளனென்பவரோடுங் கூடியிருந்த ஸ்ரீ ராகவன் விரும்பிய சேனை சமூகத்தை யொத்து வாசனை பொருந்திய தாமரைகள் மிகவுந் தோற்றுகின்றமையால் பதுமநிதியை யுடைய அளகாபுரியைப் போன்றிருக்கும்—என்றவாறு. (59)



கூருந் துண்டவெண் ணாரைக்கு ழாங்களே
சேருந் தன்மை விளங்கச் சிறந்தது
தீரந் திண்ணை மணற்கள் செறிந்தது
பாரெங் கும்புகழ் பேசப் பலித்தது

(இ - ள்.) கூரிய மூக்கையுடைய வெள்ளை நாரைக் கூட்டங்களிருந்து விளங்குந்தன்மையிற் சிறப்புள்ளது. கரைகளில் வேதிகைகளும் மணற்குவைகளும் நெருங்கியுள்ளது... பூமி எவ்விடங்களிலும் புகழும்படி பிரபலித்தது.

ஆத வன்கிர ணத்தை யடக்கியே
தாது குத்த மலர்ச்செழுஞ் சாயைகண்
மீது யர்த்திய சோலையின் மேவிய
பாத வத்திரள் பாங்கரி னுள்ளது

(இ - ள்.) சூரியனது வெயிலை மறைத்துத் தாதுக்களைச் சிந்துகின்ற புட்பங்களினது செழித்த நிழற் கண்ணே மேலாக வுயர்ந்திருக்கின்ற தோப்புகளிற் பொருந்திய சருகுகளின் குப்பைகள் பக்கங்களி லுடையது—(61)

செப்பு மின்ன சிறப்புள்ள வோடையிற்
பொய்ப்ப டும்மிடை போயங்கு நண்ணியே
கைப்படு கின்ற கந்தப் பலனெலா
மப்பி நீரி னலைத்துக் கழுவியே

(இ - ள்.) சொல்லுகின்ற இத்தன்மையான சிறப்பையுடைய ஓடையில் பொய் போன்ற மருங்குலை யுடைய சோமாவதி மாது சென்று அவ்விடத்திற் சேர்ந்து கையிலிருந்த மூலபலாதிகளை யெல்லாம் தண்ணீரில் அலசிச் சுத்தி செய்து—என்றவாறு. (62)

தூய நல்லிடம் வைத்துத் துரிசதாந்
தீய பாவ மகற்றுஞ் செழுந்திரைத்
தோய மூழ்கி யெழுந்தவ டோன்றவே
காய மெங்குங் கதிரொளி கான்றதே

(இ - ள்.) புனிதமான நல்ல விடத்தில் வைத்துக் குற்றமாகிய கொடிய பாவங்களைப் போக்குகின்ற செழித்த அலைகளையுடைய அவ்வோடை நீரிற் குளித்து எழுந்து வரவும் அப்பெண்ணினது உடம்பெங்குஞ் சூரியப் பிரகாசமாய்ப் பிரகாசித்தது—என்றவாறு. (64)

நீடு தெண்டிரை வாரியி னீரின்மே
லாட லேழ்பரி யாதவன் றேன்றல்போ

லோடை நீரினின் மூழ்கி யுருக்கிளர்
சேடு லாவ வெழுந்த வடேகமே

(இ - ள்.) நீண்ட தெள்ளிய திவலைகளையுடைய சமுத்திர நீரின் மேல் நடனம் புரியும் ஏழு குதிரைகளையுடைய சூரியனுதித்தாற் போன்றது அவ்வோடை நீரின் மூழ்கி அழகு பொருந்திய பிரகாசத்தை யுடையதாகி எழுந்தவளுடைய சரீரமானது—என்றவாறு. (56)

பொற்க திர்த்திரள் வீசியப் பூவுட
லற்பு தத்தினை நோக்கிய திந்நிலா
ணற்பு னற்செய லோவர நங்கையர்
கற்ப னைப்படி யோகனவோ வென்று

(இ - ள்,) பொற்பிரகாச மிகுந்து வீசிய அழகிய தன்னுடம்பின் அதிசயத்தைப் பார்த்துத் தெரியாளாகி, இந்த நல்ல நீரினது செய்கையோ தெய்வப்பெண்கள் கற்பித்த பிரகாரமோ, அல்லது கனவோவென்று நினைந்தாள்—என்றவாறு. (65)

தன்னு ளெண்ணினள் சாம்பூ நதமென
முன்ன ருண்டெனக் கேட்ட முறைமைதா
னின்ன பாரி லுதித்தது வோவெனுக்
கன்னி கந்த பலங்களைக் கைக்கொடு

(இ - ள்.) தன்னுளே நினைத்துச் சாம்பூநதமென்ன முன்புள்ளதாயிருந்ததென்று கேட்ட வண்ணம் இப்பூமியின் கண் அனர்தம் உண்டாயிற்றுப் போலாகுமென்று சோமாவதியானவள் கந்தபலங்களை யெடுத்துக் கொண்டு—என்றவாறு. (66)

தந்தை தாயுறை சாலையி னண்ணினாள்
வந்த மாதினை நோக்கினர் மற்றவர்
சுந்த ரத்தினிற் சூரிய புத்திரி
சிந்தை கூர்தர வந்த செயற்கையோ

(இ - ள்.) தகப்பன் தாயிருக்கின்ற பன்னசாலையைச் சேர்ந்தாள். அந்தப் பெண்ணைத் தாய் தந்தையர் பார்த்து அழகிலே சூரியனது புதல்வியானவள் மனம்விரும்பி யாதுகாரணமாகவோ இவ்விடத்திற்கு வந்த செய்கையோ

அம்பு யத்தவ ளோவிண் ணரம்பையோ
நம்பு மிவ்வுருப் பெற்றிடு நங்கைதா
னிம்பர் மாநிலத் தெல்லையோ பூமியோ
வும்பர் போற்றத் தகுமிவ் வுருவமே



(இ - ள்.) இலட்சுமியோ தேவாம்பையோ விரும்பத்தக்க இவ்வடிவமுடைய இந்தப் பெண்; இவ்விடத்தில் விசாலமான பூமியின் கண் எந்தத் தேசமோ தேவர்களுந் துதிக்கத் தகும் இந்த வடிவமானது—என்றவாறு.

என்ன வேபல வெண்ணிக் காங்கனும்
கன்னி நீயெவள் பேரென் கழறுதி
யுன்னு மென்றவ நோக்கி யுவந்தரு
டன்னை யீய வெழுந்தருள் சாமியோ

(இ - ள்.) இப்படி யென்று பலவிதமாய் நினைத்துக் காங்கனானவன் கன்னியாயிருக்கின்ற நீயார்; உன் பெயரென்ன; தியானஞ் செய்கின்ற என்னுடைய தவத்தைப்பார்த்துச் சந்தோஷித்துக் கிருபை செய்ய எழுந்தருளிவந்த தெய்வமோநீ சொல்லுவாய்—என்றவாறு. (69)

இவ்வ னத்தி லிரங்கி வாந்தரு
தெய்வ மோவுனை யாரெனத் தேர்கிலே
னெவ்வ நீங்க வுரையென விப்படி
மௌவன் மூரன் மதுமதி யுஞ்சொல

(இ - ள்.) இந்த வனத்தில் வாசஞ் செய்து வார்தருகின்ற வனதேவதையோ உன்னையாரென்று தெரிகிலேன்; எனது குற்றமாகிய சந்தேகந்தீரச் சொல்லுவா யென்று முல்லையரும்புபோன்ற நகையினையுடைய மதுமதியம்மையானவள் இவ்வண்ணம் சொல்ல—என்றவாறு. (70)

இம்மொ ழிகள் செவியிடை யேறலு
மெய்ம்மி னுங்கொரு குற்றம் விளம்பியே
விம்மி விம்மி யழுதுவெ தும்பியே
யம்மை யோடுதன் னப்ப னுக்குஞ்சொல்வாள்

(இ - ள்.) இந்தவார்த்தைகள் காதிற்புகுதலும் சோமாவதியானவள் தனது தேகத்தினொளிக்கு ஒரு குற்றத்தைச் சொல்லித் தேம்பியழுதுமனம் வெதும்பித்தனது அன்னைதந்தையருக்குச் சொல்லுவாள்

உந்த மாலை யொழுங்கின் விதியினாற்
கந்த மூல பலங்கொடு காட்டிடை
வந்த வாற்றுற மண்ணைக் கழுவவே
நந்து லாவுமோ ரோடையை நாடினேன்

(இ - ள்.) உங்களுடைய கட்டளைப்படிக்குச் செழுங்குபலாதிகளைக் கொண்டு காட்டினிடமாக வரும்போது விதிவசத்தினால் அலைகளிலுள்ள மண்களை யலம்புவதற்குச் சங்குகள் தவழா நின்ற ஒரோடையைக் கண்டு சென்றேன்—என்றவாறு. (72)

நாடியங்கு கணுகிப் பலாதிகள்
ஓடை நீரிற் கழுவி யுவந்துநீ
ராடி மூழ்கி யெழுந்திடு மக்கணங்
கோடி சூரியர் போலொளி கொண்டனன்

(இ - ள்.) சென்று அவ்வோடைக்கரையிற் சேர்ந்து கனிமுதலானவை களை அந்நீரினாற் கழுவிச் சந்தோஷமுற்றுக் குளித்து மூழ்கியெழுந்திருந்த அக்கணத்தில் கோடி சூரியருதித்தாற் போலும் பிரகாசத்தையடைந்தேன்

வேறு.

என்ன மங்கை யிசைத்த போதினி லின்ன ருட்கொடு பெற்றிடு
மன்னை யோடு பிதாம கிழ்ந்தவள் சொற்றொ னிக்குர லாதலா
லின்ன சுந்தரி பெற்ற புத்திரி யென்ற றிந்தனர் புல்லினர்
பின்னெ ழுந்திடு மற்பு தத்தொடு நெஞ்சி னன்பு பெருகியே

(இ - ள்.) இப்படியென்று சோமாவதிப்பெண் சொல்லிய வளவில் இனிய தவத்தினாற் பெற்ற தாயுந்தந்தையுஞ் சந்தோஷித்து இவள் பேசு கின்ற தொனிக் குரலாகியே யிருக்கின்றது. ஆதலால் இவ்வழகிய பெண்ணா னவள் நாம்பெற்ற புதல்விதானென்று தெரிந்து தழுவிக்கொண்டு பின்பு மனதிலதிசயங்கொண்டு பக்திமிகுந்து—என்றவாறு. (74)

பூவை பங்கினில் வாழ்சு யம்பும கேசர் பொன்னடி யம்புய
மேவ நெஞ்சி லிருத்தி யேபினும் வீறு பூசை விளைத்திட
காவி வார்குழன் மாம டந்தை மணாள னன்முக னாயக
னேவி லாது துதித்தி றைஞ்சிடு மொப்பி லாதவர் வந்தனர்

(இ - ள்.) பார்வதியைப் பாகத்தில் வைத்த சுயோற்பத்திமகேசுவர ருடைய பாதார விந்தங்களைச் சேர மனதிலிருத்திப் பின்னும் பெருமை யோடு ஆராதனைசெய்ய லட்சுமி சமேதராகிய விஷ்ணுவும் பிரமனும் ஒழி வின்றித் தோத்திரம்பண்ணி வணங்குகின்ற மகாதேவர் பிரசன்னமானார்—.

கையின் மான்மழு நீலகண்ட முடித்த கங்கைகொ ளுஞ்சடை
துய்ய செந்தழல் போலு மேனி துலங்க வங்கெதிர் கண்டனன்
செய்ய வஞ்சலி கைத்த லைக்கொள சென்னி பாதம் வணங்குற
மெய்யி னன்பு மிகுந்தெ ழுந்திட வீழ்ந்தெ ழுந்து பராவினன்



(இ - ள்.) மானுமழுவுந்தாங்கிய கைகளும் கறுத்த கண்டமுங் கங் கையைத் தரித்த சடையும் பரிசுத்தமான சிவந்த அக்கினியையொத்த தேக மும் பிரகாசிக்க அவ்விடத்திலெதிராகப்பார்த்தான். கைகளைச் சிரசின்மீது குவித்துத் தலையால் வணங்கிச் சாஷ்டாங்கமாகப்பணிந்து எழுந்து நின்று தோத்திரம் பண்ணினான்—என்றவாறு. (76)

ஒப்பி லாமணி யேபொ னேபுர மூன்று முன்னெரி யுண்ணவோர்
வெப்ப மூரல் புரிந்த வித்தக மெய்யி லங்கிய மெய்யனே
யப்ப னேயர னேதெ ளாரமு தேபுனர்ப் பிற விக்கொரு
தெப்ப மேய டிமைத்தி றத்தை யறிந்த தோதிரு வுள்ளமே

(இ - ள்.) ஒப்பற்ற ரத்தினமே திரிபுரங்களையும் முற்காலத்தில் அக் கினி பக்ஷிக்கும்படி ஒரு வெண்மையானநகை செய்த கடவுளே சத்தியமே பிரகாசிக்கின்ற மெய்யனே அரனே தெவிட்டாத அமிர்தமே மறுஜென்ம மாகிய கடலுக்குத் தெப்பமானவனே எளியேனது அடிமைத் தன்மையைத் திருவுள்ளந் தெரிந்ததோ—என்றவாறு. (77)

என்ன மாதவ மிவ்வி ழைத்துன தின்ன ருட்கெதி ராயதான்
முன்ன வாபர னேயெ னாருயிர் முத்தி பெற்றது முற்குல
தின்னு லோகம தெய்தி னாரென வின்பு மேற்கொள நின்றிடு
மன்ன வந்தண னைச்செ ழுஞ்சடை யைய னாடிய ருட்செய்வான்

(இ - ள்.) என்னதவஞ் செய்தனோ என் கண்ணுக்கெதிரே தோன் றிய முதல்வனே பரனே எனது சீவன் மோட்சமடைந்தது. முன்னைய வெனது வம்சத்தார் உன்னுலகத்தை யடைந்தாரென்று பேரானந்த மேற் கொள்ள நின்ற அந்தக்காரங்கவேதியனைப் பார்த்துச் சடையையுடைய கடவு ளார் திருவுளம் பற்றுவார்—என்றவாறு. (78)

நற்ற வத்தின் மிருந்த வேதக ராங்க வெம்மையு னைநீ
முற்று நல்ல தவம்பு ரிந்தனை யெவ்வ ரத்தினை முன்னினை
யுற்ற தோதென வேகராங்க னுரைப்ப னுன்னருள் கொண்டுநான்
பெற்ற பெண்ணிள மாது பேதை பெதும்பை நீத்த பிராயமாய்

(இ - ள்.) நல்லதவத்திலேயிருந்தகராங்கனே நம்மைநினைத்துநீமுதிர்ந்த நன்மையான தவஞ் செய்தாய் என்ன வரத்தைவிரும்பினை; நீநினைவுற்ற தைச் சொல்லுவாயென காங்கனவன் சொல்லுவான். தேவரீருடைய கிருபையினாலே நான்பெற்ற பெண்ணாகிய இளமைப் பருவமுடையவள் பேதை பெதும்பையென்னும் பருவங்களைக் கடந்தவயசுள்ளவளாகி— (79)

யங்கை யாயு மணத்தொ ழிற்செயும் வண்ண மின்றி யிருத்தலா
லெங்க ளெஞ்சி லெழுந்த துன்ப மெனுங்க னற்சுட நின்றனன்
இங்கு நாடி யெழுந்த ருட்செய வின்று காட்சி கொடுத்தனை
பொங்கு மித்துயர் தீரு மாறருள் பூவை நன்மண முற்றவே

(இ - ள்.) விவாகவிதி செய்கின்ற தன்மையில்லாமலிருக்கின்ற படியால் எங்களுள்ளத்திற்றோன்றிய துன்பமென்கின்ற நெருப்பாற் சுடப்பட்டிருக்கிறோம். இவ்விடந் தேடியெழுந்தருளிக் கிருபை செய்ய இன்றைக்கு பிரத்தியக்ஷமானீர். துன்பப்படுகின்ற நாங்கள் இத்துன்பந்தீரும் பிரகாரம் சோமாவதியினது விவாகம் நிறைவேறுதற்கு—என்றவாறு. (80)

இச்ச வேத புரிக்கண் வாச மியற்றி நின்மனை நின்மகள்
விச்சை யாகிய நம்முலோக மியன்றலம் பெறு வீரெனும்
நச்சுலாவிய கண்ட ரோடு நாங்க ளோர்சொ னவிற்றுவான்
பச்சை மாதொரு பொன்னி றம்பெறும் பான்மை சொல்லெனவோ

(இ - ள்.) இந்த வெள்ளூரின் கண்ணே வசித்திருந்து நீயும் நின் மனைவி மகளோடு ஞானவடிவாகிய நம்முலக மாகிய கயிலாயத்தையடைவீரென்று உரைத்த விடந்தங்கிய கண்டத்தையுடைய கடவுளுடனே நாங்களனவன் ஒருவார்த்தை சொல்லலுவான். இந்த இளமங்கைப்பெண் ஒப்பற்ற சுவர்ண நிறத்தை அடைந்த தன்மையைத் திருவுளம் பற்றவேண்டுமென மகேசுவரர் சொல்லுவார்—என்றவாறு. (82)

என்று கூறுக ரங்க ளுக்கரு ளோசரந்து விளம்புவார்
நன்று நன்மினி நீபெ றுஞ்சுதை நன்மணந் தனமு டிக்கவே
இன்று முன்னொரு மூன்று நாளினி லெய்து வானொரு வேதியன்
பன்றல் செய்து மகிழ்ச்சி கொண்டு மணைச்செ ருக்கில் விளங்குவாய்

(இ - ள்.) இப்படி என்று சொல்லிய நாங்களுக்குக் கிருபை கூர்ந்து கடவுளாருரைப்பார். நல்லது நல்லது இனி நீ பெற்ற புதல்வியினது நல்ல விவாகத்தை முடித்துக்கொள்ள இன்று முதல் மூன்று தினத்திற்குள் ஒரு பிராமணன் வருவான். அவனுக்கு விவாகம் செய்து கொடுத்துச் சந்தோஷமடைந்து வாழக்கடவாய்—என்றவாறு. (83)

முன்னர் நாளிம வான்வ ரத்தினில் வந்துதித்திடு மொய்குழ
லன்ன மன்னவள் சாமளத்தை யடைந்து தாடனை யாயினள்
பின்ன ரக்குறை யாலோ ரோடை பிறக்க நெஞ்சி னினைத்தன
ளன்று வெற்பிவளோ துபொற்கதி ரோடை யொன்று பிறந்ததே;



(இ - ள்.) முன்னாளிலே இமயபர்வதராஜன் தவத்திலே வந்து பிறந்த பார்வதியானவள் பச்சை நிறத்தையடைந்து தாடனையானாள். பின்பு அந்தக் குறைவினாலே ஒரு சிற்றாறு உண்டாக்கும் படி மனதிலே நினைத்தாள். நினைத்தமாத்திரத்தில் சொல்லுகின்ற பொற்கதிரோடைஉண்டாயது.

வந்த பொற்கதி ரோடை நீரைம லர்க்கை தொட்டி டிலங்கவர்
சிந்தை யுற்றவெ லாமளித்திடு மேனி செம்பொனி றங்கொள்வா
ருய்ந்து வாழ்வர் பொய்யாத வோடையி னோது நாம மொழுங்கிதா
னந்து லாவுமன் னீரின் மூழ்கின ளாக மீன்றக ருங்குயில்

(இ - ள்.) அவ்வண்ண முண்டான பொற்கதி ரோடைநீரை மலர் போன்ற கையினாலே தீண்டினால் அவர்கள் மனதில் விரும்பியவைகளையெல்லாம் கொடுக்கும். மூழ்கினால் உடம்பு பொன்னிறமாகி வாழ்வுற்றிருப்பார்கள். அவ்வோடையின் பெயரின் ஒழுக்க மிதுவாகும். சங்குகள் தவழா நின்ற அந்த வோடைநீரில்மலைமகளாகிய கருங்குயில்போன்ற பார்வதி மூழ்கினாள்—என்றவாறு. (84)

நீரின் மூழ்கி யெழுந்து செம்பொன் னிறங்கு லாவிய நீர்மையார்
பாரு ளோர்கவு ரியெனத்துதி பண்ணு வாரொரு பண்பினாற்
சீரி னம்பிகை தந்த பேரது செய்ய பொற்கதி ரோடையாம்
தீர நண்ணினு மங்கை தீண்டினு மூழ்கி னுங்கதி நிண்ணமே

(இ - ள்.) அன்று மூழ்கியெழுந்து சிவந்த சுவர்ண நிறம் பொருந்திய தன்மையால் பூமியிலுள்ளவர்கள் கௌரியென்று துதிசெய்வார். பார்வதி கொடுத்த பெயரானது பொற்கதி ரோடையென்பதாகும். இதன்கரையிற் சேரினுங் கையிற் றீண்டினும் மூழ்கினும் முத்தி வீட்டை யடைவது நிச்சயம்

ஆத லாலிவள் பொன்னி றத்தை யடைந்த செய்கை யறிந்திடாய்
மாதி னன்பெயர் காஞ்ச னாங்கி யெனச்சொ லும்பெரு வையகம்
வேதி யாவறி யென்று ரைத்தனர் வேதன் மாயன் விளம்பரு
நாத நாயகர் எம்மை யாளுடை நங்கை பங்கி லிருப்பவர்

(இ - ள்.) ஆனதால் இச்சோமாவதி காஞ்சனவர்ணத்தைப் பெற்ற செயலைத் தெரிந்துகொண்டு இம்மாதின்பெயர் இன்று தொடங்கி காஞ்சனாங்கியென்று பூவுலகத்தார் சொல்லுவார் வேதியனே அறிவாயென்று சொல்லினார். பிரமனும் திருமாலும் துதித்தற் கருமையான நாயகரும் எம்மையாளாகவுடைய பார்வதியைப் பாகத்தில் வைத்தவருமாகிய கடவுளார்—

வான துந்துமி யேழு முங்கின மாரி யாய்மலர் சிந்தின
தான விண்ணவர் சித்தர் மாதவர் தாழ்ந்து செங்கை குவித்தன
ரானை யூர்தரு முக்க ணீசர் சயம்பு லிங்கம தன்கணே
ஞான ரூபம தாய்ம றைந்தனர் நானிலங்க டுதிக்கவே

(இ-ள்.) அப்பொழுது தேவ துந்துமி சப்தித்தன. புட்ப மழை பொழிந்தது, வானுலகத்திலுள்ள தேவர்களுஞ் சித்தரும் முனிவரும் தொழுது கைகளைக் கூப்பிக் கும்பிட்டார்கள். இடபவாகனத்தை நடத்துகின்ற மூன்று கண்களையுடைய மகாதேவர் சயம்புலிங்கத்தின் கண்ணே ஞானவடிவமாய் நாற்றிசையிலும் தோத்திரம் பண்ண எழுந்தருளினார்—என்றவாறு.

ஆய பின்பு கரங்க ளுட்கொடு காஞ்ச ளுங்கி மணத்தையே
நேய மாகி நினைத்தி ருந்தன னித்தர் போரு ணீர்மையாற்
றூய வேதவ ரம்பு கண்டவ னுமெ றித்தலை தோன்றினோன்
னேய நன்னிட தத்தி லந்தணர் தங்கி ளைக்கண் ணிசைந்துளோன்

(இ-ள்.) அதன் பின்னர் காங்கனனவன் கடவுளருளை மனதிற் கொண்டு சோமாவதியாகிய காஞ்சனங்கியினது விவாக காலத்தையே விரும்பிக் கருதியிருந்தான். இப்பால் கடவுளினது கிருபையினாலே பரிசுத்தமான வேதமுடிவை யுணர்ந்தவன்; சாஸ்திரமார்க்கமாய் நடக்கின்ற தோற்றமுடையவன்; நல்ல நிடத நாட்டில் பிராமண குலத்தில் பிறந்தவன் (88

மாணி னின்னுரி யேத ரித்தவ னல்லொழுக்கம் வழங்கினு
னை வங்கபோ காமு முற்ற வுரிந்த னோனழ கிற்கிலே
வேளி லாளி லருக்கொ ளாது மகிழ்ச்சி யெய்த விளங்கினே
னான மில்புகழ் பெற்ற பார்க்கவ கோத்தி ரத்தி லுதித்தவன்

(இ-ள். மான்றோலைப் புனைந்தவன்; நன்மார்க்கமான நீதியுடையவன்; சாஸ்திரங்களாலும் முடிவுறத் தெரிந்தவன்; அழகில் கரும்புவில்லையுடைய மன்மதனது வடிவமாத்திரமாயு மடங்காதென்று சந்தோஷமடைய விளங்குகின்றவன்: பார்க்கவ கோத்திரத்திலவதரித்தவன்—என்றவாறு.

வேத மோதிய மந்தி ரங்கள் செபித்து வைகறை வேலையிற்
றீத கற்று காங்க னென்பவன் வல்வி ழிக்கெதிர் சென்றபோ
தாத ரத்தி னழைத்து வைத்துப சார மண்புட னுற்றபோ
மாதி னுக்கிவ னேம ணாள னெனக்கு றித்த மனத்தினில்

(இ-ள்.) வேதத்திலுரைத்த மந்திரங்களைச் செபித்துக்கொண்டு விடியும்பொழுதில் குற்றந் தொலைக்கின்ற காங்கனது நல்ல நேத்திரங்களுக்



கெதிராகச் சென்றவளவில் ஆசையுடனே அழைத்துத் தமது காஞ்சனங்கி மாதுக்கு இவனே மணாளனென்று மனதில் குறித்து—என்றவாறு. (90)

யீச னாரு ளெண்ணி யெண்ணி யிறைஞ்சி யிங்கிவ னுண்மைகள்
பேசு ஞான வொழுக்க மியாவு மிகத்தெளிந்து பெருகுறு
மாசை யான்மட மாதை நீரினின் மூழ்கு வித்தணி யாரமே
பூசி யாபர ணங்க ளாலழ கேம றைத்த புணர்ப்பதாய்

(இ-ள்.) சுயோற்பத்தீசரது கிருபையை நினைத்துப் பணிந்து இவ்விடத்தில் இவனது மெய்மையாகப் பேசுகின்ற ஞானநெறி முழுதும் தெரிந்து காதலினால் பேதமையுடைய காஞ்சனங்கியை நீரில் குளிப்பாட்டி அழகிய சந்தனத்தைத் திமிர்ந்து ஆபரணங்களால் அழகை மறைத்த விதமாய்ப் பூட்டி—என்றவாறு. (91)

வல்லி யன்னவ டன்னை வேள்வியில் வன்னிமுன் மறையோ
ரெல்லாம், நல்ல வுள்ளம் மகிழ்ச்சி யெய்த விதிப்ப டிக்கு நடத்தியே
செல்வ மாமண மேமு டித்தன னின்ப வாரி திளைத்தனர், சொல்லு
மாதுலன் மாமி மற்றவர் சுற்ற மாயுற வுற்றவர்

(இ-ள்.) வல்லிக்கொடிபோன்ற காஞ்சனங்கியை ஓமாக்கினி முன்னால் அந்தணர் யாவரும் நன்மையான மனமகிழ்ச்சியடைய வேத விதிப்பிரகாரம் நடப்பித்து விவாகத்தை நிறைவேற்றினான். சொல்லுகின்ற மாமன் மாமிகளும் மற்ற பந்துக்களான உறவினரும் இன்பசாகரத்திற் படிந்தார்கள்

வஞ்சி மேனி நிறத்தை யாதென வந்த வாறு வினவியே
விஞ்சு சீர்நிட தத்தில் வேதியன் மெய்ம்மை முற்று மறிந்தபின்
கெஞ்சி னுளை யெழுந்து பொற்கதி ரோடைநீரினின் மூழ்கியே
யெஞ்சி லாதொளிர் பொன்னி றத்தினை மேவி யின்போ டிருந்தனன்

(இ-ள்.) இக்காஞ்சனங்கியினது தேகத்தின் பொன்னிறத்தையேதென்று வந்த மார்க்கத்தைக் கேட்டு நிடத நாட்டந்தணன் உண்மை முழுதும் தெரிந்தபின்பு பொற் கதிரோடை நீர் படிந்து பிரகாசிக்கின்ற பொன் வர்ணத்தைப்பெற்றுச் சுகமோடிருந்தான்—என்றவாறு. (93)

மாது டன்மனை வாழ்க்கை யில்லற வாய்மை யைவழு வாமலே
வேத வேள்விகள் செய்து நாடொறு மேன்மை பெற்று விளங்கியே
காத நாயக னன்பு முற்று நடத்தி யேநல் வாசமாய்க்
காத லோடு வகைக்கு டற்கரை கண்ட னன்கதி கண்டனன்

(இ - ள்.) காஞ்சனாங்கிமடவாளோடும் நிடநாட்டு வேதியன் மனை வாழ்க்கையை யில்லறதரும வழுவின்றி நடத்தி, வேதமார்க்க மான யாகங்களைச் செய்து தினந் தோறும் மேன்மையடைந்து லிங்கி நாதருக்கு நாதனென சுயோற்பத்தீசருக்கு அன்புற்றுச் சுவேதபுரி ஸ்தலத்தில் வாசமாயிருந்து சந்தோஷத்துடனே சாயுச்சிய மடைந்தான்—

வேறு

வருமுனி வசிஷ்டர் வேள்வி வளர்க்கவுத் தரத்திற் றீர்த்த
கிரியிறை யவரைத் தியானங் களத்திடத் தயவு பண்ணிப்
பரிவுடன் பிரிதீ வுத்தோ ணிலிங்கமாம் வடிவ மாக்கி
யருள்புரிந் தெழுந்து தென்பா லவர்மகம் முடிப்பித் தாரே

(இ - ள்.) வந்த வசிஷ்ட முனிவர் யாகஞ் செய்ய வடதிசையில் தீர்த்தகிரீசரையுலகத்தார் தியானம் பண்ணுதற்குக் கிருபை செய்து பிரிதீவுத்தோணிலிங்க மென்னும் வடிவம் பிரதிஷ்டை செய்து கிருபையுற்றெழுந்த அதற்குத் தென்பாரிசத்தில் அவ்வசிஷ்டர் யாகத்தை நிறைவேற்றினர்—என்றவாறு. (95)

ஆசிலா வசிட்டர் வேள்விக் கருள்புரி சுயம்பு நாதர்
மாசிலா வெள்ளூர் சூழ்ந்த மகிதலம் பஞ்சக் குரோசங்
காசியிற் சமான மென்று கதிரிம கிரியில் வாழ்வோர்
பேசிய கேதா ரத்தோர் பெருமையைப் புகழு வாரே

(இ - ள்.) குற்றமற்ற வசிட்டரது யாகத்துக்குக் கிருபை செய்த சுயம்புலிங்கேசரது சுவேதபுரியைச் சூழ்ந்த பூமியில் ஐந்துயோசனைதூரம் காசிக்குச் சமானமென்று சொல்லி கேதாரஸ்தலத்திலுள்ளார்கள் பெருமையாகக் கொண்டாடுவார்கள்—என்றவாறு. (96)

வடிதமிழ் வேள்வி யூரின் வடதிசை தன்னிற் பஞ்ச
கடிகையா மெல்லைக் குள்ளாய்க் கடிவனம் வில்வ நீழ
லடியிலே வசிட்டர் பாரீ ருந்ததி யுடனே கூடிப்
படிமிசைப் பன்னாள்வாசம் பண்ணுமா சிரமந் தானே

(இ - ள்.) வடித்ததமிழ் நாடாகிய வெள்ளூரின் வடதிசையில் ஐந்து நாழிகைவழி யெல்லையினுள் வாசனை பொருந்திய வில்வாரணிய நிழலடியிலே வசிஷ்டரானவர் மதுபத்தினியாகிய அருந்ததியுடனே சேர்ந்து பூமியின்கண் பலதினம் வாசஞ் செய்திருந்த ஆசிரமம்—என்றவாறு. (97)



வேதவாக் கியஞ்சூழ் வெள்ளூர் மேற்சிவா லயத்தி னூடு
மாதவ மரிதாய்ப் பண்ணி வருந்திய விசையன் கேட்கும்
போதிலே மகிழ்வா னந்தம் பொலிவுதாந் தோன்றி லிங்கர்
கோதிலா வெற்றிப் பாசு பதந்தனைக் கொடுத்திட் டாரே

(இ - ள்.) வேதவாக்கியத் தொனிகள் சப்திக்கின்ற வெள்ளூரின் மேற்றிசையிலுள்ள சிவாலயத்தினுள் மகாதவத்தை யருமையாகச் செய்து வருத்தமுற்று அர்ஜுனன் கேட்டபொழுது ஆனந்த மிகுந்த சுயோற்பத்தீசர் வெற்றி பெறுகின்ற பாசுபதாஸ்திரத்தை யருளிச்செய்தார்— (98)

பல்லிய முழங்கும் வெள்ளூர்ப் பரன்சடை மேற்பாற் காட்ட
மெல்லிய ருத்தி ராட்ச மெய்த்திடு வழகு காட்டப்
புல்லிய முன்பால் மார்பிற் பொலிந்தமூ வரைகள் காட்டத்
தொல்லைவெண் கயிலை மேனிச் சுயம்புவாய்க் காட்டினாரே

(இ - ள்.) வாத்தியங்கள் முழங்குகின்ற வெள்ளூரிறைவன் மேற்பக்கத்திற் சடை தோற்றவும் மிருதுவான உருத்திராட்சங்களின் திருஅழகு காட்டவும் முன்புறத்தில் மார்பில் மூன்று வரைகள் தோற்றவும் வெள்ளியங்கிரியாகிய கயிலைமலையே வடிவமாய்ச் சுயம்புலிங்கமாய்த் தோன்றினர் (99)

ஆலயத் தொருவி ருக்ஷ மதின்விசே டத்தைப் பார்க்கில்
மேலுகம் வருவதோறும் வேறுபே தங்க ளாகும்
பாலுறு மிலுப்பை மாவாய்ப் பருநெல்லி பனசமாகும்
காலைநாட் கனியொன் றீயும் கலியுக மிலுப்பை யாமே

இ - ள்.) அந்தச் சுயோற்பத்தீசர் ஆலயத்திலுள் ஒரு விருக்ஷமுண்டு. அதனது விசேஷத்தைப் பார்க்குமிடத்தில் யுகங்கள் வருந்தோறும் வெவ்வேறு பேதங்களாயிருக்கும். அது எவ்விதமென்றால் இலுப்பை மரமாகவும் மாமரமாகவும் நெல்லிமரமாகவும் பலாமரமாகவும் உதயத்தில் தினந்தோறும் ஒருபழங் கொடுக்கும். இக்கலியுகத்தில் இலுப்பை மரமாக இருக்கும்—என்றவாறு. (100)

வேறு.

கங்கை மாநதி போலு மாநதி யில்லை வெண்கயி லைப்பிரா
னிங்கு வந்து சுயம்பு வான லிங்க மொப்பது மில்லையே
பொங்கு மாதவர் வேள்வி செய்த புவிக்கு மேயிணை யில்லையா
லங்கொ ராயிர நாவி னாலல தார்து தித்திட வல்லரே

(இ - ள்.) வெண்கங்கை நதிக்கொப்பான நதியுமில்லை; நெற்றிக்கண்ணையுடைய கைலையாளியாகிய கடவுளார் இவ்விடத்திற்கு வந்து சுயம்புரூபமாகிய லிங்கத்திற்கு ஒப்பானதுமில்லை; மிகுந்த தவத்தையுடைய முனிவர்கள் யாகஞ்செய்த இவ்வெள்ளூர் சூழ்ந்த நிலத்தை யொப்பானதுமில்லை; ஆயிரம் நாவையுடைய ஆதிசேடனே யல்லாது மற்றியாவர் துதிசெய்ய வல்லவர்—என்றவாறு. (101)

அண்டர் நாதனு மிப்ப திக்க ணறம்வ ளர்த்திடு மம்மையும்
பண்டு வாழ்கயி லைக்கு நேரென வெண்ணி வாழ்வு பதித்தனர்
தெண்டி ரைப்புவி யென்னு மங்கைசி ரோம ணிப்பணி யானது
மண்டு கால மனந்த கோடி வாம்பு கண்ட நெடும்பதி

(இ - ள்.) தேவர் தேவனாகிய தாந்தோன்றி யீசரும் தருமவர்த்தினியம்மையும் கயிலாயத்திற்குச் சமானமென்று எழுந்தருளி வசிக்கின்றனர். அலைகடல் சூழ்ந்த பூமிதேவியென்னும் பெண்ணுக்குச் சிரோரத்தின ஆபரணம் போன்றது பழமையான வெள்ளூரென்னும் ஸ்தலம்—என்றவாறு. (102)

வேள்வி மாநக ரின்ச ரித்திர மேல்வி யாசனு ரைப்படி
நீளு மன்புறு சூத னோதநு நீதி நான்மறை யோதியே
நாளி சைந்து தவத்தொ ழிற்புரி நைமி சாரணி யத்தினோர்
வேள்வி யாரமு துண்டு காதல் கிளைத்த நெஞ்ச மகிழ்ந்தனர்

(இ - ள்.) வெள்ளூரின் சரித்திரங்களை முன்பு வியாச முனிவர் சொல்லிய வண்ணம் நெடிதான பத்தியையுடைய சூதமுனிவர் சொல்லவும் நான்கு வேதங்களையு முணர்ந்த நைமிசாரணிய முனிவர் கேள்வியென்னும் தெவிட்டாத அமிர்தத்தைப் புசித்து ஆனந்தம்பொங்கி மகிழ்ச்சியடைந்தார்.

வேறு.

மன்னவர் செங்கோல் வாழி மங்கையர் கற்பும் வாழி
சொன்னநால் வேதம் வாழி தொன்னில நாடும் வாழி
என்னையாள் சுயம்பு லிங்க ரிறைமயமின் னுடனே வாழி
செந்நெல்சூழ் வெள்ளூர் வாழும் சிவனடி யார்கள் வாழி

(இ - ள்.) உலகத்தை அரசாட்சி செய்யாநின்ற அரசனுடைய அரசும் வாழ்க. ஸ்திரீகளது கற்பும் வாழ்க. நாலு வேதங்களும்வாழ்க. உலகமானதுவாழ்க. எம்மை யாட்கொண்ட தாந்தோன்றீசரும் தர்மவர்த்தனியம்மனுடனேவாழ்க. செந்நெல் மிகுந்த வெள்ளூரில் வசிக்கின்ற சிவனது அடியார்களும் வாழ்க வாழ்க—என்றவாறு. (104)

சோமாவதிச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் பதின்மூன்றுக்குப் பாயிரமுட்படத் திருவிருத்தம் (653)

திருவெள்ளூர்ப் புராணம் முற்றிற்று.

சுபம்.

76888